வெளியீடு 22-2-99 Issued 22-2-99

878
99
15 செப 1999

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

C

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, ஏப்ரல் 29, 1998 – தொகுதி 49 – எண் 1

Wednesday the 29th April, 1998 – Volume 49 – No. 1

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

Legislative Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009

[Price Rs. 3.00

D
V2'', 31'998
N98. 49.1
219091.

29-4-1998

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vi |
| Personnel of the Government of Tamil Nadu | vii-x |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xiii-xiv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xv-xxv |
| *1.* **வினாக்கள்-விடைகள்--** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-42 |
| *2.* **விதி 110-ன்கீழ் அறிக்கை--** | |
| கொளத்தூர் நீரேற்று நிலைய ஒப்பந்தப்புள்ளி மற்றும் சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் பொருட்கள் வாங்கியது பற்றி ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் அறிக்கை | 43-46 |
| *3.* **தகவல் கோரல்--** | |
| தமிழக மின் தொழிலாளர்கள் கடப்பா மாவட்டத்தில் மின்சார வேலைகள் செய்யச் சென்றிருப்பதாக 'இந்து' பத்திரிகையில் வந்துள்ள செய்தி | 46-47 |

| | | பக்கங்கள் |
|---|---|---|
| 4. | கவன ஈர்ப்பு-- | |
| | (அ) யானைக்கால் நோய்த் தடுப்பு மாத்திரை சாப்பிட்டவர்கள் குடியாத்தத்தில் இறந்துள்ளது | 47-52 |
| | (ஆ) கோனுலாம்பள்ளம், ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடத்தின் நிலை | 52-54 |
| 5. | **மானியக் கோரிக்கைகள், *1998-99*, விவாதமும் வாக்கெடுப்பும்**--தொடர்ச்சி | |
| | கோரிக்கை எண் 30-பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் | 55-139 |
| | *மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு | 55,58,72,86 121-135 |
| | திரு. ரா. ஈஸ்வரன் | 58-63 |
| | *திரு. சி. சந்திரசேகரன் | 64-68 |
| | டாக்டர் க. கிருஷ்ணசாமி | 69-80 |
| | திரு. க. வேல்சாமி | 80-85 |
| | டாக்டர் பத்மா | 85-90 |
| | திரு. சி. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி | 90-93 |
| | திரு. கொ.வீ. நன்னன் | 93-98 |
| | திரு. கே. தங்கமணி | 98-102 |
| | *திரு. உ.திசைவீரன் | 102-105 |
| | திரு. எஸ். எஸ். முகம்மது இஸ்மாயில் | 105-111 |
| | திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன் | 111-117 |
| | *திரு. ச. புரட்சிமணி | 117-121 |
| 6. | பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்-- | 140 |


2/9/091



## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்--நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள்.

2. **கல்வி அமைச்சர்** : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணு வியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. **மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம்.

4. **வருவாய்த் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.

5. **ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

6. **வேளாண்மைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. **பொதுப்பணித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**
பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற் திட்டப் பணிகள்.

8. **போக்குவரத்துத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**
போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. **நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி** **தா. கிருட்டிணன்:**
நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

10. **தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் :**
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

11. **உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கா.நா. நேரு :**
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை. கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

12. **பால்வளத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. க. சுந்தரம்:**
பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



13. **தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:**
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

14. **சட்டத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆலடி அருணா:**
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உள்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

15. **கைத்தறித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:**
கைத்தறி, துணித் தொழில், சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்பாடு.

16. **பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. **வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:**
வனம், சின்கோனா, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

18. **வீட்டு வசதித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:**
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**
கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத்தாள் சட்டம் மற்றும் சத்துணவு.

20. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:**
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம்.

21. கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் : **மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:**
கால்நடைப் பராமரிப்பு.

22. சமூக நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன்:**
மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.

23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:**
ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.

24. சுற்றுலாத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:**
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

25. கதர்த் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:**
கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

26. மீன் வளத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:**
மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** : ***The Hon. Kalaignar M. Karunanidhi:***
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes.

2. **Minister for Education**: **The Hon. Prof. K. Anbazhagan:**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity** : ***The Hon. Thiru Arcot N. Veerasamy:***
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** : **The Hon. Thiru Nanjil K. Manoharan:**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration** : **The Hon. Thiru Ko.Si. Mani:**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

பக்கங்கள்

6. **அறிக்கைகள் அளித்தல்—**

பொது நிறுவனங்கள் குழு 246

7. **அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—**

(அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998. 246-247

(ஆ) தமிழ்நாடு வன (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998. 247

8. **மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி**

(அ) கோரிக்கை எண் 43—எழுதுபொருள்-அச்சுத் துறை

(ஆ) கோரிக்கை எண் 44—காட்டுவளத் துறை

(இ) கோரிக்கை எண் 58—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு

} 248-320

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி 248, 250-251, 253, 255, 258, 259, 261, 262, 266, 279, 289, 295, 297-316

* திரு. சி. ஞானசேகரன் 246, 251, 255-263, 316, 317

* திரு. கோ. மோகனதாசன் 263-265

திரு. ச. இராஜரெட்டி 265-268

டாக்டர் மு. தேவராஜன் 268-269

* திரு. டி. மணி 270-274

திரு. ம. சண்முகம் 275-278

திரு. பி.ஆர். சுந்தரம் 252, 278-288, 318

திரு. ம. அப்துல் லத்தீப் 280, 284-285, 288-292

* திரு. என்.ஆர். அழகராஜா 293-296, 315

9. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** 320-321


2/9/01

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## வைகாசி 5, வெகுதான்ய - திருவள்ளுவர் ஆண்டு 2029

## 1998, மே 19, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு. பரிதி இளம்வழுதி** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:**

"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடையது அரண்."

ஆழமும் அகலமும் கொண்ட அகழ், பரந்த நிலம், உயர்ந்து நிற்கும் மலைத்தொடர், அடர்ந்திருக்கும் காடு ஆகியவற்றை உடையதே அரணாகும்.

## 1. வினாக்கள் - விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 541, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**541—**

### நோட்டுப் புத்தகங்களுக்கு விற்பனை வரி விலக்கு

***12048—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் பள்ளி மாணவர்களுக்குத் தேவையான நோட்டுப் புத்தகங்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுமா?

[1998 மே 19

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தமிழகத்தில் பள்ளி மாணவர்களுக்குத் தேவையான நோட்டுப்
புத்தகங்களுக்கு விற்பனை வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்
விற்பனை வரி அளிக்கப்பட்டுள்ளது என்று கூறியிருக்கிறார். அவருக்கு
நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இப்போது வரி
விலக்கு அளிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். கடந்த ஆண்டு அந்தப்
புத்தகங்கள் எவ்வளவு ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டிருக்கின்றன?
எவ்வளவு தொகைக்கு விற்பனை வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது?
பள்ளிக் கல்வியை நாம் இலவசமாகக் கொடுக்கக்கூடிய
காரணத்தினாலே பள்ளிக் மாணவர்கள் அத்துணை பேருக்கும்
இலவசமாகவே புத்தகங்களையும் வழங்குகிற திட்டத்தை அரசு
வைத்திருக்கிறதா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவரவர்களே, அடுத்த ஆண்டு 'கமர்சியல் டாக்ஸ்'
மானியம் வரும்போது இந்தக் கேள்வியைக் கேட்டால், பதில் சொல்ல
இயலும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, கடையிலே ஒரு கொயர் நோட்டு, இரண்டு கொயர்
நோட்டு என்று சொல்லி வாங்கினோம் என்றால், 20 பக்கங்கள், 30
பக்கங்கள் குறைவாக இருக்கிறது. ஏற்கெனவே இதுசம்பந்தமாக,
தனியார்கள் இதை அச்சடித்து," அதிகமாக இலாபம் அடைந்து
கொண்டிருக்கிறார்கள். அதனாலே, அரசு முடிவு எடுத்தது போல,
கூட்டுறவு முறையிலே இந்த நோட்டுப் புத்தகங்களை அச்சடித்து,



1998 மே 19]

மாணவர்களுக்கு வழங்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய
விரும்புகிறேன். இந்த வரி விலக்கை ரத்துச் செய்வதற்கு அரசு ஆவன
செய்யுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவரவர்களே, வரி விலக்கை ரத்துச் செய்ய வேண்டும்
என்ற இந்த வேண்டுகோள்பற்றி எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.
ஆனாலும், நோட்டுப் புத்தகங்கள் வாங்கும்போது... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வரி விலக்கு என்றுதான்
சொன்னீர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, திரு. ஐ.
கணேசன் அவர்கள் இங்கே கேட்ட கேள்வி, விற்பனை வரி விலக்கு
அளிக்கப்பட்டுள்ளதா என்பதுதான். 'அளிக்கப்பட்டுள்ளது, வரி விலக்கு
அளிக்கப்பட்டுள்ளது' என்று சொன்னேன். அதற்கு அவர்கள்
நன்றியினைத் தெரிவித்துக்கொண்டார்கள். அவர் நன்றி
தெரிவிக்கும்போதுகூட, வரி அளிக்கப்பட்டதற்கு நன்றி என்று
சொன்னார், வரி விலக்கு அளித்ததற்கு என்று சொல்லவில்லை.
இப்படி, திருத்துகிற வேலையைக்கூட எனக்கு விட்டால் நான் என்ன
செய்வது? (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ்.
இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவரவர்களே, தனியார் நிறுவனங்கள் எல்லாம் இந்த நோட்டுப்
புத்தகங்களை அச்சடித்து விற்கும்போது, அதிலே, வரி விலக்கு
அளிக்கப்பட்டுள்ள குறிப்பை அச்சிடுவது இல்லை. இரண்டாவது,
அட்டைப் படத்திலே பல்வேறு படங்களை அவர்கள்
போட்டிருக்கிறார்கள். பள்ளி மாணவர்கள் வாங்குகின்ற நோட்டுப்
புத்தகங்களில் சில படங்களைப் பார்க்கும்போது அபத்தமாக இருக்கிறது,
கவர்ச்சியான படங்கள்கூட இருக்கின்றன. ஆகவே, அவற்றை
நெறிமுறைப்படுத்த, இந்தப் படங்களைத்தான் அச்சிட வேண்டும்,
இப்படி Plain-ஆகத் தான் அச்சிட வேண்டும் என்று வரன்முறைப்படுத்த
அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1998 மே 19

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அப்படிப்பட்ட படங்கள் உள்ள நோட்டுப் புத்தகங்களைக் கவனத்திற்குக் கொண்டு வருவாரேயானால், அவைகள் நீக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 542, திரு. ரா. ஈஸ்வரன், மாண்புமிகு கல்வி அமைச்சர். (குறுக்கீடு) அடுத்த வினாவிற்குப் போயாகிவிட்டது. உங்கள் கட்சி சார்பில் இரண்டு பேர் பேசிவிட்டார்கள். திரு. ரா. ஈஸ்வரன்.

**542—**

**புளியங்குடி நகராட்சியில் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்**

***7399—திரு. ரா. ஈஸ்வரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாசுதேவநல்லூர் தொகுதி, புளியங்குடி நகராட்சி அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாக மாற்றித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் ஆணை வழங்கப்படுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): 1997-98 ஆம் ஆண்டில் புளியங்குடி அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புளியங்குடி நகராட்சி அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாக்க அரசு உத்தரவு வழங்கியமைக்காக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கும், முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1998 மே 19]

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 543, திரு. கே. ரவி அருணன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**543—**

**உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்**

***11441—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், மேலப்பாவூர் அரசு உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): 1998-99 ஆம் கல்வி ஆண்டில் இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்தக் கோரி கருத்துருக்கள் பெறப்பட்டால், உயர்மட்டக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையிலும், நெறிமுறைகள் அடிப்படையிலும் உரிய நடவடிக்கை எடுக்க இயலும்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, அந்த உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கான கருத்துரு இயக்குநர் அவர்களிடத்திலேயிருந்து பெறப்பட்டுள்ளது. ஆகவே, இந்தக் கல்வி ஆண்டிலேயே அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு அரசு ஆவன செய்யுமா? அந்தப் பள்ளியிலே போதுமான கட்டட வசதி இல்லை. ஆகவே, அங்கே கூடுதலாக கட்டடம் கட்டுவதற்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப்

[1998 மே 19

பள்ளியாக ஆக்கவேண்டும் என்றால், குறைந்தபட்சம் சில விதிமுறைகள் கடைபிடிக்கப்படவேண்டும். அதிலே ஒன்று, நிதி செலுத்துவது. இதுவரையில் நிதி செலுத்தப்படவில்லை. இரண்டாவது, குறைந்தபட்சம் இட வசதி இருக்கவேண்டும். இட வசதியோ, கட்டட வசதியோ மேல் நிலை வகுப்பு தொடங்குவதற்கு இப்போது அங்கே இல்லை. இன்னும் சொல்லப்போனால், இருக்கிற வகுப்புகளுக்கே இடம் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வியிலேயே தெரிவித்தார்கள். மூன்றாவதாக, அங்கே பத்தாவது வகுப்பிலே படிக்கிற மாணவ மாணவியர் 59 பேர் 60 பேராக இருந்தாலும் தொடங்குவதற்கு வாய்ப்பு இல்லை. 100 பேர் என்ற அளவு இருக்கிறபோதுதான் அந்த வாய்ப்பு கிடைக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்குவதற்கான எண்ணிக்கைப் பற்றி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இந்த ஆண்டு அப்படித் தரம் உயர்த்தப்படுகிற எண்ணிக்கையின் அளவையும், அதனுடைய பெயர்ப் பட்டியலையும் வெளியிடுவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? அப்படியானால், என்னுடைய கோரிக்கையான கூத்தாநல்லூர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி என்பது, முஸ்லீம் சிறுபான்மைப் பகுதி மக்கள் வாழ்கிற பகுதி என்ற அடிப்படையில் அதற்கு முன்னுரிமை அளித்து அந்தப் பட்டியலிலே இது இடம் பெற்றிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உயர்மட்டக் குழு கூடி, ஆய்வு செய்து, முன்னுரிமைகள் எந்தெந்த வகையிலே வழங்கப்படவேண்டுமோ அந்த வகையிலே எண்ணிப் பார்த்து, பின்னர்தான் அந்தப் பட்டியல் அரசுக்கே அறிவிக்கப்படும். அதற்குப் பின்னர்தான் அரசு வெளியிட முடியும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதியதாக உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தும்போது, கல்வி இலாகாவிற்கு



1998 மே 19]

கொடுக்கவேண்டிய என்டோமென்ட் வைப்புத் தொகையை சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து கட்டலாம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். ஆனால், கூடுதல் ஆட்சித் தலைவரிடம் கேட்கும்போது, அவ்வாறு கட்ட இயலாது என்று கூறுகின்றார்கள். ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து வைப்புத் தொகையைக் கட்டுவதற்கு ஆணையிடப்படுமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிற இந்த நிதி, அந்தந்த சட்டமன்றத் தொகுதியிலே இருக்கிற பல்வேறு சமூகக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு பயன்பட வேண்டும். எனவே, அதை இப்படிப்பட்ட என்டோமென்ட்டாக வழங்குவது என்ற முறை ஏற்பட்டால், பல சட்டமன்ற உறுப்பினர்கள் பல்வேறு பகுதிகளில், இந்த என்டோமென்ட் நிதிக்கே இதை வழங்குகின்ற ஆர்வத்தில் செயல்படுவார்கள். அதனுடைய விளைவாக, பணிகள்கூட தடைப்படும். இருந்தாலும், விதிவிலக்காக இது கட்டாயமான தேவையாக இருக்குமானால், அரசு அந்தப் பள்ளியை நிலை உயர்த்தக்கூடிய நிலைமை இருக்குமானால், அப்போதுதான் அந்த நிதியை ஏற்றுக்கொள்ள அரசு கருத முடியும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே உள்ள அண்டமல்லம் நடுநிலைப் பள்ளியில் சுமார் 1450 மாணவர்கள் பயில்கிறார்கள். இந்த ஆண்டு அப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தவேண்டும் என்ற கோரிக்கை வைத்து, அதற்கான கட்டணமும் செலுத்தி இருக்கின்றார்கள். இந்த ஆண்டு அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை அந்தக் கிராமத்திலே எடுத்துச் செயல்படுத்த இருக்கின்றோம். ஆகவே, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை எடுத்துச் செயல்படுத்த இருப்பதால், அதற்கு முன்னுரிமை வழங்கி, அமைச்சர் அவர்கள் உயர்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தி தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கான விடை தற்போது என்னிடம் இல்லை. இருந்தாலும்கூட, அந்தப் பள்ளிக்கூடத்தில் அதிக

மாணவர்கள் பத்தாவது வகுப்பில் பயிலுவார்களேயானால், மற்ற வசதிகள் இருக்குமானால், அந்த அடிப்படையிலேதான் கருதப்பட முடியுமே தவிர, அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் வருகிற கிராமங்களிலே எல்லாம் உடனடியாக முன்னுரிமை அடிப்படையில் மேல்நிலைப் பள்ளியை ஏற்படுத்த வாய்ப்பில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 544, திரு. பி.என். சுப்பிரமணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**544—**

## ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

***7615*—திரு. பி.என். சுப்பிரமணி:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், வளையாத்தூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுமா?*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

*வளையாத்தூர் கிராமம், திமிரி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது. அந்த ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மக்கள் தொகைக்கேற்ப தற்போது செயல்பட்டு வரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களோடு வளையாத்தூர் கிராமத்தில் இந்த ஆண்டு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.*

*முற்பகல் 9-40*

**திரு. பி.என். சுப்பிரமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வளையாத்தூரிலே ஆரம்ப சுகாதார நிலையத்தை ஆரம்பிக்க அனுமதி வழங்கிய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆற்காடு தொகுதியில் புதுப்பாடியில் மருத்துவமனையில் பணிபுரியும் அலுவலர்கள் தங்கும் விடுதி மிகவும் பழுதடைந்துள்ளது. அதனால் அங்கே இரவு நேரங்களில் அலுவலர்கள் தங்குவதில்லை. அவசர





சிகிச்சை வேண்டியும், பிரசவத்திற்கும் இரவு நேரங்களில் அங்கே நோயாளிகள் வருகிறார்கள். ஆகவே, விடுதியைப் பழுதுபார்க்கக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், மாம்பாக்கம், விளாப்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையங்கள் பழுதடைந்துள்ளன. மாண்புமிகு அமைச்சரிடம் இதுகுறித்து கோரிக்கை கொடுத்துள்ளேன். இந்த மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களையும் பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவா அவர்களே, மாம்பாக்கத்திலே இப்போதுதான் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் கட்டப்பட்டு வருகிறது. விரைவிலே திறக்கப்பட இருக்கிறது. புதுப்பாடி மற்றும் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்த இடங்களிலும் மற்றும் தமிழகத்தில் உள்ள பல்வேறு ஆரம்ப சுகாதார நிலையங்களை எல்லாம் பழுதுபார்க்க இந்த ஆண்டுக்கு முதல்வர் அவர்கள் மொத்தத்திலே ரூ.2 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். அந்த ரூ. 2 கோடியைக்கொண்டு, இந்தக் குறைபாடுகள் எல்லாம் போக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாரமங்கலத்திலும், மேச்சேரியிலும் இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள், 24 மணி நேர மருத்துவமனைகளாக வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த இரண்டு மருத்துவமனைகளிலே தற்போது மேச்சேரியிலே 3 படுக்கை வசதிகளும், தாரமங்கலத்திலே 4 படுக்கை வசதிகளும்தான் இருக்கின்றன. அதை 10 படுக்கை வசதிகளாக மாற்றிக் கொடுக்க அரசு முன்வருமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையங்களில் குறைந்தது 6 படுக்கைகள் அமைக்க வேண்டுமென்று அரசு ஏற்கெனவே திட்டமிட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்த இரண்டு இடங்களில் 6 படுக்கைகள் உடனடியாக ஏற்படுத்தித் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 545, திரு. ஆ.செ. மணிக்கண்ணன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

545—                [1998 மே 19

## கூடுதல் மின்மாற்றி அமைத்தல்

***10775—திரு. ஆ.செ. மணிக்கண்ணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், திருநாவலூர் தொகுதி, அரசூரில் உள்ள 110 கி.வோ. துணை மின் நிலையத்தில் கூடுதல் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கூடுதலாக ஒரு 110/22 கி.வோ. 10 எம்.ஏ. மின்மாற்றி மே 1998 இறுதியில் இயக்கி வைக்கப்படும்.

**திரு. ஆ.செ. மணிக்கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், சோந்தநாடு மையத்தில் புதிய துணை மின் நிலையம் போன ஆண்டே அமைக்கப்படும் என்று அமைச்சரவர்கள் அறிவித்திருக்கிறார்கள். வருகின்ற இந்த ஆண்டிலாவது அதை நடைமுறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு மேலும் 60 துணை மின் நிலையங்கள் அமைக்க அரசு திட்டமிட்டிருக்கிறது. அதிலே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தப் பகுதியும் இடம் பெறுவதற்கு அரசு ஆவன செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ச.க. வெங்கடேசன்.

**திரு. ச.க. வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் தொகுதியில், செய்யூர் வட்டத்தில் நல்லூர்



1998 மே 19]

கிராமத்தில் 110 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. அதற்குண்டான நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்தப் பணியினை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல, ஏற்கெனவே மின்சார வாரியம் அங்கே துணை மின் நிலையம் அமைக்க பணம் ஒதுக்கீடு செய்தது. நிலம் கையகப்படுத்துவதிலே காலதாமதம் இருந்தது. காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்புகொண்டு, அதை விரைவுபடுத்த வேண்டுமென்று அரசு கேட்டுக்கொண்டதற்கிணங்க, கடந்த வாரம்தான் அந்த நிலம் கையகப்படுத்தப்பட்டு, மின்சார இலாகாவிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு மு. பன்னீர்செல்வம்.

**திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாகை மாவட்டம், சீர்காழி தொகுதி, வைதீஸ்வரன் கோயிலிலே. அதேபோல் கொள்ளிடம் ஒன்றியத்தில் ஆச்சாள்புரத்திலே துணை மின் நிலையம் அமைப்பதற்கான கருத்துருக்கள் அரசின் பரிசீலனையில் இருந்து வருகின்றன. அது எப்போது நடைமுறைக்கு வரும் என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதிகளிலே நிலத்தை மின்சார வாரியத்திடம் ஒப்படைத்தவுடன் அதுபற்றிய வேலைகள் தொடங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின் பற்றாக்குறை இருக்கக்கூடிய இந்த நேரத்திலே மாநகரங்களிலும் சரி, நகரங்களிலும் சரி, இருக்கக்கூடிய ஜவுளிக் கடைகள், மற்ற எல்லா கடைகளிலுமே, வியாபார நிறுவனங்கள் எல்லாம் அதிகமான அளவில் மின் விளக்குகளை உபயோகப்படுத்துகின்ற நிலைமை இருக்கிறது. சில ஜவுளி கடைகளைப் பார்க்கும்போது, ஒரு பெரிய தொழிற்சாலைக்கு எந்த அளவுக்கு

மின்சாரம் தேவைப்படுமோ அந்த அளவுக்கு மின்சாரத்தைப் பயன்படுத்துகிறார்கள். இரவு 9½ மணி வரை கடை வைத்து இருக்கின்றார்கள். அந்த வியாபார நிறுவனங்கள் எல்லாம் இரவு 7½-க்குள்ளாகக் கடையை மூடிவிட்டால் அந்த நேரங்களில் மின்சாரம் மிச்சப்படும் என்ற வகையிலே அரசு அதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.15)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நல்ல யோசனையை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட கடை உரிமையாளர்கள் இதைமனதிலே கொண்டால் நல்லது. ஆனால், அரசாங்கம் சார்பிலே இப்படிப்பட்ட ஒரு நடவடிக்கை எடுத்தால், தமிழ்நாடு இருட்டிலே இருக்கிறது என்று இதற்கென்றே குரல் கொடுக்கக் கூடியவர்கள் கூறிக்கொண்டே இருப்பார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 546, டாக்டர் அ. மணி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**546—**

**உளுந்தூர்பேட்டை தொகுதியில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

***4736—டாக்டர் அ. மணி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உளுந்தூர்பேட்டை தொகுதி, நல்லூர், தியாகதுருகம் ஒன்றியங்களில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.



(ஆ) கடலூர் மாவட்டத்தில் உள்ள நல்லூர் ஒன்றியத்தில் வெள்ளாற்றினை நீராதாரமாகக் கொண்டு 15 குடியிருப்புகளுக்கு ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டமும், விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள தியாகதுருகம் ஒன்றியத்தில் உள்ள 10 குடியிருப்புகளுக்கும் தியாகதுருகம், கள்ளக்குறிச்சி-சின்னசேலம் பேரூராட்சிகளுடன் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டமும் செயல்படுத்தப்பட உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் அ. மணி, இருக்கையில் இல்லை.

வினா எண் 547, திரு. சி. கோபு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**547—**

**அணைக்கட்டு தொகுதியில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

***8206—திரு. சி. கோபு:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், அணைக்கட்டுத் தொகுதி, செம்பேடு மற்றும் பழநேரி கிராமங்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக பாலாற்று நீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): செம்பேடு மற்றும் பழநேரி கிராமங்களுக்குக் கூட்டுக குடிநீர் வழங்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. கோபு, இருக்கையில் இல்லை.

வினா எண் 548, திரு. ஜி. நிஜாமுதீன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

548— [1998 மே 19

**சாலைகளை நெற்களங்களாகப் பயன்படுத்துவதைத் தடுத்தல்**

***9167—திரு. ஜி. நிஜாமுதீன்:**

*மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் நெல் அறுவடைக் காலங்களில் முக்கிய சாலைகளை நெற்களங்களாக விவசாயிகள் பயன்படுத்துவதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், இதுகுறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

*(அ) ஆம்.*

*(ஆ) இதைத் தவிர்ப்பதற்கு தஞ்சாவூர் மாவட்டத்தில் ஏற்கெனவே ஆறு சமுதாய நெற்களங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், இம்மாவட்டங்களில் ஒருங்கிணைந்த தானிய உற்பத்தி (அரிசி) திட்டத்தின் கீழும், மாவட்ட வேளாண் விளைபொருள் விற்பனைக் குழுக்கள் மூலமாகவும், உலர் களங்கள் அமைக்கப்படுகின்றன.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** *திரு. வை. சிவபுண்ணியம்.*

**திரு. வை. சிவபுண்ணியம்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில் இருபோக சாகுபடி செய்கின்றபோது, குறிப்பாக, குறுவை நெல் சாகுபடி செய்கின்றபோது அப்படி, சாலைகளைப் பயன்படுத்துகின்ற பழக்கம் விவசாயிகளிடம் இருக்கிறது. அதன் காரணத்தினாலே, போக்குவரத்திற்குத் தடை ஏற்பட்டு பல்வேறு விளைவுகள் கூட ஏற்படுவதற்கான சூழ்நிலைகள் இருக்கின்றன. அவற்றைப் போக்குவதற்கான வகையிலேதான் அந்தக் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 6 உலர் களங்கள் அமைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அந்த மாவட்டத் தேவைக்கு அது போதுமானதாக இல்லை. ஆகவே, மீண்டும் பரிசீலித்து அந்த மாவட்டம் முழுவதிலும் போதுமான*



1998 மே 19]

*அளவுக்கு உலர் களங்களை அமைத்துக் கொடுப்பதற்கான முயற்சிகளை அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1994-95 ஆம் ஆண்டு வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் பகுதி-II திட்டத்தின் கீழ் 6 உலர் களங்கள் அமைக்கப்பட்டன. இந்தப் பற்றாக்குறை நிலைமையைப் போக்க வேண்டும் என்பதற்காக 1997-98-ம் ஆண்டு நம்முடைய முதலமைச்சர் அவர்களிடத்திலே கலந்துபேசி, வேளாண்மை விற்பனைக் குழு நிதியிலேயிருந்து இதுபோன்ற உலர் களங்களை அமைத்துக் கொடுக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டு, ஓர் உலர் களம் 1,50,000 ரூபாய் மதிப்பீட்டில் மாவட்டத்திற்கு 10 உலர் களங்கள் என்று அமைத்துத் தரப்பட்டிருக்கின்றன. அதைப்போல, 1998-99-ம் ஆண்டில் விலைப் பட்டியல் கூடியிருக்கக்கூடிய காரணத்தினாலே, ஓர் உலர் களம் 1 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 100 உலர் களங்கள், தமிழ்நாடு முழுவதும் அமைப்பதாக முடிவு எடுக்கப்பட்டு, இதில் தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் ஆகிய ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இந்த ஆண்டு 10 உலர் களங்கள் வீதம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.*

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் மட்டும் அல்லாமல் விழுப்புரம், கடலூர் மாவட்டங்களிலும், குறிப்பாக, கிழக்குக் கடற்கரை சாலை உள்ள பகுதிகளிலேயும், சாலைகளிலே நெற்களங்களை அமைத்திருப்பதால் அடிக்கடி விபத்துக்கள் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன. எனவே, கிழக்குக் கடற்கரை சாலையிலும் இதுமாதிரி உலர் நெற்களங்களை அமைத்துத் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.*

*(முற்பகல் 9-50*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலும் இந்த உலர் களங்கள் அமைக்கப்பட இருக்கின்றன.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 549, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**549—**

### விவசாயத்தை மேம்படுத்துதல்

***9245—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி தொகுதி, மேலவாசல், காரிக்கோட்டை, எம்பேத்தி, பருத்திக்கோட்டை, மூவாநல்லூர், நடுவாக்கோட்டை, அசேஷம், சுந்தரக்கோட்டை, சாந்தமாணிக்கம், இடையர்நத்தம் ஆகிய கிராமங்களில் விவசாயத்தை மேம்படுத்தும் வகையில் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் காரை வாய்க்கால்கள் அமைத்துத் தரப்படுமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.

ஆம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி தொகுதியில் மேலவாசல், காரிக்கோட்டை, எம்பேத்தி, பருத்திக்கோட்டை, மூவாநல்லூர், நடுவாக்கோட்டை, அசேஷம், சுந்தரக்கோட்டை, சாந்தமாணிக்கம், இடையார்நத்தம் ஆகிய கிராமங்களில் பாசனப் பகுதிக்காக காரை வாய்க்கால்கள் அமைக்கப்படவேண்டும் என்ற கேள்வியை நான் முன்னதாகக் கேட்டிருந்தேன். இப்போது, அந்தப் பணிகள் நிறைவேறி இருக்கின்றன. அதற்காக, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு, அந்தப் பகுதிகள் வடிவாறு பாசனப் பகுதியாக இருக்கிற காரணத்தால், தண்ணீரை மிச்சப்படுத்துகின்ற நோக்கத்தோடு, மேலும் எல்லா கிராமங்களுக்கும் அப்படிப்பட்ட காரை வாய்க்கால்கள் அமைக்கப்பட, பணிகள் மேற்கொள்வதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்று காவிரி டெல்டாப் பகுதிகளில் மட்டுமல்லாது எல்லாப் பகுதிகளுக்குமே படிப்படியாக ஒவ்வோர் ஆண்டும் நாம் காரை வாய்க்கால்களை அமைப்பதோடு, முறை வைத்து நீர்ப்பாசனத்திற்கான பணியையும் சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறோம். இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட அந்தப் பகுதிக்கும் அது விரிவுபடுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினா எண் 550, திரு. ப. மோகன் கந்தசாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**550—**

### ஆறுகள் மேம்பாட்டுத் திட்டங்கள்

***8101—திரு. ப. மோகன் கந்தசாமி:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாண்டியாறு-புன்னம்புழா திட்டம் மற்றும் ஆனைமலையாறு, நல்லாறு திட்டங்களின் நிலை என்ன?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

பாண்டியாறு-புன்னம்புழா திட்டம் மற்றும் ஆனைமலையாறு, நல்லாறு திட்டங்கள், கேரள அரசின் அனுமதியைப் பெறவேண்டிய நிலையில் உள்ளன.

**திரு. ப. மோகன் கந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டம், பொங்கலூர், பொள்ளாச்சி, கிணத்துக்கடவு, தாராபுரம், உடுமலைப்பேட்டை, காங்கேயம் மற்றும் வெள்ளக்கோவில் ஆகிய தொகுதிகளில் உள்ள விவசாயிகள் பயன்பெறும் வகையில் 1½ லட்சம் ஏக்கர் பயன்பெறும் வகையில், அந்தக் காலத்தில் வடிவமைக்கப்பட்டது. இப்போது அது 4 லட்சம் ஏக்கருக்கு விரிவுபடுத்தப்பட்டு, 4 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டதால் அந்தத் தண்ணீர் இப்போது 2 ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் கொடுக்கப்படுகிறது. இதனால், நீண்டகால பயிர்களான,

[1998 மே 19

தென்னை போன்ற பயிர்களைப் பயிர் செய்யும் விவசாயிகள் மிகவும் துன்பப்படுகிறார்கள். எனவே, நீர் ஆதாரத்தைப் பெருக்குவதற்காக பாண்டியாறு-புன்னம்புழா கடைமலை ஆறு திட்டம் வேண்டும் என்று நம்முடைய அரசு கேரள அரசோடு ஒப்பந்தம் செய்து இருப்பதாக அறிகிறேன். அதிலே கடைமலை ஆற்றில் அணைக்கட்டு கட்டியதற்குப் பிறகு நமக்குத் தண்ணீர் கொடுப்பதாக அவர்கள் வாக்குறுதி அளித்திருப்பதாகவும், ஆனால், அவர்கள் காலம் தாழ்த்திக்கொண்டு இருப்பதாகவும் அறிகிறோம். சென்ற ஆண்டு 'தினமலர்' பத்திரிகையைச் சேர்ந்த ஒரு நிருபர் துணிந்து அந்தப் பகுதிகளுக்கு எல்லாம் சென்று அங்கே பார்த்து வந்தபோது, அந்த கடைமலை ஆறு அணைக்கட்டை கட்டி முடித்தும், கேரள அரசு நமக்கு இந்தத் திட்டத்தைக் கொடுப்பதற்கு தயங்குவதாகத் தெரிகிறது. நம்மிடமிருந்து அரிசியைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்வியைக் கொஞ்சம் சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேரள அரசுக்கு நாம் அவசரத்திற்கு மின்சாரம் கொடுக்கிறோம். அரிசி இங்கிருந்துதான் செல்கிறது. ஆனால், நமக்குத் தேவை இருக்கின்ற தண்ணீரைக் கொடுப்பதற்கு அவர்கள் ஏன் தயங்குகிறார்கள் என்பது எனக்கு புரியவில்லை. எனவே, காமராஜர் அவர்களுடைய காலத்தில் ஏற்படுத்தப்பட்ட இந்தத் திட்டத்தை மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலாவது விரைவுபடுத்தி, நிச்சயமாக இந்த ஆண்டு அதை செய்வதற்கான முயற்சியைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். வாரியார் அவர்கள் எல்லாக் கடவுள் பெயர்களையும், ஆறுமுகக் கடவுள் பெயர்களையும் சொன்னதைப்போல. எல்லா ஆறுகளின் பெயர்களையும் நுனி விரலில் வைத்திருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எப்படியாவது அவர்களோடு பேசி இந்த ஆண்டு அந்த அணையைக் கட்டுவதற்கும், நீர் ஆதாரத்தைப் பெருக்குவதற்கும், ஆவன செய்வார்களா என தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல, முதலில் இந்தப் பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம், திட்டமிடப் பட்டபோது, 2 லட்சத்து 45 ஆயிரம் ஏக்கர்தான் அதற்கு என்று



1998 மே 19]

ஒதுக்கப்பட்டது. பாலாறு பேசினில் 2 லட்சம் ஏக்கர்தான். காலப் போக்கில் அதற்கு 1 லட்சத்து 75 ஆயிரம் ஏக்கரை நீங்கள் கூட்டிக் கொண்டே போனீர்கள். அதனுடைய விளைவாக 3 லட்சத்து 75 லட்சம் ஏக்கருக்கு அது பாய்ந்து விட்டது. எனவே, 2 லட்சம் ஏக்கருக்குத்தான் தண்ணீர் போதுமான நிலையில், அதுவும் 2 போகத்திற்கு ஒருமுறைதான் கொடுக்கும் நிலையில் இருந்து 3 லட்சத்து 75 ஆயிரம் ஏக்கர் என்று வந்த பிறகு அது 3 மண்டலமாக பிரிக்கப்பட்டு, பிறகு மேலும் சேர்க்கப்பட்டு, வழக்குமன்றத்திற்குப் போய் அது 4 மண்டலமாக மாறி இப்போது 2 வருடத்திற்கு ஒரு முறை தண்ணீர் வருகிற நிலையில் இருக்கிறது. இதற்கு யார் காரணம்? முன்பிருந்த அரசும் காரணம்தான். விவசாயிகளும் காரணம்தான். காரணம், எங்கள் நிலத்தைச் சேர்த்துக்கொள்ளுங்கள், சேர்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லச் சொல்ல, நம்மைப்போல அரசியல்வாதிகள் நம் தொகுதியிலே பத்து ஏக்கர் சேர்த்தால் என்ன என்று அமைச்சர்களை வற்புறுத்த வற்புறுத்த, அமைச்சர்களும் போனால் போகிறது என்று சேர்க்க, கடைசியிலே இப்பொழுது 4 பேர் சாப்பிடுகிற சாப்பாட்டை 40 பேர் சாப்பிடுகிறபொழுது ஒருவருக்கும் வயிறு நிரம்பாமல் இருப்பதுபோல, காய்ந்து கொண்டு இருக்கிறோம். இந்த நிலையைப் போக்க வேண்டும் என்பதிலே இந்த அரசுக்கு முனைப்பான எண்ணம் உண்டு.

முற்பகல் 9-55

மாண்புமிகு உறுப்பினரவர்கள் நல்லாறு திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். பரம்பிக்குளம்-ஆழியாறுக்குச் சம்பந்தப்படாத ஒன்று இது. காரணம், பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தில் மேல் நீராறிலிருந்து-மேல் நீராறிலேதான் நமக்கு 9 டி.எம்.சி. தண்ணீர் கிடைக்கிறது. அந்தத் தண்ணீரை நாம் இப்பொழுது எப்படிக் கொண்டு வருகிறோம் என்றால் - கீழ் நீராறுக்குக் கொண்டு வந்து, சோலையாற்றில் கொண்டு வந்து, பரம்பிக்குளத்திற்கு கொண்டு வந்து, தூணக் கடவு பெருவாரிப் பள்ளத்திலே விட்டு, கடைசியாக ஆழியாற்றிலிருந்து திருமூர்த்தி அணைக்குக் கொண்டு வருகிறோம். ஆனால், இருக்கிற பிரச்சினை என்னவென்று கேட்டால், அக்டோபர் 1 ஆம் தேதியிலேயிலிருந்து ஜனவரி 31ஆம் தேதி வரையில் மேல் நீராறுத் தண்ணீரை முழுக்கக் கேரளாவிற்கு நாம் விடவேண்டும். இப்பொழுது அது எது வரையில்? நீங்கள் குறிப்பிட்டதைப் போல இடைமலையாறு ப்ராஜக்ட் முடிகிற வரையில். இடைமலையாறு ப்ராஜக்ட் முடிந்து போய் விட்டது.

[1998 மே 19

அதிலே இரண்டு வகைகள் உண்டு. பாசனத்திற்கும் திட்டம் இருக்கிறது; மின்சாரத்திற்கும் திட்டம் இருக்கிறது. மின்சாரத் திட்டத்தை இடைமலையாற்றிலே நிறைவேற்றி விட்டார்கள். பாசனத் திட்டத்தை இன்னும் நிறைவேற்றவில்லை என்று அந்த அரசு சொல்லிக்கொண்டு இருக்கிறது. அதையும் நிறைவேற்றி விட்டதாக இப்பொழுது எங்களுக்குத் தகவல் வந்து இருக்கிறது.

ஒரு நீண்ட பயணக் கட்டுரையையே "தினமலர்" எழுதி இருந்தது. அதை எனக்கு அனுப்பியிருந்தார்கள். அதைத்தான் நீங்கள் குறிப்பிட்டீர்கள். நான் அதை முழுக்கவும் படித்துப் பார்த்தேன். அதுமட்டுமல்லாமல், எங்களுடைய பொறியாளர்கள் மூலமாகவும் எங்களுக்குத் தகவல் வந்திருக்கிறது.

ஆனால், 28-11-1996 அன்று நானும், கேரள அமைச்சர் திரு. பேபி ஜான் அவர்களும் இதே கோட்டையிலே உட்கார்ந்து பேசுகிறபொழுது, எங்களுக்கு புய்யாங்குட்டி ஸ்கீம் மறுபடி வரவேண்டும் என்கிறார்கள். புய்யாஸ்குட்டி ஸ்கீம் என்பது எலக்ட்ரோ ஹைடல் ப்ராஜக்ட். அதுவும் இன்னும் லேட் ஆகும். எனவே, நான் அவர்களிடத்திலே சொன்னேன், நீங்கள் எந்தத் திட்டத்தை வேண்டுமானாலும் ஏற்றுக்கொள்ளுங்கள், நல்லாறு உங்களுக்குச் சம்பந்தம் இல்லை. இடைமலையாறு ப்ராஜக்ட் முடிந்தவுடன் அக்டோபர் 1ஆம் தேதியிலேயிருந்து ஜனவரி 31ஆம் தேதி வரையிலே நமக்கே முழு தண்ணீர் வர வேண்டும். அதைக்கூட பின்னால் பேசிக் கொள்ளலாம். இருக்கிற தண்ணீரை மேல் நீராறிலிருந்து கீழ் நீராறுக்குக் கொண்டு போகாமல் நேராகத் திருமூர்த்தி அணைக்கு கொண்டு வர வேண்டுமானால் நல்லாற்றிலே ஒரு பேலன்ஸ்ட் ரிசர்வாயர் கட்டி, நேராகக் கொண்டு வந்தால் திருமூர்த்தி அணைக்கு வந்து விடும். இதனாலே எங்களுக்குக் காட்டூர் கெனாலில் தண்ணீர் சேதாரமாவது தடுக்கப்படும் என்று நான் அவர்களிடத்திலே தெரிவித்திருக்கிறேன். பல கடிதங்களை நாங்கள் இதுவரையில் எழுதியிருக்கிறோம்.

ஆனால், கேரள அரசு ஏதாவது ஒரு சாக்கு போக்கைச் சொல்லிக் கொண்டிருக்கிறது. எனவே, இது இரு மாநில பிரச்சினை என்கிற காரணத்தால் கொஞ்சம் கொஞ்சமாக பேசித்தான் கொண்டு வர வேண்டும்.



1998 மே 19]

ஆனால், இப்பொழுது திரு. பேபி ஜான் அவர்கள் நல்லாற்றிலே அதிகப் பிரச்சினை இல்லை என்று என்னிடத்திலே அன்றைக்கு உறுதி கொடுத்து, அதற்கு வேண்டிய நடவடிக்கைக்காக நம்முடைய இரு மாநிலப் பொறியாளர்களும் கலந்து பேசட்டும் என்று சொன்னார். அத்தோடு நிற்கிறது. பிறகு அவருக்கு உடல் நலம் சரியில்லை. மீண்டும் போன வாரம்கூட நம் முதலமைச்சரவர்கள் அந்த முதலமைச்சருக்கு இந்த பிரச்சினையை எல்லாம் நாம் உட்கார்ந்து பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்று ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். எனவே, இதிலே ஒரு நல்ல முடிவு ஏற்படுவதற்கு இந்த அரசு எல்லா நடவடிக்கைகளும் எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாண்டியாறு-புன்னம்புழா என்பது நீண்ட காலமாக, தேர்தல் காலங்களில் மட்டுமே சொல்லப்பட்டு வருகிற வாக்குறுதியாக இருந்து வருகிறது. இதற்கு நடைமுறையில் உயிர் கொடுக்கிற முறையில் சில முயற்சிகள் சமீப காலத்தில் மேற்கொள்ளப்பட்டன. நான் நமது மாநில அரசிடமிருந்து தங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புவது, அமைச்சரவர்கள் பதில் அளிக்கிறபோது, கேரள அரசினுடைய அனுமதிக்காக அவை காத்திருக்கின்றன என்ற நிலையைச் சொன்னார்கள். அப்படியென்றால் அதற்குப் பொருள் புரியவில்லை. கேரள அரசினுடைய அனுமதிக்காக என்று சொன்னால் எந்த மட்டத்து வரைக்கும் பேச்சு வார்த்தை நடைபெற்றிருக்கிறது? எது தடையாக இருக்கிறது என்கிற விஷயங்களை அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும் என்பதுதான். அதோடு, மேற்கு நோக்கிப் பாய்கிற ஏறத்தாழ 85 ஆறுகளின் தண்ணீர் கேரளாவில் கடலிலே போய் கலக்கிறது. மேற்கு நோக்கிப் பாய்கிற அந்தத் தண்ணீரைத் திருப்புவதுதான் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மிக முக்கியமான அடிப்படையாக இருக்கும் என்ற காரணத்தால், நான் நமது மாநில அரசுக்கு தெரிவித்துகொள்ள விரும்புவது, இது கேரளா மற்றும் தமிழ்நாட்டின் பிரச்சினை என்றாலும், கேரளா மற்றும் தமிழ்நாட்டின் நலன்கள் பாதிக்காத அளவில் ஒரு சுமுகப் பேச்சுவார்த்தைக்கு உரிய சூழ்நிலையை உருவாக்குவதற்கு அனைத்துக் கட்சிகளைக் கொண்ட ஒரு கூட்டுக் குழுவை உருவாக்கிப் பேசலாம். நான் ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** ஒரேயொரு விஷயம். கேரளத்தில் நடைபெறுகிற ஆட்சிக்கு ஒத்த இசைவுள்ள கட்சிகளையும் பயன்படுத்தி, அவர்கள் இன்ஃப்ளுயன்ஸையும் பயன்படுத்தி, இதற்கு ஒரு தீர்வு காண்கிற ஆக்கபூர்வமான முயற்சியை மேற்கொள்ள அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** துணைத் தலைவரவர்களே, இதுகுறித்து நான் ஏற்கெனவே பலமுறை இந்த அவையிலே தெரிவித்திருக்கிறேன். 1965 ஆம் ஆண்டு வாக்கிலே பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னார்கள். அது குறித்து உங்களுக்கு இன்றைக்குத் தெளிவாகவே நான் சொல்லி விடுகிறேன். கூடலூருக்குப் பக்கத்திலே தேவாலா என்கிற ஓர் இடம் இருக்கிறது. அதற்கு மழைக் கண்ணி என்றுதான் பெயர். காரணம் அதிகமான மழை பொழிகிற காரணத்தால், மழையைக் கண்ணி வைத்துப் பிடிக்கிற காரணத்தால் மழைக் கண்ணி என்று பெயர். அங்கிருந்துதான் பாண்டியாறு-புன்னம்புழா, இன்னும் பல ஆறுகள் புறப்பட்டு மேற்கு நோக்கிச் சென்று, சாலக்குடியில் கள்ளிக்கோட்டைப் பகுதியிலே கலக்கிறது. இதிலே, நம்முடைய பாண்டியாறு-புன்னம்புழா இரண்டையும் தடுத்து நிறுத்தி கூடலூர் கள்ளிக்கோட்டைச் சாலையிலே, புன்னம்புழா என்கிற இடத்திலே, புன்னம்புழா ஆறு புன்னம்புழா என்கிற இடத்தைக் கிராஸ் செய்கிற அந்த இடத்திலே ஓர் அணைக்கட்டும், பாண்டியாறு என்கிற இடத்திலே ஓர் அணைக்கட்டும் ஆக இரண்டு அணைகளையும் கட்டி, இரண்டுக்கும் இடையே உள்ள பள்ளத்தாக்கிலே மூன்றாவது அணை கட்டி, மூன்று அணைகளையும் ஒரே சமதிட்டத்திலே வைத்து, அவைகளுக்கிடையே கீழே ஒன்றையொன்றை இணைக்கிற ஒரு பாதையை ஏற்படுத்தி, பேலன்ஸ்ட் ரிசர்வாயராக மாற்றி, பிறகு அங்கிருந்து தண்ணீரைத் தெற்குமுகமாக இறக்கி, அங்கிருந்து தேவாலா கொண்டுவந்து, மீண்டும் எஃகுக் குழாய் மூலமாகத் தண்ணீரை ஒரே சீராக இறக்கிக் கீழே கொண்டுபோய் மீண்டும் துறைகோட்டுப் புன்னையூர் குழாய்க் கரையிலேவிட்டு, மறுபடியும் புன்னையாற்றிலே விடுகிறபோது அங்கே 200 மெகாவாட் மின்சாரத்தை நாம் தயாரித்துக் கொள்ளலாம். அந்தத் தயாரிப்புக்கானச் செலவை நாமே மேற்கொள்ளலாம் என்றுதான் ஒப்பந்தம். அந்த ஒப்பந்தத்திற்குக் கேரள அரசு ஒப்புக்கொண்டது.



அந்த ஒப்பந்தத்தை அப்படியே நிறைவேற்றியிருந்தால்—கேள்வி நேரம் என்கிற காரணத்தால் இப்போது நான் யார் மீதும் குற்றம் சொல்ல விரும்பவில்லை - அதை எப்படியாவது நிறைவேற்றியிருந்தால், மற்ற கதையை இப்போது பேசி தீர்த்துக் கொண்டிருக்கலாம். ஆடு தொட்டியிலேயிருக்கின்றபோதே, அப்பா எனக்கு தொடைகறி என்று ஒரு பையன் கேட்டானாம். அப்படி, திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்னாலேயே எங்களுக்குத் தண்ணீர் திருப்பி விடுங்கள், எல்லாத் தண்ணீரும் கேரளாவிற்கு போகிறதே என்று கோயம்புத்தூரிலே இருக்கின்ற பெருமக்கள், விவசாயிகள் கேட்க, அதைச சாதிப்பதைப்போல அன்றைக்கு இருந்தவர்கள் செய்ய, இதிலே நிலை என்ன ஆயிற்று? திருப்பி எங்களுக்கு 7 டி.எம்.சி. தண்ணீரை, மறுபடியும் தெற்கு நோக்கிப் போகிறதை, தென்கிழக்குப் பகுதியிலே திருப்பி, நேராகக் கொண்டுவந்து, சிறபு ஆற்றிலேவிட்டு, இன்றைக்கு இருக்கின்ற மோயாற்றுப் பகுதியிலே விட்டு, பிறகு தெப்பக்காடு, மசினகுடி வழியாகக் கொண்டுவந்து மோயாற்றிலே விட்டால், அது, கீழ்பவானி ஆற்றுக்கு முன்னாலே வந்து சேரும். அப்போது நாம் மோயாற்றிலே இன்றைக்கு மின்சாரம் எடுக்கிற இடத்திலே ஒரு 110 மெகாவாட் மின்சாரத்தை எடுக்கலாம். தண்ணீரும் நமக்கு வந்துவிடும் என்று சொன்னார்கள். ஆனால், கேரள அரசினர் இதைக் கேட்டவுடன் மறுபடியும் ஒன்றைச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினருக்குச் சொல்கிறேன், என்ன, தடையென்றால், 7 டி.எம்.சி தண்ணீர் பாண்டியாறு-புன்னம்புழாவிலே தமிழ்நாட்டுக்குள் திருப்பிகொண்டு போகிறீர்களே, அப்படியானால், பவானி ஆற்றிலிருந்து 10 டி.எம்.சி. நாங்கள் திருப்பிக்கொள்வதற்கு நீங்கள் ஒத்துக்கொள்ள வேண்டுமென்று ஓர் எதிர்வினா போட்டார்கள். நாம் அதை ஒத்துக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறோம். காரணம் பவானி ஆறு நம்முடைய காவிரியினுடைய துணை நதி. அந்தப் பவானி ஆற்றோடு சேர்ந்துதான் இன்றைக்கு வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. நான் மற்ற விளக்கங்களை அதிகமாக இங்கே சொல்லக் கூடாது. அதற்கு நாம் ஒத்துக்கொண்டிருந்தால், காவிரியிலே தண்ணீர் குறைகின்ற நிலைமை ஏற்படும். எனவே, இவற்றையெல்லாம் உள்நோக்கி, நம்முடைய மூத்த வழக்கறிஞர்களையெல்லாம் சந்தித்து, அதுகுறித்து அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, பிறகுதான் நாம் பவானி ஆற்றிலிருந்து 10 டி.எம்.சி. திருப்பிவிட முடியாது என்ற நிலையில் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்தோம். ஆனாலும், 28-11-1996 அன்று, நான் கேரள அமைச்சர் திரு. பேபி ஜான் அவர்களோடு பேசுகிறபோது தெரிவித்தேன், மற்ற பிரச்சினைகள் இருக்கட்டும், நீங்கள் தருகின்ற

தண்ணீருக்கு, மின்சாரத்திற்கு, நாங்கள் உணவைத் திருப்பித் தருகிறோம் என்ற முறையிலே திருப்பிக் கேட்டு, எங்கள் முதலமைச்சர் உங்களிடத்திலே சொல்லச் சொன்னார் என்று சொன்ன பிறகு, கேரள அமைச்சர் திரு. பேபி ஜான் அவர்கள் மீண்டும் அந்தத் திட்டத்தை எங்களுக்கு மின்சாரத் துறையின் மூலமாக அனுப்புங்கள் என்று சொன்னார்கள். நம்முடைய மின்சாரத் துறை அதற்கான திட்டத்தைத் வகுத்து அவர்களுக்கு அனுப்பியிருக்கிறது. இன்னும் அவர்களிடமிருந்து எந்த பதிலும் நமக்கு வரவில்லை.

மூன்றாவதாக ஒன்று கேட்டார் ஒத்தக் கருத்துடையவர்கள் எல்லாம் உட்கார்ந்து பேசலாமே என்றார். நான் மாண்புமிகு உறுப்பினருக்கு ஒன்று தெரிவித்துக்கொள்கிறேன். கேரளத்திலே முதலமைச்சராக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் திரு. நாயனார் அவர்கள்தான் இருக்கிறார்கள். ஆனால், இந்தப் பிரச்சினையிலே முழுமையாக எதிர்த்து பேசுகிறவர் அச்சுதன் என்கிற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர்தான். எனவே, மார்க்சிஸ்ட் கட்சியிலேதான் எதிர்த்துகொண்டிருக்கிறார்கள். காரணம் அங்கே மாநிலப் பற்று. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 551, திரு. இரா. பொன்னார்டு, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**551—**

### கிராமங்களை இணைப்பதற்குப் பாலம் கட்டுதல்

***919—திரு. இரா. பொன்னார்டு:***

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில், மேல மணக்குடி மற்றும் கீழ மணக்குடி கிராமங்களை இணைப்பதற்குப் பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,





(அ) ஆம்.

(ஆ) கீழ மணக்குடி, மேல மணக்குடி பாலம் கட்டுவதற்கு அரசாணை (நிலை) எண் 24, நெடுஞ்சாலைத் துறை, நாள் 27-1-1998 வாயிலாக ரூபாய் 400 இலட்சம் மதிப்பீட்டில் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்யப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டிலே இந்தப் பாலம் கட்டி முடிக்கப்படும்.

**திரு. இரா. பொன்னார்டு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி என்னால் பல மாதங்களுக்கு முன்னால் போடப்பட்டது. 50 ஆண்டு காலமாக ஊமையின் கனவாக இருந்த இந்தத் திட்டத்திற்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் செயல்வடிவம் தந்திருப்பதற்கும், இதைச் செயல்படுத்த முன்வந்திருக்கிற மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், நேரடியாகப் பயன் பெறும் மீனவ மக்களின் சார்பிலேயும், குமரி மாவட்ட மக்களின் சார்பிலேயும் நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, இத்திட்டம் எத்தனை ஆண்டுகளில் முடிவடையும் என்பதையும், மொத்தம் எவ்வளவு தொகை ஒதுக்கப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-05)

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த கீழ மணக்குடி, மேல மணக்குடி பாலத்திற்கு 400 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஓர் ஆண்டிற்குள்ளாக இந்தப் பாலம் கட்டி முடிக்கப்படும். காரணம், பல ஆண்டுகளாக அந்தப் பகுதி மீனவ மக்கள் எதிர்பார்த்து, எதிர்பார்த்து, ஏக்கத்தோடு காத்திருந்து, பல அமைச்சர்களிடத்திலே முறையிட்டு, இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் மாண்புமிகு லூர்தம்மாள் சைமன் அவர்கள் அமைச்சராக இருந்த காலத்திலேயே முறையீடு வைக்கப்பட்டு, அந்த முறையீடு இதுவரையில் ஏற்றுக்கொள்ளப்படாமலிருந்து, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்திற்கு சென்ற ஆண்டு அனுமதி அளித்து, 'நபார்டு' திட்டத்தின்கீழ் இந்தப் பாலம் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஓர் ஆண்டு காலத்தில் இந்தப் பாலம் கட்டி முடிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

[1998 மே 19

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மணக்குடி பாலம் நீண்டகாலத்திற்குப் பின்னால், இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு அனுமதி தந்து, அதற்கான நிதியையும் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால், அதனுடைய ஒப்பந்தங்கள் எல்லாம் கோரப்பட்ட பின்னாலும், அதை விரைவாக முடிப்பதற்கு உண்டான சூழ்நிலை என்பது உருவாக்கப்படவில்லை. மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் ஓர் ஆண்டிலே இது முடியும் என்று கூறியிருக்கிறார்கள். ஆனால், நிகழ்ச்சிப் போக்குகளைப் பார்க்கின்றபோது, இதற்கு முன்னால் அனுமதிக்கப்பட்ட பல பாலங்கள் - வல்லமடைப் பாலம், மங்காடு பாலம், சென்னித் தோட்டம் பாலம் ஆகிய இவற்றுக்கெல்லாம் ஒப்பந்தங்கள் கோரப்பட்ட பின்னாலும் வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. எனவே, இந்தத் துறையைப் பொறுத்தமட்டில், இந்த வேலைகளை விரைவாகச் செய்து முடிப்பதற்கு - அடுத்த வருடம் என்று சொல்லுகின்றபோது அதனுடைய செலவினம் அதிகமாகிவிடுகின்ற சூழ்நிலை உருவாகும். அந்த நிலை ஏற்படாமல் இருக்க - மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஏப்ரல் மாதம் 19 ஆம் தேதியன்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கன்னியாகுமரிக்கும், நாகர்கோவிலுக்கும் வருகை தந்து அமரர் ஜீவா அவர்களுடைய நினைவகத்தைத் திறந்து வைத்து, அந்த மாவட்டத்தில் பல்வேறுபட்ட திட்டங்களைத் தொடங்கிவைத்து, பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்கள். அதிலே இந்தக் கீழ மணக்குடி, மேல மணக்குடி பாலத்திற்கும் அடிக்கல் நாட்டினார்கள். 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள். பொதுவாக, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அடிக்கல் நாட்டும் விழாவிற்கு வருகை தர ஒப்புக்கொள்ள மாட்டார்கள்; திறப்பு விழாவிற்குத்தான் ஒப்புக்கொள்வார்கள். ஆனால், இப்படிப்பட்ட அடிக்கல் நாட்டு விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கலந்து கொண்டிருப்பதனால், அந்தத் திட்டம் குறிப்பிட்டக் காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும் என்ற ஆணையையும் எங்களுக்கு அவர்கள் பிறப்பித்திருக்கிறார்கள். ஆகவே, கடந்த காலத்திலே ஏற்பட்ட ஒப்பந்தங்கள், ஒப்படைக்கப்பட்ட பணிகள்-அது நெடுஞ்சாலைத் துறையோ அல்லது பொதுப் பணித் துறையோ-அது பற்றி நான்



1998 மே 19]

விளக்கம் சொல்ல விரும்பவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அது கடந்தகால நிகழ்ச்சி என்று நன்றாகத் தெரியும். ஆனால், இந்த இரண்டு ஆண்டு காலத்தில் எடுக்கப்பட்ட பணிகள், முறையாக நடைபெற்றன; விரைவாக நடைபெற்றன. குறிப்பிட்ட காலத்திலே முடிக்கப்பட வேண்டும் என்ற ஆணையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பிறப்பித்திருக்கிறார்கள். அதிலே, நாங்கள் எல்லாம் கண்ணும் கருத்துமாக இருக்கிறோம் என்ற உறுதியை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வதோடு, இந்தப் பாலம் மட்டுமல்ல, கிழக்குக் கடற்கரைச் சாலை எப்படி அழகாக உருவாக்கப்பட்டிருக்கிறதோ அதுபோல் மேற்குக் கடற்கரைச் சாலையும் உருவாக்கப்பட வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் முடிவெடுத்து, இந்தக் கீழ மணக்குடி, மேல மணக்குடிப் பாலங்களையும் இணைத்து, மேலும் இரண்டு பாலங்களும் கட்டப்பட்டு, நீரோடி வரையில், கேரள எல்லை வரையில் மேற்குக் கடற்கரைச் சாலையை அமைப்பதற்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏறத்தாழ 22 கோடி ரூபாய்க்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள் என்ற நல்ல செய்தியையும் இப்போது நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 552, திரு. கே.எம். விஜயகுமார். மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**552—**

**மதுரை - அருப்புக்கோட்டை - தூத்துக்குடி சாலையை நெடுஞ்சாலையாக்குதல்**

*6847—**திரு. கே.எம். விஜயகுமார்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை - அருப்புக்கோட்டை - தூத்துக்குடி நெடுஞ்சாலையை தேசிய நெடுஞ்சாலையாக எடுத்துக்கொள்ளும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.

[1998 மே 19

(அ) மற்றும் (ஆ): மதுரை - அருப்புக்கோட்டை - தூத்துக்குடி சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றும் திட்டம் தற்போது பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 10-10

**திரு. கே.எம். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை-அருப்புக்கோட்டை-தூத்துக்குடி நெடுஞ்சாலை இப்பொழுது மாவட்டச் சாலையாக இருந்து வருகிறது. தூத்துக்குடித் துறைமுகமானது வளர்ந்து வரும் பெரிய துறைமுகங்களில் ஒன்று. அதிகமான போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. ஏற்கெனவே தேசிய நெடுஞ்சாலை எண் 7, தூத்துக்குடியிலிருந்து திருநெல்வேலி வரை என்.எச். 7-ஏ என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இந்தத் தேசிய நெடுஞ்சாலை எண் 7 என்பதை நீட்டித்து, அந்தச் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக ஆக்குவதற்கு அரசு தக்க நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுகொள்வதோடு, இந்த ஆண்டே அதற்கான முயற்சியை எடுக்க இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை-தூத்துக்குடி சாலையில் 20/4 மற்றும் 65/6 ஆகியவை விருதுநகர் கோட்டத்திலும், 65/6 முதல் 133/2 முடிய தூத்துக்குடி கோட்டத்திலும் உள்ள முக்கிய மாவட்டச் சாலையாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்தச் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக ஆக்க வேண்டுமென்ற கோரிக்கை 1968-லிருந்தே கோரப்பட்டு வருகிறது. எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. நான் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது இதுகுறித்து விரிவாகக் கோரிக்கை வைத்தேன். அப்பொழுது நான் 'தூத்துக்குடி ஒரு வரலாற்று முக்கியத்துவம் பெற்ற இடம், மதுரை ஒரு வரலாற்று முக்கியத்துவம் பெற்ற இடம், எனவே, இந்த இரண்டு இடங்களை இணைத்து தேசிய நெடுஞ்சாலையாக ஆக்கவேண்டும்' என்று கேட்டேன். அப்பொழுது அவர்கள் 'வரலாற்று முக்கியத்துவம் பெற்ற-Historical places-இரண்டு இடங்களை இணைப்பதற்கு, ஏற்கெனவே கன்னியாகுமரி - மதுரை தேசிய நெடுஞ்சாலை இருக்கிறது, எனவே, There cannot be two parallel National Highways connecting two important historical places, என்று எனக்குப் பதில் சொன்னார்கள். அதற்குப் பிறகும் இது வலியுறுத்தப்பட்டது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும்



1998 மே 19]

1969 ஆம் ஆண்டே, பொறுப்பேற்றுக் கொண்ட பின்பு, மீண்டும் வலியுறுத்தினார்கள். அவர்கள் வலியுறுத்திய பின்புதான், தூத்துக்குடித் துறைமுகமே அப்பொழுது செயல்படத் தொடங்கியது. எனவே, அவர்களுடைய வற்புறுத்தலை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டு, தூத்துக்குடித் துறைமுகத்தை தேசிய நெடுஞ்சாலையோடு -National Highways- இணைக்க வேண்டும் என்பதுதானே உங்களுடைய கோரிக்கை, எனவே, தூத்துக்குடி-திருநெல்வேலியை நாங்கள் இணைத்துவிடுகிறோம், அதற்கு நாங்கள் தேசிய நெடுஞ்சாலை 7-ஏ என்று பெயர் சூட்டுகிறோம்' என்று சொல்லி அப்படியே இணைத்துவிட்டார்கள். தூத்துக்குடி ஏற்கெனவே தேசிய நெடுஞ்சாலையோடு இணைந்துவிட்ட காரணத்தால், இன்னொரு தேசிய நெடுஞ்சாலை தேவையில்லை என்று மத்திய அரசு கருதுகிறது. ஆனால் நமக்கு அது தேவை என்று நாம் விரும்புகிறோம். இருந்தாலும், தேசிய நெடுஞ்சாலையாக அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றாலும், அந்தச் சாலையினுடைய முக்கியத்துவத்தை நம்முடைய அரசு உணர்கிறது. அதிலே போக்குவரத்து அதிகம் இருக்கிறது என்பதையும் உணர்கிறது. எனவே,' அந்தச் சாலை அகலப்படுத்தப்பட வேண்டும் அல்லது உறுதிப்படுத்தப்பட வேண்டும். அந்தச் சாலையை தேசிய நெடுஞ்சாலையில் இணைப்பதற்குரிய அந்தத் திட்டத்தோடு வேறு சில திட்டங்களையும் நம்முடைய அரசு தயாரித்து இருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களோடு இதுகுறித்து கலந்து பேசியிருக்கிறோம். இந்தத் திட்டத்தை I.L. & F.S. என்ற தனியார் நிறுவனத்தின் மூலம் மேம்படுத்தலாமா BOT மூலமாக மேம்படுத்தலாமா என்று எண்ணி, பிறகு I.L. & F.S. கம்பெனி மூலம் அதைச் செயல்படுத்த வேண்டுமென்று பரிசீலித்து, மாண்புமிகு முதல்வர் அவர்களோடு இதுகுறித்து கலந்து பேசியிருக்கிறோம். அவர்களும் அதற்கு ஒப்புதல் வழங்கியிருக்கிறார்கள். எனவே, விரைவில் அந்தச் சாலையை மேம்படுத்துவதற்கான வேறு பல முயற்சிகளையும் எடுக்க வேண்டியிருந்தால், அவைகளும் மேற்கொள்ளப்படும் என்ற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தங்கம் தென்னரசு.

**திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை-அருப்புக்கோட்டை-தூத்துக்குடி நெடுஞ்சாலையிலே இப்பொழுது கனரக வாகனங்களின் போக்குவரத்து மிகுந்து இருப்பதாலும், கல்குறிச்சி-காரியாப்பட்டி ஆகிய ஊர்களின் வழியாக

செல்லக்கூடிய இந்தச் சாலை மிகக் குறுகலாக, வளைவுகள் மிகுந்தும் இருக்கிற காரணத்தாலும், கல்குறிச்சி காரியாப்பட்டியில் புறவழிச் சாலை அமைத்து, போக்குவரத்து நெரிசலைக் குறைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை - தூத்துக்குடி நெடுஞ்சாலையை அகலப்படுத்துவதற்கும், விரிவுபடுத்துவதற்கும், உறுதிப்படுத்துவதற்கும், திட்டம் மேற்கொள்ளப்படுகின்றபோது, அதுவும் நான் ஏற்கெனவே குறிப்பிட்ட Infrastructure Leasing and Finance Services என்ற நிறுவனத்திடம் நாம் ஒப்படைத்தாலோ அல்லது நபார்டு திட்டத்தின் மூலம் நாம் நிதியுதவி பெற்று அதைச் செயல்படுத்தினாலோ இந்தப் புறவழிச் சாலை எங்கெங்கு அமைக்க முடியுமோ அதற்கான சாத்தியக்கூறுகளும், அதற்கான ஆய்வுகளும் மேற்கொள்ளப்படும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். மணி நாடார்.

**திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய சாத்தான்குளம் தொகுதியில் இருக்கின்ற ரோடுகள் எல்லாம் ஒருவழிப் பாதையாக இருக்கின்றன. ஒரு வண்டி எதிரிலே வந்தால் இன்னொரு வண்டி போவதற்குக்கூட வழியில்லாத நிலை அங்கே இருக்கிறது. ஆகவே குறிப்பாக, வள்ளியூரில் இருந்து சாத்தான்குளம் வழியாகச் செல்லும் திருச்செந்தூர் சாலையை அகலப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். சாத்தான்குளத்திலிருந்து நாசரேத் வழியாக ஆழ்வார்திருநகர் செல்லும் அந்தச் சாலையையும் செம்மைப்படுத்திக் கொடுக்கவேண்டும். பொன்னங்குறிச்சியிலிருந்து சாத்தான்குளம் வழியாக பேய்குளம் செல்லும் அந்த ரோடையும் செம்மைப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திசையன்விளையிலிருந்து திருச்செந்தூர் செல்லும் சாலையில்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது மூல வினாவிற்குத் தொடர்பில்லாதது. திரு. இரா. தாமரைக்கனி.



**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை, திருமங்கலம், கல்லுப்பட்டி, ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம், செங்கோட்டை, கொல்லம் போன்ற சாலைகள் எல்லாம் புனலூர் வரை இரண்டு மாநிலங்களையும் இணைக்கின்ற ரோடுகளாக இருக்கின்றன. இவைகளைத் தேசிய நெடுஞ்சாலையாக ஆக்குவதற்கு ஏற்கெனவே முந்தைய அரசின் செயற்குறிப்பு இருந்தது. அந்தச் செயற்குறிப்பு இப்போது எந்த நிலையில் உள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநில அரசு ஒவ்வோர் ஆண்டும் இன்னின்ன சாலைகளைத் தேசிய நெடுஞ்சாலையில் இணைக்க வேண்டுமென்ற கருத்துருக்களை மத்திய அரசுக்கு அனுப்புகிறது. குறிப்பாக நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசிடத்திலே சில சாலைகளைத் தேசிய நெடுஞ்சாலைகளாக ஆக்கவேண்டுமென்ற கோரிக்கைகளை வைத்தார்கள். தில்லியில் நம்முடைய ஐக்கிய முன்னணி அரசு இருந்த காரணத்தாலும், அங்கே நம்முடைய தமிழ்நாட்டைச் சேர்ந்த மாண்புமிகு திரு. டி.ஜி. வெங்கட்ராமன் அவர்கள் மத்திய தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர் பொறுப்பை ஏற்றிருந்த காரணத்தாலும், கடந்த ஆண்டு நம்முடைய தமிழகத்து மக்கள் பாராட்டத்தக்க வகையில், பெருமைப்படத்தக்க வகையில், ஓரே ஆண்டில் அதிகமான அளவு 500 கி.மீ. நீள தேசிய நெடுஞ்சாலையை மத்திய அரசு நமக்கு வழங்கியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் கேட்ட இந்தச் சாலையையும் நாம் பரிந்துரை செய்திருந்தாலும், மத்திய அரசு இன்னும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்குரிய பல்வேறுபட்ட காரணங்களை அவர்கள் தருகிறார்கள். மீண்டும் தமிழ்நாட்டில் அகில இந்திய அளவில் தேசிய நெடுஞ்சாலைகளுடைய நீளம் இன்னும் அதிகப்படுத்தப்பட வேண்டுமென்ற ஆர்வத்தில் நம் அரசு இருக்கிறது. அதற்கான முயற்சியை நாம் மேற்கொள்ள இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்களும், அவருடைய செல்வாக்கைப் பயன்படுத்தி, மத்திய அமைச்சர்கள் மூலம் தமிழ்நாட்டுக்கு அதிகமான தேசிய நெடுஞ்சாலையைத் தர வேண்டுமென்று பரிந்துரை செய்யலாம். குறிப்பிட்ட அந்தச் சாலையை அதில் சேர்ப்பதற்கும், மத்தியத் தரைவழிப் போக்குவரத்து அமைச்சரிடத்தில் அவர் பரிந்துரை செய்யலாம்.

[1998 மே 19

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பா.மு. முபாரக்.

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தேசிய நெடுஞ்சாலைகள் குறித்து மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதில், கடலூரிலிருந்து நாகப்பட்டினம் வரையிலான நெடுஞ்சாலை பரிந்துரை செய்யப்பட்டுள்ளதா? கடலூரானது ஒரு பக்கத்தில் கர்நாடக மாநிலமும், இன்னொரு பக்கத்தில் கேரள மாநிலமுமாக இரண்டு மாநிலங்கள் இணைகின்ற பகுதியாக இருப்பதாலும், கடலூரிலிருந்து உதகை, மேட்டுப்பாளையம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் என்ற ஊர்களைக் கொண்ட மிக முக்கியமானச் சாலையாக அது இருப்பதாலும், இந்தச் சாலையை இணைக்கப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதா? அதற்கான தகவல் ஏதுவும் வந்திருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10 20

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விகளெல்லாம் இதற்குத் தொடர்புடைய கேள்விகளாக இல்லை என்றாலும், மாண்புமிகு உறுப்பினருடைய விருப்பத்தை நான் நிறைவேற்ற விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நாகப்பட்டினம், கரூர், கடலூர், மைசூர் வரையில் தேசிய நெடுஞ்சாலையாக ஆக்க வேண்டுமென்று ஏற்கெனவே கோரிக்கை வைத்திருந்தார்கள். மத்திய அரசு அதைப் பரிசீலித்து, நாகப்பட்டினம்-கரூர் வரையில் தேசிய நெடுஞ்சாலையாக இப்போது ஏற்றுக் கொண்டிருக்கிறது. கரூரையும் தாண்டி, கடலூர், மைசூர் வரையில் அந்தத் தேசிய நெடுஞ்சாலையை நீட்டிக்க வேண்டும் என்ற அந்தக் கோரிக்கையை தமிழக அரசு இன்னும் வலியுறுத்திக் கொண்டிருக்கிறது. அதை விரைவில் பெறுவோம் என்ற நம்பிக்கையும் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 553, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.



1998 மே 19]

**553—**

**மாடம்பாக்கம் தேனுபுரீஸ்வரர் ஆலயத்தில் சுரங்கப் பாதை**

***9655—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, மாடம்பாக்கம், தேனுபுரீஸ்வரர் ஆலயத்தில் சுரங்கப்பாதைகள் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மேற்படி திருக்கோயிலின் சுப்பிரமணிய சுவாமி சன்னதியின் அருகில் ஒரு சுரங்கப்பாதை போன்று உள்ளது. இது எவ்வளவு தூரம் செல்கிறது என்று தெரியவில்லை. இச்சுரங்கப்பாதையின் அருகில் உள்ள தெப்பக்குளத்தில் நீர் மட்டம் உயரும்போது இந்தச் சுரங்கத்திலும் நீர் மட்டம் உயரும். இதுபோன்று ஆலயத்தினுள் நுழைந்தவுடன் சுவாமி சன்னதி பிரகாரத்தையொட்டி சுவாமி சன்னதிக்கு இடதுபுறம் ஓர் இரகசிய அறை, 24 X 2 மீட்டர் அளவில் உள்ளது. இதற்கான வழி, ஒரு சுரங்கப்பாதை போன்ற அமைப்பில் உள்ளது.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க கோவிலில் இருக்கின்ற சுரங்கப் பாதையில் ஓர் இரகசிய மண்டபம் இருந்ததாகவும், அதிலே, பொருட்களைப் பாதுகாக்கின்ற பெட்டகம் ஒன்று இருந்ததாகவும், வயது முதிர்ந்தவர்கள், நூறு வயதை எட்டியவர்கள் நம்பிக்கையாகப் பேசிக் கொள்கிறார்கள். எனவே, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களைக் கொண்டு அந்தச் சுரங்கப்பாதையை ஆய்வு செய்வதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

[1998 மே 19

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. இந்தக் கோவில் அறநிலையத் துறையின் ஆட்சியின் கீழ் வந்தாலும், இதனைப் பேணுகின்ற பொறுப்பு இந்தியத் தொல்பொருள் புராதனத் துறைக்குத் தொடர்புடையதாக இருக்கிறது. எனவே, அவர்களிடம் இதனை வலியுறுத்தி, இதனை முழுமையாக ஆய்வு செய்து, இந்த உண்மைகள் வெளிக்கொணரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதைப்போன்றே வேலூர் கோட்டைக் கோயிலான ஜலகண்டேஸ்வரர் கோயிலில் உள்ள மூலஸ்தானத்திலிருந்து விரிஞ்சிபுரம் மார்க்கபந்தீஸ்வரர் கோயிலுக்கு எல்லோருக்கும் தெரிந்த ஓர் இரகசியப் பாதை இருக்கிறது. அதுகுறித்து, அரசு ஆய்வு செய்திருக்கிறதா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லோருக்கும் தெரிந்தால் அது இரகசியப் பாதை அல்ல.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** Open secret எனவே, எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான். அதுகுறித்து அரசு ஏதேனும் ஆய்வு செய்திருக்கிறதா? அந்தப் பாதை இப்போது பயன்படுத்துவதற்கு ஏற்புடையதாக இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. தனிக் கேள்வி தொடுத்தால் விடை தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 554, திரு. கொ.வீ. நன்னன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

**554—**

### பால் பண்ணை அமைத்தல்

***10634**—**திரு. கொ.வீ. நன்னன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 மே 19]

*(அ) திருவண்ணாமலை மாவட்டத்தில் பால் பண்ணை அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?*

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத். தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): திருவண்ணாமலை மாவட்டத்தில். திருவண்ணாமலையிலும், அனக்காவூரிலும் தற்போது பால் குளிரூட்டும் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இக்குளிரூட்டும் நிலையங்களில் பெறப்படும் பாலின் அளவு, அவைகளின் கொள்திறனுக்குப் போதுமானதாக உள்ளது. மேலும், அப்பகுதியில் புதிய பால் பண்ணை அமைப்பதற்குத் தேவையான நிதி ஆதாரம் வேலூர் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திடம் இல்லை. எனவே, திருவண்ணாமலை மாவட்டத்தில் பால்பண்ணை அமைக்கத் தற்போது வாய்ப்புகள் இல்லை.

**திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதற்கெடுத்தாலும் இல்லை என்று சொன்னால் எப்படி? (சிரிப்பு) குஜராத்தைப்போல தமிழகத்தில், திருவண்ணாமலை மாவட்டத்தில்தான் அதிகப் பால்வரத்து இருக்கிறது. அதனால் திருவண்ணாமலை மாவட்டத்திற்குத் தனியாக ஒரு பால் ஒன்றியம் அமைத்துத் தர அரசு ஆவன செய்ய வேண்டும், மறுபரிசீலனை செய்ய வேண்டும். செய்ய வேண்டும், செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, மறுபரிசீலனை செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலையில் பால் பண்ண அமைக்க இரண்டு கோடியே, ஐம்பது இலட்சம் ரூபாய் செலவாகும். இதுகுறித்து தேசிய பால்வள வாரியத்திடம் நிதியுதவி பெற அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பால. ஆனந்தன்.

*முற்பகல் 10-25*

**திரு. பால. ஆனந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், 1989ஆம் ஆண்டு, தமிழக முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்டது. இதுவரையிலேகூட, இந்த மாவட்டம் பின்தங்கிய நிலையிலேதான் இருக்கிறது. இந்த

மாவட்டத்தில் உற்பத்தியாகின்ற பாலானது, அச்சிறுப்பாக்கத்திற்கும், வேலூருக்கும் செல்கிறது. எங்கள் மாவட்டத்திலுள்ள தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, நலிந்த நிலையில் இருக்கின்ற விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பால், மற்ற மாவட்டங்களுக்குச் செல்கிறபோது, எங்கள் மாவட்டத்திலும் இப்படிப்பட்ட பால் ஒன்றியத்தை அமைத்துத் தந்தால், மிகவும் வசதியாக இருக்கும். எனவே, அரசு அதுகுறித்து மறுபரிசிலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை இல்லாமல் 28 மாவட்டங்களுக்கு 17 ஒன்றியங்கள் அமைத்துச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஏனென்று சொன்னால், சிக்கன நடவடிக்கையாக இரண்டு மாவட்டங்கள், மூன்று மாவட்டங்கள் என்ற வகையிலேதான் அந்த ஒன்றியங்களை அமைத்துச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். எனவே, சிக்கன நடவடிக்கை என்ற வகையிலேதான், திருவண்ணாமலையில் உற்பத்தியாகின்ற 1½ இலட்சம் லிட்டர் அளவுள்ள பால், வேலூருக்குக் கொண்டு வரப்பட்டு, அங்கே பதப்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்; தேசிய பால்வளத் துறையிடம் நிதி ஒதுக்கீடு கேட்டு, பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வ. அன்பழகன்.

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில், செய்யாறு வட்டத்தில், அனக்காவூரில் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் இருக்கிறது. ஆனால், செய்யாறு வட்டத்திலே இருக்கக்கூடிய பல கிராமங்களில் உற்பத்தி செய்யக்கூடிய பால், காஞ்சிபுரம் மாவட்டத்தில் இருக்கக்கூடிய பாலுசெட்டிசத்திரம் பால் குளிரூட்டும் நிலையத்திற்கு அனுப்பப்படுகிறது. ஆகவே, பட்டுவாடா செய்வதில் மாதக் கணக்கிலே தாமதம் இருக்கிற காரணத்தினால், என்னுடைய தாலுகாவிலே இருக்கக்கூடிய அனக்காவூரில் உள்ள பால் குளிரூட்டும் நிலையத்திலே பாலை அனுப்புவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எது அருகிலே இருக்கிறதோ, அந்த வகையிலேதான் பாலைக் கொண்டுவர வேண்டும். குறிப்பாக, காஞ்சிபுரம்-திருவள்ளூர் மாவட்டத்தையும், விழுப்புரம்-கடலூர்



மாவட்டத்தையும் எடுத்துக்கொண்டால், கடந்த ஆட்சியின் மெத்தனம் காரணமாக, காஞ்சிபுரம்-திருவள்ளூர் மாவட்டம் ஒரு கோடி ரூபாயும், விழுப்புரம்-கடலூர் மாவட்டம் மூன்று கோடி ரூபாயும் பாக்கி வைத்திருக்கின்றன. என்.சி.டி.சி. என்கிற நிறுவனத்திடமிருந்து இன்னும் ஒரு மாதகாலத்தில் அந்தப் பணம் வருகிற நிலையில் உள்ளது. நமது மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்கூட, இதுகுறித்து ஆணையிட்டிருக்கிறார்கள். ஆகவே, கூடிய விரைவில், இந்த இரண்டு மாவட்டங்களுக்குப் பணம் பட்டுவாடா செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதையும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஏ. ராசேந்திரன்.

**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்ட ஒன்றியத்தில் 2 இலட்சத்து 10 ஆயிரம் லிட்டர் பால் தினமும் கொள்முதல் செய்யப்படுகிறது. வேலூரில் இருந்து திருவண்ணாமலையைத் தனியாகப் பிரித்து, அதற்கு ஓர் ஒன்றியம் அமைப்பதற்கு இப்போது வாய்ப்பில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இருந்தாலும், கருணையுள்ளம் கொண்ட கலைஞர் அரசு, திருவண்ணாமலை மாவட்டத்தில், பால் பவுடர் தொழிற்சாலையையாவது அமைக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உபரி பால் இருந்தால்தான் பால் பவுடர் தொழிற்சாலை அமைக்க ஆவன செய்யப்படும். இப்போது பால் பற்றாக்குறை இருக்கிறது. உபரி பால் இருந்தால், அதுபற்றிப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 555, திரு. பி. வெங்கடசாமி, மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர்,

**555—**

**ஒலி மாசு ஏற்படுவதைத் தடுத்தல்**

***14144—திரு. பி. வெங்கடசாமி:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மே 19

(அ) ஒன்னலவாடி மற்றும் சென்னட்டு ஊராட்சிகளில் வெடிமருந்து வெடிப்பதால், அப்பகுதிகளின் சுற்றுப்புறச் சூழல் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதுகுறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்

(ஆ) பாறைகளை உடைப்பதற்கு வெடிமருந்தைப் பயன்படுத்துவதாலும், எக்ஸ்ப்ளோசிவ்ஸ் அண்டு அக்ஸஸரீஸ் லிமிடெட் என்ற நிறுவனம் வெடிமருந்துப் பரிசோதனை செய்வதாலும், இப்பகுதியில் ஒலி மாசு ஏற்படுவது கண்டறியப்பட்டுள்ளது. பாறைகளை உடைப்பதனால் ஏற்படும் ஒலி மாசுவிற்குப் பொது மக்களிடம் ஆட்சேபணை இல்லை. திருவாளர்கள் சூ.ஆ எக்ஸ்ப்ளோசிவ்ஸ் அண்டு அக்ஸஸரீஸ் நிறுவனம் வெடிமருந்துச் சோதனை செய்வதால் ஏற்படுகின்ற ஒலி மாசுவுக்குப் பொது மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததால், அத்தொழிற்சாலை ஆய்வு செய்யப்பட்டு, குடியிருப்பு அல்லாத பகுதியில் பரிசோதனை செய்யவும், பரிசோதனைகளின் எண்ணிக்கையைக் குறைத்துக் கொள்ளவும், அறிவுரைகள் அத்தொழிற்சாலைக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்த அறிவுரைகளை இத்தொழிற்சாலை கடைபிடித்து வருகிறதா எனத் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி, இருக்கையில் இல்லை.

வினா எண் 556, திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

156—

**தொழிற்பயிற்சி நிலையம் அமைத்தல்**

***11430— திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 மே 19]

(அ) மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பில், திருமங்கலம் தொகுதி, செக்கானூரணியில் பெண்கள் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பில் திருமங்கலம் தொகுதி, செக்கானூரணியில், பெண்கள் தொழிற் பயிற்சி நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கோ. தளபதி.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருமங்கலம், சேடப்பட்டி போன்ற கிராமங்களிலுள்ள விவசாயப் பெருங்குடி மக்களின் குடும்பங்களைச் சேர்ந்த ஏழைப் பெண்கள் எந்த விதத்திலும் கல்வி கற்பதற்கு வழியில்லை. அங்கு இதுபோன்ற பெண்கள் தொழிற் பயிற்சி நிலையத்தினை ஏற்படுத்திக் கொடுத்தால் அந்தத் தொழிற் கல்வியை அவர்கள் கற்பதற்கு வசதியாக இருக்கும். எனவே அரசு மீண்டும் பரிசீலனை செய்து அங்கே அந்தத் தொழிற் பயிற்சி நிலையத்தினை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் புதிதாகத் தொழில் பயிற்சி நிலையங்கள் துவக்கப்பட வேண்டியதன் அவசியத்தை ஆராய்ந்து கொள்கை ரீதியாக முடிவெடுக்க வேண்டிய பொறுப்பு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரின் வரம்பிற்குட்பட்டதாகும். எனவே,

[1998 மே 19

இப்பொருள் குறித்து வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரிடம் மாண்புமிகு உறுப்பினர் தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.என். வல்லரசு

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருமங்கலம், செக்கானூரணி போலவே, உசிலம்பட்டி தொகுதியிலும் பெண்களின் நிலைமை முன்னேற்றமற்ற சூழ்நிலையில் இருக்கின்ற காரணத்தாலும், பெண் சிசுக்கள் அதிகமாகப் படுகொலை செய்யப்படக்கூடிய நிலைமை அங்கே இருக்கின்ற காரணத்தினாலும், பெண்கள் தொழிற் பயிற்சி நிலையத்தினை அங்கே உருவாக்கித் தர வேண்டும் என்று நான் பலமுறை கேட்டிருக்கிறேன். எனவே அரசு அதைப் பரிசீலனை செய்து, உசிலம்பட்டி தொகுதியில் பெண்கள் தொழிற் பயிற்சி நிலையத்தினை அமைத்துத்தர முன்வருமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கும், இந்தத் துறைக்கும் தொடர்பு இல்லை. இந்தக் கேள்வியினை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரிடம் கேட்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே செக்கானூரணியில் அரசின் சார்பாக ஓர் ஐ.டி.ஐ. இருக்கின்றது. எந்த ஒரு பஞ்சாயத்து ஒன்றியத்தில் ஐ.டி.ஐ. இல்லையோ, அங்கெல்லாம் ஐ.டி.ஐ. துவக்கப்பட வேண்டும் என்பது அரசின் கொள்கை. அந்த அடிப்படையிலே அறிவிப்பு செய்து படிப்படியாக 3 ஆண்டுகளிலே ஐ.டி.ஐ.-க்களை அமைக்க ஏற்பாடு செய்து வருகிறோம். தமிழ்நாட்டில் ஏற்கெனவே 10 மகளிர் ஐ.டி.ஐ.-க்கள் இருக்கின்றன. அதுபோல தாழ்த்தப்பட்டோருக்காகவும் இருக்கின்றன, பிற்படுத்தப்பட்டோருக்காகவும் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 557, திரு. ப. கோவிந்தன், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.



1998 மே 19]

**557—**

### கால்நடை மருத்துவ நிலையம் கட்டுதல்

***12594**—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், வெள்ளார் ஊராட்சி, எருமைப்பட்டியில் கால்நடை மருத்துவ நிலையம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், வெள்ளார் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள எருமைப்பட்டி கிராமத்தின் கால்நடைகளுக்கு வெள்ளார் கால்நடை மருந்தகம் மற்றும் தொப்பூர் கால்நடை மருந்தகம் மூலம் அளிக்கப்படும் சிகிச்சை மற்றும் கருவூட்டல் பணிகள் போதுமானதாக உள்ளதால், தற்போது அங்கு கால்நடை மருத்துவ நிலையம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேச்சேரி ஒன்றியத்திலேயுள்ள எருமைப்பட்டி கிராமம், கால்நடைகள் அதிகமாக இருக்கின்ற பகுதியாக இருக்கின்ற காரணத்தால், அங்கே ஒரு பகுதி நேர கால்நடை மருத்துவமனையை அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எருமைப்பட்டி கிராமத்தில் சுமார் 3,500 கால்நடைகள்தான் இருக்கின்றன. எருமைப்பட்டி கிராமத்திலிருந்து 5 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் வெள்ளார் பகுதியில் ஒரு கால்நடை மருந்தகமும், தொப்பூர் அருகில் ஒரு கிளை நிலையமும் செயல்பட்டு வருகின்றன. நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டும், எதிர்காலத்தில் கால்நடைகளின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டும், எதிர்காலத்தில்

அங்கே ஒரு கால்நடை மருந்தகம் அமைக்க, பரிசீலனை செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரையின் பேரிலே 5 பகுதி நேர கால்நடை மருத்துவமனைகள் வழங்கப்படும் என்று சென்ற ஆண்டு சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலாவது அந்தப் பகுதியிலே ஒரு பகுதி நேர கால்நடை மருத்துவமனையை அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 5 பார்வைக் கிளை நிலையங்களுக்கு இடங்களைத் தேர்வு செய்யும்போது அதில் ஒன்றாக அந்தக் கிராமத்தைத் தேர்வு செய்து அனுப்பினால் பரிசீலனை செய்து, அங்கு ஒரு கிளை நிலையம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 558, திரு. க. மணிவர்மா, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**558—**

## முதியோர் இல்லம் அமைத்தல்

***3192*—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*வட்டார அளவில் முதியோர் இல்லம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

வட்டார அளவில் முதியோர் இல்லம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இப்போது இல்லை.



**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதரவின்றி வறுமையில் வாடுகின்ற முதியோர்களுக்கும் பிள்ளைகள் இருந்தாலும், 'பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு' என்பார்களே, அந்த நிலையிலே இருக்கின்ற வயது முதிர்ந்த பெற்றோர்களுக்கும், அவர்களைப் பாதுகாக்க, அவர்களுக்கு உணவு வழங்க, பாதுகாப்பு இல்லங்களைத் தொடங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வறுமை நிலையிலுள்ள குடும்பத்தைச் சார்ந்த முதியோர்களுக்கும், ஆதரவற்ற நிலையில் இருக்கின்ற முதியோர்களுக்கும், அன்றாட வாழ்க்கையில் உணவு, உறைவிடம் பெறுவதற்கு இயலாமல் துன்புறுகின்றவர்களுக்கும் உதவி செய்ய வேண்டும் என்ற நோக்கோடு சமூக நலத் தொண்டு நிறுவனங்கள் முன்வர வேண்டுமென்று அரசு வேண்டுகோள் விடுத்திருந்தது. அதற்கேற்ப, 1991-92ஆம் ஆண்டில் 5 இல்லங்களுக்கும், 1993-94-ஆம் ஆண்டில் 5 இல்லங்களுக்கும் மானியம் அளிப்பதற்கு அரசு அனுமதி வழங்கியிருக்கிறது. அரசின் சார்பில் புதிதாக முதியோர் இல்லங்கள் தொடங்குவதற்கான ஆலோசனை ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதரவற்ற முதியோர் இல்லங்கள் தொடங்குவதற்கு தொண்டு நிறுவனங்களுக்கு ஓர் இலட்சம் ரூபாய் வீதம் கொடுக்கப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த முறை சொல்லியிருந்தார்கள். சில தொண்டு நிறுவனங்கள் முழுமையாக வியாபார ரீதியாகச் செயல்படுகின்றன. தற்போது வழங்கப்படும் ஓர் இலட்ச ரூபாயோடு மேலும் ஓர் இலட்சம் ரூபாயைக் கூடுதலாகக் கொடுப்பதுடன், அரசே ஒவ்வோர் ஒன்றியத்திலும் அல்லது தாலுகா தலைநகரங்களிலும் முதியோர் இல்லங்களைத் தொடங்கினால் உண்மையில் வறுமையில் வாடுகின்ற முதியோர்களைப் பாதுகாப்பதற்கும், அவர்களுக்கு உணவு வழங்குவதற்கும் வாய்ப்பு ஏற்படும் என்பதை அரசு அறிந்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதலமைச்சர் அவர்களிடம் கலந்துபேசி அதற்குண்டான வழிவகைகளைச் செய்வார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

[1998 மே 19

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொண்டு நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டு இருக்கின்றனவா என்பதைப் பார்க்கிறோம். 3 ஆண்டுகள் அவர்கள் அந்த நிறுவனத்தை நடத்தியிருக்கிறார்களா என்பதைக் கண்டறிகிறோம். அவர்கள் கணக்குகளை ஒழுங்காகப் பராமரித்து வருகின்றார்களா என்பதையும் பார்த்துதான் அந்தத் தொண்டு நிறுவனங்களுக்கு ஆண்டுக்கு ஓர் இலட்ச ரூபாயை மாநில அரசு வழங்குகிறது. மத்திய அரசினுடைய ஒப்புதலோடு, மத்திய அரசினுடைய மானியத்தைப் பெற்று தமிழகத்தில் 25 முதியோர் இல்லங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அதிலே சேருவதற்கு நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. உறுப்பினருடைய மாவட்டத்திலே 'Hospitality for the Needy' என்ற தொண்டு நிறுவனத்தில் 40 முதியோர்கள் தங்கி அனைத்து வசதிகளையும் பெற்று வருகிறார்கள். முதியோர்கள் தங்குவதற்குண்டான இடங்கள் தமிழகத்தில் பல இடங்களில் இருக்கின்றன. மேலும் தேவை இருப்பின் சமூக நலத் தொண்டு நிறுவனங்களை நன்கு கண்டறிந்த பின்னர் அவர்களுக்கு அந்த அங்கீகாரத்தை வழங்குவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொண்டு நிறுவனங்கள் மூலமாக முதியோர் இல்லங்கள் ஆரம்பிக்கப்படுவது சரியானதாகும். இருந்தாலும், நாம் முதியோர்களுக்கு உதவித் தொகை வழங்கி வருகிறோம். அந்த உதவித் தொகை வழங்குவதைப் பொறுத்தவரையில் ஆண் மக்கள் இருந்தால் முதியோர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுவதில்லை. அதைத் தயவுசெய்து மாற்றியமைக்க வேண்டும். எங்கெங்கே ஆண் வாரிசுகள் இருக்கிறார்களோ, ஆண் பிள்ளைகள் இருக்கிறார்களோ அங்கெல்லாம் அவர்கள் தாய், தந்தையைப் பிடித்து வெளியே அனுப்பிவிடுகிறார்கள். ஆகவே, ஆண் மக்கள் இருந்தாலும் வாழ முடியாத ஏழைகளுக்கு நீங்கள் அந்த உதவித் தொகையை வழங்குவதற்குண்டான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்ய அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.



1998 மே 19]

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அம்மையார் அவர்கள் இந்தக் கேள்வியை ஒரு முறை எழுப்பியிருக்கிறார்கள். இதுகுறித்து நம்முடைய முதலமைச்சர் அவர்களிடம் கேட்டபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கிய உத்தரவை நான் என்னுடைய மானியத்தின்போது எடுத்துச் சொன்னேன். விதவையினுடைய குழந்தைகள் ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும், குறிப்பாக ஆண் மகனாக இருந்தால், அவனுக்கு 18 வயது நிரம்பியிருந்தால் உதவித் தொகை அந்த விதவைக்குக் கிடையாது என்று இருந்த விதி இப்போது நீக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியை நான் அந்த நேரத்தில் எடுத்துச் சொன்னேன். அம்மையார் அவர்கள் இப்போது முதியோர்கள் என்ற அடிப்படையிலே, பெற்றோர்களுக்கான உதவித் தொகை வழங்குவதிலே ஆண் வாரிசுகள் என்று இருப்பதை பொருட்படுத்தக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். எல்லா ஆண் குழந்தைகளும் பெற்றோர்களை ஒதுக்கி விடுவதில்லை. அதிலே சில விதிவிலக்குகள் இருக்கின்றன. அந்த விதிவிலக்குகளை ஆராய்ந்து, உண்மையிலேயே அந்த மகனால் பெற்றோருக்கு எந்தவிதமான உதவியும் இல்லை என்று சம்பந்தப்பட்ட நிர்வாகத்தில் இருப்பவர்களிடம் எடுத்துச் சொல்லுவார்களேயானால், அந்த உதவித் தொகை அவர்கட்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 559, திரு. த. நடராஜன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**559—**

## ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி அமைத்தல்

***7751—திரு. த. நடராஜன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சியில் அரசு ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[1998 மே 19

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) செஞ்சியில் ஏற்கெனவே ஒரு மாணவர் விடுதியும், ஒரு மாணவியர் விடுதியும் இயங்கி வருவதால், மாணவர் விடுதி ஆரம்பிக்கும் உத்தேசம் இல்லை.

(ஆ) ஆகவே, இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. த. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செஞ்சியில் ஏற்கெனவே 35 ஆண்டுகளாக ஒரு மாணவர் விடுதி உள்ளது. ஆனால் அந்த மாணவர் விடுதி ஒரு தனியார் கட்டடத்தில், அதுவும் ஒரு குடோனில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மிகவும் மோசமாக இருக்கின்ற அந்தக் கட்டடத்தில் விடுதி நடைபெற்றுக் கொண்டு வருவதால் மாணவர்கள் மிகவும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான் இதுகுறித்து மாண்புமிகு அமைச்சரிடம் பலமுறை நேரில் கூறியிருக்கிறேன். மாணவர் விடுதிக்கு என்று இடம் இருக்கிறது. அந்த இடத்தைத் தனியார் ஆக்கிரமிக்கின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, அந்த மாணவர்களுக்காக மாணவர் விடுதி கட்டித் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.40

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாணவர் விடுதி கட்டுவதற்காக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டு இருக்கிறார்கள். ரூ.8 கோடியே 50 இலட்சம் இதற்கு ஒதுக்கப்பட்டு மாணவியர் விடுதி கட்டுவதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டு மாணவியர் விடுதியைக் கட்டிக் கொண்டு வருகின்றோம். மாணவியர் விடுதியைக் கட்டி முடித்த பிறகு, மாணவர் விடுதியைக் கட்டுவதற்குச் சாத்தியக்கூறுகள் இருப்பின் எதிர்காலத்தில் கருதப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி ஆர். சரஸ்வதி.

**திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட ஆதிதிராவிடர்



[1998 மே 19]

நல மாணவர் விடுதிகளில் இடவசதி இல்லாமல் பல மாணவர்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாகியிருக்கிறார்கள். புதியதாகக் கட்டடத்தைக் கட்டாவிட்டாலும் கூடுதல் அறைகள் மற்றும் பழுது பார்த்தல் போன்ற செலவுகளுக்காக நிதி உதவி செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினரிடமிருந்து கோரிக்கை வரப்பெற்றால் நிதிநிலைமைக்கு ஏற்ப கருதப்படும் என்பதைத் தெரிவித்துச்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 560, திரு. அ.வ. அப்துல் நாசர், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**560—**

### சிறுவர் பூங்காவைப் புதுப்பித்தல்

***2933—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதி, பிச்சாவரம் வனப் பகுதியிலுள்ள சுற்றுலா மையத்தில் சிறுவர் பூங்காவைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

புவனகிரி தொகுதி, பிச்சாவரம் வனப் பகுதியிலுள்ள சுற்றுலா மையத்தில் சிறுவர் பூங்காவைப் புதுப்பிக்க தற்போது செயற்குறிப்பு சுற்றுலாத் துறையில் ஏதுமில்லை.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிச்சாவரம் வனப்பகுதியிலுள்ள சுற்றுலா மையமானது அகில இந்திய ரீதியிலும், உலக அளவிலும் மிகவும் பிரபலமடைந்து அங்கு மக்கள் எல்லாம் வந்து பார்த்துப் போகிறார்கள். அந்தச் சுற்றுலா மையம் எம்.ஜி.ஆர் அவர்களின் இதயக்கனி திரைப்படத்தின் மூலமாக அனைத்து மக்களாலும் அறியப்பட்டது. அந்தச் சுற்றுலா மையம் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் மிகவும்

சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வந்தது. ஆனால் தற்சமயம் அந்தச் சுற்றுலா மையத்தில் சிறுவர் பூங்கா சிதிலமடைந்து பராமரிப்பாரற்று காணப்படுகிறது. அது மட்டுமல்லாமல், அங்கே இருக்கக்கூடிய தங்கும் விடுதியும் மிகவும் மோசமான நிலையிலேயே இருக்கின்றது. எனவே, அவற்றையெல்லாம் சீர்செய்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மேலும், அங்கு வரக்கூடியவர்களுக்கு நிழலில் ஒதுங்க இடம் இல்லாத சூழ்நிலை இருக்கிறது. எனவே, அந்தப் பகுதியிலே நிழற்குடை ஒன்றும் அமைத்து, மக்கள் இளைப்பாறுவதற்கு வசதி செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இதற்கெல்லாம் அரசு ஆவன செய்து தருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிச்சாவரம் பகுதியிலுள்ள தங்கும் விடுதி இப்போது பழுது பார்க்கப்பட்டு, பயணிகளின் வசதிக்காகச் சீர் செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியிலுள்ள சிறுவர் பூங்கா வருங்காலத்தில் நிதிநிலைமையைப் பொறுத்து செப்பனிடப்படும் என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

**திரு. அ.க. அப்துர் நாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுற்றுலா விடுதி சீர் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மேலும், அக்கரையிலுள்ள அந்தச் சுற்றுலா விடுதி மிகவும் பாழடைந்த நிலையில் இருக்கின்றது. குடிநீருக்கும் வழியில்லை. அந்த விடுதியையும் சரி செய்து, குடிநீரும் வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருங்காலத்தில் நிதிநிலைமையைப் பொறுத்து அங்கு குடிநீர் வசதிகளைச் செய்யக்கூடிய அளவிற்குப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) திருவாரூர் மாவட்ட அ.இ.அ.தி.மு.க. செயலாளர் திரு. இராஜேந்திரன் வலங்கைமானில் கைது

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருவாரூர் மாவட்ட அ.இ.அ.தி.மு.க. செயலாளர் திரு. இராஜேந்திரன் வலங்கைமானில் கைது செய்யப்பட்டுள்ளது சம்பந்தமாக ஏற்பட்டுள்ள நிலை குறித்து ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொண்டுவர மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. தாமரைக்கனி அவர்கள் அனுமதி கேட்டிருக்கிறார்கள். இதைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எழுப்புவதற்கு அவருக்கு அனுமதி வழங்கப்படுகிறது. திரு. இரா. தாமரைக்கனி.

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்ட அ.இ.அ.தி.மு.க. செயலாளர் திரு. இராஜேந்திரன் அவர்கள் அரசியல் காழ்ப்புணர்ச்சி...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது சம்பந்தமாகச் சிறப்புக் கவன ஈர்ப்பாக திரு. ஜி. பழனிசாமி அவர்களும் கொடுத்திருக்கிறார்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகக் கைது செய்யப்பட்டுள்ளார். ஏற்கெனவே காவல் நிலையத்தின் முதல் தகவல் அறிக்கையில் அவர் பெயர் கிடையாது. முதலில் ஆர். ஜி. மூர்த்தி, 2. சோமு என்கின்ற முத்துமாணிக்கம், 3. செந்தில், 4. முத்துகிருஷ்ணன், 5. முத்துவேதநிலையம், 6. சரவணன், 7. சிங்காரு ஆகியோரது பெயர்கள் இருந்தன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போதுகூட இந்த வழக்கில் ஏழு பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். முதல் தகவல் அறிக்கையிலேயும், அதுமாதிரி காவல் துறை அறிக்கையிலும் இதுதான் இருக்கிறது. கோர்ட்டிலும் இந்தத் தகவல் அறிக்கைதான் இருக்கிறது. அதனுடைய நகல்கூட என்னிடம் இருக்கிறது. அஃபிடவிட் நகல் என்னிடம் இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் தெரியும், இராஜேந்திரன் அவர்கள் தஞ்சை மாவட்டம், நாகை மாவட்டம், திருவாரூர் மாவட்டம், ஆகிய மூன்று மாவட்டங்களுக்கு அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக யூனியன் சேர்மனாக இருக்கிறார். இப்படி கொலை வழக்கில், இந்தமாதிரி தூண்டுதலின்பேரில்—அவர் கைது செய்யப்பட்டால், அவரால் யூனியன் கூட்டத்தை நடத்த முடியாமல் போய்விடும். யூனியன் சேர்மன் பதவி

போய்விடும் என்ற எண்ணத்தில், அந்தப் பகுதியினுடைய மாவட்ட மந்திரியின் தூண்டுதலின்பேரில், அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக இந்த வழக்கு போடப்பட்டுள்ளது. ஆகவே, 'சார்ஜ்ஷீட்' போடும்போது அவருடைய பெயரை நீக்க வேண்டும்; ஜாமீனில் விட வேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 13 ஆம் தேதியன்று இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு ஜி. பழனிசாமி அவர்களும், திருவாரூர் அசோகன் அவர்களும் திருவாரூரில் 12 ஆம் தேதியன்று நடைபெற்ற ஒரு கொலை குறித்து சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தபோது, அதுவரை காவல் துறையினரிடமிருந்து கிடைக்கப் பெற்ற தகவல்களை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அதுவரை கைது செய்யப்பட்ட இரண்டு நபர்களைப் பற்றியும் குறிப்பிட்டு, மேலும் தீவிரமாகப் புலன் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும், உண்மைக் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப் படுவார்கள் என்றும் தெரிவித்திருந்தேன்.

அந்தக் கொலை வழக்கு சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்துத்தான் தற்போது இங்கே பிரச்சினை எழுப்பப் பட்டுள்ளது. இதற்கான விளக்கத்தைத அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அன்றையதினம் நான் இந்த அவையிலே தெரிவித்ததற்குப் பிறகு, புலன் விசாரணை மூலம் அறியப்பட்ட தகவல்களை முதலில் விளக்கிட விரும்புகிறேன்.

அண்மையில், திருவாரூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மதுக்கடை ஏலத்தில் பாரதிய ஜனதாக் கட்சியைச் சேர்ந்த குமரனும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஆர்.டி. மூர்த்தியும் கலந்துகொண்டு ஏலம் கேட்டதில், இருவருக்கும் போட்டி ஏற்பட்டதால், குமரனைத் தீர்த்துக்கட்ட ஆர்.டி. மூர்த்தியும், அவரது ஆட்களும் நேரம் பார்த்திருந்து, 12-5-1998 அன்று மாலை 7-30 மணியளவில், திருவாரூர் மேலக்கடைத் தெருவில், குமரன், மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்தபோது, எதிரிகள் செந்திலும், சோபாவும் ஒரு



டி.வி.எஸ். வாகனத்தை குறுக்கே தள்ளி, குமரனின் மோட்டார் சைக்கிளை மறித்துள்ளார்கள். குமரன் மோட்டார் சைக்கிளை நிறுத்தியவுடன், எதிரி சோபா என்கிற முத்துமாணிக்கம் அரிவாளால் குமரனின் கழுத்தில் வெட்டியுள்ளார். அதன் பிறகு, செந்தில், ஆர்.டி. மூர்த்தி, முத்துகிருஷ்ணன், முத்து ரெத்தினவேல் என்கிற சின்னசெட்டி, சரவணன், சிங்காரவேல் ஆகியோர் தாங்கள் வைத்திருந்த அரிவாள்களால் மாறி, மாறி, குமரனை வெட்டியதில், குமரன் சம்பவ இடத்திலேயே இரத்த வெள்ளத்தில் இறந்துள்ளார். குமரனின் பெரியப்பா மகன் பெருமாள் கொடுத்த புகாரின் பேரில் திருவாரூர் நகரக் காவல் நிலையத்தில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கு குறித்து விசாரணை நடத்தப்பட்டபோது, சாட்சிகள் தொழுவனக்குடி கிருஷ்ணமூர்த்தி தேவரின் மகன் பெருமாள், தாமரைக்குளம், கீழ்க்கரை மருதப்பட்டினத்தைச் சேர்ந்த பரிமளம் என்பவரின் மகன் ராஜமாணிக்கம், குளுந்தான்குளம் தென்கரையைச் சேர்ந்த சுப்பிரமணிய தேவரின் மகன் சுரேஷ் ஆகியோர் கொடுத்த வாக்குமூலங்களில் இருந்து, சமீபத்தில் திருவாரூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மதுக்கடை ஏலத்தில், குமரன், ஆர்.டி. மூர்த்தி, துர்க்காலயா ரோட்டில் இருக்கும் சீலன் என்கிற குணசீலன் ஆகியோர் கலந்துகொண்டு ஏலம் கேட்டதாகவும், தனக்கு ஒரு கடையை விட்டுக் கொடுக்கும்படி மூர்த்தி கேட்டபோது, அனைவரும் ஒத்துக் கொண்டதாகவும், ஆனால் குமரன் அதற்கு ஒத்துக் கொள்ளாததுடன், அதிகத் தொகைக்கு ஏலம் கேட்டதாகவும், அதனால் குமரனைத் தீர்த்துக் கட்ட ஆர்.டி. மூர்த்தியும், அவரது ஆட்களும் நேரம் பார்த்துக் கொண்டிருந்ததாகவும், 12-5-1998 அன்று மாலை 7-15 மணிக்கு முதலியார் தெருவில் உள்ள மூர்த்தியின் வீட்டருகில் நின்று கொண்டிருந்த வெள்ளை நிற டாட்டா சுமோ காரின் அருகில் குடவாசல் எம். இராஜேந்திரனும் மற்றும் சிலரும் நின்று கொண்டிருந்ததாகவும், மற்ற எதிரிகளான ஆர்.டி. மூர்த்தி, சோபா, செந்தில், முத்துகிருஷ்ணன், முத்து ரெத்தினவேல், சரவணன், சிங்காரு ஆகியோர் முதலியார் தெருவில் செந்தில் பெட்டிக் கடைக்கு அருகில் நின்று கொண்டிருந்ததாகவும். மாலை 7-30 மணிக்கு குமரன், மேலக்கடைத் தெருவுக்கு மேற்கேயிருந்து, கிழக்கு நோக்கி, செந்தில் பெட்டிக் கடைக்கு அருகே வரும்போது, செந்திலும், சோபாவும் ஒரு வாகனத்தைக் குறுக்கே தள்ளி மறித்ததாகவும், குமரன் மோட்டார் சைக்கிளை நிறுத்தியவுடன், குடவாசல் எம். இராஜேந்திரனும், சிலரும்

செய்த ஆலோசனையின்படி, உடனே சோபா தன் கையில் வைத்திருந்த அரிவாளால் குமரனின் கழுத்திலும், வலது காதின் கீழும் வெட்டியபோது குமரன் ரோட்டில் விழுந்தவுடன், செந்தில், முத்துகிருஷ்ணன், ஆகியோர் பிச்சுவா கத்தியாலும், முத்து ரெத்தினவேல், சரவணன், சிங்காரு, ஆர்.டி. மூர்த்தி ஆகியோர் தாங்கள் வைத்திருந்த அரிவாளாலும் வெட்டியதில் குமரன் அதே இடத்தில் இறந்து விட்டதாகவும், குமரனை வெட்டிய அனைவரும் ஓடிப்போய் டாட்டா சுமோ காரில் குடவாசல் எம். இராஜேந்திரன் மற்றும் சிலருடன் ஏறி, வடக்கு நோக்கி முதலியார் தெரு வழியாகப் போய்விட்டதாகவும் விசாரணையிலிருந்து தெரிகிறது.

*முற்பகல் 10-50*

எதிரிகள் சோபா, செந்தில், சரவணன், சிங்காரு ஆகியோர் கைது செய்யப்பட்டு, கிராம நிர்வாக அலுவலர் எம். வீரையன், மற்றும் கிராம உதவியாளர் எம். பாலகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் விசாரிக்கப்பட்டபோது, எதிரி சோபா தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில், தன் அண்ணன் அ.இ.அ.தி.மு.க.வில முக்கியப் பொறுப்பில் உள்ளதாகவும், முதலியார் தெருவில் உள்ள தங்கள் வீடு கட்சி அலுவலகமாக உள்ளதால், அ.இ.அ.தி.மு.க. மாவட்டச் செயலாளர் எம்.ஆர். என்கிற எம். இராஜேந்திரன் திருவாரூருக்கு வரும்போதெல்லாம் தங்கள் வீட்டில் தங்கிச் செல்வார் என்றும், அவ்வப்போது ஏற்படும் பிரச்சினைகளுக்கு அவர் வழி சொல்வார் என்றும், இறந்துபோன குமரன் தன்னுடன் ஆட்களைச் சேர்த்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் சுற்றிக்கொண்டு, தன்னை ஒரு பெரிய ஆளாகக் காட்டிக் கொண்டு, தங்களுக்கு எதிராக அவரது ஆட்களிடம் பேசி வந்ததாகவும், மதுக்கடை ஏலத்தின்போது ஆர்.டி. மூர்த்தியும், சீலன் என்கிற குணசீலனும் கேட்டுக்கொண்டும், முரண்பாடாகப் பேசி ஏலத்தை ஏற்றிவிட்டதாகவும், அன்று இரவே கூடிப்பேசி குமரனைத் தீர்த்துக்கட்ட முடிவு செய்ததாகவும், குடவாசல் எம். இராஜேந்திரன் குமரனிடம், 'அனுசரித்துப் போ' என்று சொல்லியும்கூட, அவரிடம் குமரன் திமிராகப் பேசியதால் 'இவனை இப்படியே விடக்கூடாது, இவனுக்குச் சீக்கிரம் முடிவு கட்டுங்கள்' என்று இராஜேந்திரன் சொன்னதாகவும், அதன்படி தாங்கள் குமரனைக் கொலை செய்யத் திட்டமிட்டு, அதன்படிச் செயல்பட்டதாகவும் கூறியதோடு, கொலைக்குப் பின்னர் டாட்டா சுமோ காரில் ஏறி குடவாசல் போய் இராஜேந்திரன் சொன்ன வீட்டில் தங்கியதாகவும், குமரனைக் கொலை செய்யப்





பயன்படுத்திய ஆயுதங்களை, திருவாரூர் பவித்திரமாணிக்கம் ரோட்டில் [illegible]த்திற்கு அருகில் உள்ள வாய்க்காலில் மறைத்து வைத்திருப்பதாகவும், தன்னைக் கூட்டிச் சென்றால் ஆயுதங்களை எடுத்துத் தருவதாகவும் கூறினார். அதன்படி 13-5-1998 அன்று காலை 11 மணிக்கு மேற்சொன்ன சாட்சிகள் முன்னிலையில் மகஜர் தயார் செய்து ஆயுதங்கள் காவல் துறையினரால் அங்கிருந்து கைப்பற்றப்பட்டன.

14-5-1998 அன்று 1-30 மணிக்கு குடவாசல் ஓடைப் பாலம் அருகில் எதிரி எம். இராஜேந்திரன் கைது செய்யப்பட்டு, 4 மணிக்குக் காவல் நிலையம் கொண்டுவரப்பட்டு, எதிரிகள், நாகப்பட்டினம் நீதித் துறை நடுவர் அவர்களிடம் நீதித் துறைக் காவலுக்கு அனுப்பப்பட்டு, திருச்சி மத்திய சிறையிலே 15 நாட்கள் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த வழக்கில் தலைமறைவு எதிரிகளான ஆர்.டி. மூர்த்தி, முத்துகிருஷ்ணன், முத்து ரெத்தினவேல், சீலன் என்கிற குணசீலன் ஆகியோரைக் கண்டுபிடிக்கத் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொடர்ந்து சாட்சிகள் விசாரிக்கப்பட்டு வருகிறார்கள்.

இந்த வழக்கில் இறந்துபோன குமரன் என்பவர் பாரதிய ஜனதா கட்சியின் திருவாரூர் மாவட்ட இளைஞர் அணியின் துணைத் தலைவராக இருந்தார். இவர் பி.காம். பட்டதாரி. திருமணம் ஆகாதவர். இவர் குடும்பத்துடன் இல்லாமல், தனியாக, திருவாரூர் கமலாலயக் குளம் மேல்கரையிலே அறை எடுத்துத் தங்கிக்கொண்டு அரசியல் மற்றும் பொது நிகழ்ச்சிகளில் தன்னை முன்னிலைப்படுத்திக் கொண்டு இருந்திருக்கிறார்.

13 ஆம் தேதி நான் இந்த அவையிலே பேசும்போது இது மதப் போட்டி அல்ல, மதுப் போட்டிதான் என்று கூறினேன். ஆனால் அ.இ.அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா தனது அறிக்கையிலே, இதற்கு நான் அரசியல் சாயம் பூசியிருப்பதாகக் கூறி கண்டனம் தெரிவிப்பதாகத் தெரிவித்திருந்தார். நான் இங்கே பேசும்போது, அரசியல் கலப்பு இருப்பதாகச் சொல்லவில்லை. மதுக்கடை ஏலத்திலே வந்த தகராறு என்றுதான் சொன்னேன். ஆனால் ஜெயலலிதா அவர்கள், இதற்கு நான் அரசியல் சாயம் பூசுவதாக ஒரு அபாண்டமான அறிக்கையை வெளியிட்டார்.

மேலும் ஜெயலலிதா, அவருடைய கட்சியைச் சேர்ந்த மாவட்டச் செயலாளர் எம். இராஜேந்திரனைக் கைது செய்து விட்டதாகவும் தெரிவித்திருக்கிறார். அந்தக் கட்சியின் மாவட்டக் கழகச் செயலாளர்

இராஜேந்திரன் எப்படிப்பட்டவர் என்பதை இந்த அவையும், நாடும் தெரிந்துகொள்ள வேண்டும்.

எம். இராஜேந்திரன், ரௌடி லிஸ்டில் உள்ள, காவல் துறைக் கண்காணிப்பில் உள்ள ஒரு நபர் ஆவார்-குடவாசல் காவல் நிலையத்தில் (போக்கிரி பதிவேடு)-ரௌடி லிஸ்டில் வைத்துக் கண்காணிக்கப்பட்டு வருகின்றார். இவர் இதற்கு முன்பே, 1990 ஆம் ஆண்டில், தி.மு.கழக ஆட்சி நடைபெற்றபோதே, முத்துகிருஷ்ணன் என்பவரைக் கொலை செய்த வழக்கில் முதல் எதிரி ஆவார். குடவாசல் காவல் நிலையக் குற்ற எண் 257/90, சட்டப் பிரிவுகள் 147, 148, 341 மற்றும் 302 இந்திய தண்டனைச் சட்டத்தின்படியான வழக்கில் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற விசாரணைக்கு ஆளானவர்.

*முற்பகல் 10-55*

இந்தக் கொலை வழக்கு விசாரிக்கப்பட்டு, நீதிமன்றத்திலே தள்ளுபடி செய்யப்பட்டபோதிலும், அந்தத் தீர்ப்புரையிலே நாகப்பட்டினம் மாவட்ட அமர்வு நீதிபதி அவர்கள் 29-9-1992-ல் அ.இ.அ.தி.மு.க. ஆட்சி நடைபெற்றபோது அளித்த தீர்ப்பில் தெரிவித்த ஒருசில வாசகங்களைத் தெரிவித்தாலே இந்த மாவட்டச் செயலாளரைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம்.

நீதிபதி தனது தீர்ப்பில், "கொலை செய்யப்பட்ட முத்துகிருஷ்ணன் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர் என்பதும், இந்த வழக்கில் உள்ள முதல் எதிரி எம். இராஜேந்திரன் அ.இ.அ.தி.மு.க. கட்சியைச் சேர்ந்தவர் என்பதும் அரசுத் தரப்பு சாட்சி 1-இன் சான்றுரையிலிருந்து தெரிகிறது.

சாட்சிப் பட்டியலில் சம்பவத்தைக் கண்ணுற்ற சாட்சிகளாகப் பலரும், சம்பவத்திற்குப் பிறகு அந்த இடத்தில் எதிரிகளைப் பார்த்ததாகக் கூறும் பலரும் உள்ளனர். அவர்களில் யாரையும் அரசுத் தரப்பினர் விசாரிக்கவில்லை, இந்தக் கேஸிலே.

முதல் எதிரி இராஜேந்திரன் அரசியல் செல்வாக்கும், பண பலமும் உடையவர் என்பது இங்குள்ள சாட்சிகளின் சான்றுரையிலிருந்தும், முதல் எதிரி எழுத்துமூலமாகக் கொடுத்த வாக்குமூலத்திலிருந்தும் தெரிய வருகிறது. அவரது தலையீட்டால் சாட்சிகளுக்குச் சம்மன் சார்வு செய்யப்படவில்லை என்று அனுமானிக்க இடமும் உள்ளது.

முதல் எதிரி இராஜேந்திரன் மற்றும் கலியமூர்த்தி இருவரின் சதியின் பேரில்தான் இந்த நிகழ்ச்சி நடந்துள்ளது என்பதை அனுமானிக்கிற சூழ்நிலைகள் உள்ளன.



மேலே இந்தத் தீர்ப்புரையில் நான் ஆராய்ந்துள்ள காரணங்களில், குறிப்பாக, அரசியல் செல்வாக்கின் தலையீடு, பொது மக்களின் ஒத்துழையாமை, இந்த நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்ட மற்றும் விசாரிக்கப்படாத சாட்சிகளின் ஒத்துழையாமை, சாட்சிகள் அச்சுறுத்தப்பட்டுள்ளமை, திறமையற்ற புலன் விசாரணை ஆகியவற்றின் காரணமாக, பட்டப் பகலில் நடந்த ஒரு கொலைக் குற்றத்திலிருந்து குற்றம் புரிந்தவர்கள் தப்பித்துக் கொண்டார்கள் என்ற மன வேதனையோடு இந்தத் தீர்ப்புரையிலிருந்து பிரிந்து செல்கிறேன்" என்று நீதிபதி அப்போதே தீர்ப்பு எழுதி இருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வாறு நாகப்பட்டினம் மாவட்ட அமர்வு நீதிமன்ற நீதிபதி, அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலேயே தனது தீர்ப்பில் குறிப்பிட்டிருக்கிறார்.

இவருடைய கதை இத்தோடு முடியவில்லை. 22-8-1994 அன்று குடவாசல் கடைத் தெருவில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் சேர்ந்து ஊர்வலமாகச் சென்றபோது, இதே இராஜேந்திரன் மற்றும் இவரது ஆட்கள் 25 பேருடன் சேர்ந்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தைத் தாக்கிச் சேதப்படுத்தியும், ஊர்வலம் சென்றவர்களை ஆயுதங்களால் தாக்கியும், காயப்படுத்தியும் உள்ளார். குடவாசல் காவல் நிலையம் வரை துரத்திச் சென்று, காவல் நிலையத்திற்குள்ளே சென்ற புளிச்சங்காடு தங்கையனை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்காரரை—தலையில் அடித்துக் காயப்படுத்தி, அதனால் மருத்துவமனையிலே சிகிச்சையில் இருந்தபோது தங்கையன் இறந்தார். (குறுக்கீடு)

**திரு. இரா. தாமரைக்கனி:** இந்தத் தீர்மானத்திலேதான் பேச வேண்டும். (குறுக்கீடுகள்)...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பிரச்சினை கொண்டு வந்தீர்கள். அதற்கான பதிலை முதலமைச்சர் தந்து கொண்டு இருக்கிறார். அவர்கள் பதில் சொன்ன பிறகு கேளுங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** இது சம்பந்தமாக, குடவாசல் காவல் நிலையக் குற்ற எண் 444/64, பிரிவுகள் 147, 148, 336, 324, 323, 427 மற்றும் 302 இந்திய தண்டனைச் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு கடந்த ஆட்சியில் கிடப்பிலே போடப்பட்ட இந்த வழக்கு, 1996-இல் மீண்டும் கழக ஆட்சி வந்த பிறகுதான் தீவிரப்படுத்தப்பட்டு, 19-12-1996-இல் இவர் கைது செய்யப்பட்டு, வழக்கு, நீதிமன்றத்தில் விசாரணையிலே இப்பொழுது இருக்கிறது.

அண்மையில் 19-3-1998 அன்று பகல் 2 மணிக்கு, குடவாசல் பேருந்து நிலையம் அருகே தலைவரைத் தரக்குறைவாகப் பேசியதற்காக, மேலே குறிப்பிட்ட இராஜேந்திரனும், அவரது ஆட்களும், சக்திவேல் என்பவரைத் தாக்கி, கடத்திச் சென்றதாக, குடவாசல் காவல் நிலையத்திலே திரு. சேகர் பாலு என்பவர் கொடுத்த புகாரின் மீது குற்ற எண் 230/98, சட்டப் பிரிவுகள் 147, 363 மற்றும் 324 இந்திய தண்டனைச் சட்டப்படி வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு, அந்த வழக்கும் விசாரணையிலே இருந்து வருகின்றது.

ஜெயலலிதா, அறிக்கையில் கண்டனம் தெரிவித்து, வக்காலத்து வாங்கியிருக்கும் அவருடைய கட்சியின் மாவட்டக் கழகச் செயலாளரின் திருவிளையாடல்கள்தான் இவை என்பதை நான் குறிப்பிடுவதோடு, (மேசையைத் தட்டும் ஒலி), ஏதோ மாவட்ட மந்திரி தலையிட்டார் என்றெல்லாம் தாமரைக்கனி சொன்னார்; இந்த வரலாற்றைச் சொன்ன பிறகு, எல்லோருக்கும் இந்த உண்மை நன்றாகப் புரியும் ஏதோ அவதூறுகளையும், அண்டப் புளுகுகளையுமே வார்த்தைகளாக்கி அறிக்கை விடுகின்றவர்கள் சொல்கிறார்கள் என்றால், தாமரைக்கனி போன்றவர்களும் அதையெல்லாம் கேட்டுக்கொண்டு வந்து, இந்த நாகரிகமான அவையில், மரபுகளைக் காப்பாற்ற வேண்டிய ஓர் அவையில், இப்படியெல்லாம் பேசக் கூடாது என்பதை மாத்திரம் எடுத்துக்கூற விரும்புகிறேன். இந்த நிகழ்ச்சிக்கான செய்திகள் அனைத்தையும் இங்கே சொல்லி இருக்கிறேன். வழக்கு விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்ற அளவில் என்னுடைய விளக்கத்தை நிறைவு செய்கின்றேன்.

*முற்பகல் 11-00*

## (ஆ) திருவில்லிபுத்தூர் ஒன்றியப் பெருந்தலைவரை சாதிப் பெயரில் அழைத்து இழிவுபடுத்தியது:

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திருவில்லிபுத்தூர் ஒன்றியப் பெருந்தலைவர் திருமதி கந்தம்மாள் அவர்களை, அவர் சார்ந்துள்ள சமுதாயத்தின் பெயரைச் சொல்லி இழிவுபடுத்தியது குறித்து, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள் சிறப்புக் கவன ஈர்ப்பாகக் கொடுத்து இருக்கிறார். அவருக்கு அனுமதி அளிக்கிறேன். டாக்டர் கிருஷ்ணசாமி. (குறுக்கீடு)

**திரு. இரா. தாமரைக்கனி:** அவர் பேசட்டும். நானும் பதில் சொல்கிறேன்.

1998 மே 19]

*டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாமரைக்கனி அவர்கள் எதிர் வரிசையில் இருந்தாலும், இந்த ஆட்சியைப் பற்றிக் கடுமையான கண்டனங்களைத் தெரிவித்தாலும்கூட, பொது நோக்கில் ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். ஒரு சட்டமன்ற உறுப்பினர், தகுதியுள்ள ஒருவர் மீது இப்படிப்பட்ட புகார் வந்து, அதற்கான வழக்குத் தொடரப்பட்ட நிலையில், இந்த அவையில் வேறு பேச வேண்டுமா என்று நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். அதைத் தவிர்ப்பது நல்லது என்று கருதுகின்றேன். அதற்கு, கிருஷ்ணசாமி அவர்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** முதலமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளிற்கிணங்க நான் அதை வலியுறுத்தவில்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** என்னதான் சொல்கிறார்? சொல்லட்டுமே. நானும் சொல்கிறேன். எதை வேண்டுமானாலும் சமாளிப்போம். ஏனென்றால், பொய்ப் புகார் கொடுக்கிறது, எஃப்.ஐ.ஆர். போடறது, அரசியல் காழ்ப்புணர்ச்சியில் பழி வாங்க முயற்சிப்பது என்றால் நாங்கள் அதை விடுகிற மாதிரி இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, அதை வலியுறுத்தவில்லை என்று அவர் பெருந்தன்மையோடு சொல்கிறார். நீங்கள்தான் மீண்டும் பிரச்சினையை வளர்க்கிறீர்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** இந்த ஒரு பாதுகாப்பை வைத்துக் கொண்டு சீட்டிங் பண்ணிக்கொண்டு மிரட்டிக் கொண்டிருந்தால் அதற்கு நாங்கள் என்ன பயந்தவர்களா?

**திரு.ச. அழகிரி:** பேசவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, நானும் இந்த அவையிலே அந்தப் பிரச்சினையை எழுப்ப வேண்டாம் என்றுதான் நினைத்தேன். ஆனால் பிரச்சினையைச்

சந்திப்பதாகச் சொல்கிறார்கள். சந்திக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோளும். 'வந்தாரை வாழவைக்கும் தமிழ்நாடே, சொந்த நாட்டானையே சுரண்டுவது ஏன்?' என்று நாற்பது ஆண்டுக் காலத்திற்கு முன் இன்றைய முதல்வர் அவர்கள், 'பராசக்தி' திரைப்படத்திலே எழுச்சிகரமான வசனம் எழுதியிருக்கிறார்கள் சுதந்திரம் பெற்று 50 ஆண்டு காலத்திற்குப் பின்னரும் கூட இந்த மண்ணுக்குச் சொந்தக்காரர்களாக விளங்கக்கூடிய இரண்டு கோடிக்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களை இன்னும்கூட ஏளனப்படுத்துவதும், அவமானப்படுத்துவதும் தொடர்கிறதே என்ற வேதனையில்தான் இந்தப் பிரச்சினையை இங்கே கொண்டு வருகிறேனே தவிர, இதைப் பயன்படுத்தி எந்தவிதமான அரசியல் லாபமும் தேடவேண்டுமென்ற குறுகிய எண்ணத்தோடு அல்ல என்பதை இந்த மாமன்றத்தில் இருக்கக்கூடிய அத்தனை உறுப்பினர்களுக்கும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு, இதே தமிழ்நாட்டில் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி அவர்கள், ஈழ விடுதலைப் போராளி பிரபாகரன் அவர்களைப் பற்றி, அவர் என்றைக்கோ பத்திரிகை ஒன்றில் கொடுத்த பேட்டியை வைத்துக் கொண்டு, அது ஒரு சமுதாயத்தை இழிவுபடுத்துவதாகக் கூறி, அவரை ஓட ஓட விரட்டிக் கைது செய்ய முந்தைய அரசு முயற்சித்ததை எல்லாம் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-05

இந்த மாமன்றம் அனுமதிக்குமேயானால் அந்த வார்த்தையைக் கூட நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அதை நான் சொல்ல விரும்பவில்லை. திருவில்லிபுத்தூர் ஒன்றியத்தில் இன்று பெருந்தலைவராக இருப்பவர் திருமதி கே. கந்தம்மாள் அவர்கள், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர். அவர் கடந்த 8-ந் தேதி வரையிலும் கூட அ.இ.அ.தி.மு.க. வைச் சேர்ந்தவராக இருந்தவர். கடந்த ஆண்டு இதே மன்றத்திலே ஒரு சிறு பிரச்சினையில் எனக்கும் தாமரைக்கனிக்கும் கருத்து மோதல் வந்தது. சட்டமன்றத்திலே கருத்து மோதல் என்பது பெரிய காரியமல்ல, இது எல்லாம் வழக்கமாக நடக்கக்கூடியது. ஆனால் என்னை எதிர்த்து, நீ தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவள், உன்னுடைய பெயரைப் பயன்படுத்தி கிருஷ்ணசாமிக்கு எதிராக நீ நோட்டீஸ் ஒட்டவேண்டும், போஸ்டர் ஒட்டவேண்டும் என்று அவரை - அவர் அ.இ.அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்



என்ற காரணத்தாலே தாமரைக்கனி அந்தப் பகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையில் — அவரை வற்புறுத்தியிருக்கிறார். ஆனால், அவர் அப்படி ஒரு போஸ்டரை என்னை எதிர்த்து ஒட்டிவிட்டு, அவர் அந்தக் கிராமத்திலே இருக்க முடியாது என்பது யதார்த்தமான உண்மை என்ற காரணத்தினாலே, அந்த மக்கள் அனுமதிக்கமாட்டார்கள் என்ற எண்ணத்தின் காரணமாக, அவர் அதை மறுத்துவிட்டார், நான் அதற்குப் பலியாக முடியாது என்று. அந்த காரணத்தினாலே, அன்றிலிருந்து அவர்மீது தனிப்பட்ட முறையிலே காழ்ப்புணர்ச்சி கொண்டு, உன்னை நான் எப்படியாவது அந்தப் பதவியிலிருந்து ஒழித்துக் கட்டுகிறேன் என்று தொடர்ச்சியாக அவரைச் செயல்பட விடாமல் தடுத்துக்கொண்டே வந்திருக்கிறார். இப்படி தொடர்ச்சியாக தடுத்து வந்ததினுடைய விளைவாக கடந்த 8ஆம் தேதி ஒன்றியக் கூட்டம் நடந்திருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர் தாமரைக்கனி, தன்னுடைய அடியாட்களோடு, தன்னுடைய மகன் உட்பட 10, 20 பேர்களுக்கு மேலாகச் சென்று அந்த ஒன்றியப் பெருந்தலைவியை ராஜினாமா செய்ய வற்புறுத்தி, அவர் சார்ந்த ஜாதியைச் சொல்லி இழிவுபடுத்தி, நீ ராஜினாமா செய்யவில்லை என்றால் உன்னை ஒழித்துக்கட்டுவேன் என்றெல்லாம் பேசி இருக்கிறார். நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், இந்த நாட்டிலே தாழ்த்தப்பட்ட மக்களை, ஜாதியைச் சொல்லி இழிவுபடுத்துவது என்பது 1989 வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழே தண்டனைக்குரிய விஷயம் என்பது தெரிந்திருந்தும்கூட, இந்த மாமன்றத்திலே, மதத் தீவிரவாதங்களைப் பற்றியும், பல்வேறு தீவிரவாதங்களைப் பற்றியும் மணிக்கணக்கிலே பேசக்கூடிய ஒரு சட்டமன்ற உறுப்பினர் தீண்டாமைக் குற்றத்திற்கு எதிராக, தண்டனைக்கு ஆளாகக்கூடிய அளவுக்கு ஜாதியைச் சொல்வது எந்தவிதத்திலே நியாயம், அதை ஏன் அவர் புரிந்துகொள்ளவில்லை என்பதுதான் நான் கேட்கக்கூடிய கேள்வி. ஆடு மாடு நானும், இந்த மாமன்றத்திலே மேலும் கேட்கக்கூடியது, ஆடு மாடு மேய்க்கக்கூடியவர்கள் முதல் ஆட்சியிலே அரசியல்வாதிகளாக அதிகாரிகளாக இருக்கக்கூடியவர்கள் எல்லாம்கூட அவ்வப்போது இந்த சமுதாயத்தைத் தாழ்த்திப் பேசக்கூடிய நிலைமை எல்லாம் நீங்கள் அறியாதது அல்ல. ஏதோ, இந்த திருவில்லிப்புத்தூர் ஒன்றியத்திலே மட்டுமல்ல. டி. கல்லுப்பட்டியிலே, தமிழ் மாநில காங்கிரஸைச் சார்ந்த ஒன்றியப் பெருந்தலைவர் ஒருவர் தேர்வு பெற்றும்கூட அவரைக்கூட செயல்படாமல் தடுக்கக்கூடிய நிலைமைகளை எல்லாம் காண்கிறோம். இது பல இடங்களிலே நடந்து கொண்டு இருக்கிறது

கடந்த ஆண்டு நடந்ததை நீங்கள் எல்லாம் அறியாதது அல்ல, ஒரு சட்டமன்ற உறுப்பினராக இருக்கக்கூடிய என்னை ஒரு ஒன்றிய அலுவலகத்திற்குள்ளே போகவிடாமல் ஜாதி உணர்வோடு தடுத்ததை நான் சட்டமன்றத்திலே சுட்டிக் காட்டினேன். ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு ஓர் ஒன்றியத்தில் அலுவலகக் கதவுகள் மூடப்பட்டது ஜாதியைப் பார்த்து. இன்று, ஒன்றியப் பெருந்தலைவியை கதவுகளை மூடிக் கொண்டு 'வெளியே போ' என்று பயமுறுத்தக்கூடிய அளவிற்கு நிலைமை இருக்கிறது. எதற்காக இதெல்லாம்? இந்தக் கொடுமைகளை எல்லாம் இப்படியே விட்டுக்கொண்டே போவதா? இதற்கு ஒரு தீர்வு கிடையாதா? எல்லா தீவிரவாதமும் ஒழிய வேண்டும், இந்த நாட்டிலே என்றும், தமிழர்கள் ஜாதி மனப்பான்மை எல்லாம் மறந்து ஒன்றாக வேண்டும் என்றும் ஓரே நோக்கத்தோடு நாம் எல்லாம் வெளியிலே பேசுகின்றோம். சட்டமன்றத்திலே பேசுகின்றோம். ஆனால், நடைமுறையில் அப்படி இல்லாமல்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நடந்த சம்பவத்தை மட்டும் சுருக்கமாக அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் போதும்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அதைத்தான் சொல்கிறேன். ஓரே நிமிடத்தில் முடித்து விடுகிறேன். எனவே, தமிழர்கள் எல்லாம் ஒன்றுபட வேண்டும் என்ற நோக்கத்தோடு நாம் பேசுகின்றோமே. அதற்குச் சூந்தகம் விளைவிக்கக்கூடிய வகையில் ஒரு சட்டமன்ற உறுப்பினரே இந்த அளவுக்கு ஒரு தீண்டாமைக் குற்றத்திற்கு ஆளாகக் கூடிய ஒரு செயலைச் செய்திருக்கிறாரே, சாதாரண குற்றங்களுக்கெல்லாம் ஏழை மக்களைக் கொண்டு வந்து கைது செய்கிறார்கள், அடிக்கிறார்கள், உதைக்கிறார்கள், உள்ளே தள்ளுகிறார்கள், வெளியே வர முடியாத குற்றங்களிலே தள்ளுகிறார்கள். என்.எஸ்.ஏ. சட்டத்திலே போடுகிறார்கள். அவர்களையெல்லாம் பாதிப்புகளுக்கு உள்ளாக்குகிறார்கள். ஆனால், சட்டமன்ற உறுப்பினர் என்ற காரணத்தினாலே, வசதி படைத்தவர் என்ற காரணத்தினாலே, காவல் துறை தயங்கிக் கொண்டு இருக்கிறது. இந்த அரசினுடைய நடவடிக்கை என்னவாக இருக்கும். இதுபோன்ற தீண்டாமை தீவிரவாதத்தைப் புரியக் கூடியவர்களுக்கு என்ன தண்டனை அளிக்கப் போகிறீர்கள் என்பதுதான் கேள்வி, ஏதோ இவருக்கு மட்டுமல்ல, பொதுவாக தமிழ்நாட்டிலே நாம் ஒன்றாக வாழ்வதற்கு இடையூறாக இருக்கக்கூடிய ஜாதியை ஒழிப்பதற்காகவும், தீண்டாமையை



ஒழிப்பதற்காகவும் அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா, இதன் மூலம் தீண்டாமை பாராட்டக் கூடியவர்களுக்கு அரசு ஒரு பாடம் புகட்டுமா என்பதை நான் கேட்டு விடைபெறுகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மனிதனை மனிதர் இழிவுபடுத்துகிற எண்ணம் என்னுடைய இயக்கத்திற்கும், எனக்கும் கிடையாது. என்னுடன் பழகுபவர்கள் ஏழை, எளிய ஆதிதிராவிட மக்கள்தான். அரசியல் ரீதியாக என்மீது எத்தனை வழக்குகளைப் போட்டாலும்—நான் ஜெயிலுக்குப் போகாதவன் கிடையாது—அதைச் சந்திக்கத் தயாராக இருக்கிறேன். அதை விட்டுவிட்டு என்னுடைய கட்சியைச் சேர்ந்த யூனியன் சேர்மன் தந்தமான அவர்களை நான் ஜாதியைச் சொல்லி திட்டியதாகச் சொல்கிறார்கள். அப்படி ஜாதியைச் சொல்லித் திட்டினேன் என்றால் என் நாக்கு அழுகிப் போய்விடும். நான் வணங்குகின்ற தெய்வம் ஆண்டாளாக இருந்தாலும், மீனாட்சியாக இருந்தாலும் என்னைச் சபித்து நான் உருப்படி இல்லாமல் போய்விடுவேன்.

(முற்பகல் 11-10)

சட்டமன்ற உறுப்பினர் என்கிற முறையில் பஞ்சாயத்து யூனியன் கூட்டத்திலே கலந்து கொள்ளலாம். சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே நான் அந்தக் கூட்டத்திற்குப் போனேன் அப்போது அவர்களைப் பார்த்து உங்களைத் தேர்ந்தெடுத்த மக்களுக்குச் சேவை செய்யாமல், தேர்ந்தெடுக்காத கவுன்சிலர்களுக்கு எல்லாம் இந்த மாதிரி செய்கிறீர்களே என்று சொன்னேன். அப்போது அங்கே எஸ்.பி., சி.ஐ.டி. போலீஸ் வந்திருந்தார்கள். காவல் துறை அதிகாரிகள் இருந்தார்கள். பி.டி.ஓ. இருந்தார். கலெக்டருடைய பிரதிநிதி வேறு வந்திருந்தார். இத்தனை பேர்களெல்லாம் இருந்தார்கள். அந்த நேரத்திலே ஒன்றுமே பிரச்சினை கிடையாது. அப்போது, 'நான் வேண்டுமென்றால் ராஜினாமா பண்ணிக்கொள்கிறேன், என்மேலே நம்பிக்கையில்லை என்றால்' என்று அந்த அம்மா சொன்னார்கள். நான், கட்சிக் கட்டுப்பாட்டை மீறியதனாலே, 'அது உங்கள் இஷ்டம் அம்மா' என்றுதான் சொல்லிவிட்டு வந்துவிட்டேன் அது அங்கேயிருந்த எல்லா அதிகாரிகளுக்கும், காவல் துறை அதிகாரிகளுக்கும் தெரியும் அதற்குப்பிறகு அங்குள்ள புதிய தமிழகம் கட்சியைச் சேர்ந்த—புதிய உலகமா, புதிய தமிழகமா என்று தெரியவில்லை (சிரிப்பு)-அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் உடனே, அருமை அண்ணன், பாசத்திற்குரிய

அண்ணன், டாக்டர் கிருஷ்ணசாமி—திருச்சியில் இருந்தார்கள்—அவர்களிடம் போன் போட்டுச் சொன்னார்கள். உடனே அவர் போன் போட்டு எஸ்.பி.யிடமும், கலெக்டரிடமும் பெட்டிஷன் கொடுங்கள் என்று சொல்லிவிட்டு, நேரடியாக அங்கே வந்து, புதிய தமிழகம் கட்சியிலே அவர்களைச் சேர்த்து, உடனே டி.எஸ்.பி.யிடம் அவர்களை மனு கொடுத்து, எஃப்.ஐ.ஆர். போட்டு, இந்தமாதிரி அறிக்கைகளை விடச் சொல்லி, சும்மா இருக்கிற ஊரிலே வந்து, ஒரு சட்டமன்ற உறுப்பினர் மேலேயே இந்தத் தீண்டாமைச் சட்டத்தைப் போட வேண்டுமென்று சொல்லி, கட்சிக்கு ஆள் பிடிக்க வேண்டும், என்று சொல்லி, நன்றாக இருக்கிற ஊரிலே சாதிக் கலவரத்தை உண்டுபண்ணுகின்ற அளவிலே செய்கிறார்கள். திருவில்லிப்புத்தூருக்கு நீங்கள் எதற்கு வந்தீர்கள்? நீங்கள் வந்த பிறகுதானே பெட்டிஷன் கொடுத்தார்கள். ஆகவே, நான் ஜாதி மதத்திற்கு அப்பாற்பட்டவன். என்னுடன் பழகக் கூடியவர்கள் எல்லாம் ஆதிதிராவிடர்கள்தான். நீங்கள் ஆள் பிடிப்பதற்காக இந்தமாதிரி ஜாதி வெறியைக் கிளப்பினால் நாம என்ன செய்ய முடியும்? மேலும், உண்மையிலேயே நான் தகாத வார்த்தையைச் சொல்லவில்லை. தகாத வார்த்தையைச் சொல்லாத என் மீது நடவடிக்கை என்றால் இது என்ன நியாயம்? இதேமாதிரி சுப்பிரமணிய சுவாமியைப் பற்றிச் சொன்னார்கள். அண்ணன் பிரபாகரனை, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைப் பற்றித் தரக்குறைவாக சுப்பிரமணிய சுவாமி சொன்னதற்காக, இன்டர்நேஷனல், அப்படி என்று ஒரு ஜாதியைப் பற்றிச் சொன்னார்கள். ஜாதியைப் பற்றிப் பேசியதாகச் சொல்லி அவரைக் கைது பண்ண வேண்டுமென்று நானும், திரு. தமிழரசன், எம்.எல்.ஏ. அவர்களும்தான் இந்தச் சட்டமன்றத்திலே வாதாடினோம். இதே தொகுதியிலேதான் 6 கூட்டுறவுச் சங்கங்களுக்கு தாட்கோ மானியம் ஒதுக்கியும், அவர்கள் கொடுக்கவில்லை. உடனே சம்பந்தப்பட்ட மத்திய வங்கி அதிகாரிகளிடம் நானேதான் போராடினேன். அதேமாதிரி மத்திய வங்கி அதிகாரிகள், அரிசன மக்கள் மத்தியில் தவறாக நடக்கிறார்கள் என்று சொல்லி நான்தான் அந்த மக்களுக்கு, தீண்டாமையைக் கடைபிடிக்காத அளவிலே அந்த அதிகாரிகள் இருக்கக் கூடிய நிலையிலே, அந்த மக்களுக்குப் பாதுகாவலனாக 25 வருடங்களாக, 30 வருடங்களாக இருக்கிறேன். இன்றைக்கு 2 வருடங்களாக வந்துவிட்டு இந்த திருவில்லிப்புத்தூர் ஒன்றியம் மட்டுமல்லாமல்** என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன். அதுமட்டும் அல்ல...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது என்ன நியாயம்?

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** என்று சொன்னதை ஏன் எடுக்க வேண்டும்? மதுரையிலே கைது செய்திருக்கிறார்களே?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தாமரைக்கனி, நீங்கள் அவ்வாறு சொன்னீர்கள். அதற்கு மறுப்புச் சொல்லக் கூடிய அளவிலே டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் சொல்கிறார்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க பிரச்சினை வரக்கூடாது என்பதற்காக நான் மிகச் சாதாரணமாக எளிய வார்த்தைகளில், யாரையும்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ** என்று சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** என்பதையும் நீக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்தச் சொற்றொடரை அப்படியே நீக்குகிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்போது திரு. இரா. தாமரைக்கனி அவர்கள் பேசியது எதுவும் அவைக் குறிப்பிலே ஏறாது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஒன்றும் கந்தம்மாளை கடந்த 10 ஆம் தேதிக்கு முன்பு சந்தித்தது கிடையாது. நான் கடந்த 15ஆம் தேதி நடைபெற்ற பேரணிக்காக ஒவ்வொரு மாவட்டத்திலேயும் என்னுடைய தொண்டர்களைச் சந்திப்பதற்காகத்தான் திருச்சியிலேயிருந்து முதலில் புறப்பட்டு வத்தலகுண்டு சென்று, அதற்குப் பிறகு சங்கரன்கோயில் சென்று, அதற்கு அடுத்தபடியாக தூத்துக்குடிக்குச் சென்று, அன்றிரவே,

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

10ஆம் தேதி இரவு திரும்பினேன். இதில் என்னவென்றால். தாமரைக்கனியினுடைய தொல்லை தாங்க முடியாமலும், அவர் தன்னைக் கொல்ல வருகிறார், தனது உயிருக்கு ஆபத்திருக்கிறது என்று சொல்லி அவர் 'புதிய தமிழகத்திலே', பாதுகாப்புத் தேடித்தான் இந்த 10ஆம் தேதி இணைந்தாரேதவிர நான் யாரையும், எதற்கும், அவர்களையெல்லாம் இணைத்தும் எனக்கு ஒன்றும் இலாபம் இல்லை. அவர் தன்னுடைய உயிருக்குப் பயந்துதான் புதிய தமிழகத்திலே இணைந்திருக்கிறார் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, இந்த மாமன்றத்திலே கேட்டுக்கொள்ள விரும்புவது, அவருடைய உயிருக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். காவல் துறை பாதுகாப்பு கொடுக்க வேண்டும். மேலும் அந்த ஒன்றியத் தலைவர் கந்தம்மாளை சட்டவிரோதமாக நீக்குவதற்கும் ஏற்பாடுகள் நடப்பதாகத் தெரிகிறது. எனவே, அதற்கும் அரசு உரிய பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11 -15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் உட்காருங்கள். நீங்கள் தன்னிலை விளக்கம் கொடுத்துவிட்டீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள். உட்காருங்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இருவரும் தங்களுடைய கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். நான் தொடக்கத்திலிருந்தே—இதை இந்த அவைக்குக் கொண்டு வர வேண்டாம் என்ற கருத்தை—பேரவையினுடைய தலைவர் அவர்களிடத்திலும் கூறியிருக்கின்றேன். இன்றைக்கும் இந்தத் தகவல் பற்றி பேச எழுந்ததும் குறுக்கிட்டு, இதைத் தவிர்க்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டேன். அதை கிருஷ்ணசாமி அவர்கள் ஏற்றுக்கொண்டாலும்கூட, தாமரைக்கனி அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. பிறகு விவாதம் நடைபெற்று இருவரும் கருத்துக்களைக் கூறியிருக்கின்றார்கள். அந்த அம்மையார், திருமதி கந்தம்மாள் அவர்கள் ஊராட்சி ஒன்றியத்தினுடைய தலைவராக திருவில்லிபுத்தூரிலே இருக்கின்றார்கள், தேவேந்திரகுல சமுதாயத்தைச் சேர்ந்தவர். அவர்களை ஜாதிப் பெயரைச் சொல்லி, இழிவுபடுத்திப் பேசியதாக ஒரு புகார் மனுவைத் தாக்கல் செய்துள்ளார்கள். அவர் அதுவரையிலே அ.இ.அ.தி.மு.க.-விலே இருந்தவர் என்றும், பின்னர் புதிய தமிழகம் கட்சியிலே இணைந்துள்ளார் என்றும் தெரிய வந்துள்ளது. நான்



விவரங்களுக்குள் சென்று பிரச்சினையை மேலும் சிக்கலாக்க விரும்பவில்லை. அவர்களால் கொடுக்கப்பட்ட புகாரின்மீது வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு, மாவட்டக் குற்றப் பிரிவு காவல் துறைக் கண்காணிப்பாளர் புலன் விசாரணை மேற்கொண்டுள்ளார் என்ற அளவிலே மாத்திரம் செய்தியைச் சொல்லி அமைகிறேன்.

### (இ) தமிழ் மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர் உருவ பொம்மைகளை இந்தியன் வங்கி எதிரில் எரித்தது

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, இந்தியன் வங்கியின் எதிரில் சிலர், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. மூப்பனார், முன்னாள் மத்திய அமைச்சர் திரு. ப. சிதம்பரம் ஆகியோரது உருவ பொம்மைகளை எரித்து, ஆர்ப்பாட்டம் செய்தது, குறித்து, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் திரு. சி. ஞானசேகரன், திரு. ச. அழகிரி, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், திரு. ஆர். சொக்கர், திரு. என்.ஆர். அழகராஜா, திரு. ப. ரங்கநாதன் ஆகியோர் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அறிவிப்பு கொடுத்திருக் கிறார்கள். அதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ள அனுமதி அளிக்கிறேன். அவர்கள் அனைவரின் சார்பாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்று பகல் 11 மணி அளவிற்கு இந்தியன் வங்கி முன்பாக வாழப்பாடி ராமமூர்த்தி அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் கூட்டமாக வந்து, எங்களுடைய மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய தலைவர் மூப்பனார் அவர்களைப் பற்றியும், இந்த நாட்டில் மத்திய அமைச்சராக, நிதி அமைச்சராக இருந்து புகழ் பெற்ற திரு. ப. சிதம்பரம் அவர்களைப் பற்றியும் மிகத் தரக்குறைவாக, கீழ்த்தரமான வார்த்தைகளைப் பேசி, கோஷங்கள் போட்டு, பிறகு அவர்களுடைய உருவ பொம்மைகள் என்று சொல்லி எரித்திருக் கிறார்கள். இந்தக் கொடுமை நடைபெற்றபோது, நேற்று, போலீசாரும் அங்கே நின்று பாதுகாப்புக் கொடுத்துக் கொண்டு இருந்திருக்கிறார்கள்.

நம்முடைய தலைவர் மூப்பனார் அவர்கள் இந்த நாட்டில், 1996ஆம் ஆண்டு ஐக்கிய முன்னணி ஆட்சி ஏற்படுகின்ற நேரத்திலே அத்தனை கட்சித் தலைவர்களும் ஒன்று சேர்ந்து நீங்கள்தான் இந்த

நாட்டின் பிரதமராக இருக்க வேண்டுமென்று கேட்டு, அவர் அதை மறுத்து விட்ட நிலையிலேதான் மறுபடியும் தேவகவுடா அவர்கள் பிரதமராக வந்தார் என்பது இந்த நாட்டின் வரலாறு. அப்படிபட்ட இந்திய அளவில் புகழ் வாய்ந்த ஒரு தலைவரை மிகக் கீழ்த்தரமாக அவமதிக்கும் வகையில் வாழப்பாடி ராமமூர்த்தி கட்சியைச் சேர்ந்த சிலர் செய்திருக்கிறார்கள். அதேபோல, சிதம்பரம் அவர்களும் இந்த நாட்டில் நிதி அமைச்சராக இருந்து நிதித் துறைக்கு—அகில உலக அளவில் புகழ் பெற்ற ஒரு நல்ல தலைவர்—இவர்கள் எல்லாம் அந்த இடத்தில் இவ்வளவு மோசமான முறையில், கீழ்த்தரமான முறையில் அரசியல் உள்நோக்கத்தோடு நடக்க அந்த வன்முறைக் கூட்டத்தை போலீஸார் ஏன் அனுமதித்தார்கள்? இதுபோன்ற பெரிய தலைவர்கள் உருவங்களை அந்த இடத்தில் கொடும்பாவி கட்டி எரிக்கின்ற அளவுக்கு அவர்கள் இந்த நாட்டிற்கு, இந்தியன் வங்கிக்கு என்ன துரோகம் செய்தார்கள் என்பதையெல்லாம் நினைக்கின்றபோது, வேதனையாக உள்ளது. நம்முடைய தலைவர் மூப்பனார் அவர்களும், சிதம்பரம் அவர்களும் இந்தியன் வங்கி மட்டுமல்ல, இந்த நாட்டிலே இருக்கின்ற தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் அனைத்தும் மிகப் பெரிய அளவில் நாட்டு மக்களுக்குத் துணை புரிகின்ற அளவுக்கு அவைகளின் வளர்ச்சியில் அக்கறை கொள்கின்ற மிகப் பெரிய தலைவர்கள். இந்த நாட்டில் முதன்முதலாக அன்னை இந்திராகாந்தி அவர்கள் வங்கிகளை எல்லாம் தேசிய உடைமையாக்க வேண்டுமென்று ஏன் கருதினார்கள் என்று சொன்னால், ஒருசில முதலாளிகள் மட்டும் வங்கிகளைப் பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள் என்பதால்தான்.

*முற்பதல் 11-20*

அந்த நேரத்தில் தேசிய உடமையாக்கபட்டு, ஏழை, எளிய மக்கள் அத்தனை பேர்களுக்கும் பயன்படவேண்டும் என்ற காரணத்திற்காகத்தான் வங்கிகளை தேசியமயமாக்கினார்கள். அந்த வங்கிகளிலே கடன் பெறுகிறபோது, இந்த நாட்டிலே சொத்துக்களை வைத்து எத்தனையோ பேர்கள் கடன் வாங்குகிறார்கள். எல்லாக் கட்சிக்காரர்களும் கடன் வாங்கியிருக்கிறார்கள். பொது மக்கள் வாங்கியிருக்கிறார்கள். வியாபாரிகள் வாங்கியிருக்கிறார்கள், வாழப்பாடி ராமமூர்த்தி கூட ஒரு சாதாரண ஏழையாக இருந்தவர், பத்துக்கு மேற்பட்ட ஆயில் டேங்கர்களை வங்கிக் கடன்மூலம் வாங்கி, அதன் மூலம்தான் இன்று பெரிய கோடீஸ்வரராக ஆகியிருக்கிறார் என்ற வரலாறு எல்லாம் உண்டு. அந்த இயக்கத்தை நடத்திக்கொண்டு வந்த



ராஜசேகரன் என்பவருடைய தம்பி, இந்தியன் வங்கியில் ஏராளமான லாரிகளுக்கு கடன் வாங்கி இருக்கிறார் அதேபோன்று எல்லாக் கட்சிக்காரர்களும் வாங்கியிருக்கிறார்கள். தி.மு.க.-வாக இருந்தாலும் சரி, த.மா.கா.-வாக இருந்தாலும் சரி, காங்கிரசாக இருந்தாலும் சரி, அ.இ.அ.தி.மு.க.-வாக இருந்தாலும் சரி, எல்லாக் கட்சிக்காரர்களும், அத்தனை பேர்களும் கடன் வாங்கியிருக்கிறார்கள். இதை ஒரு காரணமாக வைத்து, வளர்ந்து வருகிற ஒரு நல்ல இயக்கத்திற்குக் கெட்ட பெயரை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக வாழப்பாடி ராமமூர்த்தி கட்சிக்காரர்கள், நேற்று மிகப் பெரிய வன்முறையில் ஈடுபட்டிருக்கிறார்கள். போலீசார் அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்திருக்கிறார்கள். ஆகவே, இந்தக் கொடிய நிகழ்ச்சியை, அருவருக்கத்தக்க நிகழ்ச்சியை ஏன் போலீசார் தடுக்கவில்லை என்பதை நம்முடைய அரசின் மூலம் நான் அறிய விரும்புகிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள். *(குறுக்கீடு)*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள் அனுமதியில்லாமல் கூறியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே ஒரு சிறப்புக் கவன ஈர்ப்பினைத் தந்து, மிகுந்த உருக்கத்தோடு சில செய்திகளை எடுத்துக் கூறி இருக்கிறார்கள். மத்திய அமைச்சர் வாழப்பாடி ராமமூர்த்தி அவர்களுடைய தலைமையிலே உள்ள தமிழக ராஜிவ் காங்கிரஸ் கட்சியின் சார்பில், ராஜாஜி சாலையில் ஊர்வலம் எடுத்து, ராஜாஜி சாலையிலே உள்ள இந்தியன் வங்கிக்கு முன்பு கூடி, அமைதியாக ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாக, அனுமதி கோரி, காவல் துறையிடம், மனுக் கொடுத்திருக்கிறார்கள். ராஜாஜி சாலையில் அதிகப் போக்குவரத்து

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இருக்கும் என்ற காரணத்தால், அங்கு அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டு, ராஜாஜி சாலைக்குப் பின்புறம் உள்ள, செகண்ட் லைன் பீச், ஜாபர் பெரான் சாலை சந்திப்பில் ஆர்ப்பாட்டம் நடத்த காவல் துறை அனுமதி கொடுத்ததோடு, அங்கே காவல் துறை பாதுகாப்பும் போடப்பட்டிருந்தது.

அந்தக் கட்சியின் மாநிலச் செயலாளர் புரசை குமரன், மாநில இணைச் செயலாளர் காஞ்சி சுகுமாரன் மாநிலச் செயற்குழு உறுப்பினர் தேவராஜ், அந்தக் கட்சியின் மாவட்டக் கமிட்டி உறுப்பினர்கள் சந்திரன், மோகன் ஆகியோர் தலைமையில் சுமார் 150 பேர்கள் 18-5-1998 அன்று முற்பகல் ஆர்ப்பாட்டத்திலே கலந்து கொண்டிருக்கிறார்கள். அமைதியாக அரை மணி நேரம் ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாக உறுதி கொடுத்துவிட்டுச் சென்ற அந்த ஊர்வலத்தினர், ஆர்ப்பாட்ட முழக்கங்கள் செய்து கொண்டிருந்தபோதே, திடீரென்று ஒரு வாகனத்தில் மறைத்து வைத்திருந்த, வைக்கோலால் செய்யப்பட்ட, மூப்பனார் மற்றும் மத்திய முன்னாள் நிதி அமைச்சர் சிதம்பரம் ஆகியோரின் உருவ பொம்மைகளை எடுத்து வந்து கொளுத்தி இருக்கிறார்கள்.

இதுகுறித்து, பி-1 கடற்கரை காவல் நிலையக் குற்ற எண் 805/98. சட்டப்பிரிவு 143, இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 74 மற்றும் சென்னை நகரக் காவல் சட்டத்தின்படி வழக்குப் பதிவு செய்யப்பட்டு உள்ளது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு தலைமையேற்ற மேலே கூறிய 5 நபர்களும் இன்று அதிகாலையில் கைது செய்யப்பட்டு, ரிமாண்டிற்காக அனுப்பப்பட்டுள்ளார்கள். இந்த ஆர்ப்பாட்டத்திற்குப் பாதுகாப்பிற்காகச் சென்றிருந்த ஆய்வாளரும், ஏனைய காவல் துறையினரும், அந்தக் கொடும்பாவி எரிப்பைத் தடுக்காமல் விட்டதற்காக, உடனடி நடவடிக்கையாக, அந்தக் காவல் நிலைய ஆய்வாளர், இன்று அந்தக் காவல் நிலையத்திலிருந்து மாநகரக் காவல் துறை ஆணையாளரால் மாற்றப்பட்டுள்ளார்.

அதை ஏன் தடுக்கவில்லை என்று நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள். திடீரென்று நிகழ்ந்துவிட்ட நிகழ்ச்சி இது. முதலிலே அமைதியான ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாகச் சொல்லிவிட்டு, நாங்கள் அங்கே உருவ பொம்மையைக் கொளுத்தப் போகிறோம் என்று சொல்லாமலே, மறைத்து வைத்து அதைக் கொண்டுவந்து, இந்தக் காரியத்தை அவர்கள் செய்திருக்கின்றார்கள்.



முற்பகல் 11-25

பொதுவாக, இந்தக் கொடும்பாவி கொளுத்துவது என்பது, ஏதோ சில சின்னங்களை, கொள்கை ரீதியாக நமக்குப் பிடிக்காத, நாம் எதிர்க்கிற, நாம் வெறுக்கிற சில சின்னங்களை வேண்டுமானால் பொம்மைகளாகச் செய்து கொளுத்தலாம். நான் அவர்கள் செய்ததற்கு வக்காலத்து வாங்குவதாக எண்ணிக்கொள்ளக் கூடாது. கட்டாய இந்தித் திணிப்பு ஆதிக்கம் இருந்தபோது, கட்டாய இந்தித் திணிப்பு ஆதிக்கம் என்ற பொம்மையைச் செய்து, அது கொளுத்தப்பட்டது. அதெல்லாம் - அவைகள் எல்லாம் சின்னங்கள். அதைப்போல ஒரு சர்வாதிகார நாடு என்றால், அந்தச் சர்வாதிகாரத்தைக் கொளுத்த, சர்வாதிகாரம் என்ற ஒரு சின்னத்தைச் செய்து கொளுத்தலாம். எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, தி.மு.க.-வாக இருந்தாலும் சரி, அ.இ.அ.தி.மு.க.-வாக இருந்தாலும் சரி, கம்யூனிஸ்டுகளாக இருந்தாலும் சரி, அதே தமிழ் மாநில காங்கிரசாக இருந்தாலும் சரி, தனிப்பட்டவர்களுடைய உருவ பொம்மைகளைக் கொளுத்துவது, தனிப்பட்ட முறையிலே தலைவர்களுடைய கொடும்பாவிகளைக் கொளுத்துவது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று என்பதை நாம் அனைவருமே ஒருமித்த கருத்தோடு எண்ணிப் பார்த்து, அவைகளைத் தவிர்க்க வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோளாகும்.

இது கடந்த காலத்திலே தி.மு.க. சார்பிலும், அல்லது வேறு பல கட்சிகளின் சார்பிலும், அ.இ.அ.தி.மு.க போன்ற கட்சிகளின் சார்பிலும், வேறு கட்சிகளின் சார்பிலும்கூட நடத்தப்பட்டிருக்கக்கூடும். இனிமேலாவது அப்படிப்பட்ட காரியங்கள் நடைபெறாமல் நாம்தான் தடுக்கவேண்டும். நாம்தான் அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒரு சின்னம், ஒரு பொதுவான கருத்து, ஒரு கொள்கை—அதை வேண்டுமானால் நம்முடைய எதிர்ப்பைக் காட்டுவதற்கு கொடும்பாவிகளாக, உருவ பொம்மைகளாக ஆக்கிக் கொளுத்தலாம். ஆனால், தனிப்பட்டவர்கள், மக்களால் மதிக்கப்படுகின்றவர்கள், ஒரு கட்சியினுடைய தலைவர் என்கின்ற அளவிற்கு செல்வாக்குப் பெற்றவர்கள், மூப்பனாரைப் போன்றவர்கள், அவர்கள் குறிப்பிட்டதைப் போல, இந்தியாவினுடைய நிதித் துறை அமைச்சராக இருந்து புகழ்பெற்ற சிதம்பரம் போன்றவர்கள், இவர்களுடைய கொடும்பாவிகளைக் கொளுத்துவது என்பது ஒரு அநாகரீகமான செயல் என்பதை மாத்திரம் நான் இங்கே எடுத்துக்கூறி, அந்தச் செயல் உடனடியாகத் தடுக்கப்படாவிட்டாலும்கூட, அந்தச் செயலில்

ஈடுபட்டவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு, கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள் என்பதையும், அங்கே தகுந்த முறையிலே தவிர்ப்பதற்கு முன்வராது இருந்த காவல் நிலைய ஆய்வாளர் அந்த நிலையத்திலிருந்து மாற்றப்பட்டிருக்கிறார் என்பதையும் நான் தெரிவித்து, இந்த அளவோடு என்னுடைய விளக்கத்தை நிறைவு செய்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிகழ்ச்சி பற்றி ஒரு வாரத்திற்கு முன்னாலே வாழப்பாடி ராமமூர்த்தி கட்சிக்காரர்கள் பத்திரிகையிலே விளம்பரமாகக் கொடுத்திருக்கிறார்கள், செய்தி கொடுத்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு, தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக இந்தியன் வங்கியில் நம்முடைய அருமைத் தலைவர் மூப்பனார் அவர்களோ, சிதம்பரம் அவர்களோ ஏதாவது ஒரு சிறிய கடன்கூட வாங்கியிருக்கிறார்கள் என்று நிரூபிக்கமுடியுமா என்று ஒரு சவாலாகக் கூட ஒரு செய்தி வெளியிட்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் பிறகும்கூட, நம்முடைய போலீஸ் துறை, இப்படிப்பட்ட மிகப் பெரிய தலைவர்களை அங்கே அவமானப்படுத்துகின்ற, ஒரு பெரிய மனவேதனைபடுத்துகின்ற அளவிற்கு நடந்துகொண்டதற்காக, எங்களுடைய வருத்தத்தைத் தெரிவிக்கின்ற வகையில், நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(தமிழ் மாநில காங்கிரஸ் (மூப்பனார்) கட்சி உறுப்பினர்கள்
அனைவரும் வெளிநடப்புச் செய்தனர்)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வெளிநடப்பு எனக்கு மிகுந்த வியப்பாக இருக்கிறது. நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு வாரத்திற்கு முன்பு அறிவிக்கப்பட்டது என்றார். அதைப்போலத்தான் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியும்கூட மத்திய அரசை எதிர்த்து, அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற வருமான வரி அதிகாரிகளின் டிரான்ஸ்பர்களை எதிர்த்து, மத்திய அமைச்சர் அவ்வாறு நடந்துகொள்கிறார் என்பதைக் கண்டிக்கின்ற வகையிலே, அவர்களும் ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கிறார்கள். அதைப்போலத்தான் இந்த



ஆர்ப்பாட்டமும் இருக்குமென்று போலீசார் எண்ணியதிலே தவறு இருக்கமுடியாது. அவர்கள் எண்ணினார்கள். ஆனால், அதற்கு மாறாக அவர்கள் இப்படி நடந்துகொண்டு விட்டார்கள். அதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. முன்கூட்டியே ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்டால், திடீர், திடீரென்று தலைவர்களுடைய கொடும்பாவிகளை நம்முடைய அலுவலகங்களுடைய வாசலிலேகூட போட்டு நாம் கொளுத்திவிடுகிறோம். அதுதான் கடந்தகால வரலாறு.

இது எல்லாம் அவர்களுக்கும் தெரியும். அப்படிப்பட்ட கொடும்பாவிகள் கொளுத்தப்பட்ட வரலாறு எல்லாம் இருக்கிறது. நீங்கள் ஏன் முன்பே தடுக்கவில்லை என்று யார் மீதும் கோபித்துக் கொள்ள முடியாது. எனவே, இன்றைக்கு இவ்வளவு நான் சொன்ன பிறகும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்றவர்களும் வெளிநடப்புச் செய்வதற்கு நான் மிகவும் வருந்துகிறேன். அவர்கள் திரும்பி வந்து அவை நிகழ்ச்சியிலே கலந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-30*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள், டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவில்லிபுத்தூர் ஒன்றியப் பெருந்தலைவர்......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது முடிந்தாகிவிட்டது. அதை நீங்கள் எழுப்பி, திரு. தாமரைக்கனி தன்னிலை விளக்கம் கொடுத்து, முதலமைச்சர் பதில் சொல்லி, விளக்கம் கொடுத்துவிட்டார்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அவையிலே எழுப்பியாகிவிட்டது. ஆனால், முதலமைச்சர் பதில் வழக்குப் பதிவு செய்வதற்கு மட்டும் சொன்னார்கள். ஓர் உறுப்பினர் சம்பந்தப்பட்ட விஷயம். அதை இங்கே உரிமைக் குழுவிற்கு அனுப்பினால்தான் அது உண்மையான, சரியான தீர்வாக இருக்கும்.

[1998 மே 19

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஆனால் அவர்கள், நான் அப்படிச் சொல்லவில்லை என்று இங்கேயே மறுத்துவிட்டார். அதனாலே, பிரச்சினையை இத்தோடு விட்டுவிடுங்கள்.

(திரு. பி.ஆர். சுந்தரம் தொடர்ந்து நின்றுகொண்டு இருந்தார்)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுந்தரம், நீங்கள் இந்த மாதிரி எல்லாம் பேசக்கூடாது. அவர் ஒரு பிரச்சினையை எழுப்பினார். அதுசம்பந்தமாக எழுந்து நின்றார். நீங்கள் முதலிலே உட்காருங்கள், நீங்கள் உட்காருங்கள். முதலிலே நான் சொல்வதைக் கேளுங்கள். மைக் கொடுங்கள் என்று நீங்கள் என்னை நிர்ப்பந்திக்க முடியாது. மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுந்தரம் பேசியது எதுவும் அவைக் குறிப்பிலே இடம் பெறாது. மாண்புமிகு பேரவை முன்னவர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,.......

(திரு. பி.ஆர். சுந்தரம் தொடர்ந்து நின்றுகொண்டிருந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னவர் எழுந்து நிற்கும்போது, இப்படி இடைஞ்சல் பண்ணுவது உங்களுடைய பண்பாட்டைத்தான் காட்டுகிறது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுந்தரம், நீங்கள் முதலிலே உட்காருங்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



1998 மே 19]

## 3. விதி 111-ன்கீழ் அறிக்கை.

**14-5-1998 அன்று வினா எண் 501-ன் மீது திரு. ப. ரங்கநாதன் கேட்ட துணை வினாவிற்கான விடையில் திருத்தம் குறித்து கல்வி அமைச்சரின் அறிக்கை.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை விதி *111*-ன் கீழ் திருத்த அறிக்கை ஒன்றை அளிப்பதற்கு என்னுடைய அனுமதியை, மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் வேண்டியுள்ளார்கள். அனுமதி வழங்கப்படுகிறது. மாண்புமிகு பேரவை முன்னவர்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் சற்று நேரம் முன்னர் அவர்களுடைய கட்சியான தமிழ் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் மாநில காங்கிரஸைச் சார்ந்தவர்களும், அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகும் தங்களுடைய வருத்தத்தைத் தெரிவித்து வெளிநடப்பு செய்தாலும், முதலமைச்சர் அவர்கள் மறுபடியும் சொன்ன விளக்கத்தைக் கேட்டு, அவர்கள் எல்லாம் மறுபடியும் அவையிலே கலந்துகொள்ள முன்வந்து இங்கே வீற்றிருப்பதற்காக என்னுடைய மகிழ்ச்சியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

என்னுடைய வேண்டுகோளை ஏற்று, இந்தத் திருத்த அறிக்கை, இங்கே வழங்க அனுமதித்திருக்கிறீர்கள். என்னுடைய இந்தத் திருத்தம் *14-5-1998* அன்று, வினா எண் *501*, (உடுக்குறியிட்ட வினா எண் *8868*) மீது திரு. ப. ரங்கநாதன் கேட்ட துணை வினாவிற்கான விடையைக் கீழ்க்கண்டவாறு திருத்திய விடையாக அளிக்க விழைகிறேன் :

'*1997-98* ஆம் ஆண்டில் *498* விரிவுரையாளர்கள் அரசுத் தேர்வு வாரியத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, வரும் ஆண்டில் பணியமர்த்தப்பட உள்ளனர். இதனிடையே, கௌரவ விரிவுரை யாளர்கள் தங்களை அரசுப் பணியில் சேர்க்க வேண்டும் என்று தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயத்தில் வழக்குத் தொடுத்துள்ளனர். நிர்வாகத் தீர்ப்பாயம் இவ்வழக்கில் இடைக்காலத் தடையாணை விதித்துள்ளது. இவ்வழக்கில் தடையாணை விலக்கப்பட்ட பின்னரே தேர்வு செய்யப்பட்ட விரிவுரையாளர்களுக்குப் பணி நியமனம் அளிக்க இயலும்' என்ற இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

## 4. கவன ஈர்ப்பு

### (அ) குத்தாலம் பகுதியில் மின்மாற்றிகள் எரிந்து விட்டதால் திருவாரூர் மூலமாக மின் விநியோகம் கோருதல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்புகள். திரு. குத்தாலம் பி. கல்யாணம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு நிகழ்வினைக் கொண்டு வருவார். திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"குத்தாலம் பகுதிக்கு மின் விநியோகம் செய்த டிரான்ஸ்பார்மர்கள் எரிந்துவிட்டதால் ஒரு நாளைக்கு சுமார் 10 மணி நேரம் மின்சாரம் இன்றி விவசாயிகள் அல்லல்படுகிறார்கள். தற்காலிக ஏற்பாடாக திருவாரூர் மூலமாக, குத்தாலம் பகுதிக்கு மின்சாரம் விநியோகம் செய்ய வேண்டியது குறித்து" மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

#### விவர அறிக்கை

குத்தாலம் பகுதிக்கான மின் விநியோகம் 110 கி.வோ. மணல்மேடு துணை மின் நிலையத்திலிருந்து 33 கி.வோ. கடலங்குடி மின்பாதை வழியாக வழங்கப்படுகிறது. மணல்மேடு துணை மின் நிலையத்திற்கு மின்சாரம், நெய்வேலி அனல் மின் நிலையம் I-லிருந்து வழங்கப்பட்டு வந்தது. ஆனால் அங்கு இயங்கி வந்த இரு மின்மாற்றிகளில் (டிரான்ஸ்பார்மர்) ஒன்று எரிந்து விட்டதன் காரணமாக மின்மாற்றியின் சுமையைக் குறைக்க வேண்டி, மின் துண்டிப்பு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. தற்போது திருவாரூர் துணை மின் நிலையத்தில் மற்றுமொறு மின்மாற்றி புதிதாக இயக்கப்பட்டுள்ளதால் மணல்மேடு துணை மின் நிலையத்திற்கு திருவாரூர் துணை மின் நிலையத்திலிருந்து



மின் விநியோகம் செய்யப்படுகிறது. இதனால் இனிவரும் காலங்களில் மின்மாற்றியின் மின் சுமையைக் குறைக்கும் பொருட்டு குத்தாலம் பகுதிக்கு மின் துண்டிப்பு இருக்காது.

முற்பகல் 11-35

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவா அறிக்கையில் திருவாரூர் துணை மின் நிலையத்தில் மற்றுமொறு மின்மாற்றி புதிதாக இயக்கப்பட்டு, இனிவரும் காலங்களில் மின்மாற்றியின் மின் சுமையைக் குறைக்கும் பொருட்டு குத்தாலம் பகுதிக்கு மின் துண்டிப்பு இருக்காது என்ற நல்ல செய்தியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு அந்தப் பகுதியைப் பொறுத்தஅளவில் கடலங்குடியிலே உள்ள துணை மின் நிலையத்திலே இருந்துதான் எங்களுக்கு மின்சாரம் கிடைத்துக்கொண்டிருக்கிறது. அதிலே 230 கிலோவாட் துணை மின் நிலையம் அமைக்க, சென்ற ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கி, 2-2-1998-லே இடமும் வாங்கப்பட்டு, பணிகள் தொடங்க எல்லா வகையிலும் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. ஏப்ரல் 1999-க்குள் அந்த வேலை முடிக்கப்படவேண்டும். ஆனால் இதுநாள் வரையில் வேலை தொடங்கப்படவில்லை. மேலும் எரிவாயு மூலம் மின்சாரம் தயாரிக்கும் குத்தாலம் கியாஸ் டர்பைன் அமைய உள்ள இடம், அந்தக் கடலங்குடி. எனவே, அந்த 230 கிலோவாட் துணை மின் நிலையப் பணியை விரைவில் தொடங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்தப் பகுதியில் ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்கு ஏற்கெனவே அரசு முடிவு செய்து, நிதியும் ஒதுக்கி 2-2-1998 அன்று மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிட்டதைப் போல இடமும் மின் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்ட காரணத்தினால், மாண்புமிகு உறுப்பினர் மகிழ்ச்சி அடையக்கூடிய அளவில் 1999 ஏப்ரலுக்குள்ளாக அந்தத் துணை மின் நிலையம் கட்டி முடிக்கப்படும் என்பதை நான் இங்கே தெளிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

## (ஆ) எடப்பாடி பேருந்து நிலையத்திற்கருகில் சரபங்கா நதிப் பாலம் பழுது

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. பேரவை விதி 55-ன்கீழ் திரு. ஐ. கணேசன் அவர்கள் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"எடப்பாடி பேருந்து நிலையத்தருகில் சரபங்கா நதி குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம் மிகவும் பழுதடைந்துள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### விவர அறிக்கை

கவன ஈர்ப்பில் குறிப்பிட்டுள்ள பாலம், எடப்பாடி மகுடஞ்சாவடி சாலையில் கி.மீ. 0/4-ல் சரபங்கா நதியின் குறுக்கே கட்டப்பட்ட பழுதடைந்த பாலத்தைத் திரும்பக் கட்டக் கோருவதாகும். இப்பாலத்தைத் திரும்பக் கட்ட ரூ.120 இலட்சம் தேவைப்படும். இப்பாலம் கட்டும் பணி இதுவரையில் அரசின் ஒப்புதல் பெற்ற திட்டங்களான பகுதி-2 திட்டம், நபார்டு திட்டம் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் மற்றும் வீட்டுவசதி நகர்ப்பகுதி (HUDCO) மேம்பாட்டுக் கழக நிதி மற்றும் உலக வங்கித் திட்டம் ஆகிய எந்த ஒரு திட்டத்திலும் இடம் பெறவில்லை. மேற்கண்ட திட்டங்கள் அனைத்தும் இறுதியாக்கப்பட்டுவிட்ட நிலையில் இப்பாலப் பணியை இந்த நிதியாண்டில் உடனடியாக மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எடப்பாடியிலிருந்து சேலம், ஓமலூர், சங்ககிரி போன்ற ஊர்களுக்குச் செல்ல வேண்டுமானால் அந்த சரபங்கா நதி பாலத்தில் மேல்தான் செல்ல வேண்டும். எங்களுடைய ஊருக்கு அது மிகமிக முக்கியமான ஒரு பாலம். இந்தப் பாலம் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று 1996-லே நான் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, இதே





அவையிலே முதன் முதலாக இந்தக் கோரிக்கையை முதல்வர் அவர்களுக்கு வைத்திருந்தேன். அதன் பிறகு 2, 3 முறை சட்டமன்றத்திலும் பேசி இருந்தேன். பொதுக் கணக்குக் குழு மூலமாக எஸ்.ஈ. அவர்களைச் சந்தித்தபோது இதைப்பற்றி விவரமாகக் கூறியிருந்தேன். அவர் 1998-99-வது ஆண்டு எடுத்துக்கொள்வதாகக் கூறியிருந்தார். கடிதமும் கொடுத்திருந்தார். ஆனால் இந்த விவர அறிக்கையிலே இந்தத் திட்டத்தை, இந்த நிதியாண்டில் எடுத்துக்கொள்ள முடியாது என்று கூறியிருக்கிறீர்கள். தயவுசெய்து முதல்வர் அவர்களும், அமைச்சர் அவர்களும், எடப்பாடி மிக, மிக முக்கியமான தொழில் வளம் பெருகக்கூடிய பகுதி என்பதனைக் கணக்கில் எடுத்து, இந்தப் பாலத்தைக் கட்டிக் கொடுக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-40

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே குறிப்பிடப்பட்டுள்ள பாலம்—எடப்பாடி—மகுடஞ்சாவடி சாலையில் 0/4 கிலோமீட்டரில் சரபங்கா நதியின் குறுக்கே உள்ள பழுதடைந்த பாலத்தைத் திருப்பிக் கட்டக் கோருவதாகும். ஏற்கெனவே ஒரு பாலம் அங்கே இருக்கிறது. அது தற்போது பழுதடைந்திருக்கிறது. பழுதடைந்த பாலத்தைத் திருப்பிக் கட்ட வேண்டும் என்பதுதான் கோரிக்கையாகும். மாண்புமிகு உறுப்பினர் ஐ. கணேசன் அவர்கள் இங்கே கோரிக்கை வைப்பதைப்போல, மாண்புமிகு உறுப்பினர்கள் பல பேர் தங்களுடைய பகுதிகளில் பாலங்கள் கட்டப்பட வேண்டும் என்று ஏராளமான கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள்.

அவைகள் எல்லாம் கட்டப்பட வேண்டும் என்பதுதான் அரசினுடைய நோக்கம். இந்த ஓர் ஆண்டிலே மட்டும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 106 பாலங்கள் கட்டுவதற்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். ஒரே ஆண்டில் 106 பாலங்கள். 1989-90 ஆம் ஆண்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்டபோது இதைப்போலவே அறிவித்தார்கள். விடுபட்டுப் போன பாலங்கள், 'லிங்க் பிரிட்ஜஸ்' என்று சொல்லி 100 பாலங்கள் கட்டுவதற்கு அனுமதி அளித்தார்கள். அந்த 100 பாலங்கள் அப்போது ஓர் ஆண்டுக் காலத்திலே கட்டி முடிக்கப்பட்டன. அதைப்போலவே இப்போது 106 பாலங்கள் கட்டுவதற்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். ஹட்கோ சார்பில் 50 பாலங்கள்—253 கோடி ரூபாய். நபார்டு-2-ன் கீழ் 2 பாலங்கள்—15 கோடியே 71 இலட்சம் ரூபாய். நபார்டு-3-ன்

[திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்] [1998 மே 19

திட்டத்தின்கீழ் 19 பாலங்கள் 81 கோடியே 73 லட்சம் ரூபாய். நபார்டு-3 சார்பிலே மீண்டும் 3 பாலங்கள்—6 கோடியே 70 இலட்சம் ரூபாய். பகுதி-2 திட்டத்தின்கீழ் 1998-99 ஆம் ஆண்டு 2 பாலங்கள்—ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய். ஆக மொத்தம் 3.58 கோடியே 34 இலட்சத்திற்குப் பாலங்களைக் கட்ட, ஒரே ஆண்டிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதித்து இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் ஐ. கணேசன் அவர்கள் குறிப்பிட்ட இந்தப் பாலமும் சிபாரிசு செய்யப்பட்டு இருக்கலாம். என்னிடம் அது குறித்த விவரம் சரியாக இல்லை. எந்தக் காரணத்தால் இந்த ஹட்கோ திட்டத்திலோ, நபார்டு திட்டத்திலோ, பகுதி-2 திட்டத்திலோ இந்தப் பாலம் இந்த ஆண்டு இடம் பெறவில்லை என்றாலும், வருகின்ற காலத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. கணேசன் அவர்களுடைய கோரிக்கைளும், மற்ற மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கையும் அனுதாபத்தோடு கவனிக்கப்படும். நிதிநிலைமைக்கு ஏற்றவாறு இந்தத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, குழுவின் அறிக்கையை அளித்தல் (குறுக்கீடு)

## 5. தகவல் கோரல்

### மாதவரம் பால் பண்ணையில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதால் வேலை இழந்தோருக்கு மீண்டும் வேலைவாய்ப்பு

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,.......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர்தான் எதிர்காலத்தில் நிதிநிலைமையைப் பொறுத்து அது பரிசீலிக்கப்படும் என்று சொல்லி விட்டாரே, உட்காருங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் அடுத்த அலுவலுக்கு வந்துவிட்டேன். உட்காருங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** ஒரு நிமிடம் கொடுங்கள். 'Zero Hour' தானே.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஜீரோ ஹவர் எல்லாம் முடிந்து, எவ்வளவோ நேரம் ஆகிறது. தயவுசெய்து உட்காருங்கள்.



1998 மே 19]

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்று எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சி சட்டமன்ற உறுப்பினர், தாரமங்கலம் திரு. ப. கோவிந்தன் அவர்கள் பேசும்போது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் அறையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, அதைக் கொடுத்து விட்டீர்கள். அதன்பேரிலே அதை ஆய்வு செய்து, அதன் மேல் நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள்.

**திரு. ஐ. கணேசன்:** அது என்னவென்று சொல்லி விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) சரி.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது, எந்த, எந்தப் பெயர் இருக்கிறது; பட்டியல் இருக்கிறதா என்று கேட்டார்கள். எங்களிடத்திலே கொடுத்த பட்டியலிலே, மொத்தம் 1070 பேரில் 1989 ஆம் ஆண்டு கிட்டத்தட்ட 370 பேருக்கும், அதன்பிறகு 427 பேருக்கும் அரசு மீண்டும் வேலை கொடுத்திருக்கிறது. அதிலே 111 பேர் வந்து சேரவில்லை என்று தெரிகிறது. மீதி 384 பேருக்கு இன்னும் வேலை கொடுக்க வேண்டும். அதிலே பலர் இறந்து விட்டதாகவும், வயதாகி விட்டதாகவும் கூறப்படுகிறது. இருப்பினும், எங்களிடத்தில் கொடுத்த பட்டியலிலே சி. பார்த்தசாரதி, துளசிபதி, ராஜசேகரன், பி. சுப்பிரமணி, ஆர். சுப்பிரமணி, மாணிக்கம், அப்துல் கபூர், கிருஷ்ணமூர்த்தி, ஏகாம்பரம், நாகராஜன் போன்ற கிட்டத்தட்ட 11 பேருக்கு வேலை கிடைக்கவில்லை என்று சொல்லி எங்களிடத்திலே மனுக் கொடுத்து இருக்கிறார்கள். அவர்கள் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மனு கொடுத்திருக்கிறார்கள். தினத்தந்தியிலே, 8-7-1997-லே, மீண்டும் வேலையிலே வந்து சேர்ந்து கொள்ளலாம் என்று அரசாங்கம் விளம்பரம் செய்திருக்கிறது. அந்த விளம்பரத்தாளும் என்னிடத்திலே இருக்கிறது. பார்த்தசாரதிக்கு 18-2-1997-லேயே வேலைக்கான அப்பாயின்ட்மென்ட் போடப் பட்டிருக்கிறது. ஆனால், அவரோடு சேர்ந்து 11 பேர் சென்றபோது, அவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ளவில்லை. ஏன் எடுத்துக் கொள்ளவில்லை என்ற விவரங்களை எல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சேகரித்து அந்த 11 பேருக்கும் உடனடியாக வேலை கொடுக்க அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன்.

[1998 மே 19

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

*முற்பகல் 11-45*

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1980ஆம் ஆண்டு வேலைநிறுத்தத்திலே பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு, மிகுந்த கருணை உள்ளத்தோடு 9 ஆண்டுகளுக்குப் பிறகு வேலை கொடுத்தவர் நம்முடைய முதல்வரவர்கள். 1070 பேர் வேலைநிறுத்தம் செய்தார்கள். 686 பேருக்கு முதல்வரவர்கள் அரசின் சார்பாக வேலை கொடுத்திருக்கிறார்கள். மீதி உள்ளவர்களும் வேலைக்குச் சேரலாம் என்று நாங்கள் பத்திரிகைகளிலே—தினத்தந்தி, அதைப்போல தினகரன், முரசொலி ஆகிய பத்திரிகைகளில் 8-7-1997-இல் விளம்பரம் கொடுத்து, கடைசித் தேதி 31-7-1997 என்றெல்லாம் முறைப்படி விளம்பரப் படுத்தினோம். பலர் மனுச் செய்தார்கள். மனுக்களைப் பரிசீலித்தோம். அந்த மனுக்களில் கீழ்க்கண்ட விவரங்கள் இருக்க வேண்டும்; மீண்டும் வேலை கேட்பவர்கள்—9 ஆண்டுகளுக்குப் பிறகு—அவர்கள் ஏற்கெனவே மாதவரம் பால் பண்ணையில் வேலை பார்த்தார்களா, இல்லையா என்பதற்குச் சான்று தர வேண்டும். அடுத்து, ஸ்ட்ரைக்கில்தான் ஈடுபட்டு வேலை இழந்தார்களா அல்லது வேறு காரணங்களினால் வேலை இழந்தார்களா என்ற தகவலும் சான்றிதழில் தெரிவிக்கப்பட வேண்டும். அதற்கடுத்து, கல்வித் தகுதியைச் சொல்ல வேண்டும். வயதுச் சான்றிதழ் தர வேண்டும். மெடிக்கல் சர்ட்டிபிகேட் தர வேண்டும். அவர்கள் ரிடயர்மென்ட் ஏஜைத் தாண்டி விட்டார்களா, இல்லையா என்ற தகவலும் ஆராயப்பட வேண்டும்.

இதற்குப் பிறகுதான் அவர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப் படுவார்கள். அந்த அடிப்படையிலே, மனுச் செய்தவர்களைப் பார்த்தால், 409 பேர் ரிட்டயர் ஆகி விட்டார்கள். சில பேர் இறந்து போனார்கள். சிலபேர் எங்கே இருக்கிறார்கள் என்றே தெரியவில்லை. சில பேர் போலிப் பட்டியல் கொடுத்தார்கள்.

நீங்கள் கொடுக்கிற பட்டியல் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. (குறுக்கீடு) நான் சொல்லுகிறேன்.

நீங்கள், பார்த்தசாரதி என்று சொன்னீர்கள். 1980 வேலை நிறுத்தத்திற்கு முன்னரே, பணியாளர்கள் பட்டியலில் அவர் பெயர் இல்லை. இவருக்கு எப்படி வேலை கொடுக்க முடியும்?





ராஜசேகரன் என்று சொன்னீர்கள். 1980 ஆம் ஆண்டு வேலை நிறுத்தத்திற்கு முன்னரே, வேறு ஒழுங்கு நடவடிக்கையின் காரணமாகப் பணி நீக்கம் செய்யப்பட்டவர். மேலும் தொழில் தாவாவிலே அவருடைய பெயரே கிடையாது.

அடுத்து, பி. சுப்பிரமணி, ஆர். சுப்பிரமணி, தெரசா, ஆகியோர் 58 வயதைக் கடந்தவர்கள். வேலை கொடுக்க முடியாது.

அடுத்து, எஸ்.இ. மாணிக்கம், அதுபோலவே அப்துல் கபூர். இவர்களிடமிருந்து, இவ்வளவு விளம்பரம் கொடுத்ததற்குப் பிறகும், நோ கிளெய்ம் - பெட்டிஷனே இன்னும் வரவில்லை.

அதைப்போலவே, துளசிபதி, தொழில் தீர்ப்பாயத்தில் இவருடைய பெயரே கிடையாது.

எனவே, மனுச் செய்தவர்களில், வயதைக் கடந்தவர்கள், தகுதி இல்லாதவர்களுக்கு எப்படி வேலை கொடுக்க முடியும்? ஆகவே, இந்த அரசை, கலைஞரை.........

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவரவர்களே, நேரத்தை நீட்டித்துக் கொண்டு போக நான் விரும்பவில்லை. ஓரே வரியிலே இதற்குப் பதில் சொல்ல வேண்டுமேயானால், 11 பேருடைய பட்டியலைக் கொடுத்திருக்கிறார்கள். ஒவ்வொன்றாக, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவற்றை அலசி ஆராய்ந்து, யாரும் மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்குத் தகுதி ஆனவர்கள் அல்ல என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்.

ஏறத்தாழ 686 பேர் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் 1980ஆம் ஆண்டிலே பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள். எந்தக் காரணத்திற்காக என்றால், அடையாள வேலைநிறுத்தம் செய்தார்கள் என்பதற்காக, 1980ஆம் ஆண்டிலே பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள். அவர்களை வேலைக்கு எடுத்துக் கொண்டது மாத்திரம் அல்ல, அவர்களுக்காகக் கேட்கப்பட்ட சலுகைகள், உரிமைகள் அத்தனையும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ஒரு ஃபைலைக் கொண்டு வந்து கொடுத்து, இதிலே 11 பேர் இருக்கிறார்கள் என்று சொன்னால், உண்மையாகி விடாது. பரமார்த்த குருவினுடைய சிஷ்யர்கள் ஒரு பனை மரத்திலே ஓர் ஊசியைக் குத்தி, கொண்டு வந்ததைப்போல, 4 சிஷ்யர்கள் தூக்கிக் கொண்டு

வந்ததைப் போல, ஒரு ஃபைலைக் கொண்டு வந்து கொடுத்து, இதிலே நாங்கள் சொன்ன ஆட்களெல்லாம் இருக்கிறார்கள் என்று சொன்னால், ஏற்றுக்கொள்ள முடியாது.

இதைவிட இன்னும் அதிகம் விவரம் வேண்டுமானால், இந்த அரசின் சார்பிலே இல்லை - இதற்காக வாதாடியவர்களினுடைய சார்பில் - சுப்பராயன் இருக்கிறார். அவர் விளக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

***திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது உண்மையிலேயே விரிவாகச் சொல்லவேண்டிய விஷயம் என்றாலும், இதிலே ஓரேயொரு விஷயத்தை நான் சொல்லிவிட விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் தொழிற்சங்க இயக்க வரலாற்றிலேயே இல்லாத ஒரு புதுமை, இந்த மாதவரம் பால்வளத் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கும் பிரச்சினையிலே நடைபெற்றுள்ளது என்பதைத் *(மேசையைத் தட்டும் ஒலி)* தெரிவித்துக்கொள்கிறேன். நான் எந்தவிதமான விருப்பு, வெறுப்பும் அற்ற முறையில் மாநில அரசை உண்மையிலேயே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏனென்றால், அந்த சம்பந்தப்பட்ட மாதவரம் தொழிலாளிகள் பல்வேறு காரணங்களால் I.D.Act - *18(1)*-ன்படி settlement போட்டு, தொழில் தீர்ப்பாயத் தீர்ப்பின் அனுகூலங்களை நாங்கள் பெறவில்லை என்று ஒப்பந்த ரீதியாக சம்மதித்ததற்குப் பின்னரும், நான் இதே பேரவையில், தீர்ப்பின் சலுகைகளை, சட்ட ரீதியாக அவர்களுக்குப் பெறுகிற உரிமையே இல்லை என்றாலும், அதைக் காரணம் காட்ட வேண்டாம் என்று நான் மன்றாடிக் கேட்டுக்கொண்டவுடன், பரிவோடு மாநில முதலமைச்சரவர்கள் அதையும் ஏற்றுக்கொண்டு, அவர்கள் வேலையில் தொடர்ந்து இருந்திருந்தால் என்னென்ன பணம், மற்றும் பதவி உயர்வுகளைப் பெற்றிருப்பார்களோ, அத்தகைய சட்ட ரீதியான தகுதிகளும், உரிமைகளும் அவர்களுக்கு சர்வீஸ் தொடர்ச்சியோடு வழங்கப்படும் என்ற அறிவிப்பை இந்தப் பேரவையில் அறிவித்ததை நான் நன்றியோடு பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதேபோல இன்னொரு விஷயம். நான்தான் வேண்டுகோள் விட்டேன். இவர்கள் மனுச் செய்வதற்கான கால வரம்பை இதோடு



நீங்கள் முடித்து விடாதீர்கள். மேலும் ஒரு மாதம் நீட்டிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். எனவே, கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் மேலும் ஒரு மாத காலம் கட் ஆஃப் டேட் கொடுத்து, அதைப் பத்திரிகையில் அறிவித்து, அந்தப் பத்திரிகை அறிவிப்புக்குப் பின்னரும் அந்த சில விஷயங்கள்கூட எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

அப்படிப் பார்த்தால்கூட இன்று வரை இந்தப் *11* பேர்தான் வந்திருக்கிறார்கள். அதுவும் irrelevant-ஆக எப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் சொல்லியிருக்கிறார். ஆகவே, இந்த விஷயத்தில் மாநில அரசு, இதுவரையிலும் நடந்தவற்றில், இதுவரையில்லாத ஒரு முன்னுதாரணமாகத் திகழ்ந்திருக்கிறது என்பதைத் தெரிவித்து, நான் தொழிற்சங்க இயக்கத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-50*

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,..........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர்களும் சொல்லிவிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சரும் சொல்லிவிட்டார். போதும், உட்காருங்கள். பொது நிறுவனங்கள் குழுவின் சார்பில் அறிக்கைகள் அளித்தல். திரு. சி.டி. தண்டபாணி, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர். *(குறுக்கீடு)*

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்படித்தான் ஒரு நிமிடம் என்று சொல்லிவிட்டு அதிகமான நேரத்தை எடுத்துக் கொள்கிறீர்கள்.

**திரு. ஐ. கணேசன்:** நீங்கள் சொன்னதற்கு எல்லாம் கட்டுப்பட்டு உட்கார்ந்திருக்கிறேன். ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மணி *11-50* ஆகியிருக்கிறது. இன்னும் ஒரு மானியம் விவாதிக்கப்பட வேண்டும். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், அனைவருக்குமே தாராளமாக நேரத்தை

ஒதுக்கியிருக்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினருடைய பிரச்சினையில், அவர் எடுத்துச் சொன்ன பிரச்சினையில் ஆதாரம் இருக்குமானால் நிச்சயமாக அரசு பரிசீலிக்கும். அடுத்த நிகழ்ச்சிக்குச் செல்லும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

## 6. அறிக்கைகள் அளித்தல்

### பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் திரு. சி.டி. தண்டபாணி.

**திரு. சி.டி. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, *1997-98* ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் *46* முதல் *50* வரையிலான *5* அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு வன (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு வன (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு வன (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

[1998 மே 19

## 8. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 43 - எழுதுபொருள் - அச்சுத் துறை**
**(ஆ) கோரிக்கை எண் 44 - காட்டுவளத் துறை**
**(இ) கோரிக்கை எண் 58 - காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு**

### (அ) கோரிக்கை எண் 43 - எழுதுபொருள் - அச்சுத் துறை

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *1998-99* ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். கோரிக்கை எண் *43* - எழுதுபொருள் - அச்சுத் துறை. மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"எழுதுபொருள் - அச்சுத் துறை பற்றிய *43* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. *59,27,13,000*-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் *2644*, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"மாவட்டம்தோறும் அரசின் அரசிதழ்களை அச்சிட அரசு அச்சகங்கள் நிறுவ வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் - அச்சுத் துறை பற்றிய 43ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*59,27,13,000*-ல் ரூ.*100* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *202*, திரு. கே. சுப்பராயன்.



1998 மே 19]

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் - அச்சுத் துறை பற்றிய *43* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *59,27,13,000*-ல் ரூ.*100*- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2707*, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *3046*, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் - அச்சுத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *59,27,13,000*-ல் ரூ. *100* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2534*, திரு. ஜி. நிஜாமுதீன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *1072*, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *3310*, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் - அச்சுத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒது க்கப்பெறுகின்ற ரூ. *59,27,13,000*-ல் ரூ. *100* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *621*, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

'To discuss the need to establish a Government Press at Pallipattu' I move—

"That the allocation of Rs. 59,27,13,000/- under Demand No.43 - Stationery and Printing, be reduced by Rs.100/-."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1708, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் - அச்சுத் துறை பற்றிய 43ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 59,27,13,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2485, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள்-அச்சுத்துறை பற்றிய 43ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 59,27,13,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**(ஆ) கோரிக்கை எண் 44 - காட்டுவளத் துறை**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கோரிக்கை எண். 44 - காட்டுவளத் துறை, மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,



"காட்டுவளத் துறை பற்றிய 44ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.87,72,14,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2643, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சந்தன மரக் கடத்தலைத் தடுக்க, ஜவ்வாது மலையில் Chief Conservator of Forests ஆஃபீஸ் நிறுவ வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளத் துறை பற்றிய 44ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 87,72,14,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 201, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளத் துறை பற்றிய 44ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 87,72,14,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2724, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3160, திரு. ஐ. கணேசன்.

முற்பகல் 11-55

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"காட்டுவளத் துறை பற்றிய 44ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 87,72,14,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2533, திரு. ஜி. நிஜாமுதீன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1076, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3311, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"தமிழக வனத் துறைக்குச் சொந்தமான வனப் பகுதிகளில் நீண்ட நாட்களாகக் குடியிருப்பவர்களுக்கு மனைப் பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 87,72,14,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1709, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை, லக்கோனில் அமைந்துள்ள அலையாத்தி காடுகள் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளத் துறை பற்றிய 44ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 87,72,14,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1845, திரு. பி. வெங்கடசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3947, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,



"சந்தன மரக் கடத்தலைத் தடுத்து நிறுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளத் துறை பற்றிய 44ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 87,72,14,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 276, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"ஆண்டிமடம் தொகுதியில் பெரும் அளவில் மரங்கள் வளர்க்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளத் துறை பற்றிய 44ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 87,72,14,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**(இ) கோரிக்கை எண் 58 - காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கோரிக்கை எண் 58 - காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு. மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 101,48,74,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 180, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 101,48,74,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3827, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2435, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 101,48,74,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3547, திரு. ஜி. நிஜாமுதீன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1724, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 101,48,74,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2128, திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 101,48,74,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் அவர்கள், தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எழுதுபொருள்-அச்சுத் துறை, காட்டுவளத் துறை மற்றும் காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள், தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கான விளக்கத்தை அளிக்கிறேன் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் திரு. சி. ஞானசேகரன். நேரத்தின் அருமையைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காட்டுவளம் குறித்த மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்ற ஒரு நல்வாய்ப்பை நல்கிய தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தில் இருக்கக்கூடிய வனத்தினுடைய பரப்பு 22,699 சதுர கிலோமீட்டர் என்ற கணக்கைக் கொள்கை விளக்கக் குறிப்பிலே கொடுத்திருக்கிறீர்கள். தமிழகத்தினுடைய மொத்த நிலப் பரப்பிலே இது 17.45 விழுக்காடுதான். தமிழகத்தினுடைய நிலப் பரப்பில் மூன்றில் ஒரு பங்கை நாம் என்று வனமாக மாற்றுகின்றோமோ, அன்றுதான் தமிழகம் வளமுள்ள ஒரு நாடாகத் திகழ முடியும் என்பதை நாம் கருத்தில் கொண்டாக வேண்டும்.

---

@ 323 முதல் 359 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I மற்றும் II ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

நீங்கள் ஏற்கெனவே கொடுத்திருக்கக்கூடிய கொள்கை விளக்கக் குறிப்பிலேகூட ஆடு, மாடுகள் மேய்ச்சலின் காரணமாக 7,000 சதுர கிலோமீட்டர் பரப்பு வனங்கள் இப்போது தரம் குன்றிப் போயிருப்பதாகக் கூறியிருக்கிறீர்கள். இதிலே சந்தன மரக் கடத்தல் வீரப்பனுடைய ஆளுகைக்குட்பட்ட காடுகளும் இருக்கின்றன. இப்போது நம்முடைய மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்தான் இந்தத் துறைக்குத் தலைமை ஏற்றுக் கொண்டிருப்பவர் என்று நாம் எல்லாம் நினைத்துக்கொண்டு வீறுநடை போட்டுக் கொண்டிருக்கின்றோம். ஆனால், சந்தனக் கடத்தல் வீரப்பன் இன்னும் ஒரு சவாலாக இந்த அரசுக்கு இருந்து கொண்டிருக்கின்றான் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கடந்த கால ஆட்சியிலே அந்த வீரப்பனைப் பிடிக்க முடியவில்லை. இந்த ஆட்சி, பொறுப்புக்கு வந்து இரண்டு ஆண்டுக்காலம் முடிந்த பின்னாலும் கூட, இன்னும் அந்த வீரப்பனை ஏன் இந்த அரசு பிடிக்கவில்லை? அவன் சரண்டர் ஆவதாகக்கூடச் சொல்லி பலமுறை கேசட்டுகள் வந்து கொண்டிருக்கின்றன. இந்தக் கேசட்டுகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே, சில 'பத்திரிகை நிருபர்கள் மூலமாக அவன் கொடுத்து அனுப்பியிருக்கிறான். அந்தச் சந்தனக் கடத்தல் வீரப்பன் சரண்டர் ஆகப்போகிறான் என்று சொல்லி, ஏதோ ஒரு சினிமா படம் வெளிவருவதைப் போல தீபாவளி அன்றோ பொங்கல் அன்றோ, எப்படி நாம் திரைப்படத்திற்காக எதிர்பார்த்துக் கொண்டிருப்போமோ— அதுபோல அவன், என்று சரண்டர் அடைவான் என ஏங்கித் தவிக்கக்கூடிய நிலைக்கு இந்த நாடு தள்ளப்பட வேண்டுமா? இது நமக்குப் பெருத்த அவமானம் இல்லையா என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்டி, உடனடியாக, போர்க்கால அடிப்படையிலே, உங்களால் முடியவில்லை என்று சொன்னால், இராணுவத்தினுடைய உதவியைக் கொண்டாவது நீங்கள் வீரப்பனைப் பிடித்தாக வேண்டும் என்று நான் இந்த அவையிலே என்னுடைய கோரிக்கையை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கர்நாடக சட்டமன்றத்திலேகூட, 'தமிழகத்தில் இருக்கக்கூடிய ஓர் அரசியல் கட்சி இந்த சந்தனக் கடத்தல் வீரப்பனுக்கு இன்று ஆதரவாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது' என்று கர்நாடகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.



நண்பகல் 12-00

சந்தனக் கடத்தல் வீரப்பன் மனிதாபிமானம் உள்ளவனாக இருக்கலாம். மனிதாபிமானம் என்பது எல்லா மனிதர்களுக்கும் இருக்கக்கூடிய ஒன்றுதான். ஆனால், எப்பொழுது காவல் துறை அதிகாரிகளைக் கொன்றானோ, எப்பொழுது சந்தனக் கடத்தல் போன்றவற்றையெல்லாம் தடுக்கும் பணியிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கும் வனத் துறை அதிகாரிகளைக் கொன்றானோ, அப்பொழுதே அவன் மிருகமாகிவிட்டான் என்றுதான் பொருள். அப்படிப்பட்ட மிருகத்தனம் கொண்டிருக்கின்றவனை, காட்டையே அழித்துக் கொண்டிருப்பவனை, தனியாக ஓர் இயக்கத்தையே நடத்திக் கொண்டிருக்கும் சமூக விரோதியை இன்னும் நீங்கள் கைது செய்யாமல் இருப்பது விந்தையாக இருக்கிறது. பத்திரிகைத் துறையில் இருக்கக்கூடிய நிருபர்கள் வேண்டுமானால் அடிக்கடி போய், பேட்டி காணலாம். ஆனால், இந்த அரசாங்கம் கோடி, கோடியாகப் பணத்தைச் செலவிட்டு, அதற்கென காவல்துறையை வைத்திருக்கிறது. அதேபோல, வனத் துறையை வைத்திருக்கிறது. எத்தனையோ அதிகாரிகளை வைத்திருக்கிறோம். இவ்வளவு பேர் இருந்தும், இவ்வளவு பெரிய அட்மினிஸ்ட்ரேஷன் இருந்தும், இன்னும் அந்த வீரப்பனைப் பிடிக்காதது என்பது இந்த அரசுக்கு இருக்கக்கூடிய மாபெரும் சவால். அந்தச் சவாலை நீங்கள் எதிர்கொண்டு, என்று அந்த வீரப்பனைக் கைது செய்கிறீர்களோ, அன்றுதான் நம்முடைய மானம் காக்கப்படும் என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, திருப்பத்தூர் சந்தனக் கிடங்கு எரிந்து போன வரலாற்றையும் நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். அரசாங்கம் கொடுக்கக்கூடிய கணக்கு, 66 கோடி ரூபாய் மதிப்புள்ள மரங்கள்தான் எரிந்து போனது என்பது. ஆனால் அங்கிருக்கக்கூடிய அந்தப் பகுதி மக்கள் மற்றும் அதிகாரிகள், மற்றவர்களெல்லாம் சொல்வதுபோல கிட்டத்தட்ட 300 கோடி ரூபாய்க்கு அந்த இடத்திலே சந்தன மரங்கள் எரிந்து நாசமாகிவிட்டன என்பதுதான் உண்மை. இதில் நம்முடைய வனத் துறையினுடைய நிர்வாகம்கூடக் கெட்டுப் போய் இருக்கிறது என்றுதான் சொல்லியாக வேண்டும். வனத் துறையினுடைய நிர்வாகம் சரியாக இருக்குமேயானால், இவ்வளவு கட்டைகளை நாம் பாதுகாப்பாகக் கிடங்கில் வைத்திருக்கின்றபோது, அதற்கு இன்ஷ்யூர் செய்திருக்க வேண்டும். சாதாரணமாக ஒரு விவசாயப் பயிர் செய்தால்கூட, அந்தப் பயிரை இன்ஷ்யூர் செய், மாடு வைத்திருந்தால் அந்த மாட்டை இன்ஷ்யூர் செய் என்றெல்லாம் சொல்லிக்

கொண்டிருக்கிறோம். அப்படியிருக்க, நாம் இவ்வளவு மதிப்புமிக்க சந்தனக் கட்டைகளைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டாமா? அதற்கு நாம் இன்ஷ்யூர் செய்திருக்க வேண்டாமா? திருப்பத்தூரில் உள்ள வனத் துறை அதிகாரிகள் இன்ஷ்யூர் செய்ய வேண்டுமென்று செயற்குறிப்பு அனுப்பியும்கூட, இங்கே வனத் துறையினுடைய தலைவர், மற்றவர்களெல்லாம் மெத்தனமாக இருந்துவிட்ட காரணத்தால், இன்ஷ்யூர் செய்யாமல் விடப்பட்டது. இன்ஷ்யூர் செய்யப்பட்டிருக்குமேயானால், 300 கோடி ரூபாய் அரசுக்கு வருவாய் வந்திருக்கும். நீங்கள் 66 கோடி ரூபாய்தான் நாசமாகிவிட்டது என்று சொல்கிறீர்கள். இருந்தாலும்கூட,, அதற்கு நீதிமன்றம் இப்பொழுது சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டிருக்கிறது. 'நீதிக்குத் தலைவணங்கு' என்று நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். நீதிக்குத் தலைவணங்குகின்ற அரசாக இருக்கக்கூடிய இந்தக் காலகட்டத்திலே, ஏற்கெனவே சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டிருக்கின்ற நீங்கள், அவர்களிடம் இதையும் நியாயமாக ஒப்படைத்திருக்க வேண்டும். அதை விடுத்து, சி.பி.ஐ.க்குக் கொடுக்காமல், அப்பீலுக்குப் போகிறேன் என்று சொல்லக்கூடிய நிலை ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. நாம் ஏன் பயப்பட வேண்டும்? மடியில் கனம் இருந்தால்தானே நாம் வழியில் பயப்பட வேண்டும்? அங்கே எல்லாமே நன்றாக நடந்திருக்குமேயானால், 'உடனடியாக அதை எடுத்துக் கொள்ளுங்கள், என்று சி.பி.ஐ.-யிடம் கொடுத்துவிட்டுப் போயிருக்கலாம். அதை விடுத்து, நாங்கள் அப்பீலுக்குப் போகிறோம் என்று இரண்டு மாதம் கழித்துச் சொல்வது, அதில் ஏதோ தவறு இருக்கிறது, அந்தத் தவறை மறைப்பதற்காக சி.பி.ஐ. வேண்டாமென்று அரசு ஏதோ முட்டுக்கட்டை போடுவதுபோலத் தெரிகிறது.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது தனி நபர் விசாரணைக் கமிஷன் மூலம் அந்தச் சம்பவம் பற்றிய விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே, அதிகமாக அதன் உள்ளே செல்வது நல்லதல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனி நபர் விசாரணை பற்றி எனக்கும் தெரியும். அதற்கும் மேலாக, சென்னை உயர் நீதிமன்றம் ஆணையிட்டிருக்கிறது. ஆணையிட்ட பிறகு, சி.பி.ஐ. விசாரணைக்கு வந்த பின்னாலே, அதற்கான கால அவகாசமெல்லாம் முடிந்து, இப்பொழுது



எக்ஸ்டென்ஷனில் போய்க் கொண்டிருக்கிறது. நான் கேட்பதெல்லாம், நம்முடைய மடியில் கனமில்லை என்று சொன்னால் நேராக சி.பி.ஐ.-யிடம் 'இந்தா, சி.பி.ஐ. வாருங்கள், ஃபைலை எடுத்துச் செல்லுங்கள், நீங்கள் எங்கேயாவது போய் விசாரணை செய்யுங்கள், நாங்கள் எந்தத் தவறும் செய்யவில்லை' என்று மார்தட்டி' சொல்லியிருக்க வேண்டாமா என்பதுதான் என்னுடைய கேள்வி. ஆகவே, இப்போது இருக்கக்கூடிய சந்தனக் கட்டைகளுக்காவது இன்ஷ்யூர் செய்தார்களா என்பது தெரியவில்லை. இப்பொழுது ஆயிரம் டன்களை விற்பதற்காக வைத்திருப்பதாகச் சொன்னார்கள். ஆனால், இப்பொழுது இருப்பதோ 21 டன். அதிலே வந்திருப்பதோ ரூ.85 இலட்சம். மீதி எவ்வளவோ ஆயிரக்கணக்கான டன் கட்டைகள் திருப்பத்தூர் கிடங்கில் இருந்து கொண்டிருக்கின்றன. அதையாவது இன்ஷ்யூர் செய்திருக்கிறார்களா? இன்ஷ்யூர் செய்யவில்லையென்றால் உடனடியாக அதை இன்ஷ்யூர் செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு சந்தனக் கட்டைகளை ஏலம் விட்டபோது, 790 டன் சந்தனக் கட்டைகள் சுமார் 43 கோடி ரூபாய்க்கு ஏலம் போயிற்று. அதற்குப்பிறகு வெளிநாடுகளில் இருக்கக்கூடிய சந்தைகளில் விலை இறங்கிவிட்ட காரணத்தால், அவர்கள் அந்தக் கட்டைகளை இன்னும் எடுத்துச் செல்லவில்லை. பாதிதான் போய் இருக்கிறது. இப்பொழுது விலை மிகவும் இறங்கிவிட்டதாகச் சொல்கிறார்கள். மத்திய அரசு சந்தனக் கட்டைகளை, முழுவதுமாக வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்ய அனுமதி கொடுக்க மறுக்கின்ற காரணத்தினால், அந்தக் கட்டைகளெல்லாம் தேங்கியிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 43 கோடி ரூபாய்க்கு ஏலம் போனதாகச் சொன்னார்கள். அந்த ரூபாயெல்லாம் நம்முடைய வருவாய்க் கணக்கில் வந்துவிட்டதா? பணம் கட்டிவிட்டார்களா? டெலிவரி எடுத்துவிட்டார்களா? அப்படி டெலிவரி எடுக்காமல், கிடங்கில் வைத்திருந்தால், அதை அவர்கள் எடுத்துக்கொண்டு போவதற்கு உத்தரவிடுங்கள். இல்லையென்றால், அதுவும் வெந்துபோய், அதற்கும் நட்ட ஈடு கொடுக்க வேண்டிவரும். இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சமூக நலக் காடுகள். இன்று நம்முடைய நாட்டில்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவரைச் சுதந்திரமாகப் பேசவிடுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்திலே, பல கிராமங்களில், ஏரிகளிலே மரங்களை வளர்த்தோம். கருவேல மரங்களை வளர்த்தோம். அது பத்தாண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. ஏற்கெனவே கடந்த கால ஆட்சியிலே—ஜே.ஜே. டாக்ஸ் என்று அதில் வைத்து — அதிகமாக ஏலம் போனது என்று சொல்லி, அதை நீங்கள் ஏலம் விடாமல் வைத்திருக்கிறீர்கள். நீங்கள் இப்பொழுது ஒரு டன்னிற்கு ரூ. 1,300 என்றெல்லாம் விலை நிர்ணயம் செய்த காரணத்தினாலே, சந்தனக் கட்டைகள் விலையெல்லாம் இறங்கி விட்டது என்று சொல்கிறீர்கள். இப்பொழுது கருவேலம் கட்டைகளெல்லாம் டன்னிற்கு 800 ரூபாய்தான் போய்க்கொண்டிருக்கிறது; உள்ளூர் மார்க்கெட்டிலே என்ன விலை இருக்கிறது என்பதை நிர்ணயம் செய்து, நீங்கள் உடனடியாக ஏலம் விட்டால்தான், கிராமத்திலே இருக்கக்கூடிய கருவேல மரங்களைக் காப்பாற்ற முடியும். அங்கெல்லாம் பத்தாண்டுகளாகத் தண்ணீர் தேங்கி மரங்கள் கீழே விழுந்து, உலர்ந்து அவரவர்கள் எடுத்துக்கொண்டு போகின்ற நிலை இருக்கிறது. அவற்றால் கிராமப் பஞ்சாயத்துகளுக்கும் வருவாய் இல்லை. காட்டுவளத் துறைக்கும் வருவாய் இல்லை. உண்மையிலேயே நீங்கள் அதையெல்லாம் ஏலம் விட்டால் அந்த மரங்களின் மூலமாக அரசுக்கு சுமார் 100 கோடி ரூபாய் வருவாய் வரும். ஆனால், அந்த வருவாயை நீங்கள் இரண்டு ஆண்டுகளாகத் தள்ளிப் போட்டுக் கொண்டிருக்கிறீர்கள். அதிகமான விலையை நிர்ணயித்துவிட்டு, நீங்கள் வரும், வரும் என்று காத்திருப்பதைவிட, உள்ளூர் மார்க்கெட்டிலே அந்த விறகிற்கு என்ன விலை என்பதை ஊர்ஜிதம் செய்து, அதற்கேற்ப நீங்கள் உடனடியாக ஏலம் விட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அடுத்து, ஜப்பான் நாட்டு உதவியின் மூலமாக நீங்கள் நிறைய மரங்களை வளர்த்துக் கொண்டிருக்கிறீர்கள். நம்முடைய பிரதமர் அவர்கள் இப்பொழுது அணு குண்டை வெடித்து, அதனால் 60,000 கோடி ரூபாய் செலவு ஏற்பட்டது என்றெல்லாம் சொல்கிறார்கள். அதனுடைய பின்விளைவுகள் என்ன என்று பார்த்தால், அது நம்முடைய பொருளாதாரத்திலே வந்து நிற்கிறது. ஜப்பான் நாட்டிலிருந்து ஏற்கெனவே நீங்கள் 500 கோடி ரூபாயை உதவியாகப்



பெற்று மரங்களை வளர்க்கிறீர்கள். அதிலும் சென்ற ஆண்டு 50 கோடி ரூபாய் பெற்றிருக்கிறீர்கள். வருகின்ற ஆண்டிலே 98 கோடி ரூபாயை நீங்கள் செலவு செய்ய இருக்கிறீர்கள். இப்பொழுது அணுகுண்டை வெடித்ததன் காரணமாக, அத்தனை பொருளாதார உதவிகளையும் நிறுத்திவிட்டார்கள். எனவே, இந்தக் கடனுதவி நமக்குக் கிடைக்குமா? எதிர்காலத்திலே இந்தக் கடன் கிடைக்கப் போகிறதா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது அனுமதிக்கப்பட்ட 'ஆன்-கோயிங்' ஸ்கீம். நடைமுறையிலே இருக்கின்ற கடனுதவி. ஆகவே, அவர்கள் இதை நிறுத்தமாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்து ஏ.சி.எஃப்.-களுக்கு இன்னும் பதவி உயர்வு கொடுக்கப்படாமல் இருக்கிறது. நம்முடைய காட்டுவள நிர்வாகம் எந்த அளவிற்கு இருக்கிறது என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. 35 ஏ.சி.எஃப். காலியிடங்கள் இருக்கின்றன. காடுகள் மூலமாக உங்களுக்கு கோடி கோடியாக ரூபாய் வருகின்றபோது, ஏ.சி.எஃப். பதவி உயர்வை ஏன் நிறுத்தி வைத்திருக்கிறீர்கள்? அந்தக் காலியிடங்களை நீங்கள் ஏன் நிரப்பாமல் வைத்திருக்கிறீர்கள்? மூன்று ரேஞ்சிற்கு ஓர் ஏ.சி.எஃப். என்று போட்டால்கூட அந்தக் காட்டைக் காப்பாற்றலாம். காட்டை கோட்டை விடுவதற்கென்றே ஒரு துறை இருக்க வேண்டுமா? அந்தத் துறையிலே 'ஃபைல் மூவ்' ஆகாதா? எதற்காகத்தான், பி.சி.சி.எஃப். சி.சி.எஃப். என்றெல்லாம் வைத்துக்கொண்டு, இப்படிக் காலம் கடத்திக் கொண்டிருக்கிறீர்கள் என்று நான் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக, ஜவ்வாது மலையிலே காவலூர் மந்தாரைக்குட்டைப் பக்கத்திலே 13 யானைகள் வந்துகொண்டிருக்கின்றன. எங்களுக்கும் அங்கே நிலம் இருக்கிறது. யானைகள் அந்தப் பகுதியில் மாந்தோப்பிலே இருக்கின்ற மாங்காய்களையெல்லாம் பறித்துச் சாப்பிட்டு விடுகின்றன. மரங்களைச் சாய்த்து விடுகின்றன. 13 யானைகள் இப்போது வந்திருக்கின்றன. ஒவ்வோர் வருடமும் அந்த இடத்திலே யானைகள் வந்து நாசம் செய்கின்ற காரணத்தினால், அப்பகுதி பெரிதும் பாதிப்பிற்குள்ளாகியிருக்கிறது. அந்த இடத்தில் 2000 ஏக்கர் நிலம் இருக்கிறது. இப்பொழுது வாழைத் தோப்பு, கரும்புப் பயிர், மாந்தோப்பு ஆகியவை நாசம் ஆகிவிட்டன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்த யானைகளுக்கு அது ஞானசேகரன் இடம் என்று தெரியாது போலிருக்கிறது. *(சிரிப்பு)*

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவைக்குத் தவறான தகவல் கொடுக்கக்கூடாது. 7 யானைகள் மட்டும்தான் அந்தப் பகுதியிலே தொந்தரவு செய்வதாக அதிகாரிகள் எனக்குத் தகவல் கொடுத்திருக்கிறார்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேரடியாக என்னுடைய உறவினர்களும், அங்கிருக்கின்ற மலைஜாதி மக்களும் சென்ற இரு தினங்களுக்கு முன்பு என்னை வந்து பார்த்தார்கள். அங்கே 13 யானைகள் இருப்பதாகச் சொல்கிறார்கள். இரண்டு குட்டிகளும் 11 யானைகளும் இருக்கின்றன. காட்டு அதிகாரிகள் அந்த யானைகளைக்கூட சரியாக எண்ண மாட்டார்கள் என்பது போலத் தெரிகிறது. ஆகவே, தயவுசெய்து உண்மையான விவரங்களை நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு அளித்து, உடனடியாக ஒரு சரணாலயத்தை, அந்த இடத்திலே அமைப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும்.

அடுத்து, மந்தாரைக்குட்டைக்கு 15 இலட்சம் ரூபாயை ஒதுக்கி சாலை அமைத்துத்தர வேண்டும். நான், மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்களிடம்கூட, அந்தத் தொகுதியினுடைய எம்.எல்.ஏ. என்ற காரணத்திற்காக, 'நீங்கள் உங்கள் பணத்தைப் போட்டாவது ரோடு போட்டுக் கொடுங்கள்' என்று கேட்டேன். அவர்களும் யார் யாரையோ கேட்டார்கள். எவரும் கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். நான் அமைச்சரிடம் போன ஆண்டுகூடச் சொன்னேன். யானை வரும் என்று சொன்னால், தப்பித்துச் செல்வதற்கு அங்கே ரோடு இல்லை. தப்பித் தவறி ஜீப்பை எடுத்துக்கொண்டு போனால், ஒரு நாளைக்கு 16 பஞ்சர் ஆகின்றது. ஆகவே, இதையெல்லாம் தவிர்ப்பதற்காக 15 இலட்சம் ரூபாயை ஒதுக்கி, நீங்கள் உடனடியாக ரோடு போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-10*

என்னுடைய பகுதிக்கு ஒரு சந்தன ஆலையை, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது தந்திருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய கிராமத்தில் இருக்கும்



குமரிக்கோட்டம் என்கிற அந்தப் பகுதியிலே, அந்த ஆலை அமைய வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் கடுமையாகப் போராடியதன் விளைவாக இப்போது அந்தச் சந்தன ஆலை வரவிருக்கிறது. உடனடியாக, இந்த ஆண்டே அந்தச் சந்தன ஆலையை அந்த இடத்திலே உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)* இன்னும் ஒரே ஒரு பாயின்ட்தான். முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 13 நிமிடங்களாகப் பேசுகிறீர்கள். சீக்கிரம் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** சமூகக் காடுகளையெல்லாம் காப்பாற்றிய சமூக வனக் காவலர்கள், 1984-ல் அரசால், ஊரக வளர்ச்சித் துறைக்கு மாற்றப்பட்டனர். பிறகு, 1990-ல் அவர்கள் எல்லோரும் நடுரோட்டிற்கு வந்துவிட்டார்கள். இப்போது ஊரக வளர்ச்சித் துறையும் அவர்களை ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்கிறது; வனத் துறையும் அவர்களைக் கைவிட்டு விட்டது. 940 பேர் இன்றையதினம் உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். 840 ரூபாய்தான், அவர்களுக்கு மாதச் சம்பளம். ஆகவே, அவர்களை மீண்டும் வனத் துறையின் மூலம் பணியமர்த்தி, காடுகளைக் காப்பாற்ற வேண்டும். ரிலையன்ஸ் போன்ற பெரிய, பெரிய கம்பெனிகள்... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கோ. மோகனதாசன்.

***திரு. கோ. மோகனதாசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வனத் துறை மானியத்திலே பேச எனக்கு வாய்ப்பளித்ததற்காக நான் நன்றி தெரிவித்துக்கொண்டு, நம்முடைய மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் நல்லமுறையிலே சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருந்தாலும், அந்தத் துறையிலே சில தவறுகள் நடக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள், 1970 ஆம் ஆண்டு எடுத்த நடவடிக்கைக்குப் பிறகுதான், காவிரிப் படுகைகளில் எல்லாம், ஏரிகள், வாய்க்கால்களின் கரைகளில் எல்லாம் தேக்கு மரங்கள் நடப்பட்டு, சிறப்பான முறையிலே, அவை ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் அளவுக்கு வருமானம் வருகிற அளவுக்கு வளர்ச்சியடைந்து இருக்கின்றன. அப்படி நடப்பட்ட மரங்களில் 1993ஆம் ஆண்டு

அடித்த புயலில், ஏராளமானவை கீழே விழுந்து அவை, அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றதேயொழிய, சரியான முறையிலே அவை ஏலம் விடப்படாமல் வீணாகிப் போய்க் கொண்டிருக்கின்றன.

அதேபோல, என்னுடைய தொகுதியிலே, அய்யாவையனாறு என்ற ஆற்றின் இரண்டு கரைகளிலும் ஏராளமான மரங்கள் பட்டுப்போய் இருக்கின்றன. அந்த மரங்களையெல்லாம் உடனடியாக அறுவடை செய்து, ஏலம் விடவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

*(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. ரா. சேதுநாதன் தலைமை)*

ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில், சீர்காழி வனச் சரகத்தில், வனத் துறை அதிகாரிகள் பல்வேறு தவறுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஓரிடத்தில் ஒருவர் மரத்தை அறுத்து வீடு கட்டிக் கொண்டிருக்கிறார் என்று சீர்காழியிலே இருந்த உயர் அதிகாரியிடத்திலே சொன்னபோது, அவர் சரியான நடவடிக்கை எடுக்காமல், அவரிடத்திலே, ஏதோ பேரம் பேசி, அதை அப்படியே விட்டுவிட்டு வந்துவிட்டார். இப்படி ஏராளமான தவறுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய வனத் துறை அமைச்சர் தீவிரமாக, சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருந்தாலும், அந்தப் பகுதியிலே இருக்கிற வனத் துறையின் அதிகாரிகள், சரியான முறையிலே நடந்து கொள்ளாமல், அங்கே ஏலம் நடக்கிறபோதெல்லாம், ஒரு 'ரிங்' அமைத்துக் கொண்டு, அதைத் தவறான முறையில் பயன்படுத்திக் கொண்டு, அரசுக்கு வருகின்ற வருவாயை எல்லாம் இழப்பு ஏற்படுத்துகின்ற அளவுக்கு, தவறுகள் இழைத்துக் கொண்டிருக்கிறார்கள். 302 'லாட்'டுகள் தகுதி வாய்ந்த மரங்கள் என்று அரசு வனத் துறை அறிவித்திருந்தும்கூட, ஒரே நாளில் அந்த 302 'லாட்'டுகளையும் ஏலம் விட்டதால் ஏறத்தாழ நம்முடைய அரசுக்கு 30 இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட தொகை இழப்பு, சீர்காழியிலே மட்டும் ஏற்பட்டிருக்கிறது. ஒரு சதுர கன மீட்டர், ரூபாய் ஆறாயிரத்து சொச்சம் அளவுக்கு ஏலம் போயிருக்கிறது. ஆனால், அரசாங்கத்தினுடைய வனத் துறை அதிகாரிகளின் கணக்கைப் பார்த்தால், ரூபாய் 13 ஆயிரத்திற்கு மேல் சென்றிருக்க வேண்டும். ஒரே நாளில், 302 'லாட்'களை ஏலம் விடமுடியுமா என்பதை தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திலே கொண்டு, உடனடியாக இதுபற்றி நடவடிக்கை எடுக்குமாறு நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



அதற்கான ஆவணங்களை, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே, நானும், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் நேரடியாகக் கொடுத்திருக்கிறோம். அதன்மீது சரியான நடவடிக்கை எடுத்து, தவறு செய்த அதிகாரிகள்மீது கடுமையான நடவடிக்கை எடுத்தால்தான் வனத் துறைக்கு ஒரு சிறப்பான நிலையை ஏற்படுத்த முடியும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கண்டிப்போடு பணியாற்றினாலும், அங்கே நடைபெறுகின்ற தவறுகள் எல்லாம், வனத் துறை அதிகாரிகளால்தான் செய்யப்படுகின்றனவேயொழிய பொது மக்கள் அந்த அளவிற்குச் செய்யவில்லை என்பதால் இதுகுறித்தும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-15*

பழைய காலத்திலே, சாலையின் ஓரங்களிலே புளியமரங்களை வைத்ததன் காரணமாக இன்றைக்கு ஏராளமான மக்களுக்கு நன்மை பயக்கின்ற அளவுக்கு அந்த மரங்களிலிருந்து புளி நமக்கு மகசூலாகக் கிடைக்கின்றது. அதுபோல, ஆற்றங்கரை ஓரங்களிலும், குளக்கரை மற்றும் ஏரிக்கரைகளிலும் புளிய மரங்களை ஏராளமாக நட வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, மதிப்பீட்டுக் குழுவின் சார்பாக நாங்கள் கூடலூர் பகுதிக்குச் சென்றிருந்தோம். அங்கே மசினகுடி என்ற ஊரில் ஆதிவாசிகள், கூட்டுறவுச் சங்கத்தை வைத்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மலையடிவாரங்களில் தேன், புளி, கடுக்காய் போன்றவைகளை எடுப்பதற்கு அங்கு சென்றால், அதிகாரிகள் கடுமையாக நடந்துகொள்வதாக அந்த ஆதிவாசிகள் கூறினார்கள். புளி, கடுக்காய், தேன் போன்றவற்றை எடுக்க அங்கு செல்லும்போது அதிகாரிகள் கடுமையாக நடந்துகொள்ளாமல் இருக்க ஏற்பாடு செய்துதர வேண்டும் என்று அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். அதற்கான ஏற்பாடுகளை வனத் துறை அமைச்சர் அவர்கள் செய்து தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்): திரு. ச. இராஜ ரெட்டி.**

**Thiru. S. RAJA REDDY:** Honourable Chairman, Sir, I would like to thank you for giving me the opportunity to speak on Forests'

Demand. First of all, I would like to thank the Forest Minister for auctioning tamarind in Anjetti area.

During the previous regime, syndicates were formed and forest wealth was distributed among forest contractors. During the last auction, the forest officials have auctioned tamarind properly. Previously, it used to be given to labour societies. But, since the tamarind auction was not given to the labour society, recently, nearly Rs.44 lakhs have gone to the exchequer. I thank the Forest Minister for auctioning properly now.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு அந்த புளிய மரங்களின் ஏலங்களை எல்லாம் வனப் பகுதியில் வசிக்கக்கூடிய மலைவாழ் மக்கள் நடத்துகின்ற சொசைட்டிகளுக்கு மட்டும்தான் கொடுக்க வேண்டும் என்று அரசாங்கம் ஆணையிட்டுவிட்டபடியால் வேறு சங்கங்களுக்கு கொடுக்க இயலவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

**THIRU S. RAJA REDDY:** In Bettamugalalam and Dhoddamanchi Panchayats, S.Ts. are living in large numbers in the forest areas. I request the Honourable Minister to start Labour Tribal Society in Bettamugalalam and Dhoddamanchi panchayats during the next year. I request the Honourable Minister to give a portion of the forest wealth to the tribals.

In the Policy Note, it has been stated that the forest development should be 'people-oriented', and villagers should be involved in that project. During the joint Forest Development Project, nearly 200 villagers have been selected for development work. In many villages, people are not properly involved in the plantation of seedlings. So, I request the Honourable Minister to see that people are properly involved in the Forest Development Project. (Interruption) In Nachipalli in Thalli Constituency, people are not properly involved.

In the border villages, wild elephant destroy crops. Payment of damages claimed by the farmers are delayed. The amount sanctioned is inadequate. So, I request the Honourable Minister to compensate the farmers adequately and in time.



In Anjetti area in Thalli constituency, the forest department officials are not allowing buses to pass through the forest areas after 5 p.m. People living in the forest areas are not able to go to their villages, because, of denial of permission for buses by the forest officials after 5 p.m. So. I, request the Hon. Minister to see that permission is given to ply the buses through the forest area even after 5.00 p.m.

*பிற்பகல் 12-20*

In Thalli constituency, many villages are scattered within the forest area and nearly 50,000 people are suffering without proper roads. The roads to be laid pass through the forest areas, and the officials take nearly 2 years to give permission for laying the roads. I therefore request the Honourable Minister to see that permission is given for laying the roads in the forest area within a short period, so that people there can make use of bus transport. I have asked for permission for plying buses in four routes and I request the Honourable Minister to give permission to these forest routes.

In the department of social forestry, a lot of irregularities are being committed and the statistics shown by the Social Forestry Department is grossly misleading. The number of seedlings planted and the number of seedlings given in the statistics is entirely different. So, I request the Honourable Minister to look into it. In Hosur Social forestry Division, a lot of irregularities are committed and the social Forestry Watchers have given many petitions to the D.F.O. (Social Forestry) and no action has been taken aganist the officials concerned. Even the wages of the Watchers have not been paid properly and if they go to the C.C.F. they do not get proper reply. I therefore request the Honourable Minister to see that these irregularities are put an end to and the guilty officials punished.

**HON. CHAIRMAN (THIRU R. SETHUNATHAN):** Please complete your speech within a minute.

**THIRU S. RAJA REDDY:** Nearly 940 Social Forestry Workers were recruited during the previous D.M.K. regime and they were transferred to the Local Administration Department. But they are now in the streets. Neither the Local Administration Department nor the

Forest Department has given them any job, I request the Honourable Minister to see that those 940 workers who were recruited during your previous regime are taken back by the Forest Department and given permanent employment. I thank you very much, Sir, for the opportunity given to me.

(Hon. Deputy Speaker occupied the Chair)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் மு. தேவராஜன்.

**டாக்டர் மு. தேவராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காட்டு வளத் துறை மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதன் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழகத்தின் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் மனித வளம் மேம்பட வேண்டும், வன வளம் பெருக வேண்டும் என்ற நல்ல நோக்கத்தில் தன்னுடைய ஒவ்வொரு பிறந்த நாளின்போதும் மரங்களை நட்டு, தமிழ்நாட்டிலே வன வளத்தையும், மனித வளத்தையும் பெருக்க வேண்டுமென்று, தன்னுடைய உடன்பிறப்புக்களை அழைத்து உத்தரவிட்டார்கள்.

இந்த மரம் நடும் திட்டத்திற்கு இந்த ஆண்டு 'டாக்டர் கலைஞர் அவர்களின் மரம் நடு விழா' என்று பெயரிட்டு தமிழக அரசு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழக முதல்வரின் 75-வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு, தமிழக முதல்வர் பவள விழா காண்பதை முன்னிட்டு ஒவ்வொரு தொகுதியிலும் 75,000 மரங்கள் நட வேண்டுமென்றும், இந்தத் திட்டத்திற்கு 'டாக்டர் கலைஞர் அவர்களின் மரம் நடு விழா' என்று பெயரிட்டு அறிவிக்க வேண்டுமென்றும் இந்த மாமன்றத்திலே நான் வேண்டுகோள் வைக்கிறேன்.

அடுத்து, உலகப் படைப்பில் மனித இனம் போற்றுதலுக்குரியது. மூத்த உடன்பிறப்பான மரம், செடி, கொடி போன்றவை, ஊர்வன, நடப்பன, நகர்வன, பறப்பன போன்ற அனைத்து இனங்களும் அடிப்படையானவையாகும். அந்த அரிய, பெரிய மரங்கள் எல்லாம் அழிந்து கொண்டு வருகின்றன.



பிற்பகல் 12-25

வனங்களின் ஆதாரமான செடி, கொடி, மரங்கள் முதலியவைகளின் இருப்பு, வளர்ச்சி, எண்ணிக்கை மற்றும் அவைகளின் வலிவும் வளமும் எங்கெல்லாம் குறைகின்றதோ அங்கெல்லாம் கவனிக்க வேண்டும். இல்லாவிட்டால் நீர்வளம், மண்வளம், காய்வளம் அனைத்துமே சீர்குலைந்து அழிந்துவிடும். இத்தகைய ஆராய்ச்சியை ஆப்பிரிக்கா கண்டத்திலே சகாரா பாலைவனத்திலே செய்திருக்கிறார்கள். இதுபோல, சிலி நாட்டில், செழிப்பான மாபெரும் நிலப்பரப்பான மெசபடோமியா, பாலைவனமானதையும் ஆராய்ச்சியாளர்கள் எடுத்துக் கூறி இருக்கிறார்கள். மரங்கள் வெட்டி சாய்க்கப்பட்டு படிப்படியாக நிலங்கள் எல்லாம் பாலை நிலமாக மாறுகிறது. மழைப் பொழிவு குறைகிறது. புல், பூண்டு, செடி, கொடிகள் வாடி, வதங்கி, பசுமை குன்றி, பாலைவனமாகிறது. எனவே, இந்த வன வளம் எல்லாம் பாதுகாக்கப்பட வேண்டும். மரங்கள் அதிகமாக வளர்க்கப்பட வேண்டும் என்ற கருத்துக்கு என்னுடைய சிறிய ஆலோசனையை கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுடைய ஆலோசனையைச் சீக்கிரமாகக் கூறுங்கள்.

**டாக்டர் மு. தேவராஜன்:** அரசு நிலங்களில் மரம் வளர்க்கும் காரியத்திற்காக பொது மக்களுக்கும் மற்றும் அரசு சார்பற்ற வாலண்டரி நிறுவனங்களுக்கும் நீண்ட கால குத்தகைக்கு நிலத்தை விட வேண்டும். இப்போது தமிழ்நாட்டின் மொத்தப் பரப்பளவில் ஏறத்தாழ 17 சதவிகிதம் வனமாக இருக்கிறது. தமிழ்நாட்டினைப் பொறுத்தவரையில், அதனுடைய பரப்பளவிற்கு 33 சதவிகிதம் வனங்களாக அமைய வேண்டும். தற்போது ஜாயின்ட் ஃபாரஸ்டரி மேனேஜ்மென்ட் திட்டத்தின்கீழ், அரசு காடுகள் உள்ள கிராமங்களில் மரங்களையும் வளர்த்து, வன வளர்ச்சியைப் பெருக்க வேண்டும் (மணியடிக்கப்பெற்றது) என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய தொகுதிக்கு வருகிறேன். என்னுடைய பெரம்பலூர் நகரத்தில் கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அறிவித்து, எங்களுடைய நீண்ட நாளைய கோரிக்கையை நிறைவேற்றிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களுடைய தொகுதியின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது) வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வனத் துறை மானியத்திலே பேசுகின்ற வாய்ப்பு தந்தமைக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஆனால், எனக்குப் பேச சற்று நேரம் அதிகமாகத் தர வேண்டுமென்ற என்னுடைய பணிவான வேண்டுகோளை முன் வைக்கின்றேன். காடுகளில் மரங்களைப் பாதுகாத்தல், வனப் பகுதிகளில் அடர்த்தியான காடுகளை உருவாக்குதல், குறிப்பாக, தேக்கு, ஈட்டி போன்ற மிக விலை உயர்ந்த மரங்களை வளர்த்தல், அவற்றைப் பாதுகாத்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் சந்தனக் காடுகளைக் காப்பதில் முக்கிய கவனத்தை செலுத்த வேண்டும், ஊழல் நடைபெறாமல் இருக்க உரிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் புதிய சந்தனத் தோப்புகளை உருவாக்க அதிக கவனம் செலுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். மரமண்டிகளிலும், சோதனைச் சாவடிகளிலும் சேதமடைந்து கிடக்கின்ற மரங்களை உடனடியாக ஏலத்திற்கு விட்டு, அதனுடைய வருவாயை அரசுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மரங்களை நடும்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் சீதோஷ்ண நிலை, மண்வளம் போன்றவற்றை கணக்கில் கொண்டு மரங்கள் நடப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காடுகளை பாதுகாப்பதற்கு, தேவைக்கு ஏற்ப வனப் பாதுகாவலர்களை நியமனம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மலையில் வாழுகின்ற பெருவாரியான பழங்குடியின மக்களுக்கு முன்னுரிமை கொடுத்து, வனங்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமென்றுகேட்டுக்கொள்கின்றேன்.

குமரி மாவட்டத்தில், பேச்சிப்பாறையிலிருந்து ஆறுகாணி வரை, ஏறத்தாழ பல மைல்களுக்கு சுற்றி வர வனப் பாதுகாவலர்களுக்கு போதுமான ஊர்தி இல்லாத நிலை தற்போது இருக்கின்றது. எனவே, அவர்களுக்கும் ஜீப் வழங்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆறுகாணியிலே இருக்கின்ற சோதனைச் சாவடியை வலுப்படுத்திட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். தேவைக்கு ஏற்ப ஆர்ம்ட் போலீசை அங்கே பயன்படுத்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காடுகளில் விழுந்து கிடக்கின்ற விலை உயர்ந்த மரங்களை கையகப்படுத்தி ஏலம் விட வேண்டுமென்று



கேட்டுக்கொள்கிறேன். பழங்குடியின மக்களைப் பாதுகாக்கவும், அவர்களுடைய பயிர்கள் அழிக்கப்படாமல் இருப்பதற்கும், அவர்களுக்கு பள்ளிக் கட்டடங்களைக் கட்டித் தரவும், மின் இணைப்பு மற்றும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கவும், அரசு நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-30*

குமரி மாவட்டத்தில் இருக்கிற அரசு ரப்பர் கழகம் தற்போது நட்டத்திலே செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. விலைவீழ்ச்சி, நிர்வாகக் கோளாறு காரணமாக, நான்கு மாதங்களாகத் தேங்கியுள்ள ரப்பரை விற்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்பது இப்போது அங்கே இருக்கக்கூடிய நிலை. ஏனென்றால், அந்த கால கட்டத்தில் இயக்குநர் விடுப்பில் சென்று விட்டார். அந்த இயக்குநரைப் பொறுத்தவரை நல்லவிதமான அபிப்பிராயம் இல்லை. ரூ. 5 இலட்சம் பயணப் படிக்கும், ரூ.2 இலட்சம் மருத்துவச் செலவுக்கும் எடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அதுபோன்று, கீரிப்பாறை, பரலியார், மணலோடை கோட்டங்களில் 5 வருடங்களுக்கு முன்பு பழைய மரங்களை வெட்டி புதிய கன்றுகள் வைத்திருக்க வேண்டும். இந்தப் பகுதிகளை ஏழாகப் பிரித்து, பழைய மரங்களை வெட்டி, புதிய கன்றுகளை வைத்தால்தான் இதைப் பாதுகாக்க முடியும். ரப்பர் கழகத்தில் 2500 தொழிலாளர்களும், 125 பணியாளர்களும் இருக்கின்றார்கள். இப்போது உள்ள விலைவாசி ஏற்றத்திற்கு ஏற்ப, 100 ரூபாய் சம்பளம் வேண்டுமென்று தொழிலாளர்கள் கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று, ஓர் எக்டேருக்கு அதாவது ஓர் எக்டேர் ரப்பர் தோட்டத்திற்கு—நாம் இன்றைக்கு 6000 ரூபாய் வனத் துறைக்கு குத்தகையாக கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறது. அது அதிகப்படியானதாகும். ஆனால், கர்நாடக வன வளர்ச்சிக் கழகம் ஓர் எக்டேர் ரப்பர் தோட்டத்திற்கு 125 ரூபாய்தான் வனத் துறைக்குக் குத்தகையாகக் கட்டி வருகிறது. எனவே, நாமும் இந்த முறையைக் கையாளுகின்றபோதுதான், இந்தக் கழகத்திற்கு லாபம் வரும், நல்ல வருவாய் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோன்று, இந்தக் கழகத்தில் Chairman-க்கு வழங்கப்படும் சம்பளம் என்பது ஒரு பெரிய தொகையாகும் அதற்கடுத்து வருகின்றவருக்கு வழங்கப்படும் சம்பளம் இன்னொரு பெரிய

தொகையாகும். 1-10-1984-ல் இருந்து இந்தக் கழகத்தில் 125 கழகப் பணியாளர்களும், 250 வனத் துறைப் பணியாளர்களும் உள்ளனர். ஆனால் 125 கழகப் பணியாளர்களையும், 25 வனத் துறைப் பணியாளர்களையும், மொத்தம் 150 பணியாளர்களையும் வைத்தே அரசு ரப்பர் கழகத்தை இலாபகரமாக நடத்த முடியும். மீதமுள்ள 225 பணியாளர்களை அயற் பணியில் உள்ளவர்களை, அவர்களுடைய தாய்த் துறைக்கு, அதாவது வனத் துறைக்குத் திருப்பி அனுப்புவதன் மூலமாகத்தான் இந்தக் கழகத்தை உருப்படியாக நடத்த முடியும் என்பது என்னுடைய கருத்து.

அடுத்து, முதன்மை வனத் துறைத் தலைவர் பணியிடம் வேறு எங்கும் காலி இல்லை என்று கூறி, அந்த அதிகாரியை அங்கேயே வைத்துள்ளார்கள். உடனடியாக அவரை வனத் துறைக்கு திருப்பி அனுப்பி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு ரப்பர் கழகத்திற்கு, தலைவர், நிர்வாக இயக்குநர், பொது மேலாளர் ஆகிய அலுவலர்கள் இருப்பதைத் தவிர்த்து, ஒரு செயல் இயக்குநரை வைத்தே இந்த ரப்பர் கழகத்தை நடத்த முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1984-ல் இருந்ததைப்போல் இதை அரசே எடுத்து, அரசு ரப்பர் தோட்டமாக மாற்ற வேண்டும். 1995-96-ல் வருவாய் ரூ.11.32 கோடியாக இருந்தது. 1996-97-ல் வருவாய் ரூ.14.34 கோடியாக இருந்தது. இப்போது, 1998-ல் அது ரூ.11.81 கோடியாகக் குறைந்திருக்கிறது.

பணி மூப்பு அடிப்படையில் மேற்பார்வையாளர்களை நியமனம் செய்ய வேண்டும். 1998 ஏப்ரல் 30 ஆம் தேதியே நியமனம் செய்யப்படுவார்கள் என்று கூறினார்கள். இப்போது காலம் கடந்து விட்டது. சுமார் 21 பேர்கள் பணிக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து, அரசுக்குச் சொந்தமான கிராம்புத் தோட்டம் பற்றி கொள்கை குறிப்பில் சொல்லப்படவில்லை. அது ஏன் என்று தெரியவில்லை. அதில், பாலமோர் என்ற டிவிஷன் மூடப்பட்டுள்ளது. அதை தனியார்கள் ஆக்கிரமிக்கும் ஆபத்தான நிலை உள்ளது. அது அடர்ந்த வனப்பகுதி, அதிகாரிகள்கூட அங்கே போகமாட்டார்கள். அந்தக் கிராம்புத் தோட்டத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச சம்பளம்கூட கொடுக்கப்படாத நிலை உள்ளது. அந்தப் பணியாளர்களுக்கு அங்கு வேலை இல்லை என்றால், ரப்பர் தோட்டத்தில் களப் பணியாளர்களாக அவர்களை நியமனம் செய்தால்



இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும். எனவே அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று, கீரிப்பாறை ரப்பர் ஃபேக்டரியில் ரப்பர் அரவை இயந்திரம் பழுதாகி உள்ளது. மெஷின் சரியாக ஓடவில்லை. இதனால் என்ன ஆகிவிட்டது என்றால் 1-H-ல் போக வேண்டிய பொருட்கள் நான்காம் தரத்திற்குப் போனதால், விலை குறையக்கூடிய நிலை உருவாகியுள்ளது. எனவே, உடனடியாக, ஃபேக்டரியிலே இருக்கக்கூடிய, அந்தப் பழுதடைந்த இயந்திரத்தை, சரி செய்ய வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று, கீரிப்பாறை, காளிகேசம், பரளியாறு கோட்டங்களில், உள்ள தொழிலாளர்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுவதில்லை.

தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினை சம்பந்தமாக கடந்த வருடம் ஒப்பந்தம் போட வேண்டியிருந்தது. ஆனால், ஒப்பந்தம் போடாமல் காலம் நீடித்துப் போய்க்கொண்டிருக்கிறது. எனவே, அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கீரிப்பாறை வனப் பகுதியிலே மருத்துவ வசதி இல்லாத சூழ்நிலை இருக்கின்றது. பாம்பு கடித்தால், அதற்குச் சிகிச்சை செய்வதற்குக்கூட மருந்துகள் இல்லை. மருத்துவமனையில் மழைக் காலங்களில் மழைத் தண்ணீர் உள்ளே வருகின்ற சூழ்நிலை உள்ளது. எனவே, இவற்றிற்கெல்லாம் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். மேலும், எல்லா மருந்துகளும் கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தொழிலாளர்களின் ஊதியத்தை உயர்த்த வேண்டும். ஏற்கெனவே சொன்னது மாதிரி 1-1-1998 முதல் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். பேச்சுவார்த்தை மூலம் துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பிற்பகல் 12-35

மணலோடை கோட்டத்தில் இருக்கின்ற குடியிருப்புகளுக்கு ஓயரிங் செய்து 16 வருடங்கள் ஆகின்றன. இதில் விசேஷமான தன்மை, அந்தத் தொழிலாளர்கள் குடியிருக்கின்ற குடியிருப்புகளுக்கு ஓயரிங் செய்து 16 வருடங்களுக்குப் பிறகும், இன்னும் மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை. மின் இணைப்பு கொடுக்க நடவடிக்கை எடுக்க

வேண்டும். பாதுகாக்கப்பட்ட தண்ணீர் பிளான்டேஷன் பெல்டில் கிடையாது. அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படாததால், சிற்றாறில் கடந்த மாதம் தொழிலாளர்கள் ரத்த பேதிக்கும் இதர நோய்களுக்கும் ஆளாகி நூற்றுக்கும் அதிகமானவர்கள் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை அங்கே உருவாகியிருக்கிறது. ஆகவே தொழிலாளர் நலன் கருதி, இந்தப் பிரச்சினை குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வனத் துறை பற்றி கூறுகிறபோது, ஆறுகாணி பகுதியில் இருக்கின்ற செக்போஸ்டை ஒரு வலுவான செக்போஸ்டாக அமைக்க வேண்டும். அங்கே செக்போஸ்ட்டுக்குரிய சாவடியை அமைக்க வேண்டும். அதைப்போல களியல் மையத்திற்கு ஜீப் வசதி செய்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

பொதுவாக ஆறுகாணியிலிருந்து பேச்சிப்பாறை வரையிலும், அதுபோல பெருஞ்சாணி வருகின்ற வரையிலும் உள்ள சுற்றுப் பகுதிகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான ஊழியர்கள் இல்லாத ஒரு பஞ்ச நிலை இருக்கிறது. எனவே அங்கே போதுமான ஊழியர்களை நியமனம் செய்து வைத்துக்கொள்ள வேண்டும். அதுபோல, வட்டப்பாறைப் பகுதி பழங்குடியினர் வாழ்கின்ற ஒரு பகுதி. அங்கே பள்ளி கூடம் இருந்தது, இப்போது அது இடிந்து போய்விட்டது. சாலைகள் இருந்தன, ஆனால் பராமரிக்கப்படவில்லை. பழங்குடியினர் வாழ்கின்ற இந்தப் பகுதியில் பள்ளிக்கூடம் கட்டவும், சாலைகளை, மாங்களுக்குக் கேடு வராமல், வனத் துறை மாங்களுக்கு ஆபத்து வராமல் அமைக்கவும், உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வனத்துறைக்குச் சொந்தமான இந்தப் பகுதியில்தான் அதிகப்படியான பழங்குடியின மக்கள் வாழ்கின்றனர். அவர்கள் விவசாயம் செய்து வருகிறார்கள். விவசாயப் பொருள்களைச் சந்தைக் கடைகளுக்குக் கொண்டு வருவதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கிறது. மத்திய அரசினுடைய சில இடர்ப்பாடுகள் இருந்தாலுங்கூட, மாநில அரசுக்கு இதில் ஒரு பெரிய பங்கு, பொறுப்பு உண்டு என்ற முறையிலே, அந்த அடிப்படையிலே, பழங்குடியினரைப் பாதுகாக்கின்ற வகையில் காடுகளுக்கு அழிவு இல்லாத ரீதியில் ஏற்பாடுகளை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மானியக் கோரிக்கை மீதான என் உரையை இத்துடன் முடிக்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. சண்முகம்.

**திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வன வளம் மற்றும் எழுதுபொருள்-அச்சுத்துறை மானியக் கோரிக்கைளின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தத் தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிலும் குறிப்பாக, இன்றையதினம் நமது வனத் துறை அமைச்சர் அவர்களுக்கு மணவிழா நாளாகும். இன்று இந்த மானியக் கோரிக்கைமீது பேசுவதற்கு வாய்ப்பளித்து இருக்கிறார்கள் என்பதற்காக உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். இந்த சபையின் சார்பாக அவர் எல்லா வளமும் பெற்று வாழ வேண்டுமென வாழ்த்துவதில் பெருமையும், பெருமகிழ்ச்சியும் அடைகிறேன். 'என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில், ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்' என்பதற்கேற்ப, நமது நாட்டிலே நில வளம் இருக்கிறது, நீர் வளம் இருக்கிறது, வன வளம் இருக்கிறது, மன வளம் இருக்கிறது. இத்தனை வளம் இருக்கின்ற இந்த நாட்டிலே நல்ல திறமையான செயல்திறன் மிக்க கழகத் தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலே நல்ல அரசு அமைந்திருக்கிறது. இதைவிட ஒரு நல்ல சூழ்நிலை வேறு எங்கும் இருக்க முடியாது. அந்தவகையிலே நமது நாடு விவசாயத்தை சார்ந்து இருக்கிற நாடு.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்"

என்பது வள்ளுவர் வாக்கு. விவசாயம் தழைத்து ஓங்கச் செய்ய வேண்டுமென்று சொன்னால், நீராதாரம் பெருக்கப்பட வேண்டும். நீராதாரம் பெருக்கப்பட வேண்டுமானால் வன வளம்தான் இன்றியமையாதது என்பது என்னுடைய கருத்தாகும். அப்படிப்பட்ட வன வளத்தை பேணிப் பாதுகாப்பது நமது ஒவ்வொருவருடைய கடமையாகும். அந்தவகையிலே நமது அரசு பொறுப்பேற்றபிறகு வனத்தைக் காப்பதிலும் பெருமுயற்சி எடுத்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. குறிப்பாக, இந்தச் சூழ்நிலையில் வனம் பாதுகாக்கப்பட வேண்டும்; அங்கே இருக்கின்ற உயிரினங்கள் எல்லாம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற தலையாயப் பொறுப்பை உணர்ந்து இன்றையதினம் நமது அரசு செயல்பட்டு வருகிறது. அதற்காக நான் வனத் துறை அமைச்சர் அவர்களையும், தமிழக முதலமைச்சர் அவர்களையும் இந்த நேரத்திலே பாராட்டவும் வாழ்த்தவும், நன்றி கூறவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிட்டத்தட்ட மொத்த நிலப் பரப்பிலே 17.45 விழுக்காடு வனப் பரப்பாகும். இந்தப் பரப்பளவு இன்னும் அதிகப்படுத்தப்பட வேண்டும்.

விலைமதிக்க முடியாத சந்தனம் உள்ளிட்ட மற்ற மரங்களை சமூக விரோதிகள் கடத்துவதை நாம் தடுத்தாக வேண்டும். இன்றையதினம் வனத் துறை நல்லமுறையிலே செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இன்னும் சிறப்பான படைகளை அமைத்து, அவர்களுக்கு எல்லாம் நல்ல பயிற்சி அளித்து, நூற்றுக்கு நூறு நாம் அதிலே வெற்றி அடைய வேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்தாகும்.

*பிற்பகல் 12-40*

அதேபோன்று, மலைவாழ் மக்களைப்பற்றி இந்த நேரத்திலே நான் கூறாமல் இருக்க முடியாது. பழங்குடியினர் பெரும்பாலும் மலைப் பகுதியிலே வாழ்கின்றார்கள். அவர்களுடைய வாழ்க்கைத்தரம் இந்த வனத் துறையோடு ஒன்றிப் போய் இருக்கிறது. ஆகவே, அவர்களுடைய நலன்களைப் பாதுகாப்பதற்கும் இந்த அரசு பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. அதற்காக நான் இந்த அரசை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வனத்தில் வாழ்கின்ற பழங்குடி மக்களுக்குத் தேவைப்படுகின்ற மரக் கன்றுகள் மற்றும் சில்வர் ஓக் போன்ற மரக் கன்றுகளை எல்லாம் இன்னும் அதிக அளவிலே கொடுக்க வேண்டும். அவர்களுக்கு வெளி உலகமே தெரியாது. அவர்கள் நிலங்களை, கிட்டத்தட்ட நூறு ஆண்டுக் காலமாக பயிரிட்டு வருகின்றார்கள். அந்த நிலங்களை, கருணை உள்ளத்தோடு அவர்களுக்கு முடிந்தால் பட்டா செய்து கொடுக்க வேண்டும் என்ற என்னுடைய கருத்தை தெரிவித்துக்கொள்ள நான் ஆசைப்படுகின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

கடந்த காலத்தில் உருவாக்கப்பட்ட வன நுட்பவியல் தற்போது மாறிவரும் சூழ்நிலைக்கு ஏற்றதாக இல்லை. ஆகவே, தற்கால சூழ்நிலைக்கு ஏற்ற வன நுட்பவியல் மேம்படுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1998-99 ஆம் ஆண்டுக்கான திட்ட முனைவொழிவுத் தொகை 13593.95 இலட்சமாகவும், வன அபிவிருத்திக்காக 221.03 இலட்சமாகவும், ஆக மொத்தம் 13814.98 இலட்சம் ஒதுக்கி இருப்பது மிகவும் பாராட்டுக்கு உரியது. இது, இந்த அரசுக்கு வனப் பாதுகாப்பில் இருக்கின்ற அக்கறையைக் காட்டுகின்றது என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.



அதேபோல, ஜப்பான் நாட்டு நிறுவனத்தோடு நிறைவேற்றப்படுகின்ற வன வள திட்டமானது இன்னும் நல்லமுறையிலே செயல்படுத்தப்பட வேண்டும். அதைக் கண்காணிப்பதற்கு ஒன்றிய அளவிலோ அல்லது தொகுதி அளவிலோ சட்டமன்ற உறுப்பினரை தலைவராகக் கொண்டு ஒரு குழு அமைக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

இன்றையதினம் ஏற்றுமதிக்கு தகுதிவாய்ந்த சந்தன மரங்கள் இருக்கின்றன. இப்போது அவற்றின் ஏற்றுமதிக்கு தடை இருக்கிறது. அந்தத் தடையை மத்திய அரசோடு கலந்து பேசி, அந்நியச் செலாவணி முக்கியத்துவத்தை எல்லாம் உணர்ந்து, இன்னும் அதிகமான ஏற்றுமதியை பெருக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டைவிட, வருகின்ற ஆண்டிலே இரட்டிப்பு மடங்காக, கிட்டத்தட்ட 8176.9 இலட்சம் வருமானம் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று இன்றையதினம், சொல்லி இருக்கிறார்கள். அதை அறிந்து உண்மையிலே மகிழ்ச்சி அடைகின்றோம். வன வளத்தைப் பாதுகாத்து, வருவாயையும் பெருக்குகின்ற இந்த நல்ல துறையை நாம் பாராட்டியே ஆகவேண்டும். அதேசமயத்தில், அங்கே பணியாற்றுகின்ற வனக் காவலர்கள் தங்களுக்குச் சில சலுகைகள் வேண்டுமென்று கேட்டு இருக்கிறார்கள். 20, 30 ஆண்டுகளாக பணியாற்றி வருகின்றவர்களுக்கு எல்லாம் இன்னும் பணி நிரந்தரம் செய்யப்படவில்லை. அவர்களுடைய சம்பளம் குறைந்த சம்பளமாக அதாவது ரூ.802 ஆக இருக்கிறது. அதை 2 ஆயிரம் ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று கேட்டு இருக்கிறார்கள். அவற்றை எல்லாம் நாம் கருணை உள்ளத்தோடு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தற்போது பணியில் இருக்கும்போது இறந்தால், மற்ற ஊழியர்களின் குடும்பத்தினருக்கு வழங்குவதுபோல அவர்கள் குடும்பத்தினருக்கும் 1 இலட்சம் ரூபாய் நிதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எழுதுபொருள்-அச்சுத் துறையை எடுத்துக்கொண்டால் அதில் பல்வேறு கிளைகள் இருக்கின்றன. நல்லமுறையிலே அந்த அச்சகங்கள் செயல்பட்டாலும், அவற்றிற்குப் போதுமான நிதி ஒதுக்கப்படாத காரணத்தால், அவை இன்னும் முழுமையாக நவீனப்படுத்தப்படவில்லை. ஆகவே, தற்காலச் சூழ்நிலைக்கு ஏற்ப, போட்டி போட்டுக்கொண்டு வளருகின்ற சூழ்நிலையில், அந்த அச்சகங்களும் நவீனப்படுத்தப்படவேண்டும். அதன்மூலம் இன்னும் அதிகமான

வருமானம் அரசுக்கு வர வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாமக்கல் மாவட்டத்தில் அமைந்துள்ள கொல்லிமலைப் பகுதி சுற்றுலாப் பகுதியாக அறிவிக்கப்பட்டு இருக்கின்றது. அங்கே சுற்றுலாப் பயணிகளைக் கவருகின்ற வகையிலே ஒரு மினி மிருகக்காட்சிசாலை ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன். சென்ற ஆட்சிக்காலத்தில் முதுமலை சரணாலயத்திற்கு புரட்சித் தலைவி ஜெயலலிதா பெயரை எல்லாம் வைத்தார்கள்; தண்ணீர்த் தொட்டிக்கு அவர் பெயரை வைத்தார்கள்: யானைக் குட்டிக்கெல்லாம் அவர் பெயரை வைத்தார்கள். ஆனால், நமது அரசு அதையெல்லாம் நீக்கிவிட்டு, யாருடைய பெயரையும் வைக்காமல், தமிழக அரசினுடைய பெயரைச் சூட்டி பெருமை சேர்த்து இருக்கிறது.

அதேபோல், முன்னாள் அமைச்சர் ஒருவர் ஜெயலலிதா அவர்களுக்கு சிங்கக் குட்டி ஒன்றை பரிசாக அளித்ததாக அறிந்து இருக்கிறேன். அந்தச் சிங்கக் குட்டி இப்போது எங்கே இருக்கிறது? மிருகக்காட்சிசாலையிலிருந்து கொண்டுவரப்பட்ட சிங்கக் குட்டியினுடைய நிலை என்ன? சிங்கத்தின் கால்கள் பழுதுபட்டாலும் சீற்றம் குறையாது என்று சொல்வார்கள். அந்த வகையிலே அந்த சிங்கக் குட்டியானது போயஸ் தோட்டத்தில் இருக்கின்றதா? அல்லது பையனூர் மாளிகையில் இருக்கின்றதா என்பதெல்லாம் எனக்குத் தெரியவில்லை. ஆகவே, அரசு அது சம்பந்தமாகவும் எங்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். இந்த நல்ல மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்புத் தந்ததற்கு நன்றி கூறி அமைகிறேன், நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 12-45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காட்டுவளத் துறை பற்றிய மானியக் கோரிக்கையில் என்னைப் பேச அனுமதி அளித்ததற்கு முதலில் என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, முதலில் சில கோரிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.



வனத் தோட்டக் காவலர்களுக்கு தற்போது வழங்கப்படும் ரூ.800 ஊதியத்தை ரூ.2000 ஆக உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அரசு ஆணை எண் 332-ஐ நீக்கி, நீதிமன்ற உத்தரவுப்படி சீனியாரிட்டி அடிப்படையில் வனத் துறையில் பணியாற்றுகிறவர்களுக்குப் பதவி உயர்வுகள் அளிக்க வேண்டும். இந்தத் துறையில் பணியாற்றுபவர்கள் இறந்தால், அவர்களுடைய குடும்பத்திற்கு ரூ.1 இலட்சம் குடும்ப நிதியாக வழங்க ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வைகை அணையிலே வனத் துறையின் பயிற்சி மையத்தில் உள்ள இரண்டு யானைத் தந்தங்கள், கிட்டத்தட்ட 10 லட்சம் ரூபாய் மதிப்புள்ள தந்தங்கள் காணவில்லை என்று தெரியப்படுத்தியிருக்கிறார்கள். அப்படித் திருட்டுப் போயிருக்கிற யானைத் தந்தங்களை இந்த அரசு கண்டுபிடிக்க என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அமைச்சர் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, ஐப்பான் நாட்டு உதவியுடன் தமிழக வனப் பகுதிகளை மேம்படுத்துவதற்காக இந்த ஆண்டு 50 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகக் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லியிருக்கிறீர்கள். அந்த 50 கோடி ரூபாய் சரியான முறையில் செலவழிக்கப்படவில்லை. சில தவறுகள் நடந்திருக்கின்றன என்று கேள்விப்படுகிறோம். ஆகவே, இந்த ஆண்டு அந்த 50 கோடி ரூபாயை எந்த விதத்தில் இந்த அரசு செலவு செய்திருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு ஜப்பான் திட்டத்தின் மூலமாக 200 வனக் கிராமங்களை மேம்படுத்துவதற்காக ரூ.45 கோடி செலவிடப்பட்டிருக்கிறது. கூட்டு நிர்வாக அடிப்படையில் வனக் குழுத் தலைவர்கள் கிராம மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் தலைமையில் வனச் சரகர்கள் செயலாளர்களாகச் செயல்பட்டு, அந்தத் திட்டத்தை நிறைவேற்றி வருகிறார்கள். அந்தக் கிராம மக்களுக்குத் தெரியாமல் ஒரு ரூபாய்கூட பணம் செலவாக முடியாது. ஆகவே, அந்த இடங்களில் நேரில் சென்று பார்த்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு உண்மை விளங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அடுத்ததாக**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதுகுறித்து ஒரு விசாரணை நடைபெற்று வருகிறது. விசாரணை நடைபெறுகிற நோத்தில், அதுபற்றி இந்த அவையில் பேசக்கூடாது என்று எத்தனையோ தீர்ப்புகள் இருக்கின்றன. எனவே, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் இதற்கு ஒரு தீர்ப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பொதுவாகவே ஒரு பிரச்சினை விசாரணையில் இருக்கும்போது அதைப் பற்றி இங்கே விவாதிப்பது மரபல்ல. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்தச் சொற்றொடர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** விசாரணையில் இருப்பதைப் பற்றிப் பேசக்கூடாது என்ற மரபு பற்றி எனக்குத் தெரியும். இருந்தாலும் இந்த விஷயத்தைப் பொறுத்தவரையில், உயர்நீதிமன்றம் தீர்ப்புக் கூறியிருக்கிறது. ஆகவே, நான் சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில்தான் பேசுகிறேன். என்னைப் பேச அனுமதித்தால், சென்னை உயர்நீதிமன்றம், அந்தச்சந்தனக் கடத்தல் வழக்கில் என்ன கூறியிருக்கிறது என்பதைத் தெரிவிக்க முடியும். அதைத்தான் சொல்ல விரும்புகிறேனே தவிர...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** துணைத் தலைவர் அவர்களே, தவறாகப் புரிந்துகொண்டு, சபையிலே தவறான தகவலைக் கொடுக்கக்கூடாது. சென்னை உயர்நீதிமன்றம், உரிய முறையில் விசாரணை செய்ய வேண்டுமென்றுதான் கூறியிருக்கிறதே தவிர, எந்தவிதமான தனிப்பட்ட முறையிலும் குறிப்பிட்ட குற்றச்சாட்டை, அவர் கூறுகின்ற சட்டமன்ற உறுப்பினர் மீது சொல்லவில்லை. எனவே, சொல்லாத ஒன்றைச் சொல்லியதாக, நீதிமன்றத்தையே சாட்சிக்கு அழைத்துப் பேசுவது முறையல்ல. நான் சுந்தரம் அவர்களுடைய பேச்சை முறைப்படுத்துவதற்காகச் சொல்கிறேன். அதை அவர்கள் முறைப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



பிற்பகல் 12-50

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பெரியவர் லத்தீப் அவர்கள் சட்டம் படித்தவர்கள். என்னைவிட அனுபவம் வாய்ந்தவர். நான் கையிலே அந்த உயர்நீதிமன்றத்தினுடைய தீர்ப்பின் நகலை வைத்திருக்கிறேன். அதிலே என்ன கூறியிருக்கிறது என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதற்குப் பிறகு, வேண்டுமானால் நான் இதைப் பேசலாமா பேசக்கூடாதா என்பதற்கு நீங்கள் தீர்ப்பளியுங்கள். அந்தத் தீர்ப்பைப் பொறுத்தவரையில்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தீர்ப்பை மட்டும் படியுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தத் தீர்ப்பைப் பொறுத்தவரையில், அதிலே இரண்டு கடிதங்கள். கடந்த 13-10-1996 அன்று திருப்பத்தூர் வனச் சரக அதிகாரி அவர்கள் ஒரு கடிதத்தை அனுப்பியிருக்கிறார்கள். அதிலே என்னென்ன நடந்தது என்று ஒரு சம்பவத்தை அவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்தத் தீர்ப்பிலே இருக்கிறதைப் படியுங்கள் என்று சொன்னால், அதை விட்டுவிட்டு, வேறு எதையோ சொல்கிறீர்களே?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தீர்ப்பு 110 பக்கங்கள் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** குறிப்பிட்ட பகுதியை மட்டும் படியுங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தத் தீர்ப்பிலே சட்டமன்ற உறுப்பினர் மீதோ, இந்த ஆட்சி மீதோ என்ன குற்றச்சாட்டு சொல்லப்பட்டிருக்கிறது என்பதைப் படித்தால், இந்த அரசு பதில் சொல்வதற்கு வாய்ப்பாக இருக்கும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு கடிதங்களை அனுப்பியிருக்கிறார்கள். அந்த இரண்டு கடிதங்களும் அரசுக்கு வரவில்லை என்று தலைமைச் செயலாளர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதைக்கூட நீதிமன்றம் கண்டித்திருக்கிறது. அதிலே ஒரு குறிப்பிட்ட பகுதி அந்தத் திருப்பத்தூர்

சட்டமன்ற உறுப்பினரைப் பொறுத்தவரையில்: "Therefore I submit that Thirupathur M.L.A. Thiru G. Shanmugam has interfered twice in the past 15 days for transferring the Ranger, Thirupathur and asking release of sandalwood smuggler, accused. The above incidents were informed to the Conservator of Forest, Vellore Circle, Vellore." இப்படி 3 முறை அந்தச் சட்டமன்ற உறுப்பினர், யார் யார் சம்பந்தப்பட்டு இருக்கிறார்களோ அவர்களையெல்லாம் விடுதலை செய்ய வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். இதன்மீது நீங்கள் மேல்முறையீடு..

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விடுதலை செய்ய வேண்டும் என்று சொன்னதை, குற்றமாக நீதிபதி சொன்னதாகச் சொல்கிறார். கூடவாசல் இராஜேந்திரனை விடுதலை செய்ய வேண்டுமென்று நீங்கள் சொல்லவில்லையா? விடுதலை செய்ய வேண்டும் என்று சொல்வதிலே என்ன குற்றம்? நான் நீதிபதியைக் குற்றம் சொல்லவில்லை. நீதிபதியினுடைய தீர்ப்பு என்ன? அந்தத் தீர்ப்பிலே திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் குற்றவாளி என்று இருக்கிறதா? அல்லது எந்த் அமைச்சர் மீதாவது குற்றம் சாட்டப்பட்டிருக்கிறதா? கடிதம் வரவில்லை என்று தலைமைச் செயலாளர் அவர்கள் சொன்னது தவறு என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதிலேகூட, அந்தத் தீர்ப்பிற்கு அவர்கள் அப்பீல் செய்திருக்கிறார்கள். அது வேறு விஷயம். அரசின் மீது என்ன குறை சொல்லப்பட்டிருக்கிறது? அந்தக் கடிதத்தைப் பற்றி முதலில் 'இந்து' பத்திரிகையிலே செய்தி வந்தது. அதுபற்றி ஏற்கெனவே நான் சொல்லியிருக்கிறேன். உடனடியாக நான் 'இந்து' பத்திரிகை ஆசிரியரைத் தொலைபேசி மூலமாகத் தொடர்புகொள்ள முயன்றேன். ஒருநாள் முழுவதும் முயன்றேன். அவர் கிடைக்கவில்லை. பத்திரிகையாளர்கள் என்னிடத்திலே கேட்கும்போது, எனக்கு ஒன்றும் அப்படி ஒரு கடிதம் வரவில்லை என்று சொன்னேன். அதற்குப் பிறகு நடந்த சம்பவங்களெல்லாம் ஏற்கெனவே பலமுறை செய்தியாளர்களுக்குச் சொல்லப்பட்டு ஏடுகளிலே வெளிவந்திருக்கின்றன. தீர்ப்பிலே இந்த அரசைப் பற்றி என்ன குறை சொல்லப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்ல வேண்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** 'இந்து' பத்திரிகையிலே எழுதியதற்கு முதல்வர் அவர்கள் கூறியதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் தீர்ப்பை மட்டும் படியுங்கள்.



**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தீர்ப்பையும் படிக்கிறேன். 'இந்து' பத்திரிகையிலே கூறிவிட்டால் அது மட்டும் வேத வாக்கா? அந்த வேத வாக்கை ஏற்று நான் செயல்பட வேண்டிய அவசியம் இல்லை. அதைப்போல, இந்த 'இந்து' பத்திரிகையினுடைய குடும்பத்திலே நடந்த, அவர்களுடைய சண்டையை எல்லாம் நான் தீர்த்து வைத்தேன் என்று ஆதங்கப்பட்டார்கள். ஆனால் நேற்றைக்கு 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருக்கிறது. அந்த வனக் காப்பாளர் விஜயன் மர்மமான முறையிலே கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று நாங்களும், இல்லை, ஆக்சிடெண்டிலே இறந்திருக்கிறார் என்று நீங்களும் கூறுவதற்கு நேற்று 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையை முதல்வர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இதை, எதற்காகக் கூறுகிறேன் என்றால்...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையை ஆதாரமாகக் காட்டவில்லை. காவல் துறையிலேயிருந்து 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகைக்குக் கொடுக்கப்பட்ட பத்திரிகைச் செய்தி என்று படித்துக் காட்டினேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசைப் பற்றி என்ன எழுதியிருக்கிறது, அரசின் மீது என்ன குறை சொல்லப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி மட்டும் சுருக்கமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த 2 கடிதங்களும் எனக்கு வரவில்லை என்று தலைமைச் செயலாளர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதைத்தான் முதல்வர் அவர்களும் எனக்குத் தகவல் இல்லை என்று கூறியிருக்கிறார்கள். உயர்நீதிமன்றம் கண்டிருத்திருப்பதாகச் சுட்டிக்காட்டி...

பிற்பகல் 12-55

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** முதல்வரை நீதிமன்றம் கண்டித்து இருக்கிறதா என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பக்கம் 67-ல் அந்த இரண்டு கடிதங்களைப் பொறுத்தவரையில், "It is unfortunate to note that the Second Respondent (Forest Secretary) and the Third Respondent have lost sight of these complaints which have been forwarded by the Fourth Respondent. Even till the stage of filing the affidavit, the Second and

Third Respondents have not chosen to verify the particulars from their office, but rejected the ..."(Interruption)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் 110 பக்கங்களைப் படிப்பது பற்றி எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. முதலமைச்சர் கேட்டது, நேரடியாக இந்த அரசாங்கத்தைப் பற்றியோ, அமைச்சரைப் பற்றியோ, முதலமைச்சரைப் பற்றியோ எங்கேயாவது தீர்ப்பில் சுட்டிக்காட்டப்பட்டு இருக்கிறதா? அப்படியிருந்தால் அந்த இடத்தை படிக்க வேண்டுமே தவிர எந்தப் பக்கத்தைப் படித்தாலும் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. அப்படி ஏதாவது இந்தத் தீர்ப்பிலே சுட்டிக்காட்டப்பட்டு இருக்கிறதா?

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, டிபார்ட்மெண்ட் செகரட்டரியை காட்டினாலே முதலமைச்சரையும், சம்பந்தப்பட்ட மினிஸ்டரையும் காட்டுவதாகத்தான் அர்த்தம்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனியினுடைய இலக்கணம் எனக்குத் தெரியாது. மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள் பேச முயற்சிப்பது, இந்த ஆட்சியின்மீது குற்றம் சுமத்துவதற்காக. இந்த அரசாங்கத்தின் முதலமைச்சர்மீது குற்றம் சுமத்துகிறார்; ஏனென்றால் 'இந்து' பத்திரிகையை முதற்கொண்டும் இங்கே சுட்டிக்காட்டி இருக்கிறார். எனவே, அவர் தனிப்பட்ட முறையிலே குற்றம் சாட்டுவது அவருடைய உரிமை, அதை மறுப்பது எங்களுடைய கடமை. ஆனால், ஒரு நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை வைத்துக்கொண்டு, நீதிமன்றம் சொல்லிவிட்டது, நீதிமன்றம் சொல்லிவிட்டது என்று இந்த அவையினுடைய கவனத்தைத் திசை திருப்புவது முறை அல்ல.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் கொடுத்து இருக்கிற விளக்கம், அபாயகரமானது, ஏற்றுகொள்ள முடியாதது. அது மரபுகளுக்கும் மாறானது. கடந்த காலத்தில் இருந்த பல ஐ.ஏ.எஸ். ஆபீசர்கள்மீது குற்றம் சாட்டப்பட்டு இருக்கிறது. இன்றைக்குக்கூட ஒரு செய்தி பத்திரிகையிலே வந்திருக்கிறது, ஒருவர் Compulsory retirement-க்கு ஆளாக்கப்பட்டு இருக்கிறார் என்று. அந்த ஐ.ஏ.எஸ். ஆபீசர்கள் செய்தவைகளுக்கு எல்லாம், அந்த ஆட்சியில் இருந்தவர்கள்



பொறுப்பேற்றுக்கொள்ள முடியுமா? எனவே, இப்படிப் பேசுவது அவருக்கேகூட ஆபத்தானது என்ற முறையிலே, அதை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம், நீங்கள் விரைவாகப் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) அவர் பேசுகிறார். உங்கள் கட்சி உறுப்பினர்தானே பேசுகிறார். அவர் பதில் சொல்லிக் கொள்வார், நீங்கள் உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போன ஆட்சியில் நடந்ததாகச் சொல்லி, அரசியல் ரீதியாக சில முறைகேடுகள் என்று சொல்லி, சமபந்தப்பட்ட டிபார்ட்மெண்ட் செகரட்டரி, சம்பந்தப்பட்ட மினிஸ்டர் மேலே எல்லாம் நீங்கள் கேஸ் போட்டிருக்கிறீர்கள். அதனாலே...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அந்த விவகாரத்தில் அரசு அலுவலாளர்களும், அமைச்சர் அவர்களும் சேர்ந்து செய்ததாகத் தெரிகிறது. இது ஒரு அரசு அலுவலாளர் 'கடிதம் வரவில்லை' என்று சொன்னார் என்ற விஷயம் பற்றியது. அந்த விவகாரங்கள் அதிகாரிகளும், அமைச்சரும் சேர்ந்து செய்தவைகள். அது வேறு, இது வேறு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் பேசி முடிக்கட்டும், நேரம் ஆகிவிட்டது. (குறுக்கீடு) திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது விஞ்ஞான ரீதியாக செகரட்டரியை செய்யச் சொல்லிவிட்டு, அமைச்சர் தப்பிக்கப் பார்ப்பது, செகரட்டரியை தப்பு பண்ணச் சொல்லிவிட்டு அமைச்சரும், முதலமைச்சரும் தப்பிப்பதற்காக...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுந்தரம் அவர்கள் விரைவாகப் பேசி முடிக்க வேண்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, D.F.O மூலம் அனுப்பப்பட்ட கடிதங்கள் தலைமைச் செயலாளர் தன்னிடம் வரவில்லை என்று கூறியிருக்கிறாரா இல்லையா? அதைத்தான் அமைச்சர் எனக்கு விளக்க வேண்டும். அந்தக் கடிதம் வரவில்லை என்று அவர் கூறியதற்குப் பிறகு, உயர்நீதிமன்றத்திலே அவர்கள் அந்தக் கடிதம் வந்ததற்கான ஆதாரத்தைத் தெரிவித்ததற்குப்

பிறகு, அந்த உபாத்தியாளர் அவர்களுடைய கடிதங்களையெல்லாம் மேற்கோள் காட்டியதற்குப் பிறகுதான், உயர்நீதிமன்றமே, தலைமைச் செயலாளர் இப்படிக் கூறுவது தவறு என்று கூறியிருக்கிறார்கள். நான் குறிப்பிடுவது, வந்த கடிதத்தை தலைமைச் செயலாளர் முதலில் மறுத்து இருக்கிறார். அதற்குப் பிறகுதான், அதை ஒத்துக் கொண்டிருக்கிறார். இப்படிப்பட்ட தலைமைச் செயலாளரை வைத்துக்கொண்டு நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? அந்தத் தலைமைச் செயலாளருக்குத்தான் நீங்கள் இரண்டு முறை பதவி நீட்டிப்பு கொடுத்திருக்கிறீர்கள். ஆகவே, அந்தத் தலைமைச் செயலாளரை, இந்த அரசுக்கு தவறான தகவல் கொடுத்த தலைமைச் செயலாளரை, உடனடியாக நீங்கள் பதவி நீக்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தலைமைச் செயலாளர் மீது மாண்புமிகு உறுப்பினருக்கு இருக்கிற கோபம் எனக்கு நன்றாகத் தெரியும். ஏன் என்றால், இன்றைக்கு அந்த வழக்குகள் எல்லாம் நடைபெறுகிற நேரத்திலே, அவர்தான் தலைமைச் செயலாளராக இருக்கிறார் என்பதால், 'தலைமைச் செயலாளரைப் பதவி நீக்கம் செய்' என்று சொல்கிற அளவுக்கு சுந்தரம் இங்கே எனக்கு உத்தரவிடுகின்றார். ஏன் என்றால், நல்ல செயலாளர்கள், நல்ல அதிகாரிகள், நாணயமானவர்கள் இருப்பது அவர்களுக்கும் பிடிக்காது. அவர்களுடைய கட்சிக்கும் பிடிக்காது. அவர்களுடைய தலைவியாருக்கும் பிடிக்காது. தலைமைச் செயலாளர், அவருக்குக் கடிதம் வரவில்லை. ஆகவே, வரவில்லை; என்று சொன்னார். அவ்வளவுதான் மீண்டும், மீண்டும் பத்திரிகையிலே போட்டார்கள். உடனடியாக அதை அலட்சியப்படுத்தாமல் அதை மூடி மறைக்க விரும்பாமல், அந்த ஃபைலையே கொண்டு வரச் சொல்லி, அந்த வனை இலாகா அதிகாரியினுடைய ஃபைலையே கொண்டு வரச்சொல்லி, அந்த ஃபைலிலே அந்தக் கடிதம் இருப்பதை எடுத்துப் பார்த்து, உடனடியாக நடவடிக்கை எடுக்கச் சொன்ன அரசு இந்த அரசு. பழைய காலத்தில் நடைபெற்ற உங்களுடைய அரசு அவைகளை எல்லாம் மூடி மறைத்து, மக்களை ஏமாற்றிய அரசுதான் என்பதை ஞாபகத்திலே வைத்துக்கொள்ளுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** உங்களுக்கு இந்தச் சந்தனக் கடத்தலிலே சந்தேகம் இல்லை என்றால், உங்கள் அரசு மீது களங்கம் இல்லை என்றால், ஆரம்பத்திலே நீங்கள் சி.பி.ஐ. விசாரணையை நடத்த



வேண்டியதுதானே? ஏன் அதற்கு நீங்கள் மறுத்துவிட்டு, பிறகு சுப்பிரமணியம் சுவாமி அவர்கள் கோர்ட்டுக்குச் சென்றதற்குப் பிறகு நீங்கள் மேல் முறையீட்டுக்குச் சென்று இப்போது சி.பி.ஐ. விசாரணை வைத்திருக்கிறீர்கள்?

* **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** சும்மா சி.பி.ஐ., சி.பி.ஐ. என்கிறீர்களே, சி.பி.ஐ.-க்கள் என்ன வானத்திலிருந்து குதித்தவர்களா? உங்கள் அம்மையாருடைய பொன்மொழியைத்தான் சொல்கிறேன். அவர்கள் வானத்திலிருந்து குதித்தவர்களா? இப்போது பூமியைக் குடைந்து கொண்டு வரப் போகிறார்களா? இப்போது ஏன் சி.பி.ஐ. விசாரணை கேட்கிறீர்கள் என்று எனக்குத் தெரியாதா? எதற்காகக் கேட்கிறீர்கள் நீங்கள்? இங்கே இருக்கிற ஜட்ஜை மாற்ற வேண்டும் என்று பார்க்கிறீர்கள். மாற்றினால் ஊழலிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்பதற்காக ஜட்ஜுகளை மாற்ற வேண்டும் என்று சொல்கிறீர்கள். Chief Justice-ஐயே மாற்ற வேண்டும் என்பதற்காக முயற்சி பண்ணுகிறீர்கள். இருக்கிற வக்கீல்களை எல்லாம் மாற்றிவிட்டு உங்கள் கட்சி வக்கீல்களை எல்லாம் போடுகிறீர்கள். அன்றைக்கு ஆலடி அருணா இங்கே எடுத்துக்காட்டியதைப்போல, இந்தப் பக்கத்திலிருந்து வாதாடியவர்கள் உங்கள் பக்கத்திலேயிருந்து வாதாடுவதற்காக வக்கீல்களை எல்லாம் மாற்றுகிறீர்கள். இப்படி அதிகாரிகளை மாற்றி, உங்களுக்குச் சாதகமாக வைத்துக்கொள்கின்ற அந்தக் கெட்ட முறையை, அந்தக் கெட்ட நடவடிக்கையை இந்த அரசு என்றைக்கும் மேற்கொண்டதில்லை. மேற்கொள்ளாது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்சல் லத்தீப். (குறுக்கீடு) 17 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) குறுக்கீடு எல்லாம் சேர்த்துத்தான் அதிக நேரம் கொடுத்து இருக்கிறேன். ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அடுத்தபடியாக, இந்த இரண்டு நிகழ்ச்சிகளுக்குப் பிறகு, திருப்பத்தூரிலே 16-3-97 அன்று சந்தனக் கிடங்கு தீப்பிடித்து எரிகின்றது. இந்தச் சந்தனக் கிடங்கு தீப்பிடித்து எரிந்ததைப் பொறுத்தவரையில், அன்றைக்கு முதல்வர் அவர்கள் இந்த அவையிலே பேசி இருக்கிறார்கள். சந்தன மரமானது, அவ்வளவு சீக்கிரமாக தீப்பிடித்து எரியாது, அதிலே எண்ணெய் ஊற்றவேண்டும். அல்லது நெய் ஊற்றினால் அது பற்றிக்கொள்ளும் என்று கூறியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு, இந்த அவையிலே ஓர் ஒத்திவைப்புத்

தீர்மானம், ஒழுங்குப் பிரச்சினை எல்லாம் கொண்டு வந்ததற்குப் பிறகு, இரண்டு சிறுவர்கள் விளையாடுகிறார்கள், கூட்டாஞ்சோறு ஆக்குகின்றார்கள், அந்தக் கூட்டாஞ்சோற்றிலிருந்து தீப்பொறி பட்டு, சந்தன மர கோடவுன் தீப்பற்றிவிட்டது என்று இந்த அவையிலேகூட கூறி இருக்கிறார்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் எதையும் இதைப்போன்ற சமாச்சாரங்களில் அறுதியிட்டுக் கூறி, நான் சொன்னதுதான் தீர்ப்பு என்று இந்த அவையிலே சொன்னது கிடையாது. பல்வேறு நிகழ்ச்சிகளைப் பற்றி அதிகாரிகள் கொடுக்கின்ற தகவல்களைச் சொல்லும்போதுகூட, 'இந்தத் தகவல்களை அதிகாரி கொடுத்திருக்கிறார், இதைப் பற்றி விசாரித்து, பிறகு உண்மை சொல்லப்படும்' என்றெல்லாம் சொல்லியிருக்கிறேன். அதிகாரிகள் கூறுவதை அப்படியே ஏற்றுக்கொண்டு, காவல் துறை அதிகாரியானாலும், மற்ற அதிகாரிகளானாலும், அப்படியே ஏற்றுக்கொள்கிற சூழ்நிலை கிடையாது. இன்று வரையிலே அப்படிச் சொன்னது கிடையாது. அதைப்போலத்தான் இந்தச் சந்தன மரங்கள் தீப்பற்றி எரிந்தது பற்றி, இங்கே நான் எனக்கு வந்த தகவல்களைச் சொல்லியிருக்கிறேன். இப்போது அதற்காக ஒரு நீதி விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்த நீதி விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, அதற்குக் குந்தகம் வருவதைப் போல இங்கே பேசுவது நல்லதல்ல. அதைத் தாங்கள் அனுமதிக்கக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அப்துல் லத்தீப்..

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காலத்தின் அருமை கருதி, நான் அதிக நேரம் எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. எங்களுடைய பகுதியில் காட்டு யானைகளால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற புகார் அடிக்கடி என்னிடத்திலே வருகிறது. நான்கூட காவலூர் பகுதிக்குச் சென்று இருந்தபோது, காட்டு யானைகள் பயிர்களை அழித்ததை நேரடியாகப் பார்த்து, அதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலேயே ஒரு மனுவைக் கொடுத்திருந்தேன். இது தொடர்பாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன். நம்முடைய கொள்கைக் குறிப்பிலேயே காட்டின் பெரும்பகுதி தரம் குறைந்துவிட்டது, அழிக்கப்படுகிறது என்பதைத் தெளிவாக நாம் குறித்திருக்கிறோம்.



பிற்பகல் 1-05

எனவே, இப்போது இருக்கின்ற காடுகளைக் காப்பாற்றுவது ஒரு பெரும் பணி. அதேநேரத்தில் காட்டினுடைய பரப்பளவை விஸ்தரிப்பது, புதிய காடுகளை உருவாக்குவது இன்றைக்கு நாட்டிற்கு இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. 33 சதவீதம் காட்டுப் பகுதிகளாக இருக்க வேண்டுமென்ற தேசிய அளவுகோலில் பாதி அளவுகூட தமிழ்நாட்டிலே இல்லை. 17 சதவீதம்கூட இல்லை என்பது நம்முடைய கொள்கைக் குறிப்பிலேயே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதிலேகூட, 17 சதவீதம் என்பதுகூட இன்றைக்குப் பார்த்தால், அது சரியான கணக்கு இல்லை. அது, பல ஆண்டுகளுக்கு முன்பு கொடுக்கப்பட்ட கணக்கு. இன்றைக்கு யதார்த்த நிலையை எடுத்துக்கொண்டு பார்த்தால், ஏறக்குறைய 8 சதவீதம் அல்லது 9 சதவீதம்தான் காடுகள் தமிழ்நாட்டிலே இருக்கின்றன என்பது நமக்கு எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, தயவுசெய்து நான் கேட்டுக்கொள்வது, இருக்கின்ற காடுகளைக் காப்பாற்ற நாம் முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். விறகுகள் வேண்டுமென்பதற்காக, காட்டுப் பகுதிகளைக் கூப்புகளாக்கி, உரிமம் தரப்படுகின்ற, இப்போது நடைமுறையில் இருக்கின்ற நிலைமைகளை உடனடியாகச் சில ஆண்டுகளுக்கு நிறுத்த வேண்டும். எங்களைப் பொறுத்தவரையில் ஜவ்வாது மலையிலே இந்த முறையைக் கொண்டு வந்திருக்கின்ற காரணத்தால்தான் காடு பெரும்பாலும் அழிந்திருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூப்பு கொடுக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் அதிகமாகிவிட்டது. இறுதியாக நீங்கள் பதிலுரையில் எல்லாவற்றையும் சொல்லிக்கொள்ளலாம். திரு. அப்துல் லத்தீப், நீங்கள் பேசி முடியுங்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** ஏற்கெனவே பல்லாண்டுகளாகக் கடைபிடித்து வருகின்ற ஒன்றைத்தான் நான் சொல்கிறேன். அதை அரசு நிறுத்திக்கொண்டுவிட்டால் அதைவிட மகிழ்ச்சியான செய்தி வேறு அல்ல. இன்னொன்று, ஜவ்வாது மலையிலே இரண்டு வகையான காடுகள் இருக்கின்றன. ஒன்று ரிசர்வ் ஃபாரஸ்ட், இன்னொன்று, ரெவின்யூ ஃபாரஸ்ட் என்று இருக்கிறது. ரெவின்யூ ஃபாரஸ்ட்தான் மிகப் பெரும் பகுதியாக ஜவ்வாது மலையிலே இருக்கின்றது. காவலூர், வசந்தபுரம் இங்கேயிருந்து தொடங்கி

புதூர்நாடு, புக்கம்பட்டு நாடு, நெல்லிவாசல் நாடு என்று இவைகளை எடுத்துக்கொண்டால், மலையாண்டிப்பட்டி, சிங்காரப்பேட்டை வரையிலே ரெவின்யூ காடுகளாகத்தான் இருக்கின்றன. பல ஆண்டுகளாக நாம் கேட்டு வருகிறோம். தயவுசெய்து அதை ரிசர்வ் காடாக மாற்றினாலொழிய, காடுகள் அழிவதை யாரும் தடுக்க முடியாது. இந்தத் துறையினிடத்திலே சொன்னால்கூட, அது ரெவின்யூ காடு, ஆகையினால் அதிலே நாங்கள் எந்தவிதமான தலையீடும் செய்ய முடியாது என்றுதான் சொல்கிறார்கள். எந்தவிதமான சுணக்கமுமின்றி காடு அழிந்துகொண்டிருக்கிறது. எனவே, அந்தப் பகுதியை உடனடியாக ரிசர்வ் காடாக மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜவ்வாது மலையில், அங்கேயிருக்கின்ற காட்டெருமை மிக விசேஷமான காட்டு எருமை. மிக அழகானது, மிக வலிமையானது. தோற்றத்திலே ராஜகம்பீரம் கொண்ட ஒரு மாடாகும். அதை வெறும் தோலுக்காகச் சுட்டுக் கொன்றுவிடுகிறார்கள். எனவே, ஜவ்வாது மலையைப் பொறுத்தவரையில் அங்கேயிருக்கக்கூடிய காட்டு மிருகங்களுக்குப் பாதுகாப்பு தரும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, அங்கே ஒரு சரணாலயம் அமைக்க வேண்டும், சரணாலயம் அமைக்காவிட்டால் காட்டிலே இருக்கின்ற மிருகங்களும் அழிந்தவிடும், காடும் அழிந்துவிடும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நீண்ட போராட்டத்திற்குப் பிறகு என்னுடைய கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். நஷ்டம் ஏற்பட்டாலும், லாபம் ஏற்பட்டாலும் .உங்களுடைய கோரிக்கையை ஏற்று, ஜவ்வாது மலையிலே அந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்தித் தருவோம் என்று சொன்னார்கள். நான் நம்புகிறேன், அவர்களுக்கு உறுதி கூறுகிறேன், நஷ்டம் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை, லாபம்தான் ஏற்படும். அதுவும் முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைக்கின்ற ஒவ்வொன்றும் லாபத்தில்தான் முடியும், பயனுடையதாக இருக்கும். அவருக்கு ராசியான கையல்லவா? அதனாலே தாங்களே அதைக் கொடுத்த காரணத்தினால், அந்தத் தொழிற்சாலை நாட்டிற்கும் நன்மை செய்யும், எங்களுடைய வீட்டிற்கும் நன்மை செய்யும். அதே நேரத்தில், உங்களுக்கு நான் நிலையான நன்றி சொல்லக் கூடிய ஒரு வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுக்கும், நிரந்தரமான முறையிலே. அதற்காக, இந்த நேரத்திலே உங்களுக்கு நான் நன்றி சொல்லவும் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.



இந்தப் பகுதியிலே இருக்கின்ற அதிகாரிகள் பற்றி எவ்வளவோ குற்றங்கள் எல்லாம் இங்கே சொல்லப்பட்டன. வனத் துறையிலே பணியாற்றுகின்ற அதிகாரிகள் இப்போது தாங்கள் எங்கேயோ தேவலோகத்திலே இருப்பதாகக் கருதிக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் யாருக்கும் கட்டுப்பட்டவர்கள் அல்ல என்ற முறையிலே இதுவரையிலேயும் அந்தக் காட்டை அழிப்பதிலே பெரும் பங்கு வகித்தவர்கள் அந்த வனத் துறையைச் சார்ந்தவர்கள்தான் என்ற ஒரு குற்றச்சாட்டை நான் சொல்கிறேன். அவர்கள் நினைத்தபடி வேலை செய்கிறார்கள். எல்லோர் மீதும் குற்றம் சொல்கிறார்கள். ஒன்றை மட்டும் நான் சொல்கிறேன். ரேஞ்ச் ஆபீஸ் ஆலங்காயத்திலே இருக்கிறது. அதற்கு முன்பு ஒரு கால்வாய் ஓடுகிறது.

அந்தக் கால்வாயிலே அங்கேயிருக்கிற குப்பைகளையெல்லாம் கொண்டு வந்து போட்டுவிட்டார்கள். நான் ரேஞ்ச் ஆபீசரிடம் போய் என்ன, கால்வாயிலே குப்பைகளைப் போட்டு ஊருக்கு ஆபத்து ஏற்படுத்திவிட்டீர்களே, மழை பெய்தால் தண்ணீர் ஊருக்குள்ளே நுழையுமே என்று கேட்டு, அதை எடுத்து விடுங்கள் என்று சொன்னேன். கடைசியாக என்ன நடந்தது தெரியுமா, லத்தீப் வந்து என்னை மிரட்டினார், இவரும் கள்ளக்கடத்தல்காரர்களுக்கு, அதாவது சந்தனக் கடத்தல் செய்யக் கூடியவர்களுக்கு ஆதரவாக இருக்கிறார், சந்தனக் கடத்தலை நான் பிடிப்பதினாலே, அவரைக் கண்டிப்பதினாலே, தண்டனை கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வதினாலே, என்னை அவர் வந்து கோபித்துக் கொண்டார் என்று ஒரு கடிதமே சீஃப் கன்சர்வேட்டர் ஆஃப் பாரஸ்ட்க்கு எழுதியதாக நான் அறிந்தேன். இதை யாராவது நம்புவார்களா? இப்படிப்பட்ட மனசாட்சி இல்லாத அதிகாரிகள் அங்கே இருக்கிற நம்முடைய மக்களையெல்லாம் அலைக்கழிக்கிறார்கள். தேவையில்லாமல் அவர்கள் அலைக்கழிக்கிறார்கள், குற்றம் சாட்டுகிறார்கள். சில நேரங்களிலே இவர்கள் சந்தனக் கட்டையை திருடி, விரும்பிய இடத்திற்கு கடத்தல் செய்ய வேண்டும் என்பதற்காக அங்கே இருக்கிற மலை மக்களை கட்டாயப்படுத்துகிறார்கள். அவர்கள் மறுத்தால், அதற்குத் தண்டனையாக, இவன்தான் கடத்தினான் என்று அவர்கள் மீது வழக்குப் போடுகிறார்கள். எனவே, இதையெல்லாம் நாங்கள் பார்த்துக்கொண்டு இருக்க முடியாது.

பிற்பகல் 1-10

மலை மக்கள் மிக, மிக அப்பாவிகள். இப்போது பல பேர் அங்கே உள்ளே நுழைந்து விட்டார்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

எங்கள் தொகுதியில் இருக்கிற அந்தச் சந்தன மலையிலே வெகு தூரத்திலேயிருந்து வந்து கடத்தல் செய்கிறார்கள். அதுவும் நடக்கிறது எங்களுடைய மலையைச் சேர்ந்த மக்களுக்கு இவர்களால் பெரிய தொல்லை ஏற்படுகின்றது. இது தொடர்ந்து நடக்குமேயானால், இவர்கள் மற்றவர்களை ஏதாவது மிரட்டலாம் என்றால், அது தவறு. மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது. அவர்களை கட்டுப்பாட்டிலே வைத்திருக்க வேண்டும், முறையோடு அவர்கள் நடக்க வேண்டும், நெறியோடு அவர்கள் நிர்வாகம் செய்ய வேண்டும். அவர்களும் மற்றவர்களைப்போல நடப்பேன் என்று கருதக்கூடாது. கள்ளக் கடத்தல் செய்யத் துணிகிறார்கள் என்றால், நானும் செய்வேன் என்று நினைக்கின்ற அதிகாரியும் ஓர் அதிகாரியா? எனவே, தயவுசெய்து அதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். அதற்குரிய மேல் அதிகாரிகள் அவர்களைச் சரியாகக் கட்டுப்பாட்டில் வைத்து நெறிமுறையோடு நடப்பதற்கு அவர்களை வழி நடத்த வேண்டும். இல்லாவிட்டால், அங்கே இருக்கக்கூடிய இவர்கள் எப்படி வேண்டுமானாலும் எங்களிடத்தில் நடந்துகொள்வார்கள், எங்களுடைய மக்களை அலைக்கழிப்பார்கள். நாங்கள் கேட்டுக்கொண்டு, பார்த்துக்கொண்டு, வாளாவிருக்க வேண்டும் என்று கருதக்கூடாது. எனவே, தயவுசெய்து அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது, அவர்களை முறைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) என்ன செய்வது வேறு வழி இல்லை. இன்னொன்றையும் மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்த ஜீரோ ஹவரில் என்னைப் போன்றவர்கள் அதிலே அதிகமாகக் கலந்து கொள்வதில்லை. ஜீரோ ஹவரில் நடப்பதை நாங்கள் எல்லாம் பதுமைகளைப்போல இங்கே உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்று, முழுக்க முழுக்க எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் அவர்கள் எடுத்துக்கொள்ளலாம். அவர்கள் எல்லாம் ஹீரோக்கள், நாங்கள் எல்லாம் ஜீரோக்கள் என்ற நிலை நீடிப்பது சரியல்ல. என்னுடைய தொகுதியிலே உள்ள முக்கியமான பிரச்சினையை இப்போது நான் முழுமையாகப் பேச முடியவில்லை. லத்தீப் எப்போது வந்தாலும் ஜவ்வாது பிரச்சினையைப் பற்றி பேசாமல் போக மாட்டான் என்று தெரியும். எனக்கு வாய்ப்பு இல்லாமல் செய்துவிட்டார்கள். நான் என்ன செய்வது, இதற்கு மேலும் மாண்புமிகு அமைச்சர் வீராசாமி அவர்களை வைத்துக்கொண்டு நான் பேசுவது முறையல்ல. எனவே, நான் என்னுடைய வார்த்தைகளை நிறைவு செய்து தங்களுக்கு நன்றி கூறி அமர்கின்றேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இறுதியாக, திரு. என்.ஆர். அழகராஜா. கண்டிப்பாக 5 நிமிடங்கள்தான்.

***திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அச்சகத் துறையைப் பொறுத்த அளவில் கடந்த 1997 ஆம் ஆண்டு 20-க்கும் மேற்பட்ட பணியாளர்களை இந்த அரசு பணி நீக்கம் செய்து இருக்கிறது என்பதைக் கவனத்திலே கொண்டு, அவர்கள் கடந்த 15, 20 ஆண்டுகளுக்கு மேலாக பணி புரிந்தவர்கள் என்ற அடிப்படையிலே, அவர்களுடைய எதிர்காலத்தைப்பற்றி நினைத்து அவர்களை மீண்டும் இந்தப் பணியிலே அமர்த்துவதற்கு கருணையோடு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதைப்போன்று, எழுதுபொருள் துறை, அச்சகத் துறையிலே இருக்கக்கூடிய தட்டச்சு ரிப்பேர் செய்யக் கூடியவர்கள் சென்னையிலே 14 பேர் இருக்கிறார்கள். அவர்கள் சென்னையிலே எந்த ஒரு அலுவலகத்திலே, எந்தவொரு தட்டச்சு பொறியாவது ரிப்பேர் ஆனாலும்கூட, அது எதிர்க்கட்சித் தலைவர் இல்லமாக இருந்தாலும் சரி, அல்லது சட்டமன்றச் செயலகமாக இருந்தாலும் சரி, அல்லது தலைமைச் செயலகமாக இருந்தாலும் சரி ஆளுநருடைய இல்லமாக இருந்தாலும் சரி, முதலமைச்சருடைய இல்லமாக இருந்தாலும் சரி, மற்ற அமைச்சர்களுடைய இல்லமாக இருந்தாலும் சரி, தட்டச்சு ரிப்பேர் செய்யக்கூடிய அந்த 14 பேர் மட்டும் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்தாலும்கூட அவர்களுக்கு எந்தவிதமான சலுகையையும் இந்த அரசு அளிக்கவில்லை என்பதைக் கவனத்திலே கொண்டு, அவர்களுக்கு அடிப்படை ஊதியத்தை உயர்த்திக் கொடுப்பதுடன், 20 ஆண்டுகளுக்கு மேலாகப் பணிபுரிகின்ற கம்மியர்களுக்கு பதவி உயர்வு அளிக்க வேண்டும் என்றும் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-15

வன இலாகாவைப் பொறுத்தவரையிலே, தமிழகத்திலே 22,700 சதுர கிலோமீட்டர் காடுகள் இருக்கின்றன. கிட்டத்தட்ட 17.45% நிலம் தமிழகத்திலே வனத் துறையினுடைய கட்டுப்பாட்டிலே இருக்கிறது. அதிலே 7,000 சதுர கிலோமீட்டர் கிட்டத்தட்ட உபயோகமற்றதாக இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த உபயோகமற்ற இடத்திலே என்ன செய்யப் போகிறீர்கள் என்பதைத் தெளிவாக விளக்கவில்லை என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட ஆசைப்படுகிறேன். அதேபோன்று தமிழகத்திலே 3,000 சதுர கிலோ

மீட்டர் பரப்பிலே இருக்கக்கூடிய 16 பறவைகள் மற்றும் உயிரின சரணாலயம் மற்றும் 5 தேசிய உயிரின பூங்காக்கள் ஆகியவற்றில் எத்தனை மிருகங்கள் இருக்கின்றன? என்னென்ன மிருகங்கள் இருக்கின்றன? அவைகளைப் பாதுகாப்பதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது அல்லது அதிலே அதிகப்படுகின்ற அல்லது குறைந்து வருகின்ற மிருகங்களுடைய எண்ணிக்கை என்ன? அவைகளை அதிகப்படுத்துவதற்கு அரசு என்ன செய்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். அதேபோன்று பல்வேறு இடங்களிலே கால்வாய் ஓரங்கள், பெரிய ஆற்றுப் படுகைகள், சாலை ஓரங்கள் ஆகிய இடங்களிலே நல்ல மரங்களை வளர்ப்பதற்கு அரசு முயற்சி எடுத்துக்கொள்கின்ற இந்த நேரத்தில் அங்கே எல்லாம் சிறப்பான மரங்களை நடுவதற்கு அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டும். மிகவும் வேகமாக வளர்ச்சி அடையக்கூடிய மரங்களை மட்டும் வளர்த்து விடாமல் வேம்பு, புரசை, அரச மரம், வில்வ மரம் போன்ற மரங்களை நட்டு, சிறப்பான நல்ல மரங்களாக, துளிர் விட்டு வளரக்கூடிய மரங்களாக, நீண்ட நெடுங்காலமாக இருக்கக்கூடிய மரங்களாக வைப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1996-97 ஆம் ஆண்டு 100% மத்திய அரசினுடைய உதவியோடு செய்யப்படுகின்ற பணிகள் ரூ.487 இலட்சத்திற்கு செய்யப்பட்டன. ஆனால், சென்ற 1997-98 ஆம் ஆண்டு அது ரூ.146 இலட்சமாக குறைக்கப்பட்டிருக்கிறது. ஏன் குறைக்கப்பட்டது என்பது தெரியவில்லை. அதேபோன்று, 1998-99 ஆம் ஆண்டு ரூ.686 இலட்சத்திற்கு அந்த நிதி பெறப்படுகிறதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஏன் கடந்த ஆண்டு அந்த நிதி குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் குறிப்பிட வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, மாநில அரசுகளின் 50% மானியத் திட்டத்தின்கீழ் 1996-97 ஆம் ஆண்டைக் காட்டிலும், 1998-99 ஆம் ஆண்டு ரூ.175 இலட்சம் குறைவாக திட்டம் போடப்பட்டிருக்கிறது. ஏன் குறைவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

அதேபோன்று, குற்றாலத்தைப் பொறுத்தவரையில் கடந்த ஒரு மாதத்திற்கு முன்னால் பத்திரிகைகளிலே பார்த்தோம். குற்றாலத்திலே இருக்கக்கூடிய பழத்தோட்ட அருவியிலே குளிப்பதற்கு வன இலாகா தடை ஏற்படுத்தியிருக்கிறது என்று அறியப்படுகிறது. ஆனால், அதே குற்றாலத்திலே இருக்கக்கூடிய பல்வேறு அருவிகள் வனத் துறை



கட்டுப்பாட்டிலேதான் இருக்கின்றன. உதாரணத்திற்கு, சிற்றருவியை எடுத்துக்கொண்டால் 25 பைசா, 50 பைசா என்று வசூல் செய்து கொண்டு அங்கே குளிப்பதற்கு அவர்கள் அனுமதி அளிக்கிறார்கள். அதேபோல் செண்பகாதேவி அருவி, தேனருவி, பால் அருவி போன்ற இடங்களிலேகூட வனத் துறையினுடைய கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய அருவிகளிலே சென்று குளிப்பதற்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்த அருவியிலே குளிப்பதற்கு ஏன் தடை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பழத்தோட்ட அருவியிலிருந்து தான் தண்ணீர் ஐந்தருவிக்கு வருகிறது. ஆகவே, பழத்தோட்ட அருவியில் எல்லோரையும் குளிக்க விட்டால், ஐந்தருவியினுடைய தண்ணீர் நாசம் ஆகிறது என்று எல்லோரும் சொல்கிறார்கள். ஆகவே, இன்னும் அதுபற்றி முடிவு எடுக்கவில்லை. உறுப்பினர்களோடு கலந்துக்கொண்டு நல்ல முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வி.ஐ.பி. மட்டும் குளித்தால் அந்த அழுக்கு ஐந்தருவிக்கு வராதா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, யாரையுமே குளிக்க விடக்கூடாது என்பதுதான் எண்ணம்.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய கூற்றை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் பால் அருவி, செண்பகாதேவி அருவி போன்ற அருவிகளிலே குளிக்கிற தண்ணீர் அதற்குப் பின்னாலே சிற்றருவியிலே வந்து அதன் பிறகு தான் மெயின் பால்சுக்கே வருகிறது. ஆகவே, இத்தனை அருவிகளிலேயும் ஜனங்கள் சென்று குளித்துவிடுகிறார்கள். ஆனால் இங்கே மட்டும் குளித்து விட்டு, ஐந்தருவியிலே குளிக்க முடியாத நிலை ஏற்பட்டுவிடும் என்று அச்சப்பட வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே, அதை அனுமதிக்க வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக காட்டிலே பல இடங்களிலே தீ விபத்துக்கள் ஏற்படுவது உண்டு. கடந்த சில மாதங்களுக்கு முன்னாலேகூட இந்தோனேஷியா நாட்டிலே ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக அண்டை நாடுகளிலேகூட புகை மண்டலம் ஏற்பட்டு பல நாசங்களை ஏற்படுத்தியதாக நாம் பார்க்கின்றோம். ஆனால், இந்த காட்டிலாகாவிலே தீ விபத்தைத் தடுக்கின்ற ஃபயர் வாச்சர்களுக்கு மிகவும் குறைவான சம்பளத்தை இந்த அரசு கொடுக்கின்ற காரணத்தினாலேதான் இதுபோன்ற தவறுகள் ஏற்படுகின்றன என்று சொல்லப்படுகிறது. ஆகவே, அவர்களுடைய குறைகளைத் தீர்க்கக்கூடிய வகையில் அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 1-20

City Beautification Scheme என்ற அடிப்படையில் மாவட்டத்தினுடைய தலைநகரங்களில் எல்லாம் நல்ல மரங்களை வைக்க அரசு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேனி, மாவட்டமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதற்குப் பக்கத்தில், வனத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய கிட்டத்தட்ட 350 ஏக்கர் நிலத்தில் ஆயிரக்கணக்கான மரங்களை அரசு நடுவதற்கு முயற்சி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் 5 நிமிடங்கள் பேச வேண்டும் என்று கேட்டீர்கள், 7 நிமிடங்கள் ஆகிவிட்டன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். போதும், இத்தோடு உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. என்.ஆர். அழகராஜா:** 2 பாயின்டுகள். சமூகக்காடுகள் திட்டத்தின்கீழ், 1993 ஆம் ஆண்டு முதல் பஞ்சாயத்துகளுக்கு வரவேண்டிய 60 சதவீத பணம் இன்னும் கொடுக்கப்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல, தூத்துக்குடியை எடுத்துக்கொண்டால் தூத்துக்குடி மாவட்டத்தினுடைய கட்டுமர மீனவர் முன்னேற்றச் சங்கத்திற்கு அல்பீசியா என்ற ஒரு மரத்தை 1990 ஆம் ஆண்டு அரசு ஆணை எண் 852-ன் படி, 10 சதவீத மானியத்தில் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். அவைகள் கொடுக்கப்படவில்லை என்பதையும் இந்த நேரத்தில் நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசியது போதும், மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நாம் காடுகள் பற்றியும், அதன் முக்கியத்துவம் பற்றியும் பேசியும், எழுதியும் வருகிறோம். ஆனால் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே வள்ளுவர்,

"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு"

என்றும், காலையில் தாங்கள் படித்த குறளில்,

"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடையது அரண்"

என்றும் கூறியிருக்கிறார்கள். அதுபோல, இராமாயணம், மகாபாரதம் போன்ற புராணங்களிலும் உபநிஷத்துகளிலும், இதிகாசங்களிலும், இளங்கோ அடிகளின் சிலப்பதிகாரத்திலும், காளிதாசரின் சாகுந்தலம் போன்ற நூல்களிலும், பண்டைய தமிழ் நூல்களிலும் காடுகளின் அவசியத்தையும், அழகையும் பேணிக் காப்பதினுடைய கடமையை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் அவர்கள் காடுகளைப் பற்றிப் பாடியிருக்கிறார்கள். ஆனால், இப்போது வாழ்கின்ற ஒரு கவிஞர், காடுகளைப் பற்றி ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். அதிலே வாழ்கின்ற விலங்குகளைப் பற்றிக் கூறுகையில்,

"கன்னங்கருத்த மலையென எதிரே
களிறுகள் நின்று கம்பீரம் காட்டின
ஆர்த்தெழுந்த ஆண் சிங்கமொன்று
அடர்ந்த பிடரியைச் சிலிர்த்துக் கொண்டு
அட்டியேதும் உளதோ எனது பெருமிதத்தைக்
கட்டி வெல்லக் கவிதையாக ஆக்குவதற்கு"

என்றதாம்;

உறைவிட்டெழுந்த வாள் போலக்
குகை விட்டெழுந்த புலியொன்று
"உன் கவிதைக்குச் சிறப்பளிக்க
என் கடுங்கோபம் போதாதோ"
என மடக்கியதாம்;

எமை எழுதென்று காலில் விழுந்த அழகையெல்லாம்
எழுதுவதற்கு ஓலை எடுக்காத அக்கவிஞன்
இறுதியிலே குரங்கின் இணையொன்றைக்
கண்டான்.
அப்போது அவருக்கு மூடு வந்து விட்டது.
"உறுதி; உறுதி; என் கவிதை இவ்வுலகில்
மறையாமல் வாழ்வது மிக உறுதியென
மார் தட்டிக் கொண்டு மலர்ந்த தமிழ்
கவிதையாத்தான்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பசி வந்தால் பத்தும் பறந்து போகும். என்பது பழமொழி (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வன உயிரினங்களின் மாட்சியில் தானும் மயங்கி, நம்மையும் மயக்கிய அக்கவிஞன் சோழநாட்டுக் கவிஞன், நமது முதலமைச்சர் கலைஞர் 'அவர்கள்தான் என்பதை இந்தநேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்படிப்பட்ட வனங்களை, வனங்களில் வாழ்கின்ற மிருகங்களைப் பற்றி, நீண்ட நெடுங்காலமாக அதனுடைய பயன்களைப் பற்றி எல்லாம் நாம் தெரிந்து வைத்து இருக்கிறோம். ஆனாலும்கூட இந்தியத் துணைக் கண்டத்திலே வனங்களுடைய பரப்பு குறைந்துகொண்டே வருகிறது. இந்தியாவினுடைய மொத்தப் பரப்பிலே 22½ சதவீதம் தான் வனப் பரப்பாக இருக்கிறது. ஆனால் தமிழகத்திலே உள்ள பரப்பிலே, வனப் பரப்பு அதைவிட மிகவும் குறைவாக 17½ சதவீதம் தான் இருக்கிறது. அந்தக் காரணத்தால்தான் இன்றைக்கு வட புல மாநிலங்களைவிட தமிழகத்திலே மழை மிகவும் குறைவாகப் பொழிகிறது. ஆகவே, இந்த வனத்தினுடைய பரப்பளவை அதிகரிக்க வேண்டும் என்பதற்காக இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.



வனச்செல்வங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காகப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து இன்றைக்கு வனங்களுடைய மரங்கள் கொஞ்சம்கூட வெட்டப்படாமல் பாதுகாக்கப்படுகின்றன. கடந்த ஆட்சியில் தினந்தோறும் 200 லோடு, 300 லோடு மரங்கள், மலைகளிலிருந்து வெட்டப்பட்டு, குறிப்பாக தாண்டிக்குடிக்காடு, கொடைக்கானல், உதகை மலைகளிலிருந்து தினந்தோறும் கீழே இறக்கப்பட்டுக் கொண்டு இருந்தன. ஆனால் கழகத் தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையில் பொறுப்பு ஏற்ற இந்த அரசு, அந்த மரங்கள் வெட்டப்படுவதை எல்லாம் உடனடியாக நிறுத்தி, இன்றைக்குக் கீழே இருந்து கருவேலம் மரங்கள் கொடைக்கானலுக்கும் உதகைக்கும் தினந்தோறும் 200 லோடுகள் போகின்றன என்ற ஒரு நல்ல நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறோம்.

பிற்பகல் 1-25

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. ரா. சேதுநாதன் தலைமை)

அதேபோல, வ்னங்களிலே விளைகின்ற அரியபல பொருட்களைக் காப்பதற்காகப் பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்திருக்கின்றது.

உதாரணத்திற்கு, சந்தன மரங்கள் ஏராளமாகத் தமிழகத்திலே விளைகின்றன. கடந்த காலத்திலே ஏராளமான திருட்டுக் குற்றங்கள் நடந்தன. வெளி மாநிலத்திலிருந்தும், இங்கேயிருந்தும் வந்தவர்கள் அந்தச் சந்தனப் பொருட்களையெல்லாம் திருடி, அருகிலேயிருக்கின்ற கேரள மாநிலத்திற்கும், ஆந்திர மாநிலத்திற்கும் கொண்டு சென்று, அங்கே அந்தப் பொருட்களையெல்லாம் சந்தன எண்ணெய்களாக மாற்றி கொண்டு வந்தார்கள். ஆனால், கழக அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்பு, கடந்த இரண்டாண்டுகளாகக் கடுமையான முயற்சிகள் எடுத்து, இன்றைக்கு அவைகளையெல்லாம் அறவே நிறுத்தியிருக்கின்றோம். இப்பொழுது ஏறத்தாழ, தலைச் சுமையிலே அங்கொன்றும் இங்கொன்றுமாகத்தான் அந்தச் சந்தனத் திருட்டு நடக்கிறதேயொழிய, முழுவதுமாகவே நாங்கள் தடுத்தி நிறுத்தி விட்டோம்.

அதற்கு உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், கேரள எல்லைப் பகுதியிலே, குறிப்பாகக் கோவைக்கு அருகிலே பாலக்காடு பகுதியிலே, 19 சந்தன ஆலைகள் அமைந்திருக்கின்றன. அந்த 19

சந்தன ஆலைகளுக்கும் பல ஆண்டுக் காலமாக, தமிழகத்திலேயிருந்துதான் மரங்கள் சென்று கொண்டிருந்தன. கேரளாவிலே ஒரு மரம் கூட இல்லை. அட்டாடியிருந்தும், அந்த ஆலைகள். இந்தத் திருட்டுச் சந்தனக் கட்டைகள்மூலமாக மிகச் செம்மையாக இயங்கிக் கொண்டு வந்தன. ஆனால், கழக அரசு எடுத்துக்கொண்ட கடுமையான நடவடிக்கையின் காரணமாக, அந்த ஆலைகள் அடியோடு மூடப்பட்டுள்ளதால், இன்றைக்கு அறவே இங்கே சந்தனக் குற்றங்கள் குறைந்திருக்கின்றன.

நமது காடுகளில் சந்தன மரத்தைப் பாதுகாக்கும் பணிகள் மேம்படுத்தப்பட்டு, ரூ.1902 இலட்சங்கள் மதிப்புள்ள 603 டன் சந்தனக் கட்டைகள் கைப்பற்றப்பட்டு, 2262 வழக்குகள் போடப்பட்டு, 709 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. இதிலே, 2854 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 32 நபர்கள் குண்டர் சட்டத்திலே கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் சட்டம் மற்றும் விதிமுறைகளை முறையாக நடைமுறைப்படுத்தியதால் தமிழகத்திலேயிருந்து கள்ளத்தனமான முறையிலே வெளியே செல்லும் சந்தனக் கட்டைகள் இன்றைக்கு அடியோடு நின்றிருக்கின்றன.

அதேபோல, இந்தச் சந்தனக் கட்டைகளின் திருட்டை நிறுத்த வேண்டும் என்பதற்காக வனப் பகுதியிலே இருக்கின்ற பழங்குடியினரில் ஏறத்தாழ 60 பேர்களை வேலையிலே அமர்த்தி, அந்த நல்ல காரியத்தை, இப்பொழுது. இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது.

அதேபோல், தென்னகத்திலே இருக்கிற சில மாவட்டங்களில், வனங்களினுடைய மிக உச்சிப் பகுதியிலே இருக்கின்ற மரங்களையெல்லாம் அழித்து, அங்கு கஞ்சா பயிரிட்டு வந்தனர். இந்த அரசு எடுத்துக்கொண்ட கடுமையான நடவடிக்கையின் காரணமாக, இந்த இரண்டு ஆண்டுகளிலே மட்டும் 92.5 ஹெக்டேர் நிலத்தில் விளைந்த சுமார் 37.92 கோடி மதிப்புள்ள கஞ்சா பயிர்கள் அழிக்கப்பட்டு, அந்த வனம் பாதுகாக்கப்பட்டிருக்கின்றது.

அதேபோல, 1997-98 ஆம் ஆண்டில், வனப் பணியாளர்கள், வனக் குற்றவாளிகள் கஞ்சா பயிரிடுபவர்கள், மற்றும் யானை வேட்டைக்காரர்கள் ஆகியோரிடையே 32 தடவைகள் மோதல் ஏற்பட்டுள்ளது. இவ்வகை, மோதல்களில், 3 வனப் பணியாளர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். மேலும் 17 வனப் பணியாளர்கள்



காயப்படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த சில ஆண்டுகளாகக் கட்டுப்பாட்டிற்குள் இருந்த யானை வேட்டையானது மீண்டும் இப்பொழுது ஒரு பிரச்சினையாக எழுந்திருக்கின்றது. சமீப காலங்களிலே, யானைத் தந்தங்களின் திருட்டும், தந்தங்களுக்காக யானைகளைச் சுட்டுக் கொல்வதும், அங்கொன்றும் இங்கொன்றுமாக நடந்து வருகிறது. கடந்த வாரத்திலேகூட, நீலகிரி மலைப் பகுதியிலே நமது வனத் துறை அதிகாரிகளுக்கும், கடத்தல்காரர்களுக்கும் இடையே சண்டைகள் நடு இரவிலே ஏற்பட்டு, நமது வனத் துறையைச் சேர்ந்த ஒருவரும், வேட்டைக்காரர் ஒருவரும் கொல்லப்பட்டு, அங்கிருந்து இரண்டு ஜோடித் தந்தங்கள் மீட்கப்பட்டிருக்கின்றன.

அதேபோல, இந்த வனப் பாதுகாப்பை மேலும் மேம்படுத்துவதற்காக 15 இலட்சம் ரூபாய் செலவிலே, 1997-98 ஆம் ஆண்டிலே, வனத் துறையிலே கம்பியில்லாத் தந்தி வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருகின்றன.

இவ்வளவு சிறப்பு மிக்க வனங்களை மேலும் வளப்படுத்துவதற்காகவும், இந்த வனங்களினுடைய பரப்பை அதிகப்படுத்துவதற்காகவும், நமது மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், ஜப்பான் நாட்டோடு பலமுறை முயற்சி செய்து 500 கோடி ரூபாயைக் கடனாகப் பெற்றிருக்கின்றார்கள். கடந்த ஆண்டு 45 கோடி ரூபாயைச் செலவு செய்து, 200 கிராமங்களிலே தரம் குன்றிய காடுகளைத் தரம் மிக்க காடுகளாக மாற்றுவதற்காக முயற்சிகள் செய்து, இன்றைக்கு அந்த முயற்சியின்விளைவாக, அந்தப் பகுதிகளில் எல்லாம் மிகவும் செழிப்பாக அந்த வனங்கள் வளப்படுத்தப்பட்டுள்ளன.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** பேரவையின் முன்அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** அந்த வனக் குழுவைப் பற்றி, கிராமங்களிலே ஜப்பான் திட்டத்தின் மூலமாக எவ்வாறு வனங்களில் மரங்கள் பயிரிடப்படுகின்றன என்பதைப் பற்றி, ஒரு சிறு விளக்கத்தைச் சொல்ல வேண்டியவனாக இருக்கின்றேன். அந்தக் கிராமங்கள் ஏறத்தாழ மலையும், மலையைச் சார்ந்த இடங்களிலேயும் இருக்கின்ற பகுதிகள். அவை இந்தத் [illegible]

எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆண்டுக்கு 200 கிராமங்கள் வீதம் 5 ஆண்டுகளுக்கு ஆயிரம் கிராமங்கள். இந்தக் கிராமங்களிலேயிருக்கின்ற மக்களோடு தொடர்புகொண்டு, வனத் துறை அதிகாரிகள் முதலிலே அங்கு சென்று ஒரு வனக் குழுவினை ஏற்படுத்துவார்கள். எந்தத் திட்டமும் ஒழுங்காக நிறைவேற வேண்டுமென்றால், மக்களுடைய, குறிப்பாக, அந்தப் பகுதியிலே வாழ்கின்ற பொது மக்களுடைய ஒத்துழைப்போடுதான் நடைபெற வேண்டும். அந்தவகையிலே, இந்தத் திட்டம் ஜனநாயக ரீதியிலே, அந்தக் கிராமத்திலேயிருக்கின்ற மக்களைக் கொண்ட ஒரு குழுவை ஏற்படுத்தி, அதிலே ஒருவரை ஜனநாயக முறையிலே தலைவராகத் தேர்ந்தெடுத்து, அந்தவகையில், அவர்தான் அந்த வனக் குழுவிற்குத் தலைவராக இருப்பார். நமது வனத் துறையின் ரேஞ்சர் என்று சொல்லப்படுகின்ற அதிகாரி, அந்தக் குழுவினுடைய செயலாளராக இருப்பார். ஒரு கிராமத்திற்கு 30 அல்லது 40 இலட்சம் ரூபாய், அந்த இடத்தினுடைய பரப்புக்கேற்ப செலவு செய்யப்படுகிறதென்றால், அந்தப் பணம் முழுவதும் அந்தக் கிராமங்களுக்குத் தெரிந்துதான் செலவு செய்யப்பட வேண்டுமென்ற நிலை இன்றைக்கு இருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆகவே, உறுப்பினர், சுந்தரம் அவர்கள் சொன்னதுபோல, அதிலே எந்தவிதக் குறையும் ஏற்பட வாய்ப்பு இல்லை. 200 கிராமங்களிலும், மிகச் சிறப்பாக, அந்தத் திட்டம் கடந்த ஆண்டு பரிட்சார்த்த முறையிலே செயல்பட்டு வந்திருக்கிறது. இந்த ஆண்டு .94 இலட்சம் ரூபாயில் மீண்டும் 200 கிராமங்களை எடுத்துச்செயல்படுத்த எண்ணியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தவகையிலே, மிகச் சிறப்பாக இந்த நிருவாகம் நடத்தப்பட்டு வருகிறது.

மேலும், மரக்கன்றுகளை இதுவரை, வனத் துறை அதிகாரிகள் நட்டுவிடுவதோடு சரி. மக்களுடைய ஆதரவோடுதான் எந்தத் திட்டமும் நிறைவேறும் என்று சொன்னேன். ஆகவே, அந்தவகையிலே, இன்றைக்கு இந்தத் திட்டம் மிகச் சிறப்பாக நடைபெறுவதற்காக மக்கள் மிக உதவியாக இருக்கிறார்கள். உதாரணமாக, வனத் துறையைச் சார்ந்த பொருட்களை நம்பித்தான் சில கிராமங்களிலே, சிலபேர் இருக்கிறார்கள். உதாரணத்திற்கு, வனத்திலே இருக்கின்ற மரங்களை வெட்டிப் பிழைக்கின்ற, வறுமையிலே வாடுகின்றவர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம் ஒரு மாற்று வேலை ஏற்படுத்த



வேண்டுமென்பதற்காக வனத் துறையைச் சார்ந்த கிராமங்களிலே கடந்த ஆண்டு ஒவ்வொரு கிராமத்திற்கும் ஓர் இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் அளவிலே நிதி ஒதுக்கி, அந்த ஊரிலேயிருக்கின்ற மக்களுடைய தேவைகள், அடிப்படைத் தேவைகள், குடிநீர்ப் பிரச்சினை, கால்நடை ஆஸ்பத்திரி வேண்டுமென்றால் அது, சாலை வசதி இன்னும் அவர்கள் வேண்டுகின்ற வசதிகளையெல்லாம் அந்தப் பணத்திற்குள்ளாகச் செய்து கொடுத்து வந்தோம். கடந்த ஆண்டில் வேலையற்றவர்களுக்கு மாற்று வேலைவாய்ப்புத் திட்டத்தை ஏற்படுத்தி, செங்கல் சுடுவது, கூடை முடைதல் போன்ற இன்னும் பல்வேறு பணிகளை, அந்தப் பகுதியிலே இருக்கின்ற கிராம நிலைமைகளுக்கேற்ப செய்து வந்தோம். தருமபுரி மாவட்டத்தில், கோபிநத்தம் என்ற ஊரில் 10 இளைஞர்கள் வேலையில்லாமல் மரங்களை வெட்டி விற்று வந்தார்கள். வனத் துறை அதிகாரிகள் அவர்களிடம் சென்று வேறு ஏதாவது மாற்று வேலை செய்து கொடுக்கலாமா என்று கேட்டபோது, நாங்கள் பாண்டுவாத்திய கோஷ்டி அமைக்கிறோம், அதற்கு உதவி செய்யுங்கள் என்று சொன்னார்கள். வனத் துறை அதிகாரிகள், பாண்டுவாத்திய கோஷ்டிக்குண்டான கருவிகள், 10, 15 ஆயிரம் ரூபாய் அளவிலே கொடுத்து, இன்றைக்கு ஒவ்வொரு மாதத்திற்கும் அவர்கள் 10 அல்லது 15 நிகழ்ச்சிகளுக்குச் சென்று, 20 ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கின்ற நல்ல நிலைமை ஏற்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுபோல, எல்லாக் கிராமங்களிலும் ஏதாவது ஒரு மாற்று வேலைக்கு இந்தத் திட்டத்திலே வழிவகை செய்யப்பட்டு, இந்தத் திட்டம் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. நான் பல மாவட்டங்களுக்கு, குறிப்பாக, சேலம், தருமபுரி, பெரியார், கோவை மற்றும் திண்டுக்கல் போன்ற மாவட்டங்களுக்குச் சென்று, அங்கே ஆய்வு செய்தபோது, அந்தக் கிராமங்களிலேயிருக்கின்றவர்கள், ஓர் இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் போதாது, இன்னும் அதிகமாகப் பணம் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதன்பிறகு, மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, இனி வருகின்ற ஆண்டுகளில், கிராமங்களில், அவர்களுடைய திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக முதல் ஆண்டிலே 3 இலட்சம், இரண்டாம் ஆண்டிலே 2 இலட்சம், மூன்றாம் ஆண்டிலே ஓர் இலட்சம் என 6 இலட்சம் ரூபாய் இந்த ஜப்பான் திட்டத்தின் மூலமாகக் கொடுத்து கிராம மக்களுடைய தேவைகளை முதலிலே பூர்த்தி செய்து, அதன் பிறகு வனத் துறையை விரிவுபடுத்துவதாக இருக்கிறோம் என்ற நல்ல

செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-35

அதேபோல கடந்த ஆண்டு நான் அறிவித்ததைப்போல, தருமபுரி மாவட்டத்திலே காவேரி வன உயிரினச் சரணாலயம், கடலூர் மாவட்டத்திலே கிருஷ்ணாபுரம் வன உயிரினச் சரணாலயம், ஈரோடு மாவட்டத்திலே சுஜால் குட்டை வன உயிரினச் சரணாலயம், கன்னியாகுமரி மாவட்டத்திலே கன்னியாகுமரி வன உயிரினச் சரணாலயம், கடலூர் மாவட்டத்திலே பிச்சாவரம் மாங்குரோவ் காடுகள், நாகை மாவட்டத்திலே கோடியக்கரை வன உயிரினச் சரணாலயம், திண்டுக்கல் மாவட்டத்திலே கொடைக்கானல் வன உயிரினச் சரணாலயம், கோவை மாவட்டத்திலே கஞ்சிராமலை வன உயிரினச் சரணாலயம், திருநெல்வேலி மாவட்டத்திலே நெல்லை வன உயிரினச் சரணாலயம் ஆகியவை அமைப்பதற்கான முழு முயற்சியிலே ஈடுபட்டு, மத்திய அரசுக்கு இந்த அரசு பரிந்துரை செய்து அவர்களுடைய உத்தரவை எதிர்நோக்கியிருக்கிறது என்பதை இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, எந்தத் திட்டமாக இருந்தாலும் அதற்கு ஆராய்ச்சிகள் முக்கியமாகத் தேவைப்படுகின்றன. ஒரு தொழிற்சாலை என்று இருந்தாலும்கூட அதற்கு ஓர் ஆராய்ச்சித் துறை இருந்தால்தான் அந்தத் தொழில் நவீனகாலத்திற்கொப்ப முன்னேறும். அந்தவகையிலே வனத் துறையின் சார்பிலே, வன ஆராய்ச்சித் துறையின் தலைவர் ஒருவர் நியமிக்கப்பட்டு, அவரின்கீழ் செம்மையாக இன்றைக்கு வன ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. அந்த ஆராய்ச்சிகளின் பயனாக, இன்றைக்கு மிகச் சிறந்த முறையிலே, நவீன நாற்றங்கால் ஏற்படுத்தப்பட்டு, நவீன முறையிலே இன்றைக்கு நாற்றுகள் எல்லாம் வளருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. தருமபுரி மாவட்டத்திலே அரூரிலும், தொப்பூரிலும், விழுப்புரம் மாவட்டத்திலே ஆழ்வார்மலையிலும், தேனி மாவட்டத்திலே வால்கரடு என்ற ஊரிலும், திருச்சி மாவட்டத்திலே கலமாவூர் என்ற இடத்திலும், காஞ்சிபுரம் மாவட்டத்திலே பெருங்களத்தூரிலும் இந்த நவீன நாற்றங்கால் பண்ணைகள் அமைப்பதற்காக 2 கோடியே 40 இலட்சம் ரூபாயை இந்த அரசு ஒதுக்கியிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



அதேபோல, இந்த ஊர்களிலே இருக்கின்ற இந்த நாற்றங்கால் மூலம் யூக்கலிப்டஸ், சவுக்கு, தேக்கு, சந்தனம், கடுக்காய், நெல்லி, மூங்கில் போன்ற மரங்கள் மிகச் சிறப்பான முறையிலே வளர்க்கப்பட்டு, பொது மக்களுக்கும், வனத் துறைக்கும் வழங்கப்படும்.

அதேபோல, இந்த நாற்றங்கால்களில். பல்வேறு புதிய டெக்னிக்குகள் என்று சொல்லக்கூடிய நவீன முறைகளைக் கையாண்டு Rhizobium, Phosphobacteria, Vam போன்ற நுண்ணுயிர் உரங்களைப் பயன்படுத்தி ஆறு மாதங்களுக்குள்ளாக 10 அடி, [illegible] அடி உயரம் வளரக்கூடிய நாற்றுகள் நம்முடைய வனத் துறை அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டு, மிகச் சிறப்பாக இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

முன்பெல்லாம், சாலையோரங்களிலே, சிறு நாற்றுகளை நட்டு அதற்கு 500 ரூபாய் செலவிலே Tree Guard என்று சொல்லக்கூடிய அந்த கம்பி வலைகளை வைப்பார்கள். அதற்கு 500 ரூபாய், 600 ரூபாய் செலவாகும். ஆனால், இந்த நவீன முறையால் உயரமான செடிகளை வளர்ப்பதன்மூலம், 4 செடிகளை 500 ரூபாயிலே நட்டு, விரைவிலே அந்தப் பயனை அடைய முடியும். அந்தவகையிலே, இந்த முறை நமக்குச் சாதகமாக இருக்கின்றது.

சென்ற ஆண்டு 30,000 உயரமான நாற்றுகள், வாகை, அரசு, ஆல், பாதாம், வாதநாரயணன், புளி, புங்கன், வேம்பு போன்ற இனங்களில் வளர்க்கப்பட்டு, சாலையோரம் நிழல் மற்றும் அழகு தரும் மலர்கொண்ட மரங்களாக நடப்பட்டன. இந்த ஆண்டு இது போன்ற உயரமான நாற்றுகள் நகரங்களிலும் முனிசிபாலிடிகளிலும், பேரூராட்சிகளிலும் நடப்படவுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுபோல, 1998-99 ஆம் ஆண்டு வன ஆய்வுக்காக 40 புதிய சோதனைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. இதற்காக அரசு 80 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறது.

தமிழகத்தில் சுமார் 60 கோடி ரூபாய் செலவில் புதிய வன ஆராய்ச்சி நிறுவனம் நிறுவப்பட்டு இங்கிலாந்து, ஜப்பான் மற்றும் கனடா நாடுகளினுடைய நிதி நிறுவனங்களிடம் திட்டம் அனுப்பப்பட்டு, இப்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் ஏராளமான அளவில் வேம்பு வளர்கிறது. வேப்ப மரத்தைப் பற்றி வருங்காலங்களிலே நிறையப் பேசுகின்ற வாய்ப்பு இருக்கின்றது. வேப்பங்கொட்டையிலேயிருந்து எடுக்கப்படும் AZADIRACTIN என்ற மருந்துப்பொருள் உலகெங்கும், மனிதனுக்கு பக்க விளைவை ஏற்படுத்தாத மிகச் சிறந்த மருந்தாக, பூச்சிக்கொல்லியாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதற்கு வருங்காலத்திலே, தேவைகள் மிக மிக அதிகமாக இருக்கும் என்று நம்பப்படுகிறது. ஆகவே, இந்த AZADIRACTIN அதிகமாக இருக்கின்ற, இரண்டு மடங்கு இருக்கின்ற, வேப்ப மரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, Clonal முறையிலேயும், அதேபோல் விதையின் மூலமாகவும் நாற்றுகள் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கும் வனத் துறைக்கும் வழங்கப்படவுள்ளன.

பிற்பகல் 1-40

அதேபோல, நீலகிரி மரத்திலே அதிக அளவு தைலம் கொடுக்கக்கூடிய நல்ல விதையுள்ள நல்ல மரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவைகளும் வழங்கப்படவிருக்கின்றன. அதேபோல, ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து பல்வகை யூக்கலிப்டஸ் மரங்கள், உயர்ந்த ரக மரங்கள் வரவழைக்கப்பட்டு, அவைகளின் மூலம் அதிகப்படியான 'பல்புவுட்' என்று சொல்லப்படுகின்ற மிக அதிகமான பல்பு, மரக்கூழ்கள் கொடுக்கின்ற மரங்கள் வனத் துறை மூலமாக உருவாக்கப்பட்டு, பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்படவிருக்கின்றன.

அதைப்போல, தோலினைப் பதப்படுத்துகின்ற வாட்டில் மரங்கள். அதிலும்கூட டேனிங் தன்மை 20% இருக்கிறது. 40% டேனிங் தன்மையுள்ள மரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, வீரிய நாற்றுகள், இந்த நாற்றங்கால் மூலம் விநியோகம் செய்யப்படவிருக்கின்றன. அதேபோன்று, சவுக்கு மரம். உலகிலேயே முதன்முதலாக வீரிய விதைத் தோட்டம் தமிழகத்தில் ஆரம்பிக்கப்பட்டு, நெய்வேலியில் அதற்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன்மூலம், விவசாயிகளுக்கு ஐந்தாண்டுகளிலே 80 முதல் 100 டன் வரை மகசூல் பெறக்கூடிய நல்ல விதைகள் விநியோகம் செய்யப்படவிருக்கின்றன.

தமிழக வனப் பகுதிகளில் மிகச் சிறந்த புளியமரக் கன்றுகளை ஒட்டுமூலம் உருவாக்கி சென்ற ஆண்டு 2 இலட்சம் ஒட்டுக் கன்றுகள் விநியோகிக்கப்பட்டு இருக்கின்றன. இந்த ஆண்டு, 4 இலட்சம் வீரிய



ஒட்டு புளியமரக் கன்றுகள் விநியோகம் செய்யப்படவிருக்கின்றன. இவ்வளவு சிறப்புகள் கொண்ட இந்த வனத்தை விரிவாக்கம் செய்ய வேண்டுமென்பதற்காக இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

கல்ராயன் மலைப் பகுதியில் ஏறத்தாழ ஓர் இலட்சம் ஏக்கருக்கும் மேற்பட்ட நிலங்கள் இன்றைக்கு மலைவாழ் மக்களால் shifting cultivation என்ற வகையில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கின்றன. அவர்கள் இந்த ஆண்டு, இந்த ஊரிலே, மூலையிலே பயிரிடுவார்கள். அடுத்த ஆண்டு வேறு இடத்திற்குச் சென்று அங்கிருக்கின்ற மரங்களை அழித்துப் பயிரிடுவார்கள். இந்தவகையில், கல்ராயன் மலை இன்றைக்கு மரங்களே இல்லாது, பொட்டல் காடாக மாறிவிட்டது. இதனை மாற்றுவதற்காக, அந்தப் பகுதி மலைவாழ் மக்களுடைய உரிமைகளைப் பாதுகாத்து, அவர்களுக்கு நிவர்த்தி செய்த பின்பு, அவர்களுக்கு ஓர் ஏக்கரோ அல்லது இரண்டு ஏக்கரோ கொடுத்த பின்பு, மீதமுள்ள நிலங்களை எடுத்து, அந்தப் பகுதியில் மரங்களை நடுவதற்கு இந்த அரசு முயற்சி எடுத்து வருகிறது. அதேபோல, நீலகிரி மாவட்டத்திலே கூடலூர் பகுதியிலே, இதேபோன்று, ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களிலிருந்து, அவர்களை அகற்றி, அங்கேயும் வனங்களை வளர்க்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையிலே, வருகின்ற ஆண்டுகளிலே மேலும் 45 ஆயிரம் ஹெக்டேர் நிலங்களை காப்புப் பகுதிகளாக, வனப் பகுதிகளாகச் சட்டப்படி மாற்ற, வருவாய்த் துறையோடு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வனத் துறையின் மூலமாக 3 தோட்டக் கழகங்கள், வனத் தோட்டக் கழகங்கள் இன்றைக்குச் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் ஒன்று, தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம். இந்தக் கழகம் 1974 ஆம் ஆண்டு நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் இரண்டாவது தடவை முதல்வராக இருந்தபோது ஆரம்பிக்கப்பட்டது. ஏறத்தாழ 71 ஆயிரம் ஹெக்டேர் வன நிலப் பரப்பில் கடலூர், தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் முந்திரி, தைலம், சவுக்கு ஆகிய மரங்கள் இந்தத் தோட்டக் கழகத்தின் மூலம் வணிக நோக்கில் காகித வளர்க்கப்படுகின்றன. இவைகள் வாணிப நோக்கில் காகித ஆலைகளுக்கும் மற்ற இடங்களுக்கும் விற்கப்பட்டு, இதுவரையில் நஷ்டத்தில் இருந்த இந்த தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம், கடந்த ஆண்டு மட்டுமே 5 கோடியே 89 இலட்சம் இலாபம் ஈட்டியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 1997-98ஆம் ஆண்டும் இதுபோல, மிக

அதிகமான இலாபம் இருக்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

கடந்த 1984 ஆம் ஆண்டு டான்சி நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்டு, ஆறு ஆண்டுகளாக மூடப்பட்டிருந்த தெக்குப்பட்டு சந்தன ஆலை, மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் கேட்டுக் கொண்டதற்கிணங்க, மீண்டும் அதன் உற்பத்தியைத் தொடங்கி, இன்றைக்கு ஏறக்குறைய 5 டன் அளவுக்கு, அதாவது 5 ஆயிரம் கிலோ அளவு சந்தன எண்ணெயை உற்பத்தி செய்து சாதனை படைத்திருக்கிறது. நேற்றையதினம்தான், அதற்கு மத்திய அரசிடமிருந்து வெளிநாடுகளுக்கு 5 டன் சந்தன எண்ணெயை ஏற்றுமதி செய்வதற்கான அனுமதி கிடைத்திருக்கிறது. ஒரு கிலோ 250 யு.எஸ். டாலர் என்ற அளவிலே ஃபிரான்ஸைச் சேர்ந்த நிறுவனத்திற்கு விற்று 2½ கோடி ரூபாய் இலாபம் இன்றைக்கு அந்த நிறுவனத்தின்மூலம் கிடைத்திருக்கிறது. இப்பொழுது மிகச் சிறப்பாக, அந்த வனத் தோட்டக் கழக நிர்வாகம் செயல்பட்டு வருகிறது.

பிற்பகல் 1-45

அன்பிற்குரிய திரு. டி. மணி அவர்கள் சொன்னதைப்போல, அரசு ரப்பர்க் கழகம் 4451 ஹெக்டேர் அளவுள்ள நிலப்பரப்பிலே அமைந்துள்ளது. அங்கே கன்னியாகுமரி மாவட்டத்தில் பெரும்பாலும் ரப்பர் மரங்களும், சிறு அளவிலே கிராம்பும் வளர்க்கப்படுகின்றன. மொத்தம் 2273 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இதிலே 482 பேர் இலங்கை அகதிகளாவர். இந்த ரப்பர்க் கழகத்தின் மூலமாக அரசினுடைய குறிக்கோள், ஒவ்வோர் ஆண்டும் 2,500 டன் ரப்பரை விளைவிப்பதாகும். அந்த வகையிலே, இன்றைக்கு, 2,666 டன் அதாவது 115 சதவிகிதம் ரப்பரை உற்பத்தி செய்தும்கூட, இன்றைக்கு அந்தக் கழகம் கொஞ்சம் சிரமத்திலே இருக்கிறது. காரணம், வெளிநாட்டிலேயும், உள்நாட்டிலேயும் ரப்பரின் விலை வீழ்ச்சியின் காரணமாக, இன்றைக்குச் சிரமத்திலே இயங்கி வந்தாலும்கூட, இதன் உற்பத்தி மிக அதிகமாகப் பெருகிக் கொண்டு வருகிறது. மத்திய அரசு இதற்கு ஓர் ஆதார விலையைக் கொடுக்க வேண்டுமென்று, கேரளத்திலே, தமிழகத்திலே உள்ள விவசாயிகள் கேட்டிருக்கிறார்கள். அந்த வகையிலே, வருங்காலத்திலே, இந்தக் கழகம் நிச்சயமாக இலாபம் ஈட்டும். கடந்த ஆண்டுகூட, இரண்டு கோடி ரூபாய் அளவிலே இலாபம் பெற்றிருக்கிறது. மேலும், முதிர்ந்துபோன ஓர் இலட்சத்திற்கும்



மேற்பட்ட மரங்கள், இன்றைக்கு 12 கோடி ரூபாய் அளவிற்கு வனக் கழகத்திடம் இருக்கின்றன என்ற செய்தியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, இந்த வனத் துறையின்மூலமாக நடத்தப்படுகின்ற மிகச் சிறந்த இன்னோர் அமைப்பு, தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம். இது, தலைவர் கலைஞர் அவர்கள் முதன்முறையாக முதல்வராகப் பொறுப்பேற்றுக் கொண்டபோது, ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையிலிருந்து வந்த அகதிகளுக்காக, அவர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்பதற்காக, நீலகிரி மாவட்டத்திலே 4431 ஹெக்டேர் நிலப்பரப்பிலே இந்தத் தேயிலைத் தோட்டக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கழகம் ஆரம்பிக்கப்பட்டு, கடந்த ஆண்டு வரை, நஷ்டத்திலே இயங்கி வந்தது. இந்த ஆண்டிலே, இதனுடைய உற்பத்தி இலக்கு 83 இலட்சம் கிலோ பதப்படுத்தப்பட்ட தேயிலையை உற்பத்தி செய்வதாகும். ஆனால், அதிகாரிகளும் மற்றவர்களும் செய்த கடுமையான முயற்சியின் விளைவாக, இன்றைக்கு ஒரு இலட்சம் கிலோ தேயிலையை உற்பத்தி செய்திருக்கிறது. இது 70 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட இருக்கிறது. இதன்மூலமாக, இந்த ஆண்டு 30 கோடி ரூபாய் இலாபம் ஈட்ட இருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஏறத்தாழ அரசு நடத்துகின்ற எல்லாக் கழகங்களையும்விட, மிக அதிக இலாபம் ஈட்டுகின்றது இந்தக் கழகம் என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்தவகையிலே இந்தக் கழகம் நிர்வாகம் செய்து கொண்டிருக்கிறது. அந்தக் கழகத்தின் எம்.டி. டாக்டர் தாகூர் அவர்களுக்கும் அதேபோல, சேர்மன், சோமசுந்தரம், வனத் துறைத் தலைவர், சித்திரப்பு அவர்களுக்கும், அங்கே வேலை செய்கின்ற அத்தனை அதிகாரிகளுக்கும் என்னுடைய நன்றியினை அரசின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு, இக்கழகம், அரசுக்குக் குத்தகைத் தொகையாக ரூ. 5 கோடியும், இடைக்காலப் பங்குத் தொகையாக ஒரு கோடியே இருபது இலட்சம் ரூபாயும் அளித்திருக்கிறது. இக்கழகம், 6786 பணியாளர்களுக்கு மறுவாழ்வு கொடுக்கும் நிலையிலே இருக்கிறது.

அதேபோல, இந்தத் துறையிலே வேலைவாய்ப்புகளெல்லாம் அதிகமாக உருவாக்கப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் சொன்னார்கள். இந்த அரசு

பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, இரண்டு வனத் துறை அலுவலர்களுக்கு கூடுதல் வனத் துறைத் தலைவராகப் பதவி உயர்வு அளித்திருக்கிறது. நான்கு வனப் பாதுகாவலர்களுக்கு வனத் துறைத் தலைவராகப் பதவி உயர்வு தரப்பட்டுள்ளது. மூன்று துணை வனப் பாதுகாவலர்களுக்கு வனப் பாதுகாவலராகப் பதவி உயர்வு தரப்பட்டுள்ளது. இரண்டு உதவி வனப் பாதுகாவலர்களுக்கு துணை வனப் பாதுகாவலராகப் பதவி உயர்வு தரப்பட்டுள்ளது. அறுபத்தி ஆறு வனவர்களுக்கு சரகராகப் பதவி உயர்வு தரப்பட்டுள்ளது. நூற்றைம்பத்தியொன்று வனக் காப்பாளர்களுக்கு வனவராகப் பதவி உயர்வு தரப்பட்டுள்ளது. இரண்டு சமூகவியலர்களுக்கு சமூகவியல் விஞ்ஞானியாகப் பதவி உயர்வு தரப்பட்டுள்ளது. பதினான்கு அமைச்சுப் பணியாளர்களுக்கு அலுவலராகப் பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. மேலும், நூற்றி ஒன்பது அமைச்சுப் பணியாளர்களுக்குப் பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. 868 வனக்காப்பாளர்ளை வனவர்களாகப் பணி நியமனம் செய்யும்பொருட்டு, தமிழ்நாடு வனச் சார்நிலைப் பணி சிறப்பு விதி 2-னைத் தளர்த்தி வனவர் பதவியில் பணி நியமனம் செய்து, 868 வனக் காப்பாளர்களின் பணியை வரன்முறை செய்து சமீபத்தில் அரசு ஆணையிட்டுள்ளது.

பிற்பகல் 1-50

அதேபோல, 1910-லே ஆரம்பிக்கப்பட்ட, தென்னக வனச் சரகக் கல்லூரி—S.R.F.C.—கோவையைத் த்லைநகராகக் கொண்டு இயங்குகிற அந்தக் கல்லூரி, ஏழு ஆண்டுகளாகக் கடந்த ஆட்சியில் மூடிக் கிடந்தது. இந்த ஆட்சி, பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு, பல்வேறு முயற்சிகள் எடுத்து, மீண்டும் இந்த ஆண்டு முதல் அந்த வனக் கல்லூரி இயங்கி வருகிறது என்ற நல்ல செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வனத் துறையின்மூலமாக, பழைய அமைப்பிலே நிருவாகம் இப்போது நடந்து கொண்டிருக்கிறது. இதை, புதிய நிருவாகச் சீரமைப்பு என்ற முறையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து கொண்டு, நல்லமுறையிலே வனங்களைப் பாதுகாப்பதற்காக, நிருவாக அமைப்புச் சீர்திருத்தம் இந்த ஆண்டிலேயே மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



சில அறிவிப்புகள். கே.வி.கே. என்று சொல்லப்படுகிற கிருஷி விஞ்ஞான் கேந்திரா என்று வேளாண்மைத் துறையிலே இருக்கின்ற அந்த நிறுவனங்களைப்போல, விவசாயிகளுக்கும், இந்தத் துறையிலே இருக்கின்றவர்களுக்கும் பயிற்சி அளிக்கின்ற திட்டமாக, வி.வி.கே. என்ற வகையிலே, 'வன விஞ்ஞானக் கேந்திரா'-க்கள் தமிழகத்திலே, கிருஷ்ணகிரி, திருச்சி, மதுரை, திருநெல்வேலி போன்ற 4 இடங்களில் இருக்கின்றன. இவற்றை மேலும் விரிவாக்கி, 15 இடங்களிலே வன விஞ்ஞானக் கேந்திராக்கள் அமைக்கப்பட்டு, தமிழகத்திலே இருக்கின்ற அத்தனை விவசாயிகளுக்கும், மரத்தைப் பற்றியும் நல்ல விதைகளைப் பற்றியும், அவற்றை எவ்வாறு வளர்க்க வேண்டும் என்பதைப் பற்றியும் விளக்குவதற்காக சேலம், ஈரோடு, வேலூர், திருநெல்வேலி, கோவில்பட்டி, தூத்துக்குடி, திருவண்ணாமலை, செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, மதுரை, தேனி மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் 15 விரிவாக்க மையங்கள் இந்த ஆண்டு ஏற்படுத்தப்பட உள்ளன. இவற்றின்மூலம் 15 இலட்சம் தேக்கு, ஈட்டி, வேம்பு, சவுக்கு, வாகை மற்றும் தைல மர நாற்றுகள் மக்களுக்கு மலிவு விலையில் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக, இந்த அரசு 16 இலட்சம் ரூபாய் இந்த ஆண்டு ஒதுக்கியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், வனப் பாதுகாப்புப் பணியிலே திறம்படச் செயலாற்றிய 15 வனச் சார்நிலைப் பணியாளர்களுக்கும், 13 வனக் காவலர்களுக்கும், 2 துணை வனப் பாதுகாவலர்களுக்கும், 'முதலமைச்சர் தங்கப் பதக்கம்' வழங்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதன்முதலாக இத்தகைய ஆணையை வழங்கி, இத்துறையைச் சிறப்பித்திருக்கிறார்கள். பல்வேறுபட்ட களப் பணியாளர்களுக்கு, பணியினை வரன்முறைப் படுத்துவதுதொடர்பான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. அதேபோல், களப் பணியாளர்களுக்குச் சீரான இடைவெளியில், சீருடை வழங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

தேசிய வனக் கொள்கைபோல, தமிழகத்திலும், மாநில வனக் கொள்கை விரைவிலே வகுக்கப்படும். சவால் விடுகின்ற மற்றும் தைரியம் கொடுக்கும் பணியான, வனப் பாதுகாப்பு வளர்ச்சிப் பணியினை அர்த்தம் உள்ளதாக ஆக்க, பல்வேறு நிலைகளில் உள்ள வனப் பாதுகாவலர்களின் திறனை, முறையான மனிதவள மேம்பாட்டுப் பயிற்சியின்மூலம் உயர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

வனப் பகுதிகளிலே, வனக் காவலை மேம்படுத்த, இவ்வாண்டு 30 வனக் காவலர்கள், 30 வனக் காப்பாளர் பதவிகள், பகுதி-2 திட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்படவுள்ளன. அதேபோல், இதுவரை மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்தான் ஆரம்பிக்கப்பட்டு வந்தது. இந்த ஆண்டு முதல், 43.5 இலட்சம் ரூபாய் செலவில், கிழக்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், வேலூர் மற்றும் சேலம் மாவட்டங்களிலும் உயிரின வாழ்க்கைச் சூழலை மேம்படுத்த சிறப்புத் திட்டமாக ஏற்படுத்தப்படவுள்ளது. அதேபோல், வனப் பாதுகாப்புப் பணியிலே ஈடுபடும் வனப் பாதுகாவலர்களின் தீரச் செயல்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் வகையில், வெகுமதிகள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

வன வளங்களைப் பாதுகாப்பதில், உயிரையும் துச்சமாக நினைத்து, வனப் பணியில் ஈடுபட்டு உயிரிழந்த வனச் சிப்பந்திகளின் குடும்பங்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்க, தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

வனத் துறை மூலம், தமிழ்நாடு முழுவதுமுள்ள மாநகராட்சிகளின், நகராட்சிகளின், பேரூராட்சிகளின் சுற்றுப்புறச்சூழலை மேம்படுத்த 2.77 இலட்சம் மரக் கன்றுகள், 3.82 கோடி ரூபாய் செலவில் இந்த ஆண்டு நடப்படும்.

வனக் காவலர்கள் மற்றும் வனக் காப்பாளர்களுக்கு, முக்கியமான இடங்களில், மொத்தம் 20 குடியிருப்புகள் கட்டப்படும். அதேபோல், நிறைய உறுப்பினர்கள் தங்களுடைய கடிதத்தில் வன ஓய்வு இல்லங்கள் வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். அவர்களுடைய கோரிக்கைகளை எல்லாம் ஏற்று, கீழ்க்கண்ட 6 இடங்களிலே வன ஓய்வு இல்லங்கள் 'Guest Houses' கட்ட இந்த அரசு தீர்மானித்திருக்கிறது:

1. இராமேஸ்வரம்
2. கிண்டி
3. ஏற்காடு
4. திருச்சி
5. தேனி
6. ஈரோடு

ஆகிய 6 இடங்களிலே, 50 இலட்சம் ரூபாய் செலவில் இந்த வன இல்லங்கள் கட்டப்படும்.



வனத் துறையினுடைய 150-வது ஆண்டு விழா இந்த ஆண்டு ஜுன் மாத இறுதியிலே நமது மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தலைமையிலே நடைபெறவிருக்கிறது. சந்தன மரத்தைத் தனியார் வளர்க்க வகை செய்யும் சட்டத்தை இன்றைக்குக் காலையிலேதான் நான் அறிமுகம் செய்திருக்கிறேன். அதன்மூலமாக, அழிந்துவரும் விலைமதிப்புமிக்க இந்த மரத்தை மீண்டும் எல்லோரும் பயிரிட ஏதுவாக இருக்கும்.

பிற்பகல் 1-55

மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கெனவே, இந்தச் சபையில் அறிவித்தபடி, உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க, வனத் தோட்டக் கழகத்தின்மூலமாக, மேலும் ஒரு சந்தன ஆலை, அவர் விரும்புகின்ற இடத்தில் தொடங்க ஏற்பாடு செய்யப்படும் என்ற நல்ல செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அறிஞர் அண்ணா அறிவியல் பூங்காவில், 1980-லிருந்து பணிபுரியும் 46 தற்காலிக ஆண், பெண் ஊழியர்களை நிரந்தரப் பணியாளர்களாக நியமனம் செய்ய அரசு முடிவு செய்துள்ளது.

அடுத்ததாக, எனக்குக் கொடுத்திருக்கின்ற இன்னொரு துறையைப் பற்றி ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகின்றேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஐந்து நிமிடங்களில் முடித்துவிடுகின்றேன். 167 ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்ட தமிழ்நாடு அரசு அச்சகம், மத்தியக் கிழக்கு ஆசியாவிலேயே பெரிய அச்சகமாக அமைந்திருக்கிறது. சென்னை மின்ட்டிலே இருக்கின்ற அந்த அச்சகத்தையும் சேர்த்து ஏழு கிளைகளைக் கொண்டிருக்கிறது. அவை, சென்னை உயர் நீதிமன்ற வளாகத்திலுள்ள கிளை அச்சகம், விருத்தாசலத்திலுள்ள கிளை அச்சகம், திருச்சியிலே உள்ள கிளை அச்சகம், புதுக்கோட்டையிலே உள்ள கிளை அச்சகம், மதுரையிலே உள்ள கிளை அச்சகம் மற்றும் சேலத்திலே உள்ள கிளை அச்சகமாகும். அச்சுத் துறையின்மூலமாக, இந்த இடங்களிலெல்லாம் ஏறத்தாழ 6289 பேர் பணிபுரிகிறார்கள். இவ்வளவு பெரிய அச்சகம் பழைய நிலையிலேயே புடைப்பச்சு (letter press) முறையிலே இதுவரை இயங்கி வந்திருக்கிறது. ஆனால், இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டவுடன், நவீன யுத்திகளைக் கையாண்டு கணினிகள், ஒளிஅச்சு மற்றும் வெப் ஆஃப்செட் முறைக்கு அந்த அச்சகங்களைப் படிப்படியாக மாற்றுவதற்கு அரசாங்கத்தின்மூலமாக ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

அதன்பயனாக, தமிழ்நாடு பரிசுச் சீட்டுகள், கண்ணைக் கவரும் வகையிலே, தனியார் அச்சகங்களுக்கு நிகராக அச்சடிக்கப்பட்டு, இதுவரை, 150 இலட்சம் என்ற அளவிலே இலக்கு இருந்ததை 250 இலட்சமாக உயர்த்தி, ஏழு வகைகளிலே, சீரிய முறையில், இப்போது அவற்றை அரசு அச்சகம் அச்சடித்து வருகிறது.

அதுபோல, சேலத்திலுள்ள அரசு கிளை அச்சகத்தை மேலும் நவீனப்படுத்த வேண்டுமென்று அண்ணன், திரு. வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, 1.39 கோடி ரூபாய் செலவிலே வெப் ஆஃப்செட் இயந்திரங்களை வாங்கி அச்சுப் பணியை நவீனமயமாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுபோல, விருத்தாசலம், திருச்சி, புதுக்கோட்டையிலுள்ள அரசு கிளை அச்சகங்களை நவீனமயமாக்கவும், மேம்படுத்தப்பட்ட நவீன இயந்திரங்களை வாங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் அச்சடிக்கும் பணியில் முன்னணியில் உள்ள தனியார் அச்சகங்களுக்கு நிகரான செயல்திறனை இவ்வச்சகங்கள் பெறும். நாளுக்குநாள் பெருகிவரும் அச்சுப் பணிகளைச் செவ்வனே செய்யவும் இது வழி வகுக்கும். வாராவாரம் புதன்கிழமை அன்று வெளிவர வேண்டிய தமிழ்நாடு அரசின் அரசிதழ் முன்பெல்லாம் பல வாரங்கள் பின் தங்கி இருந்தது. அச்சகத்தின் உற்பத்தித் திறனைச் சீராக்கியபின் அரசிதழ்கள் குறித்த நாளிலேயே வெளியிடப்படுகின்றன.

நடந்து முடிந்த நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற இடைத்தேர்தலுக்கான 4.63 கோடி வாக்குச் சீட்டுகளை அச்சடிக்க வழக்கமாகக் கொடுக்கப்படும் கால வரம்பைப் பாதியாகக் குறைத்துக் கொடுத்து, குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாகவே அச்சடித்துக் கொடுத்தும் தேர்தல் ஆணையத்தினுடைய சிறப்பான பாராட்டுதலைப் பெற்றிருக்கிறது. அதற்காக, அச்சுத் துறையைச் சேர்ந்த, அதற்காக உழைத்த அத்தனை ஊழியர்களுக்கும் எனது பாராட்டுதலை இந்த மன்றத்தின்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆண்டுதோறும், புத்தாண்டில் ஜனவரி மாதம் தொடங்கிய பின்னரே அச்சிட்டு வழங்கப்பட்டு வந்த அரசு நாட்காட்டிகள் இப்போது



எடுக்கப்பட்ட தீவிர முயற்சிகளின் காரணமாக, இந்த ஆண்டு டிசம்பர் மாதமே சிறப்பாக அச்சடிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

மேலும் உயர்நீதிமன்ற வளாகத்திலே இயங்குகின்ற கிளை அச்சகத்திற்கு, அதிநவீன நான்கலகு மறு தோன்றி தொடரச்சு இயந்திரத்துடன் (Web Offset Printing Machine-4 Units) அதற்கான பிற சாதனங்களையும் ரூ.87 இலட்சம் செலவில் வழங்கிட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 2-00

இத்துறைக்கு நான் பொறுப்பேற்றதற்குப் பின்பு, பல இடங்களிலே எதிர்பாராத ஆய்வுகளை மேற்கொண்டு, அங்கே இருக்கின்ற பணிகளை எல்லாம் செம்மைப்படுத்தி இன்றைக்கு எந்த இடத்திலும் 'பேக் லாக்' என்று சொல்லப்படுகின்ற பின்னடைவு இல்லாத அளவுக்கு, எல்லாத் துறை சம்பந்தப்பட்டவைகளும், கொடுத்த அன்றே அச்சிட்டு வெளியிடக்கூடிய ஒரு நல்ல நிலையை இந்த அச்சகத் துறை பெற்றிருக்கிறது. இதிலே பணிபுரிகின்றவர்களுக்குப் பல்வேறு நலத் திட்டங்களை வழங்குவதற்கு அரசு தயாராக இருக்கிறது. அச்சக ஊழியர்கள் அனைவரும் மிகச் சிறப்பாக இப்போது பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். மிகச் சிறப்பாக நடைபெறும் இந்த அச்சகத் துறை சம்பந்தமாக பல்வேறு வெட்டுத் தீர்மானங்களை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள். அந்த வெட்டுத் தீர்மானங்களிலுள்ள நல்ல கருத்துகளை எல்லாம் ஏற்றுக்கொண்டு, மீண்டும் நல்லமுறையில் இந்த அச்சகத் துறை இயங்குவதற்கு உறுப்பினர்களுடைய கருத்துகள் பயன் உள்ளவைகளாக இருக்கும் என்பதைக் கூறி, வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் நீங்கள் திரும்பப்பெற்று இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 1997 ஆம் ஆண்டு 20 அச்சகப் பணியாளர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அதுபற்றி நான் இந்தச் சட்டமன்றத்திலே குறிப்பிட்டிருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த 20 அச்சகத் தொழிலாளர்களை மீண்டும் பணிக்கு எடுத்துக்கொள்ள ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் தனியாக இதுபற்றி விவரம் தெரிவித்தால், அந்தக் கோரிக்கை நியாயமாக இருந்தால், அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

**(அ) கோரிக்கை எண் 43 - எழுதுபொருள்-அச்சுத் துறை**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 43—எழுதுபொருள்-அச்சுத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.வ. அப்துல் நாசர்.

திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை. திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.



டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"எழுதுபொருள்-அச்சுத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 59,27,13,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**(ஆ) கோரிக்கை எண் 44 - காட்டுவளத் துறை**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கோரிக்கை எண் 44 – காட்டுவளத் துறை வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.வ. அப்துல் நாசர்.

திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை. திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன்.

திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன், இருக்கையில் இல்லை. திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 87,72,14,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**(இ) கோரிக்கை எண் 58 - காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கோரிக்கை எண் 58 - காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. கோவிந்தன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 101,48,74,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (20-5-1998) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை, பிற்பகல் 2-04 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

151. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இடமற்ற சாராவி மற்றும் வார்னிஷ் (ஃபிரஞ்சு பாலிஷ்) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 5-12-1997 ஆம் நாளிட்ட 280 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

200. மானியக் கோரிக்கை எண் 43 - எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99. (தமிழ், ஆங்கிலம்)

201. எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை பற்றிய சாதனைத் திட்டம், 1998-99. (தமிழ், ஆங்கிலம்)



202. எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் மக்கள் சாசனம் என்ற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

203. மானியக் கோரிக்கை எண் 44 - காட்டுவளத் துறை மற்றும் மானியக் கோரிக்கை எண் 58 - காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99. (தமிழ், ஆங்கிலம்)

204. வனத் துறை பற்றிய செயலாக்க வரவு-செலவுத் திட்டம், 1998-99. (ஆங்கிலம்)

205. வனத் துறையின் மக்கள் சாசனம் என்ற புத்தகம்.

206. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தி ஆறாவது அறிக்கை, 1997-98.

207. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தி ஏழாவது அறிக்கை, 1997-98.

208. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தி எட்டாவது அறிக்கை, 1997-98.

209. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தி ஒன்பதாவது அறிக்கை, 1997-98.

210. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பதாவது அறிக்கை, 1997-98.

## இணைப்பு I

*(255ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை

## மானியக் கோரிக்கை எண் 43

## கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99

தமிழ்நாடு அரசுக்குத் தேவையான அச்சுப் பணிகளைக் கவனிக்க அரசு அச்சகம் முதன்முதலில் 1831 ஆம் ஆண்டு 10 தொழிலாளர்களுடன் தொடங்கப்பட்டது. 167 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள எழுதுபொருள் அச்சுத்துறை, சென்னை மாநகரத்தில் இரு அச்சகங்களையும், மாவட்டங்களில் ஐந்து அச்சகங்களையும் கொண்டு இயங்கி வருகிறது. இவை தவிர, சென்னை மாநகரத்தில் ஒரு எழுதுபொருள் அலுவலகம் மற்றும் அரசு வெளியீடுகள் விற்பனை நிலையமும் உள்ளன.

அச்சுப் பிரிவுகளுக்குத் தேவையான பொருட்களைக் கொள்முதல் செய்தல், இயந்திரங்கள் வாங்குதல், பொருள்களின் மைய நிர்வாக அமைப்பு, பொது நிர்வாகம், தொழில் உறவுகள், பணியாளர் நிர்வாகம். ஆகியவை இயக்ககத்தின் பணிகளாகும். இத்துறை எழுதுபொருள்கள், தட்டச்சுப் பொறிகள், படிபெருக்கிகள், கணக்கீட்டுப் பொறிகள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்து மாநில அரசின் கீழ் இயங்கும் அனைத்துத் துறைகளுக்கும் வழங்கி வருகிறது. வரவு-செலவுத் திட்ட ஆவணங்கள், தமிழ்நாடு அரசிதழ், சிறப்புக் கழுக்க அறிக்கைகள், விதிக்கோர்வைகள், நடைமுறை நூல்கள், முழுக் கழுக்க பணிகளான வாக்குச் சீட்டுகள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் குழுவின் அறிவிக்கைகள், அரசுத் தேர்வுகளின் வினாத் தாட்கள், பரிசுச்சீட்டுகள் ஆகியன அரசு அச்சகங்களில் அச்சிடப்படுகின்றன. இவை தவிர, தலைமைச் செயலகத் துறைகள், துறைத் தலைவர்கள், தமிழ்நாடு மாநிலக் கணக்காய்வுத் தலைவர் ஆகியோர் ஒப்படைக்கும் அச்சுப் பணிகள் மற்றும் நிலைப்படுத்தப்பட்ட, நிலைப்படுத்தப்படாத படிவங்கள் அச்சிடல் ஆகிய பணிகளும் சிறப்பான முறையில் நடைபெறுகின்றன.

ஏழு அச்சகங்கள், ஓர் எழுதுபொருள் கிடங்கு மற்றும் ஓர் அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம் மற்றும் ஒரு துணை விற்பனை நிலையம் ஆகியவற்றின் தலைமை அமைப்பாக எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்ககம் இயங்கி வருகிறது. இவ்வியக்ககப் பணியாளர்களின் எண்ணிக்கை 238 ஆகும்.

அண்மையில் நடைபெற்ற 1998 ஆம் ஆண்டின் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலுக்கான 4.63 கோடி வாக்குச் சீட்டுகள் அச்சிடும் பணியை வெகு குறுகிய காலத்திலும், குறித்த காலக் கெடுவிற்குள்ளும் இத்துறை முடித்துக் கொடுத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், இத்தேர்தலுக்குத் தேவையான எழுதுபொருள்கள், அழியாத மை போன்றவற்றையும் குறித்த காலத்தில் கொள்முதல் செய்து வழங்கி உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

**பரிசுச் சீட்டுகள்:**

வாராந்திர மற்றும் மாதாந்திர குலுக்கலுக்குத் தேவையான 252 இலட்சம் பரிசுச்சீட்டுகள் 7 வகைகளில் சீரிய முறையில் பல வண்ணங்களில் அச்சிடப்பட்டு வருகின்றன. பரிசுச் சீட்டுத் துறையின் புதியத் திட்டத்தின்படி மாதத்திற்கு 3 கோடி அளவிற்குப் பரிசுச்சீட்டுகள் அச்சடிப்பு அதிகரிக்கப்பட்டு உள்ளதாலும், அவற்றை உரிய நேரத்தில் அச்சிட்டு வழங்கவும், பரிசுச் சீட்டில் அச்சிடப் பெறும் எண்கள் முழுமையாகச் சரிபார்க்கப்பட்டதெனச் சான்றளிக்கும் வகையிலும் இவற்றை அச்சடிப்பதில் ரகசியத்தைப் பாதுகாக்கும் வகையிலும் அதி நவீன இயந்திரங்களை வாங்குவதற்கான கருத்துரு அரசின் ஆய்விலுள்ளது. இத்திட்டங்கள் நிறைவுற்றதும், சென்னை மைய அச்சகம் பரிசுச்சீட்டு அச்சிடும் பணியில் மிக நவீனமயமான அச்சகமாக உயர்வு பெறும் என்பது திண்ணம்.

**அரசு அச்சகங்களை நவீனமயமாக்கல் திட்டம்:**

பல்வறு துறைகளின் அன்றாடப் பணிக்குத் தேவைப்படும் நிலைப்படுத்தப்பட்ட மற்றும் நிலைப்படுத்தப்படாத படிவங்கள், தமிழ்நாடு அரசுப் பரிசுச் சீட்டு மற்றும் தமிழ்நாடு அரசிதழ் ஆகியவற்றை, ஆண்டிற்கு 54 கோடி பதிப்புகள் (ஏ2 வடிவில்) வெளியிடும் வகையில் அரசு அச்சகங்கள் அச்சிடும் பணிகளை மேற்கொள்கின்றன.



அரசின் பல்வேறு நலத்திட்டங்களால், பெருகிக்கொண்டு வரும் அச்சுப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டும், அச்சிடும் பணியில் ஏற்பட்டுள்ள நவீன முன்னேற்றங்களைக் கருத்திற்கொண்டும் அரசு மைய அச்சகத்தில் கீழ்க்குறிப்பிட்டுள்ள அதி நவீன இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன:-

(1) கணிணி அச்சு இயந்திரம்

(2) ஒளி அச்சு இயந்திரம்

(3) இருமுறை ஒளி வெளிப்படும் இயந்திரம்

(4) மறு தோன்றி அச்சுத்தகடு தயாரிக்கும் இயந்திரம்

(5) பல வண்ண மறு தோன்றி தொடர் அச்சு இயந்திரம் (Web Offset Machine)

இதேபோன்று, சென்னை உயர்நீதிமன்ற வளாகம் மற்றும் சேலத்திலுள்ள அரசு கிளை அச்சகங்களிலும் ரூ. 139 கோடி செலவில் வெப்-ஆப்செட் இயந்திரங்கள் வாங்கி அச்சுப் பணியை நவீனமயமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விருத்தாசலம், திருச்சி மற்றும் புதுக்கோட்டையில் உள்ள அரசு கிளை அச்சகங்களை நவீனமயமாக்கவும், நாளுக்கு நாள் பெருகிவரும் அச்சுப் பணிகளைச் செவ்வனே செய்து முடிக்கும் வகையில் மேம்படுத்தப்பட்ட நவீன இயந்திரங்களை வாங்கவும், அச்சடிக்கும் பணியில் முன்னணியில் உள்ள தனியார் அச்சகங்களுக்கு நிகராகச் செயல்படவும் ரூ.338.31 இலட்சம் செலவில் அமைந்த கருத்துரு அரசின் ஆய்விலுள்ளது.

**ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம்:**

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் திட்டப் பணிகளுக்காக ரூ.506.06 இலட்சம் ஒதுக்கீடு செய்ய மாநிலத் திட்டக் குழுவிற்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 1. அச்சகப் பிரிவுகள்

**1. அரசு மைய அச்சகம், சென்னை:**

அரசு மைய அச்சகம் ஒப்பளிக்கப்பட்ட 4,173 பணியாளர்களில் 1-1-1998 அன்று 3,781 பணியாளர்களைக் கொண்டு இயங்கி வருகிறது.

பணி மேலாளர் இதன் நிர்வாகத்தைக் கவனித்து வருகிறார். இவ்வச்சகத்தில் நவீன வசதிகளுடன் கூடிய அச்சிடும் மற்றும் நூற்கட்டும் இயந்திரங்கள், அச்சுக் கோர்ப்பு இயந்திரங்கள், படக்கட்டை தயாரிக்கும் பிரிவு, தொய்வை முத்திரைப் பிரிவு மற்றும் அண்மைக் கால தொழில் நுட்ப திறனுடன் கூடிய கணிணி அச்சு இயந்திரம் போன்ற அனைத்து இயந்திரங்களும் செயல்பாட்டில் உள்ளன.

பரிசுச் சீட்டுகளை அச்சடிக்கும் பணி 1994 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதக் குலுக்கலிலிருந்து அரசு மைய அச்சகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அச்சகத்தின் திறனைக் கணக்கிற் கொண்டு தற்போது 2 கோடி பரிசுச் சீட்டுகள் அச்சடிக்கப்பட்டு வருகின்றன. பரிசுச் சீட்டுகளின் தேவை படிப்படியாக 2.58 கோடியாக உயர்ந்துள்ளதாலும், மற்ற மாநில பரிசுச் சீட்டுகள் மற்றும் உடனடி பரிசுச் சீட்டுகள் ஆகியவற்றை இம்மாநிலத்தில் தடை செய்வதென்ற அரசின் கொள்கை முடிவினாலும் பரிசுச் சீட்டுகளின் தேவை 4 கோடியாக உயரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இப் பரிசுச் சீட்டுகளை அச்சிடத் தேவையான சிறப்பு அச்சு இயந்திரங்களை ரூ. 91.00 இலட்சம் செலவில் வாங்குவதற்கான திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது.

அதிவேக, எண்மான அச்சுக் கருவி நிமிடத்திற்கு 90/120 பிரதிகள் அச்சடிக்கும் தானியங்கி இயந்திரமாகும். அனைத்து ரகக் காகிதங்களையும் இவ்வியந்திரத்தில் பயன்படுத்தி அசல் ஆவணங்களைத் தேவையான அளவில் எடுக்கலாம். அசல் ஆவணத்தின் துணை கொண்டு பன்மொழி ஆவணங்களை நேரிடையாக அச்சிடலாம். சுருக்க ஆவணங்களில் உள்ள வரைப்படங்கள், ஓவியங்கள் ஆகியவற்றை உள்ளவாறே அச்சிடலாம். கூர் உணர்வுடைய மற்றும் இரகசிய ஆவணங்களை அச்சிடுவதற்கும் இவ்வியந்திரம் பயன்படும். அரசு மைய அச்சகத்தை நவீனப்படுத்துவதற்குத் தேவையான இயந்திரங்களுடன் இரண்டு அதிவேக எண்மான அச்சுக் கருவிகளையும் ரூ.11.00 இலட்சம் செலவில் நிறுவுவதற்கான திட்டம் அரசின் ஆய்விலுள்ளது.

## 2. அரசுக் கிளை அச்சகம், உயர் நீதிமன்றம், சென்னை:

இவ்வச்சகம், 1923 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. ஒப்பளிக்கப்பட்ட 281 பணியாளர்களைக் கொண்டு மூன்று முறை மாற்றுப்பணிகளில் உயர் நீதிமன்றக் கட்டட வளாகத்தில் இயங்கி வருகிறது. இக்கிளை அச்சகம் ஒரு துணைப் பணி மேலாளரால், 3 உதவிப் பணி



மேலாளர்களின் உதவியுடன் நிர்வகிக்கப்படுகிறது. நீதிமன்றம் சம்பந்தப்பட்ட பணிகளை உடனுக்குடன் செய்து முடித்திட உயர் நீதிமன்ற வளாகத்தில் இவ்வச்சகம் செயல்பட்டு வருகிறது.

சென்னை உயர் நீதிமன்றத்திற்குரிய தினசரி மற்றும் மாதாந்திர வழக்குப் பட்டியல்களை அச்சிடுவது இவ்வச்சகத்தின் முக்கியப் பணியாகும்.

இது தவிர, கீழ்க்காணும் நிலைப்படுத்தப்பட்ட படிவங்களும் அறிக்கைகளும் இவ்வச்சகத்தில் அச்சடிக்கப்பட்டு வருகின்றன :

(1) கல்வித் துறைக்கான பள்ளி இறுதித் தேர்வுச் சான்றிதழ்கள்

(2) மருத்துவத் துறைப் படிவங்கள்

(3) நீதிமன்றங்களுக்கான நீதித் துறைப் படிவங்கள்

(4) போக்குவரத்துத் துறை மற்றும் வணிக வரித் துறைக்கான நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள்

(5) இந்திய சட்ட அறிக்கைகள் (சென்னை வெளியீடு) மாதம் இரு முறை

அரசு வெளியீடுகளை விற்பதற்கான ஒரு துணை விற்பனை நிலையம் இக்கிளையில் இயங்கி வருகிறது.

## 3. அரசுக் கிளை அச்சகம், மதுரை:

1976 ஆம் ஆண்டு முதல் இக்கிளை அச்சகம் இயங்கி வருகிறது. தனது சொந்தக் கட்டடத்தில், ஒப்பளிக்கப்பட்ட 363 தொழிலாளர்களைக் கொண்டு ஒரு துணைப் பணி மேலாளரின் தலைமையில் 2 முறைமாற்றுப் பணிகளில் இது இயங்கி வருகிறது. தொழில் நுட்பப் பிரிவில் 2 உதவிப் பணி மேலாளர்களும், ஓர் உதவிப் பொறியாளரும், நிர்வாகப் பிரிவில் ஓர் உதவி இயக்குநரும், துணைப் பணி மேலாளருக்கு உதவியாகச் செயல்பட்டு வருகின்றனர்.

இக்கிளையில் கீழ்க்காணும் துறைகளுக்கான நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள் அச்சிடப்பட்டு வழங்கப்படுகின்றன:-

(1) வருவாய்த் துறை

(2) அரசுத் தேர்வுகள் இயக்ககம்

[1998 மே 19

(3) கருவூலம் மற்றும் கணக்குத் துறை

(4) மருத்துவத் துறை

(5) காவல் துறை

(6) பதிவுத் துறை

(7) வணிக வரித் துறை

மேலும், கீழ்க்கண்ட நிலைப்படுத்தப்படாத படிவங்களும் இங்கு அச்சிடப்படுகின்றன:-

(1) சட்டக் கல்லூரி விண்ணப்பங்கள்

(2) அரசுத் துறை அட்டவணைகள்

(3) பொதுப்பணித் துறை விலைப்பட்டியல்

(4) நில அளவைத் துறை "ஏ" பதிவேடு

(5) காவல் துறையில் ஐ.எஸ். அட்டைகள்

தொழிலாளர் நலனுக்கென ஒரு கூட்டுறவு நாணயச் சங்கம், சிற்றுண்டிச் சாலை மற்றும் ஒரு மனமகிழ் மன்றம் ஆகியவை இக்கிளை அச்சகத்தில் இயங்கி வருகின்றன. இங்கு பணியாற்றும் தொழில்நுட்பப் பணியாளர்களுக்குச் சீருடைகள் வழங்கப்படுகிறது. தொழிலாளர் நலத் துறையினரால் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க தொழிலாளர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். தொழில் கல்வித் திட்டம் இங்கு செயல்படுத்தப்படுகிறது.

### 4. அரசுக் கிளை அச்சகம், சேலம்:

1966 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்த அச்சகம் தனது சொந்தக் கட்டடத்தில் ஒப்பளிக்கப்பட்ட 206 பணியாளர்களுடன் 2 முறை மாற்றுப் பணிகளில் ஒரு கிளை மேலாளரின் பொறுப்பில் இயங்கி வருகிறது.

2. இவ்வச்சகத்தால் தமிழ்நாட்டில் 29 மாவட்டங்களில் உள்ள அரசு அலுவலகங்களுக்கும் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டு வரும் நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள் மற்றும் பதிவேடுகள் விவரம் வருமாறு:-



1998 மே 19]

(1) டிடி என்டிசி. படிவங்கள்

(2) மருத்துவத் துறைப் படிவங்கள்

(3) உயர்நீதிமன்றப் படிவங்கள்

(4) எஸ்.எஸ்.எல்.சி. விடைப் புத்தகங்கள்

(5) நிலைப்படுத்தப்படாத படிவம் 'ஏ' பதிவேடுகள்.

3. கீழ்க்காணும் மாவட்டங்களுக்கான மாதாந்திர மாவட்ட அரசிதழ்கள் மற்றும் சிறப்பு வெளியீடுகளும் இக்கிளையில் அச்சிடப்படுகின்றன:

(1) சேலம்

(2) கோயம்புத்தூர்

(3) ஈரோடு

(4) நாமக்கல்

4. இக்கிளை அச்சகத்தில் தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதி, கூட்டுறவுச் சங்கம், மனமகிழ் மன்றம் மற்றும் நூலகம் ஆகிய வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

### 5. அரசுக் கிளை அச்சகம், திருச்சி:

இவ்வச்சகம் 1965 ஆம் ஆண்டு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் முதலாவது மண்டல அச்சகமாக அரியமங்கலத்தில் ஒரு வாடகைக் கட்டடத்தில் தொடங்கப்பட்டது. பின்னர் துவாக்குடியில் ரூ.23 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள சொந்தக் கட்டடத்தில் 1990 நவம்பர் திங்கள் முதல் இயங்கி வருகிறது. இந்த அச்சகம் ஒப்பளிக்கப்பட்ட 176 பணியாளர்களுடன் ஒரு கிளை மேலாளரின் பொறுப்பில் இரண்டு முறைமாற்றுப் பணிகளில் செயல்பட்டு வருகிறது. கிளை மேலாளருக்கு உதவியாக ஓர் உதவிப் பணி மேலாளர் செயல்பட்டு வருகிறார்.

பல்வேறு அரசுத் துறைகளுக்குத் தேவையான பொதுப் படிவங்கள், பதிவேடுகள் மற்றும் நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள் ஆகியவை இங்கு அச்சிடப்படுகின்றன.

மேலும், காவல் மற்றும் சிறைத் துறைக்கான படிவங்கள், உயர்நீதி மன்றத்திற்கான நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள், பள்ளி இறுதி வகுப்புச் சான்றிதழ்கள், கூடுதல் விடைத்தாள்கள் ஆகியவற்றின் அச்சுப் பணியும் இக்கிளை அச்சகத்தில் செயல்படுத்தப்படுகின்றன. இங்கு அச்சிடப்படும் பொதுப் படிவங்களில் தன் பதிவேடுகள், ரொக்கப் பதிவேடுகள் மற்றும் அளவைப் பதிவேடுகள் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. பல்வேறு வாரியங்கள் மற்றும் கழகங்களுக்குத் தேவையான பொதுப் படிவங்கள் மற்றும் பதிவேடுகள் இங்கு அச்சிடப்பட்டு அவற்றிற்கான பணிச் செலவுத் தொகை, பெற்ற பின்னர் வழங்கப்படுகின்றன. தவிரவும், கீழ்வரும் 6 மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் இங்கு அச்சிடப்பட்டு வழங்கப்படுகின்றன:

(1) திருச்சிராப்பள்ளி

(2) மதுரை

(3) திண்டுக்கல்

(4) கரூர்

(5) பெரம்பலூர்

(6) தேனி

4. தொழிலாளர் நலனுக்கென ஒரு கூட்டுறவுச் சேமிப்பு மற்றும் கடன் சங்கம் இக்கிளையில் இயங்கி வருகிறது.

திருச்சி, துவாக்குடியிலுள்ள அரசு கிளை அச்சகத்தைச் சுற்றியுள்ள இடம், சுற்றுப் புறச்சுவர் இல்லாததால் அவ்வச்சகத்தின் திறந்தவெளியிடம் அத்துமீறல்களுக்கு இலக்காகி மயான பூமியாகவும், கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலமாகவும் உபயோகப்படுத்தப்படுகிறது. இது சட்டம் ஒழுங்கு பிரச்சினையையும் ஏற்படுத்தி விடுகிறது. விலை உயர்ந்த அச்சு இயந்திரங்களைக் கொண்ட இக்கிளை அச்சகத்திற்குச் சுற்றுப்புறச் சுவர் கட்டுவது பாதுகாப்பிற்கு வழிவகுக்கும் எனக் கருதப்படுவதால் ரூ.2.00 இலட்சம் செலவில் திருச்சி அரசு கிளை அச்சகத்தைச் சுற்றி சுற்றுப்புறச் சுவர் கட்டுவதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**6. அரசுக் கிளை அச்சகம், புதுக்கோட்டை:**

இவ்வச்சகம் ஒரு கிளை மேலாளரின் பொறுப்பில் இயங்கி வருகிறது. கிளை மேலாளருக்கு உதவியாக ஓர் உதவிப் பணி மேலாளர்



செயல்பட்டு வருகிறார். ஒப்பளிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை 256 ஆகும். இது இரண்டு முறைமாற்றுப் பணிகளில் இயங்கி வருகிறது.

2. கீழ்க்காணும் அரசுத் துறைகளுக்குத் தேவையான நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள் மற்றும் பதிவேடுகள் இங்கு அச்சிடப்பட்டு வழங்கப்படுகின்றன:

(1) ஆதி திராவிடர் நலத் துறை

(2) பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை

(3) பதிவுத் துறை

(4) மருத்துவத் துறை

(5) காவல் துறை

உயர் நீதிமன்றம் குறித்த படிவங்கள், வனத் துறை அட்டவணை-3 படிவங்கள், ஓய்வூதியப் படிவங்கள், விதித் தொகுப்பு மற்றும் நடைமுறை நூல்கள், மற்றும் பள்ளி இறுதி வகுப்பு மற்றும் அரசுத் தேர்வு (எஸ்.எஸ்.எல்.சி) விடைத்தாள் படிவம் எண் 56 மற்றும் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறைக்குத் தேவையான படிவங்கள், சிறப்புப் படிவங்கள் ஆகியவற்றை அச்சிடும் பணியும் அச்சகத் தயாரிப்புப் பொருட்களைத் தயாரிக்கும் பணியும் இங்கு மேற்கொள்ளப்படுகின்றன. 16 மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும், சிறப்புச் செய்தி அறிவிப்பு வெளியீடுகளும் வெளியிடப்படுகின்றன.

இங்கு பணியாளர்கள் வசதிக்கென ஓய்வறை ஒதுக்கப்பட்டுள்ளது. அவர்களின் நலனுக்காக இங்கு ஒரு கூட்டுறவுச் சங்கமும், மனமகிழ் மன்றமும் இயங்கி வருகின்றன.

**7. அரசுக் கிளை அச்சகம், விருத்தாசலம்:**

இக்கிளை அச்சகம் தனது சொந்தக் கட்டடத்தில் ஒப்பளிக்கப்பட்ட 217 பணியாளர்களைக் கொண்டு ஒரு துணைப் பணி மேலாளரின் பொறுப்பில் இரண்டு முறைமாற்றுப் பணிகளில் 1966 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. துணைப் பணி மேலாளரது பணிகளுக்கு உதவியாக ஓர் உதவிப் பணி மேலாளர் இங்கு பணி புரிகிறார்.

[1998 மே 19

பின்வரும் துறைகளுக்கான நிலைப்படுத்தப்பட்ட படிவங்களும் சாதாரண வகையிலான படிவங்களும் இங்கு அச்சிட்டு வழங்கப்படுகின்றன:-

(1) நீதிமன்றத் துறை.

(2) கால்நடை பராமரிப்புத் துறை

(3) தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

(4) காவல் துறை.

(5) தொழில் மற்றும் வணிகத் துறை

(6) வேளாண்மைத் துறை

(7) பொதுப் பணித் துறை

(8) மருத்துவத் துறை

(9) தமிழ்நாடு தீயணைப்புத் துறை

(10) தேசிய மாணவர் படை

(11) கூட்டுறவுத் துறை

(12) வனத் துறை மற்றும்

(13) புள்ளியியல் துறை

கீழ்க்கண்ட சிறப்புப் பணிகளும் இங்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

(1) வேலூர் மாவட்ட அரசிதழ்

(2) விழுப்புரம் மாவட்ட அரசிதழ்

(3) கடலூர் மாவட்ட அரசிதழ்

(4) தீர்வை 'ஏ' பதிவேடுகள்

(5) பேனோ குறிப்பேடுகள் (எழுதுபொருள்)

(6) குறுங்கோடிட்ட தாள்கள் (எழுதுபொருள்)

(7) நெடுங்கோடிட்ட தாள்கள் (எழுதுபொருள்)

தொழிலாளர்களின் ஓய்வு நேரப் பொழுதுபோக்கிற்காக ஒரு மனமகிழ் மன்றம் இங்கு செயல்பட்டு வருகிறது. மேலும்,



1998 மே 19]

தொழிலாளர்களின் நலனுக்காக ஒரு கூட்டுறவுச் சங்கம் செயல்பட்டு வருகின்றது. முதலுதவி மற்றும் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

## 2. எழுதுபொருள் பிரிவு

### அரசு எழுதுபொருள் அலுவலகம், சென்னை:

மாநிலம் முழுவதிலும் உள்ள அரசு அலுவலகங்களுக்குச் சில குறிப்பிட்ட எழுதுபொருட்கள், தட்டச்சுப் பொறிகள், படிபெருக்கிகள், கணக்கீட்டுப் பொறிகள் மற்றும் அச்சகத் தயாரிப்பு பொருட்கள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்து வழங்கும் மைய முகவர் அமைப்பாக இது இயங்குகிறது. எழுதுபொருட்கள், அனைத்து மாநில அரசு அலுவலகங்களுக்கும் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஆனால் மத்திய அரசின் நிதி உதவி பெற்று அவற்றின் திட்டங்களைச் செயலாக்கும் அரசு நிறுவனங்களுக்கு முன்கூட்டியே உரிய தொகை பெற்று எழுதுபொருட்கள் வழங்கப்படுகின்றன. ஒரு துணை இயக்குநரின் நிர்வாகத்தின் கீழ் ஒப்பளிக்கப்பட்ட 323 பணியாளர்களைக் கொண்டு இந்த அலுவலகம் இயங்கி வருகிறது. நிர்வாகப் பணியில் துணை இயக்குநருக்கு உதவியாக ஓர் உதவி இயக்குநர் செயல்பட்டு வருகிறார்.

காகிதம், அட்டை, தட்டச்சுப் பொறிகள், படிபெருக்கிகள், கணக்கீட்டுப் பொறிகள், அச்சகத் தயாரிப்புப் பொருட்கள் ஆகியவை நீங்கலாக அனைத்து எழுதுபொருட்களும் ஆண்டுதோறும் ஒப்பந்தப் புள்ளிகள் மூலம் வெளி அங்காடியில் இருந்து வாங்கப்படுகின்றன. புதுடில்லியில் உள்ள வழங்கல் மற்றும் தீர்வைத் தலைமை இயக்குநர் (டி.ஜி.எஸ். மற்றும் டி.) செய்யும் ஒதுக்கீட்டின் பேரில், காகிதம், அட்டை ஆகியவை தமிழ்நாடு செய்தி அச்சு மற்றும் காகித நிறுவனம் (டி.என்.பி.எல்.) மற்றும் பல்வேறு காகித ஆலைகளில் இருந்து கொள்முதல் செய்யப்படுகின்றன. தட்டச்சுப் பொறிகள் மற்றும் படிபெருக்கிகளும் டி.ஜி.எஸ். மற்றும் டி. மற்றும் வெளிச்சந்தையில் ஒப்பந்தப்புள்ளி மூலமும் கொள்முதல் செய்யப்படுகின்றன. 1997-98 ஆம் ஆண்டில் மேற்குறித்த இனங்களின் கொள்முதல் மதிப்பு ரூ.14.00 கோடி ஆகும்.

3. 1996-97 மற்றும் 1997-98 ஆம் ஆண்டுகளில் வாக்குச் சீட்டுகள் அச்சடிக்க காகிதமும் பஞ்சாயத்து, நகர்மன்ற மற்றும் நாடாளுமன்றத் தேர்தலுக்குத் தேவையான பொருட்களும் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டன.

[1998 மே 19

4. பணியாளர்களுக்குத் தேவையான முதல் உதவி வசதிகள் இங்கு செய்யப்பட்டுள்ளன. இவர்களுக்கு உணவு அறையும் ஒதுக்கப்பட்டுள்ளது.

## 3. வெளியீடுகள் பிரிவு

**அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம், சென்னை-2 :**

தமிழக அரசு மற்றும் இந்திய அரசால் வெளியிடப்படும் வெளியீடுகள், தமிழ்நாடு அரசிதழ், மாவட்ட அரசிதழ் ஆகியவற்றை பொதுமக்களுக்கு விற்பனை செய்யும் முக்கிய அமைப்புகளாக சென்னை அண்ணா சாலையில் உள்ள அரசு வெளியீடுகள் விற்பனை நிலையமும், சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ள கிளை விற்பனை நிலையமும் செயல்பட்டு வருகின்றன.

2. முக்கிய வெளியீடுகளான சட்டம் மற்றும் விதி நூல்கள், விதிக் கோர்வைகள், நடைமுறை நூல்கள், மாவட்ட அரசிதழ்கள், மாவட்ட கணக்கெடுப்புக் கையேடு மற்றும் பல்வேறு துறைத் தேர்வுகளுக்கான வெளியீடுகள் முதலியவை தேவைக்கேற்ப மீண்டும் அச்சிடப்பட்டு இவ்விற்பனை நிலையங்களில் வைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. தமிழ்நாடு சட்டமன்ற நடவடிக்கைகள், இந்திய சட்ட அறிக்கைகள், பல்வேறு மாநில அரசுத் துறைகளின் வருடாந்திர நிர்வாக அறிக்கைகள், தமிழ்நாடு அரசிதழ்கள், சிறப்பு அறிவிக்கைகள் மற்றும் தமிழ்நாடு பொதுத் தேர்வாணையத்தின் வெளியீடுகள் ஆகியவற்றைப் பொதுமக்களுக்கு விற்பனை செய்யும் முகவர் அமைப்பாகவும் இவை இயங்கி வருகின்றன.

3. அரசு வெளியீடுகள், அனுமதி பெற்ற முகவர்கள் மூலமாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. மேலும், அரசு வெளியீடுகள், அரசு ஊழியர்களுக்குத் தேவையான பணிப் பதிவேடுகள் ஆகியவை இந்த விற்பனை நிலையங்களிலும் மாவட்டக் கருவூலங்கள் மூலமாகவும் விற்பனை செய்யப்படுகின்றன.

4. இந்த விற்பனை நிலையம் ஓர் உதவி இயக்குநர் அவர்களின் தலைமையில் ஒப்பளிக்கப்பட்ட 56 பணியாளர்களைக் கொண்டு இயங்கி வருகிறது.



1998 மே 19]

### பிற்சேர்க்கை - 1

**எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் ஒப்பளிக்கப்பட்ட பணியிட விவரங்கள்**

| வரிசை எண் | அலகின் பெயர் | பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | அரசு மைய அச்சகம், சென்னை-79 | 4,173 |
| 2. | அரசு எழுதுபொருள் அலுவலகம், சென்னை-1 | 323 |
| 3. | அரசுக் கிளை அச்சகம், உயர்நீதிமன்றம், சென்னை-104 | 281 |
| 4. | அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம், சென்னை-2 | 56 |
| 5. | இயக்ககம், சென்னை-2 | 238 |
| 6. | அரசுக் கிளை அச்சகம், மதுரை | 363 |
| 7. | அரசுக் கிளை அச்சகம், சேலம் | 206 |
| 8. | அரசுக் கிளை அச்சகம், திருச்சி | 176 |
| 9. | அரசுக் கிளை அச்சகம், புதுக்கோட்டை | 256 |
| 10. | அரசுக் கிளை அச்சகம், விருத்தாசலம் | 217 |
| | மொத்தம் | **6,289** |

[1998 மே 19

## பிற்சேர்க்கை -2 (அ)

### 1997-98 ஆம் ஆண்டிற்கு ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் பகுதி 2 திட்டத்தின்கீழ் இயந்திரங்கள் வாங்குவதற்கு ஒப்பளிக்கப்பட்ட நிதி விவரங்கள்

| வரிசை எண். | அலகின் பெயர். | கொள்முதல் செய்ய உள்ள இயந்திரங்களின் விவரம். | கொள்முதல் செய்யப்பட உள்ள இயந்திரங்களின் எண்ணிக்கை. | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|---|
| 1. | அரசுக் கிளை அச்சகம். மதுரை | 1. தானியங்கி வெட்டும் இயந்திரம் 52" | 1 | 4.50 |
| | | 2. ஆப்செட் இயந்திரத்திற்கான (ஆர்.எ1) அளவு டாம்பனர் ரோலர் கிளீனிங் மெஷின் | 1 | 1.00 |
| 2. | அரசுக் கிளை அச்சகம், சேலம். | வெப் ஆப்செட் அச்சு இயந்திரம் (ஆர்.எ2) அளவு, இரண்டு அச்சு அலகுகள் (மடிக்கும் அமைப்பு மற்றும் மற்ற உபரிகளுடன்) | 1 | 21.85 |
| 3. | அரசு எழுதுபொருள் அலுவலகம், சென்னை | ஓயர் ரோப் ஹாயிஸ்ட் கிரேன் | 1 | 1.00 |
| | | மொத்தம் | | 28.35 |



1998 மே 19]

## பிற்சேர்க்கை - 2 (ஆ)

### பகுதி 2 திட்டப் பணிகள் 1998-99

| வரிசை எண். | அலகின் பெயர். | கொள்முதல் செய்யப்பட உள்ள இயந்திரங்களின் விவரம். | கொள்முதல் செய்யப்பட உள்ள இயந்திரங்களின் எண்ணிக்கை. | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|---|
| 1. | அரசு மைய அச்சகம், சென்னை-79 | 1. 3 அடுக்கு மடிக்கும் இயந்திரம் | 2 | 6.00 |
| | | 2. பகுதி தானியங்கி தைக்கும் இயந்திரம் | 2 | 5.00 |
| | | 3. ஹைட்ராலிக் டிராலி (கைகளால் இயக்குபவை) | 4 | 2.00 |
| | | 4. ஜெராக்ஸ் இயந்திரம் | 1 | 1.00 |
| 2. | அரசுக் கிளை அச்சகம், உயர்நீதிமன்றம், சென்னை-104. | ஜெராக்ஸ் இயந்திரம் | 1 | 1.00 |
| | | மொத்தம் | | 15.00 |

## பிற்சேர்க்கை-3

### எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் பணியாளர்களுக்கான வசதிகள்

**1. குடியிருப்புகள்**

சென்னை தண்டையார்பேட்டையில் மின்விசிறிகள், தெரு விளக்குகள், பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் சுற்றுச்சுவர் போன்ற வசதிகளுடன் பணியாளர்களுக்கான 300 குடியிருப்புகள் உள்ளன. ஏ மற்றும் பி பிரிவு குடியிருப்புகளைச் சுற்றி புதிய மதில் சுவர் எழுப்பப்பட்டுள்ளது. ஏ, பி மற்றும் சி பிரிவு குடியிருப்புகளுக்கு வெள்ளையடிக்கப்பட்டுப் பழுது பார்க்கப்பட்டுள்ளன.

**2. தொழிலாளர் நலம்**

சுகாதார ஆய்வாளர், தொழிலாளர் குடியிருப்பில் வசிப்பவர்களின் நலனைக் கண்காணிக்கும் வகையில் குடியிருப்புகளுக்கு அடிக்கடி சென்று பார்வையிடுகிறார். அவர் சென்னையில் உள்ள இத்துறையின் அலகுகளுக்கும் சென்று அங்குள்ள தங்கும் அறை, உணவறை மற்றும் மிதிவண்டி நிறுத்தும் ஆகிய இடங்களில் தூய்மைப் பணிகளைச் செவ்வனே கவனித்து வருகிறார். தொழிலாளர் கல்வித் திட்டப் பிரிவு நிலை வகுப்புகள் அதற்கென ஒதுக்கப்பட்ட ஒருசில அறைகளில் நடத்தப்பட்டு அதன்மூலம் தொழிலாளர்கள் பயன் பெறுகிறார்கள்.

**3. மருத்துவ வசதி**

அரசு மைய அச்சகத்தில் உள்ள மருந்தகத்தில் தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது. இவ்வச்சகத்தில் உள்ள மருத்துவ அலுவலர் வாரந்தோறும் சென்னை மாநகரில் உள்ள இயக்ககம் மற்றும் எழுதுபொருள் கிடங்கு உள்ளிட்ட அனைத்து அலகுகளுக்கும் சென்று மருத்துவப் பரிசோதனை செய்து தேவையான சிகிச்சை அளித்து வருகிறார்.

மாவட்ட தலைமையங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளிலிருந்து மருத்துவ அலுவலர்கள் வெளியூர் அலகுகளுக்கு காலமுறையில் சென்று அங்குள்ள பணியாளர்களுக்கு மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளுகின்றனர்.



**4. இலவச பால், தேநீர் மற்றும் ரொட்டி வழங்குதல்**

அரசு மைய அச்சகம், எழுதுபொருள் அலுவலகம் உள்ளிட்ட அனைத்துக் கிளை அச்சகங்களில் உள்ள தொழிலாளர்களுக்கு இலவச தேநீர் மற்றும் ரொட்டி வழங்குவதற்குப் பதிலாக, ஒவ்வொரு தொழிலாளிக்கும் பிரதி மாதம் ரூ.40 ரொக்கப்படியாக வழங்கப்படுகின்றது. இது தவிர, ஈயப்புகை வெளியேறும் பிரிவில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு 250 மில்லிலிட்டர் பாலுக்குப் பதிலாக ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு ரூ.2-ம் வைட்டமின் சத்துள்ள மாத்திரைகளும் வழங்கப்படுகின்றன.

**5. தொழிலாளர் நல நிதி**

தொழிலாளர்களின் நலப் பணிகளுக்கு, விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கும், சுதந்திர தினம் மற்றும் ஆயுத பூஜை போன்ற விழாக்களைக் கொண்டாடுவதற்கும் தொழிலாளர் நல நிதியிலிருந்து தேவையான நிதி ஒதுக்கப்படுகிறது.

**6. நலத் திட்டங்கள்**

மகளிர் நலத்திட்டத்தின் கீழ் அவர்களது வருமானத்தை அதிகரிக்கும் வகையில் சென்னை மாநகரிலுள்ள சென்னைப் பெருநகரக் காவலர் குடும்பநலக் குழுக்கள், பட்டினப்பாக்கம் மகளிர் மன்றம் மற்றும் உடல் ஊனமுற்றோர் நலக் கூட்டுறவு மையங்கள் ஆகிய சமூக நல அமைப்புகளில் உள்ள பெண் பணியாளர்களுக்கு நூற்கட்டுதல், உறைகள் செய்தல் போன்ற பணிகள் ஒப்படைக்கப்படுகின்றன.

**7. குளிர் குடிநீர் சாதனம்**

புதுக்கோட்டை, மதுரை மற்றும் விருத்தாசலம் ஆகிய இடங்களிலுள்ள கிளை அச்சகங்களிலும் சென்னை நகரில் அமைந்துள்ள இயக்ககம் மற்றும் மைய அச்சகத்திலும் ஒருசில குளிர் குடிநீர் சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

**8. குழந்தைகள் காப்பகம்**

மகளிர் தொழிலாளர்களின் நலனுக்காக மைய அச்சகத்தில் குழந்தைகள் காப்பகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதற்கென நியமிக்கப்பட்ட குழந்தைகள் காப்பகப் பணியாளர் குழந்தைகளைக்

கவனித்து வருகிறார். இக்குழந்தைகளுக்கு அரசுச் செலவில் பால், பிஸ்கெட் மற்றும் விளையாட்டுப் பொருட்கள் வழங்கப்படுகின்றன.

**9. சீருடைகள்**

இங்குள்ள தொழிலாளர்களுக்கு இரு வருடங்களுக்கு ஒரு முறை மூன்று இணை பாலிஸ்டர் சீருடைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

**10. தொழிலாளர் கல்வித் திட்டம்**

சென்னை வட்டாரத் தொழிலாளர் இயக்ககத்தில், தொழிலாளர் ஆசிரியர்-பயிற்சி பெறுவதற்காக தொழிலாளர்களை முகமையில் அனுப்புவதன் மூலம் தொழிலாளர் கல்வித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தொழிலாளர் ஆசிரியர்களுக்கும் தொழிலாளர் பயிற்சியாளர்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரு தொகை வழங்கப்படுகிறது. தொழிலாளர்களுடைய பயிற்சிக் காலம் பணிக் காலமாகக் கருதப்படுகிறது.

**11. உடல் நலம் மற்றும் சுகாதாரம்**

சென்னை மாநகரத்திலுள்ள இத்துறையின் அனைத்து அலகுகளிலும் உடல் நலக் கோட்பாட்டிற்கேற்ற துப்புரவுப் பணிகள், சுகாதார ஆய்வாளரது கண்காணிப்பின்கீழ் சீரிய முறையில் நடைபெற்றுவருகின்றன.

**12. சிற்றுண்டிச்சாலை**

மதுரையில் உள்ள அரசு கிளை அச்சகத்திலும், சென்னை அரசு மைய அச்சகத்திலும் தொழிலாளர்களுக்கான சிற்றுண்டிச்சாலை தனிப்பட்ட ஒப்பந்தக்காரர்களால் நடத்தப்பட்டு வருகின்றன.

**13. நல நிதி**

தொழிலாளர்கள் இறக்கும் சமயங்களில் அவர்களது இறுதிச் சடங்குச் செலவிற்காக அவர்களது குடும்பத்தினருக்கு உடனடி நிவாரணமாக ரூ.100/- இந்த நிதியில் இருந்து வழங்கப்படுகிறது. இத்துடன், இறந்தவரின் வாரிசுதாரருக்கு தொழிலாளர் நல வாரியத்தில் இருந்து ரூ.200-ப் பெற்று அளிக்கப்படுகிறது.



**14. தமிழ்நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை தொழிலாளர் கூட்டுறவு நிறுவனம்**

இக்கூட்டுறவு நிறுவனம் 5-5-1923 முதல் இயங்கி வருகிறது. இந் நிறுவன விதியின் கீழ் 18 அங்கத்தினர்கள் கொண்ட ஓர் இயக்குநர் குழுமம் இதன் மேலாண்மையைச் சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

ரூ. 40,000 (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) வரையிலான தொகை இக்கூட்டுறவு நிறுவனத்தின் அங்கத்தினர்களுக்குக் கடனாக வழங்கப்படுகிறது. இக் கடன்தொகை ஓர் ஆண்டிற்கு 19 விழுக்காடு வட்டி வீதத்தில் 36 மாதாந்திரத் தவணைகளில் பிடித்தம் செய்யப்படுகிறது. இது தவிர, பண்டிகைக் காலங்களிலும், குழந்தைகள் கல்விக்கெனவும் ஒவ்வோர் அங்கத்தினருக்கும் ரூ.200 சிறப்புக் கடனுதவி அளிக்கப்படுகிறது. இத்தொகை, 10 மாதத் தவணைகளில் சமமாகப் பிடித்தம் செய்யப்படுகிறது. மேலும் ரூ.10,000 அல்லது பணியாளரது மொத்த சம்பளத்தில் 4 மடங்கு தொகை இவற்றில் எது குறைவோ அத்தொகை நுகர்வோர் கடனாக அளிக்கப்படுகிறது.

**15. கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு**

பணியில் இருக்கும்போது இறந்து போகும் அரசு ஊழியர்களின் குடும்பத்தில் உள்ள தகுதி வாய்ந்த நபருக்குக் கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டம் இத்துறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன்படி இறந்துவிட்ட இத்துறையைச் சார்ந்த அரசு ஊழியர்களின் குடும்பங்களில் இருந்து தகுதி வாய்ந்த 7 நபர்களுக்கு 1997-98 ஆம் ஆண்டில் இத்துறையில் பணிபுரிய வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது.

1998 மே 19]

## இணைப்பு II

(255 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### கோரிக்கை எண் 44-காட்டு வனத் துறை

### கோரிக்கை எண் 58-காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு

### வனத் துறை கொள்கை விளக்கக் குறிப்பு 1998-99

நம் மாநிலத்தின் வனங்கள், வேளாண்மையில் மூலாதாரமாக விளங்குவதுடன் உயிரினங்களின் வாழ்க்கைச் சூழலை நிலைநிறுத்துவதிலும், ஊர்ப் புறங்களின் வளர்ச்சியிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன. கீழ்க்காணும் குறியிலக்குகளின் அடிப்படையில் மதிப்பிட முடியாத இந்த இயற்கை வளங்கள் மக்களுக்கு மிகுதியாகப் பயன் தரும் வகையில் உயரிய தொலைநோக்குடன் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

- சுற்றுப்புறச் சூழலை நிலைநிறுத்தி உயிரின வாழ்க்கைச் சூழலை சமநிலைப்படுத்துதல்
- வளமிக்க உயிரின பரவல்களாக அமைந்துள்ள வன உயிரினங்களையும், தாவர இனங்களையும் பாதுகாத்தல் மற்றும் மொத்த வனப்பரப்பில் 25 விழுக்காடு வனப்பகுதியினைப் பாதுகாக்கப்பட்ட நிர்வாகப் பரப்பின் கீழ் கொண்டு வருதல்
- நீர்த்தேக்கங்கள், ஏரிகள் மற்றும் ஆறுகளின் நீர்பிடிப்பு பகுதிகளை பராமரித்து சிறந்த வகையில் மண் வளத்தினையும் அதன் ஈரப் பதத்தினையும் பாதுகாத்தல்
- சமுதாய மற்றும் தனியார் நிலங்களில் மரங்களின் வளர்ச்சியை கணிசமான அளவில் அதிகப்படுத்துதல்
- கூட்டு வன நிர்வாக முறையில் மக்களிடையே மாபெரும் இயக்கத்தை உருவாக்கி வன வளர்ச்சியைப் பெருக்குதல்
- கிராமப்புற மற்றும் மலைவாழ் மக்களின் விறகு. தீவனம் மற்றும் இதர வனப்பொருட்களின் அவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்தல்

[1998 மே 19

- மதிப்புமிக்க வனப்பொருட்கள் திருட்டுத்தனமாக அகற்றப்படுவதிலிருந்து பாதுகாக்கும் பணியை வலுப்படுத்துதல்
- மாநிலத்திலுள்ள வனங்கள் மற்றும் மரங்களின் அடர்த்தியை அதிகப்படுத்தி மொத்த நிலப்பரப்புகளில் காடுகளின் பரப்பை மூன்றில் ஒரு பங்காக உயர்த்துதல்
- கடலோரப் பகுதிகளில் அருகி வரும் உயிரினச் சூழலை நிலைநிறுத்துதல்
- ஒளிர்விடும் சிறந்த ஆராய்ச்சியின் மூலமாக வனவள நுட்பங்களையும், மேம்பாட்டுத் திட்டங்களையும், மாறிவரும் காலத்திற்கேற்ப நவீனமயமாக்குதல்
- மனித வள மேம்பாட்டின் மூலம் வனத்துறைப் பணியாளர்களின் திறன்களை மேம்படுத்துதல்.

**2. நோக்கங்கள்:**

**2.1. காடுகளின் பரப்பளவு:**

தமிழ்நாட்டில் வனங்களின் மொத்த பரப்பளவு 22,699 சதுர கிலோ மீட்டராகும். இது மாநிலத்தின் மொத்த நிலபரப்பில் 17.45 விழுக்காடாகும். மொத்த மாநில நிலப்பரப்பளவில் வனங்களையும், மரங்களின் எண்ணிக்கைகளையும் அதிகப்படுத்தி வனங்களின் பரப்பளவை மாநிலத்தின் மொத்த நிலப்பரப்பளவில் மூன்றில் ஒரு பங்காக உயர்த்த தொடர்ந்து எடுத்து வரும் முயற்சிகள் மேலும் ஊக்கமாகச் செயல்படுத்தப்படும்.

**2.2. வன வளர்ப்பு:**

2.2.1 தமிழ்நாட்டில் வனங்களைச் சார்ந்துள்ள 3,072 கிராமங்களின் மிகுந்த தேவைகள் மற்றும் கால்நடைகளின் மிதமிஞ்சிய மேய்ச்சலினால் ஏற்படும் அழிவினால் சுமார் 7,000 சதுர கிலோமீட்டர் வனங்கள் தரம் குன்றிவிட்டன. இந்தத் தரங்குன்றிய வனப்பகுதியில் சுற்றுச்சூழலை மீட்டு இயற்கை வனங்களை மேம்படுத்தவும், கூட்டுவன நிர்வாக முறையை ஒரு மக்கள் இயக்கமாக தொடர்ந்து மிகுந்த பயன்களைப் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் மூலம்



1998 மே 19]

கிராமங்களில் வாழும் மக்களின் பொருளாதார மற்றும் சமூக நிலைகள் மேம்படுத்தப்படுகின்றன.

2.2.2. மக்களின் விறகு, தீவனம் மற்றும் சிறு மரங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு கால்வாய் ஓரங்கள், சாலை ஓரங்கள் மற்றும் வனங்களல்லாத சமுதாய நிலங்களில் மரங்களை நட்டு வனவளர்ப்பு செயல்படும்.

**2.3. உயிரினப் பரவல்களைப் பாதுகாத்தல்:**

தமிழ்நாடு வளமிக்க உயிரினப் பரவல்களைக் கொண்டிருக்கிறது. மாநிலத்தின் மொத்த வனப்பரப்பில் 2911 சதுர கிலோமீட்டர் அதாவது 12.8 விழுக்காடு ஐந்து தேசிய உயிரினப் பூங்காக்கள், ஆறு வன உயிரின சரணாலயங்கள் மற்றும் பதினாறு பறவைகள் சரணாலயங்களையும் உள்ளடங்கிய வன உயிரின பாதுகாப்பு பகுதியாகும். தாவர வன உயிரினங்களைப் பாதுகாத்தலின் முதன்மைக் கொள்கைகளை தொடர்ந்து செயல்படுத்துவதன் மூலம் சரணாலயங்களும், தேசிய பூங்காக்களும் பாரம்பரிய வனங்களும் உருவாக்கப்படும். மாநிலத்தின் மொத்த வனப் பரப்பளவில் பாதுகாக்கப்பட்ட பகுதிகளின் பரப்பளவை 25 விழுக்காடாக உயர்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**2.4. நீர்பிடிப்புப் பகுதி நிர்வாகம்:**

தமிழகத்தில் 32 ஆறுகள், 11 பெரும் நீர்தேக்கங்கள், 2,679 கால்வாய்கள், 38,863 ஏரி, குளங்கள் உள்ளன. இவைகளின் பெரும்பாலான நீர்பிடிப்புப்பகுதிகள் வனங்களில் உள்ளன. ஆகையால் நீர்வளத்தினை நிலப்பகுதிகளில் வளப்படுத்தவும். ஆறுகள், அருவிகள், நில நீர்வளத்தினைச் சீராக ஒழுங்குப்படுத்தவும், மண்வளத்தினை மேம்படுத்தவும் நீர்பிடிப்புப் பகுதிகளில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்படும்.

**2.5. தனியார் நிலங்களில் மரங்கள் நடுதல்:**

தனியார் நிலங்களில், வேளாண்மைக்கு எந்த முறையிலும் பாதகம் விளைவிக்காமல் மரங்களின் அளவினை அதிகப்படுத்துவதற்கு மிக அதிக அளவில் வாய்ப்புகள் உள்ளன. இத்திட்டமானது மாநிலத்தின் தடிமரங்களின் விநியோகம் மற்றும் இதர சிறு வனப் பொருட்களின்

தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு சுற்றுப்புற சூழ்நிலைகளுக்குத் தேவையாகவும் அமையும். விரிவாக்க வனவியல் திட்டமானது இவ்வாண்டு முதல் புதிதாக செயலாக்கப்பட்டு வருகின்றது. தனியார் நிலங்களில் மரம் வளர்ப்புக்குத் தடையாக அமையும் விதிகளும் ஒழுங்குமுறைகளும் ஆராயப்பட்டு படிப்படியாக அகற்றப்பட்டு வருகின்றன.

## 2.6. மர வளர்ப்பில் மக்களிடையே மிகுந்த ஈடுபாட்டை உருவாக்குதல்:

முக்கிய திட்டமான தமிழ்நாடு வன வளர்ப்புத் திட்டத்தின் கீழ் உள்ளூர் அளவிலான நிறுவனங்கள் மற்றும் ஊராட்சிகளை திட்டமிடுதல் நடைமுறைப்படுத்துதல், அதனால் வரும் பயன்களை பகிர்ந்து கொள்ளுதல், கூர்ந்தாய்வு மற்றும் மதிப்பீடுகள் ஆகியவற்றில் ஈடுபடுத்தி வன வளர்ப்பில் மக்களின் பங்கேற்பு உறுதி செய்யப்பட்டு இத்திட்டமானது ஜப்பான் நாட்டின் கடல் கடந்த பொருளாதார கூட்டுறவு நிதி நிறுவனத்தின் நிதியுதவியுடன் செயல்முறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம் கூட்டு வன நிர்வாகத்திற்கு வன நிர்வாகத்தில் முக்கிய பங்களிக்கப்பட்டுள்ளது.

## 2.7. வனப் பாதுகாப்பு:

அட்டவணை மரங்கள் உள்ளிட்ட மதிப்பு மிக்க வனப்பொருட்கள் சமுதாய எதிரிகளால் கள்ளத்தனமாகக் கடத்தப்படுகின்றன. இதுபோன்று அரசாங்கத்திற்கு எதிரான தீய சக்திகளை எதிர்த்துப் போராட வனத்துறையை தகுந்த பாதுகாப்பு, உள்ளமைப்பு மற்றும் நவீன சாதனங்களைக் கொண்டு வலுப்படுத்த முயற்சி மேற்கொள்ளப்படும்.

## 2.8. கடலோர இயற்கைச் சூழலை நிலைநிறுத்துதல்:

தமிழகத்தில் கிட்டத்தட்ட 1,000 கிலோமீட்டர் அளவில் அமைந்துள்ள கடலோரப் பகுதிகள் மாறுபட்ட பல்வேறு இயற்கையின் சவால்களையும் உயிரினத் தலையீடுகளையும் தாங்கிக் கொண்டு நுண்ணிய உயிரினச் சூழல் அமைப்புகளைக் காத்து வருகின்றன. கடலோரங்களில் வீசும் அதிவேக காற்று மற்றும் புயல்களின் நாச விளைவுகளைக் குறைப்பதற்கும் மணல்குன்றுகள் உருவாகுவதால் ஏற்படும் அழிவுகளைத் தடுக்கவும், சதுப்புநில மாங்குரோவ் மற்றும் பல வன வளத்தைக் காக்கவும், தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. மேலும் மன்னார் வளைகுடாவின் அரிதான



உயிரினப் பரவல்களில் தாவர மற்றும் நீர்வாழ் உயிரினங்களைக் காப்பதற்கும் தனியே திட்டங்கள் செயல்முறைப்படுத்தப்படுகிறது.

## 2.9. பழங்குடியின மக்களும் வளமும்:

வனங்களில் வாழும் பழங்குடி மக்களின் பொருளாதாரம் வன வளத்தினைச் சார்ந்தே உள்ளது. பழங்குடியினருக்குப் பாதுகாப்பளிக்கும் ஆதாயங்களை வளப்படுத்தும் வகையில் வனப்பகுதிகளிலும் மற்றும் பழங்குடியினரின் இடங்களிலும் மரங்கள் மற்றும் தாவர வளம் கொண்ட மூலதனச் சொத்துக்கள் உ[illegible]க்கப்படும். பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தில் நில முன்னேற்றப்பணிகள், வேலைவாய்ப்பு, கல்வி மற்றும் அடிப்படை உள்ளமைப்பு வசதிகளை வழங்கும் பல பணிகள் முனைப்புடன் செயல்படுத்தப்படும்.

## 2.10. வனத் துறையில் மனித வள மேம்பாடு:

வனத் துறை கடந்த நூற்றாண்டில் அமைதியாக சிறிய அளவில் தொடங்கப்பட்டு கடந்த வருடங்களில் விரிவுபடுத்தப்பட்டு தற்போது சுமார் 10,000 பணியாளர்களை உள்ளடக்கியுள்ளது. இந்த மனித வளத்தின் திறனை மேம்படுத்த தகுந்த பயிற்சி அளிக்கப்பட்டு உயர்த்தப்படும்.

## 2.11. வன ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி:

மாறிவரும் சூழ்நிலைகளில் தொழிற்சாலைகள், வணிகம் மற்றும் உள்ளூர் துறைகளில் தேவைக்கேற்ப புதிய வன நுட்பவியல் வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. முன்னர் உருவாக்கப்பட்ட வன நுட்பவியல், தற்போதைய மாறிவரும் சூழ்நிலைகளுக்குப் போதுமானதாக இல்லை. நுட்பவியலின் பற்றாக்குறை, தரங்குன்றுதல் மற்றும் உயிரினங்களின் அழிவுகள் ஆகியவைகளில் பிரதிபலிக்கப்பட்டு இயற்கை வனப்பொருட்களின் தேவை மற்றும் அதன் உற்பத்தி அளவில் மிகுந்த இடைவெளி ஏற்பட்டுள்ளது. மேலும், வனப்பாதுகாப்பு செயல் முறைக்கும், வனங்களைச் சார்ந்து வாழும் மக்களின் சமுதாய பொருளாதாரத்திற்குமிடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

வன நுட்பங்கள் தற்போதைய நடைமுறையிலுள்ள காலத்திற்கேற்பவும், வருங்காலத் தேவைகளையும் நிறைவு செய்யும் வண்ணம் மேம்பாட்டுத் திட்டங்களையும் நன்முகப்படுத்தும்

ஆராய்ச்சிகளையும் மேற்கொள்ள மாநில வன ஆராய்ச்சி நிறுவனம் ஒன்று வெளிநாட்டு உதவியுடன் நிறுவப்பட உள்ளது.

## 3. 1997-98 ஆம் ஆண்டின் சாதனைகள்:

3.1. இந்திய சுதந்திரப் பொன்விழாவினை சீரிய முறையில் கொண்டாடும்பொருட்டு வனத் துறை தமிழ்நாடு முழுவதும் உள்ள மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் பொதுமக்கள் மூலம் மரங்கள் நடும் பணி செயலாக்கப்பட உள்ளது. மொத்தத்தில் 2.77 இலட்சம் மரக் கன்றுகள் ரூபாய் 3.82 கோடி செலவில் நடப்பட உள்ளது.

3.2. இந்த ஆண்டு தெக்குப்பட்டு சந்தன எண்ணெய் தொழிற்சாலை 11-6-97 முதல் திறக்கப்பட்டு முன்னோட்டம் செய்யப்பட்டது. தற்போது திருப்பத்தூர் கோட்டத்திலிருந்து சந்தனக் கட்டைகளைப் பெற்று சந்தன எண்ணெய் உற்பத்திகளுடன் மற்ற சந்தனப் பொருட்களையும் உற்பத்தி செய்து முழுமையான வடிவில் இயங்கிக் கொண்டிருக்கிறது.

3.3. சந்தன மரக் குற்றங்களில் கண்டுபிடிக்கப்பட்ட சந்தன மரங்களைப் பாதுகாத்து வைக்க ரூ. 10 இலட்சம் செலவில் திருவண்ணாமலையில் சந்தன மர சேமிப்புக் கிடங்கு ஒன்று இவ்வாண்டு கட்டப்பட உள்ளது.

3.4. நமது அரசு வனத் துறை மூலம் வருமானங்கள் உயர்த்த பெரும் முயற்சி எடுத்து குறிப்பாக சந்தனமரக் கிடங்கிலிருந்து சந்தன மரங்களை ஏலத்தில் விற்று வருமானங்களைப் பெருக்கியுள்ளது. அந்த மரங்களை ஏற்றுமதி செய்வதில் தடையிருந்தும் விற்பனைக்கு வைக்கப்பட்ட 1000 டன்கள் எடையுள்ள சந்தன மரங்களில் 21.50 டன்கள் எடையுள்ள சந்தன மரங்கள் ரூ. 85.90 லட்சம் விலைமதிப்புக்கு விற்கப்பட்டுள்ளன.

3.5. சந்தனக் கடத்தல் தடுப்பு நடவடிக்கைகளை மேலும் துரிதப்படுத்தும் பொருட்டு, ஒரு சிறப்பு செயல்பாட்டுக் குழுவினை அரசு அமைத்துள்ளது.

3.6. மற்றுமொரு முக்கிய பணியான வன நிலங்களில் கள்ளத்தனமாக பயிரிடப்படும் கஞ்சா பயிரை கண்டுபிடித்து அழிப்பதில் அரசு தீவிர கவனம் செலுத்தி வருகிறது. ஏப்ரல் 1997 முதல் மார்ச் 1998 வரையிலும் 92.565 ஹெக்டேர் வனப்பரப்பில் சுமார் 2.25 லட்சம் கஞ்சா செடிகள் அழிக்கப்பட்டுள்ளன. இதன் மதிப்பு சுமார் ரூ. 37.92 கோடியாகும்.



3.7. மனித வள மேம்பாட்டுக்கென நமது அரசு சிறப்பு கவன நடவடிக்கை எடுத்து 27 அலுவலர்களுக்கும் 325 சார்நிலைப் பணியாளர்களுக்கும் பதவி உயர்வு வழங்கியுள்ளது.

## 4. வன வருவாய் மற்றும் செலவினங்கள்:

### 4.1. வன வருவாய்:

இந்த ஆண்டில் (1997-98) மதிப்பீட்டு வருவாய் ரூ. 4,345.00 இலட்சங்கள்; விவரம் கீழ்க்கண்டவாறு:

| வருவாய் இனம் | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|
| 1. சந்தன மரங்கள் | 243.77 |
| 2. தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருட்கள் வழங்குதல் | 1039.98 |
| 3. மரங்களல்லாத காடுபடுப் பொருட்கள் | 1312.86 |
| 4. தடிமரம், விறகு, மூங்கில், சவுக்கு, மென்மரம் மற்றும் வனவியல் பண்ணைத் தோட்டங்கள், மற்றவைகள் | 1748.39 |
| **மொத்தம்** | **4345.00** |

1998-99 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் வருவாய் ரூ. 8776.90 இலட்சங்கள்.

### 4.2. செலவினங்கள்:

1997-98 ஆம் ஆண்டில் வன மேம்பாட்டிற்கான திட்டச் செலவு ரூ. 9430.68 இலட்சங்கள். திட்டமில்லா இனங்களுக்கான செலவு ரூ. 5,324.10 இலட்சங்களாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் வரவு-செலவு மதிப்பீடு ரூ. 13,593.95 இலட்சங்கள் ஆகும் எனக் கருதப்படுகிறது.

## 5. திட்டப் பணிகள்:

5.1. 1996-97 ஆம் ஆண்டின் செலவு, 1997-98 ஆம் ஆண்டின் உத்தேசச் செலவு மற்றும் 1998-99 ஆம் ஆண்டு செய்யக் கருதப்படும் செலவு ஆகியவற்றின் விவரங்கள் வருமாறு:

| திட்டம் | 1996-97 ஆம் ஆண்டின் செலவு | 1997-98 ஆம் ஆண்டின் உத்தேச செலவு (திருத்திய மதிப்பீடு) | 1998-99 ஆம் ஆண்டின் செய்யக் கருதப்படும் செலவுகள் (வரவு செலவு மதிப்பீடு) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| மாநில வனத் திட்டம் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம். | 4893.80 | 8884.17 | 12333.86 |
| மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம் 100% | 487.12 | 146.54 | 685.89 |
| மாநில, அரசும் மத்திய அரசும் சம அளவில் பொறுப்பேற்கும் திட்டம் 50:50 | 641.67 | 438.27 | 466.06 |
| மண் வளப் பாதுகாப்புத் திட்டங்கள் | 90.93 | 180.84 | 108.14 |
| மொத்தம் | 6113.52 | 9649.82 | 13593.95 |
| மத்திய அரசின் உதவித் திட்டம் 50% கழித்தது | 320.84 | 219.14 | 233.03 |
| நிகர மொத்தம் | **5792.68** | **9430.68** | **13360.92** |



5.2. 1998-99 ஆம் ஆண்டின் மாநிலத் திட்டத்தின் கீழ் பின்வரும் திட்டங்கள் செயல்பட கருதப்பட உள்ளன:

| | திட்டங்களின் பெயர் | 1998-99 ஆம் ஆண்டுக்கு திட்ட முன்மொழிவு ஒதுக்கீடு தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | உள்ளூர் வனப் பாதுகாப்பு | 6427.63 |
| 2. | ஒருங்கிணைந்த நீர்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் | 4308.04 |
| 3. | உயிரின பரவல் பாதுகாப்பு | 412.02 |
| 4. | வன விரிவாக்கம் | 646.85 |
| 5. | வனப் பாதுகாப்பு | 616.22 |
| 6. | பழங்குடியினர் மேம்பாடு | 256.46 |
| 7. | உற்பத்தி வனவியல் | 252.50 |
| 8. | ஆராய்ச்சி மேம்பாடு மற்றும் திட்டமிடுதல் | 215.65 |
| 9. | தகவல் தொடர்பு அடங்கிய உள்ளிட்ட அடிப்படை வசதிகள் | 182.47 |
| 10. | மனித வள மேம்பாடு மற்றும் பயிற்சி | 146.55 |
| 11. | ஒருங்கிணைந்த கடலோர மேம்பாடு | 129.56 |
| | மொத்தம் | **13593.95** |

[1998 மே 19

வன அபிவிருத்திக்கென பகுதி 2 திட்டத்தின் கீழ் 1998-99ம் ஆண்டில் ரூ. 221.03 இலட்சங்கள் அளவில் கீழ்கண்ட 11 திட்டங்கள் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

| வ. எண் | திட்டத்தின் விவரம் | 1998-99ல் செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | வனக் காவல் பகுதிகளை மாற்றி அமைத்தல் | 15.00 |
| 2. | மோட்டார் வண்டிகள் படைக்கலன்கள் கம்பியில்லா தகவல் தொடர்பு வசதிகளை ஏற்படுத்துதல் | 20.00 |
| 3. | ஐந்து மாநகராட்சி பகுதிகளில் காடு வளர்ப்பு | 25.00 |
| 4. | இரண்டு மாவட்டங்களில் பெரிய ஊராட்சி ஒன்றிய சாலைகளில்/ நகர் பகுதிகளில் நிழல் தரும் மரங்கள் வளர்த்தல் | 14.00 |
| 5. | அதிக மகசூல் தரும் புளிய மரக் கன்றுகளை உற்பத்தி செய்தல் | 5.00 |
| 6. | அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவிற்கு 20 இருக்கைகள் கொண்ட 2 மின்கலன் இயக்க வாகனங்கள், இரண்டு சாலை இரயில்கள் வாங்குதல் | 37.63 |
| 7. | அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா முகப்பு வளாகத்தை மேம்படுத்துதல் | 17.00 |
| 8. | மூன்று வனக் கோட்டங்களில் கஞ்சாச் செடிகள் பயிரிடுவதை ஒழித்தல் | 20.00 |
| 9. | முக்கியமான 10 சோதனை சாவடிகள் வலுப்படுத்துதல் | 18.00 |
| 10. | இராமேஸ்வரத்தில் சரக அலுவலக கட்டடமும் / அலுவலர் குடியிருப்பும் கட்டுதல் | 5.50 |
| 11. | கிழக்குத் தொடர்ச்சி மலையில் உயிரின வாழ்க்கைச் சூழலை மேம்படுத்துதல் | 43.90 |
| | மொத்தம் | 221.03 |



1998 மே 19]

**6. தமிழ்நாடு வன வளர்ப்புத் திட்டம்:**

ஜப்பான் நாட்டு பன்னாட்டு பொருளாதார கூட்டு நிதி நிறுவன நிதி உதவியுடன் தமிழ்நாடு வன வளர்ப்புத் திட்டம் ரூ. 499.20 கோடி செலவில் ஐந்து வருடங்களுக்குச் செயல்படுத்தும் வகையில் தொடங்கப்பட்டுள்ளது. முதல் வருடமாக 1997-98-ல் ரூ. 50 கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. உள்ளூர் மக்களின் தேவைகளான மரம், காட்டு மரங்கள் அல்லாத சிறு வனப் பொருட்கள் ஆகியவைகளைப் பெறவும், சுற்றுப்புற மேம்பாட்டினை நிலை நிறுத்தவும் இத்திட்ட காலத்தில் கீழ்காணும் முக்கியப்பணிகள் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது :

1. கூட்டு வன நிர்வாக முறையில் உள்ளூர் வனங்களை பாதுகாத்தல்
2. மலை வாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்
3. வன விரிவாக்கத் திட்டம்
4. நீர்ப்பிடிப்புப் பகுதிகளை மேம்படுத்தும் பணிகள்
5. மணற்குன்றுகளை நிலைப்படுத்தும் பணிகள்
6. தடுப்புக்காடுகள் தோட்டங்கள்

ஒவ்வோர் ஆண்டும் செயல்பாடுகளுக்கு 200 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இத்திட்டத்தில் முதலாம் ஆண்டில் (1997-98) 63.576 ஹெக்டேர் நிலப்பரப்பளவில் காடு வளர்ப்பு பணிகளுக்காக ரூ. 50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1998-99ம் ஆண்டில் 86.030 ஹெக்டேர் நிலப்பரப்பளவில் காடு வளர்ப்புக்காக 94.09 கோடி நிதி ஒதுக்கீடு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை வனக் கூட்டு நிர்வாகத்தின் மூலம் திட்டமிடுதல், நடைமுறைப்படுத்துதல், பயன்களைப் பகிர்ந்து கொள்ளுதல், ஆய்வு மற்றும் மதிப்பிடுதல் போன்ற பணிகளில் மக்களை ஈடுபடுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தில் ஒரு முக்கிய இனமான இடைதாங்கு தொகுதியின் கீழ் செயல்பாடு கிராமங்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகிறது. ஏனைய துறைகளில் உள்ள திட்டங்களை இணைத்து 1998-99-ல் கிராம மக்களுக்கு அடிப்படை வசதிகளும் ஊக்கமும் வழங்க அத்துறைகள் வனத் துறையுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்த மாவட்ட ஆட்சியர்களுக்குத் தலைமைச்

செயலாளரிடமிருந்து அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. பல மாவட்ட ஆட்சியர்கள் இதற்கு முழு ஒத்துழைப்பு வழங்க முன்வந்துள்ளனர்.

**7. வன விலங்குச் சரணாலயங்கள்:**

1997-ல் வனத்துறையின் மானியக் கோரிக்கையினை சமர்ப்பிக்கும்போது அறிவித்தபடி வெள்ளோடு, ஈரோடு மாவட்டத்திலும், பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள கரைவெட்டியிலும் பறவைகள் சரணாலயங்கள் அமைக்க அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும்; கொடைக்கானல், தர்மபுரி, விழுப்புரம், பவானிசாகர், கன்னியாகுமரி, பிச்சாவரம் மற்றும் கோடியக்கரை ஆகிய இடங்களில் பறவைகள் சரணாலயங்கள் அமைக்க மத்திய அரசுடன் ஆலோசித்து அமைக்கப்படவுள்ளன.

தமிழ்நாட்டில் 29 மாவட்டங்களில் உள்ள வனவிலங்குச் சரணாலயங்களில்/தேசிய பூங்காக்களில் அரசு மதிப்புறு வனவிலங்குப் பாதுகாவலர்களை நியமித்துள்ளது.

**8. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம், திருச்சிராப்பள்ளி:**

தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் 13-06-1994 அன்று கம்பெனி சட்டத்தின் ஆளுகையின் கீழ் இணைக்கப்பட்டுள்ளது. இக்கழகத்தின் பங்கு மூலதனம் முழுவதும் தமிழ்நாடு அரசால் செலுத்தப்பட்டுள்ளது. இக்கழகத்தின் ஆளுகையின் கீழ் உள்ள 71,013 ஹெக்டேர் காப்புக் காட்டினை வனத் துறையிலிருந்து குத்தகைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இக்கம்பெனியின் அதிகாரமளிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூபாய் பத்து கோடி மற்றும் இதன் செலுத்தப்பட்ட மூலதனம் ரூபாய் மூன்று கோடியாகும்.

**குறிக்கோள்கள்:**

கூழ்மரம் மற்றும் முந்திரி தோட்டங்களை உற்பத்தி செய்து தொடரும் அறுவடை அடிப்படையில் பராமரித்தல் முக்கிய நோக்கமாக இக்கழகம் கொண்டுள்ளது.

**நிறைவேற்றுதல்கள்:**

1996-97 மற்றும் 1997-98 ஆம் ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்டு பராமரிக்கப்பட்ட தோட்டங்களின் விவரம் கீழ்வருமாறு தரப்பட்டுள்ளது:



| | 1996-97 | 1997-98 |
|---|---|---|
| | (பரப்பளவு ஹெக்டேரில்) | |
| யூகலிப்டஸ் தோட்டங்களின் உற்பத்தி | 3120 | 1946 |
| முந்திரி தோட்டங்களின் உற்பத்தி | 400 | 451 |

**கூழ்மர விநியோகம்:**

இக்கழகம் 1996-97 ஆம் ஆண்டில் 65,000 மெட்ரிக் டன் அளவு கூழ் மரங்களைத் தொழிற்சாலைகளுக்கு விநியோகம் செய்த அளவுக்கு எதிராக 1997-98 ஆம் ஆண்டில் 80,000 மெட்ரிக் டன் அளவு கூழ்மரம் விநியோகம் செய்ய வேண்டியுள்ளது. அதில் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்திற்கும் 25,000 மெட்ரிக் டன்னும் சேஷசாயி பேப்பர் மற்றும் போர்ட் லிமிடெட் நிறுவனத்திற்கு 35,000 மெட்ரிக் டன்னும் கூழ்மர விநியோகம் செய்யப்பட வேண்டியுள்ளது. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் உள்நாட்டு உபயோகத்திற்கும் மற்றும் வெளிநாட்டு ஏற்றுமதிக்கும் சந்தன எண்ணெய் உற்பத்தியைத் துவக்கியுள்ளது.

**1998-99 ஆம் ஆண்டின் திட்டங்கள்:**

1998-99-ம் ஆண்டில் இக்கழகம் 3600 ஹெக்டேரில் அதிக பலன் தரும் கூழ்மரத் தோட்டங்களையும், 1,000 ஹெக்டேர் பரப்பளவில் முந்திரித் தோட்டங்களையும் உற்பத்தி செய்ய கருதியுள்ளது. 1998-99 ஆம் ஆண்டு நுட்பவியல் மூலம் சவுக்கு தோட்டங்கள் உற்பத்தி செய்ய கருதியுள்ளது. 1998-99 ஆம் ஆண்டு நுட்பவியல் மூலம் சவுக்கு தோட்டங்கள் உற்பத்திசெய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இக்கழகத்தில் 1996-97, 1997-98 மற்றும் 1998-99 ஆம் ஆண்டுகளில் வரவு-செலவு விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| | 1996-97 (உள்ளபடி) | 1997-98 (வரவு-செலவு பட்டியலின்படி) | 1998-99 (வரவு-செலவு பட்டியலின்படி) |
|---|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்) | | |
| நிதி வருவாய் | 1,619.93 | 2,658.83 | 2,795.00 |
| செலவுகள் | 1,184.10 | 2,016.58 | 2,213.00 |
| இலாபம் | (+) 435.83 | (+)642.25 | (+)582.00 |

## 9. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் லிமிடெட், குன்னூர்.

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் முந்தைய அரசு தேயிலைத் திட்டமாகும். இக்கழகம் 22-8-1975 ஆம் நாளன்று 1956 ஆம் வருடத்திய கம்பெனி சட்டத்தின் ஆளுகையின் கீழ் கொண்டுவரப்பட்டு, 1-04-1976-லிருந்து ஒரு கழகமாக செயல்படத் துவங்கியது. நீலகிரி மாவட்டத்தின் பொருத்தமான நிலங்களில் தேயிலை உற்பத்தி செய்து இந்தியா திரும்பிய இலங்கை அகதிகளுக்கு நிரந்தர வேலை அளித்து மறுவாழ்வு கொடுப்பதே இதன் முக்கிய நோக்கமாகும்.

தோட்ட உற்பத்தியும், மறுவாழ்வு பணியும் தொடரப்பட்டு பல்வேறு கட்டங்களில் 4,431.92 ஹெக்டேர் நிலங்களில் உயர் இன தேயிலை உற்பத்தி செய்யப்பட்டு 2,445 இலங்கையிலிருந்து திரும்பிய குடும்பங்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கம்பெனியின் பங்கு மூலதனம் ரூபாய் 596.18 லட்சங்களாகும்.

**பசுந்தேயிலை உற்பத்தி**

(இலட்சம் கிலோவில்)

| 1996-97 (உற்பத்தி) | 1997-98 (மதிப்பீடு) | 1998-99 (மதிப்பீடு) |
|---|---|---|
| 392.74 | 429.79 | 454.00 |

**பதப்படுத்தப்பட்ட தேயிலை**

(இலட்சம் கிலோவில்)

| 1996-97 (உற்பத்தி) | 1997-98 (மதிப்பீடு) | 1998-99 (மதிப்பீடு) |
|---|---|---|
| 76.27 | 96.50 | 104.40 |

**தொழிலாளர்கள்**

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகமானது 6,786 நிரந்தரப் பணியாளர்களுக்கும், அதே சமமான அளவில் அன்றாட



பணியாளர்களுக்கும் மறுவாழ்வு கொடுக்கும் திட்டத்தின் மூலம் வேலை வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

**வருவாய் செலவினங்கள்**

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம். | தேயிலை விற்பனையில் பெறப்பட்ட வருவாய். | செலவு. | வரிசெலுத்திய பிறகு நிகர லாபம்(+) நட்டம்(-). |
|---|---|---|---|
| 1996-97 | 3,896.00 | 4,102.00 | (--) 206.00 |
| 1997-98 (வரவு-செலவு பட்டியலின்படி) | 6,254.00 | 4,363.00 | (+)1,891.00 |
| 1998-99 (வரவு-செலவு பட்டியலின்படி) | 6,562.00 | 4,854.00 | (+) 1,708.00 |

## 10. அரசு ரப்பர் கழகம், நாகர்கோவில்

அரசு ரப்பர் கழகம், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு வனத் துறையிலிருந்து 4,785.70 ஹெக்டேர் நிலப்பரப்பு வன நிலங்களிலுள்ள ரப்பர்த் தோட்டங்களைக் குத்தகைக்கு எடுத்துக்கொண்டுள்ளது. 1956 ஆம் ஆண்டின் கம்பெனிச் சட்டத்தின்கீழ் 20-8-1984 அன்று அரசு ரப்பர் கழகமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்கழகத்தின் அதிகாரமளிக்கப்பட்ட மூலதனம் ரூ. 4 கோடியாகும். இக்கழகத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 2 கோடியாகும். கன்னியாகுமரியில் மட்டும்தான் ரப்பர் பயிரிட மண்வளம், சீதோஷ்ணநிலை மற்றும் இட அமைப்பு பொருத்தமாகவுள்ளது.

[1998 மே 19

**உற்பத்தி மற்றும் விற்பனை**

| வருடம். | களஉற்பத்தி அளவு. | விற்பனை (மெட்ரிக் டன்னில்). | மதிப்பு (ரூபாய் (இலட்சங்களில்). |
|---|---|---|---|
| 1996-97 | 2,591 | 2,583.937 | 1,428.61 |
| 1997-98 (வரவு-செலவு பட்டியலின்படி) | 2,800 | 3,200.000 | 1,466.02 |
| 1998-99 (வரவு-செலவு பட்டியலின்படி) | 2,800 | 3,100.000 | 1,429.31 |

**வருவாய் மற்றும் செலவுகள்**

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம். | ரப்பர் மற்றும் இதர பொருட்களின் விற்பனை மூலம் வருவாய். | செலவுகள். | வரி செலுத்திய பின் நிகர லாபம்(+) நட்டம்(-) |
|---|---|---|---|
| 1996-97 | 1,907.52 | 1,821.20 | (+)86.32 |
| 1997-98 (வரவு-செலவு பட்டியலின்படி) | 1,696.35 | 1,750.38 | (-)54.03 |
| 1998-99 (வரவு-செலவு பட்டியலின்படி) | 1,583.33 | 1,649.25 | (-)65.92 |



1998 மே 19]

**முடிவுரை:**

நமது அரசு வனத்தினை ஒரு மக்கள் இயக்கமாக மாநில வன நிர்வாகத்தில் அறிமுகமாகி ஒரு புதிய சகாப்தத்தினை ஏற்படுத்தியுள்ளது. இக்கொள்கையினை நிலைநிறுத்தும் பொருட்டே மிகப்பெரிய அளவில் தமிழ்நாடு வன வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம் வனங்களில் அருகாமையிலுள்ள மக்களுக்கு அதிகாரம் கொடுத்தும், ஒன்றுபடச் செய்தும் அவர்களைத் திட்டமிடுதல் முதல் செயலாக்கம் வரை ஈடுபடுத்தியும், மேலும் அவ்வனங்களின் மகசூல்களைப் பங்கிட்டுக் கொடுத்தும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. செயலாக்க கிராமங்களில் உள்ள விவசாயத் தொழிலாளர்கள், மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுதான் நோக்கம். இவ்வாறாக அரசு, வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள மக்களின் சமூக மற்றும் பொருளாதார நிலையை உயர்த்தவும் முழுமூச்சுடன் ஈடுபட்டுள்ளது.

தனியார் நிலங்களில் சந்தன மரம் உட்பட மரங்கள் வளர்ப்பது ஊக்குவிக்கப்படுகிறது. இதன்மூலம் தனியார் மரம் வளர்ப்பு மற்றும் வணிகங்களில் உள்ள தடைகளை நீக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. தமிழக அரசு வனங்களை வளர்க்கவும், பேணிப் பாதுகாக்கவும் எல்லா வகையிலும் உறுதி பூண்டுள்ளது.

சில்வர் ஓக் மரங்களை தமிழ்நாடு வனச் சட்டத்தின் அட்டவணைப் பட்டியலிலிருந்து நீக்கி, அம்மரங்களை வெளியில் கொண்டு செல்வதற்கான விதிமுறைகளிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

மேலும், தனியார் பட்டா நிலங்களில் சந்தன மரங்கள் பயிரிடுவதற்கு வழிவகை செய்யும் தனி விதிகள் ஏற்படுத்தப்பட்டு, அவற்றை அப்புறப்படுத்துவதற்கான தக்க மசோதா ஒன்று சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்படவுள்ளது.

மாநில வன அபிவிருத்திக்கென மொத்தத்தில் திட்டச் செலவினை அதிகப்படுத்துவதும் இன்றைய அரசின் முக்கிய நோக்கமாகும்.

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 ௦௦௮.

## தவணைத்தாள்.

சே. எண் : 2|9|01 ப. எண் :

| வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) | வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

S.P. 239A-6—1,00,000—30-1-84.